


## பதிப்புரை

உலகமெங்கும் உள்ள தமிழ் வாசகர்களால் பெரிதும் ஆர்வமுடன் வரவேற்கப்படும் நாவல்களிலே ரமணிசந்திரன் நாவல்கள் குறிப்பிடத்தக்கவை என்பதை அனைவரும் அறிவார்கள்.

குடும்ப நிகழ்வுகளை சுவையோடு எழுதுவதிலே வல்லவர் ரமணிச்சந்திரன் அவர்கள்.

அன்றாடப் பிரச்சினைகளைச் சொல்லும் போது, அதற்கான தீர்வுகளையும் சொன்னால்தான் படிப்பவர்களின் மனம் நிறைவடையும். பயனுள்ள நூல்களைப் படித்தோம் என்ற மகிழ்ச்சி ஏற்படும். இப்படிப்பட்ட நூல்களை ரமணிசந்திரன் அவர்கள் தொடர்ந்து எழுதி வருவதால்தான் வாசகர்கள் மனதிலே நீங்கா இடம் பெற்றுள்ளார்கள்.

இதன் தொடர்ச்சியாக, **'புன்னகையில் புது உலகம்'** என்ற இந்த நாவலும் வாசகர்களின் மனதினை நிறைவு செய்யும் எனக் கருதுகிறோம்.

**அருணோதயம் அருணன்.**

# புன்னகையில் புது உலகம்




அன்று மாலை வீடு திரும்பும்போது. வீட்டில் ஒரு பெரிய அதிர்ச்சி, அவளுக்காகக் காத்திருக்கக் கூடும் என்று, சுமுகி கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை.

ஆனால், வாசலிலேயே காத்திருந்த பக்கத்து வீட்டுப் பெண்மணி "என்ன சுமுகி பள்ளி முடிந்தால் நேரே வீட்டுக்கு வரப்படாதா? நீ எங்க போயிருப்பே என்று தெரியாமல் ஒரே அவதியாகப் போச்சுது. வயசுப் பொண்ணு வேறேயா? சத்தம் கொடுத்து. நாலு இடத்திலே தேடவும் முடியவில்லை. சரி போகுதுன்னு என்னால் ஆனதைச் செய்தேன்" என்று அவள் சீக்கிரமாக வீட்டுக்கு வராதது ஒரு குற்றம் போலப் பேசவும், சுமுகிக்கு ஏனோ வயிற்றுக்குள் பிசைந்தது.

அக்காவுக்கு மீண்டும் ஏதாவது பிரச்சனையா? கொஞ்ச காலமாக தந்தையும் இறந்து. இங்கே இன்னும் சுரண்டுவதற்கு எதுவும் இல்லை என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்த பின், சில ஆண்டுகளாகவே ஓய்ந்திருந்து மறுபடியும் தலை தூக்குகிறதா?

தங்கையும் வேலைக்குப் போகிறாள் என்று தெரிந்துவிட்டதோ, என்னவோ? ஆனால் அவள் ஒன்றும் பல்லாயிரக் கணக்கில் சம்பாதிக்கவில்லை என்று தெரியாதோ? எப்படியும் இதுவரை கொட்டி அளந்ததெல்லாம் போதாதா?

ஆனால் எதற்காகவும் அம்மா இல்லாத நேரத்தில் வந்து என்ன பயன்? ஒரு வேளை அம்மாவுக்குத் தெரியாமல், தங்கையிடம் பிராயச் சொல்லி அனுப்பி இருக்கக்கூடும். ஆனால் அம்மாவுக்குத் தெரியாமல் சுமுகி என்ன செய்ய முடியும்?

தாயார் வருகிற நேரம்தான்.

தெருக்கோடி வரை பார்வையை ஓட்டிவிட்டு, மரியாதை நிமித்தம் " என்ன விஷயம் ஆன்ட்டி?" என்று தன் இயல்பான மென்குரலில் அண்டை வீட்டுக்காரியிடம் விசாரித்தாள். ஊர் வம்பு அவளுக்குப் பிடிக்காது.

பொதுவாகப் பக்கத்து வீட்டம்மா அவ்வளவு வம்புக்காரி அல்லதான். ஆனால் சற்றே காது கொடுத்துப் பேசினால், மணிக் கணக்கில் பேச அவளுக்கு விஷயங்கள் இருக்கும். அப்படி மணிக்கணக்கில் ஊர்க்கதை கேட்க, சுமுகிக்கு ஏது நேரம்?

இரண்டு வேலை முடிந்து வந்தால் அக்கடா என்று உட்காரக் கூட முடியாமல், பள்ளிப் பாடங்கள் தயார் பண்ண வேண்டும். வீட்டுப் பாட நோட்டுகளைத் திருத்த வேண்டும். வீட்டு வேலை, சமையலில் அம்மாவுக்கு உதவவேண்டும்.

இந்த இரண்டாவது வேலை கிடைத்த பிறகு பணம் கொஞ்சம் சேமிக்க முடிந்தாலும், நேரத்துக்குப் பஞ்சம்தான். ஆனாலும் மனதுக்கு நிறைவுதான். எப்படியும் இந்த அம்மாளிடம் நின்று பேச முடியாது என்று முடிவு செய்தாள்.

எனவே, மீண்டும் ஒரு பார்வையை வீதியில் செலுத்திவிட்டு "ஆன்ட்டி விஷயம் எதுவானாலும் எதற்கும் அம்மா வந்தபிறகு, அவர்களிடம் சொல்லுங்களேன். ஏனென்றால் நான் என்ன



பெரிதாக.." என்று தொடங்கியவளை இடை மறித்தாள் அண்டை வீட்டுக்காரி.

"என்னடி பொண்ணு, நீ? நான் சொல்லுகிறதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டாமா? இந்த தலை முறைப் பிள்ளைகள் எல்லோருமே இப்படித்தான். பெரியவர்கள் சொல்வதைச் சரியாகக் கவனிப்பதே இல்லை." என்று மீண்டும் குற்றம் சாட்டினாள் பக்கத்து வீட்டு அம்மாள்.

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, "சாரி ஆன்ட்டி சொல்லுங்கள். நான் அம்மா வருமுன் அவர்களுக்கு காஃபி போட்டு வைக்கலாம் என்று நினைத்தேன்" என்று தன் அவசரத்துக்கு விளக்கம் கூறினாள்.

"அதைத் தாண்டி நானும் சொல்ல வந்தது. உன் அம்மா இன்றைக்கு வீட்டுக்கு வரமாட்டாங்கள்." என்று ஒரு கணம் பேச்சை நிறுத்தினாள்.

அவள் எதிர்பார்த்த திகைப்புடன் "என்ன?" என்றாள் சுமுகி.

வீட்டுக்கு வராமல் வெளியே தங்கும் வழக்கம் லலிதாவுக்குக் கிடையவே கிடையாதே. இந்த அம்மாள் என்ன சொல்லுகிறாள்? ஒரு வேளை அக்கா சுபாங்கிக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா?

திகைப்பும் கவலையுமாக "ஏஏன் ஆன்ட்டி?" விசாரித்தாள் அவள்.

"பின்னே? உங்கள் அம்மா மருத்துவமனையில் அல்லவா இருக்கிறாள்" என்று விஷயத்தைப் போட்டு உடைத்தாள் அந்த அம்மாள்.

ஒன்றும் புரியாமல், "ஏஏன் ஆன்ட்டி?" என்று மீண்டும் கேட்டாள் சின்னவள்.

"அதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்? வேலைக்குப் போன இடத்தில் திடீரென்று மயக்கம் போட்டு விட்டதாம்.

தெளியவே இல்லையாம். அதனால் அங்கேயே ஆசுபத்திரியில் சேர்த்துவிட்டு, இங்கே தகவல் கொடுத்தார்கள். ஆனால் எங்கே? உன்னைத்தான் கண்டுபிடிக்கவே முடியவில்லையே. சரிதான் என்று நானும் சரசுவும் போய்ப் பார்த்துவிட்டு வந்தோம்."

அச்சத்தால் முகம் வெளுத்துப் போய், மருத்துவமனையின் பெயரைக் கேட்டுக் கொண்டு, அலையக் குலைய சுமுகி அங்கே ஓடினாள்.

அங்கே போனால், அவளுடைய தாயாருக்கு மயக்கம் தெளிந்திருந்தது.

ஆனால் அது ஒன்றுதான் தெம்பூட்டிய விஷயம்.

மற்றபடி, அலுவல் அறையில் வந்து பார்க்கச் சொல்லித் தலைமை மருத்துவர் சொன்னதெல்லாம் படு பயங்கரம்.

செயற்கை இழைத் துணிகள்தயாரிக்கும் தொழிற்சாலையில், நூல் இழையில் பிசிறு நீக்கும் பகுதியில் சுமுகியுடைய தாய் லலிதாவுக்கு வேலை. அங்கே பல்வேறு முன்னெச்சரிக்கை களைக் கடைப்பிடிக்கத்தான் செய்தார்கள். ஆயினும், பொடிப் பொடித் தூசுகள், லலிதாவின் மூச்சுக் காற்றோடு உட் சென்று, அவளது நுரையீரலைப் பாதித்துவிட்டன.

ரொம்பவே.

இப்போதும், இந்த நோயைக் குணப்படுத்திவிடலாம். ஆனால் தேவைப்படுவது ராஜ வைத்தியம். பல லட்சங்கள்.

குருவி சேர்ப்பது போல அவர்கள் சேர்த்து வைத்திருந்த பத்துப் பனிரண்டு ஆயிரங்களால் ஒரு பயனும் இல்லை.

"செலவு செய்ய முடியுமானால் தொடர்ந்து உங்கள் தாயாரை மருத்துவமனையில் வைத்திருங்கள். இல்லாவிட்டால், வீட்டுக்கு அழைத்துப் போங்கள். ஏனெனில் அறைக்காகவும்,



தாதியர் பணிக்காகவும் கொடுக்க வேண்டியதே கணிசமான தொகையாகிவிடும்" என்றார் தலைமை வைத்தியர்.

எப்படியெப்படி யோசித்த போதும், தாயின் சிகிச்சைக்காகப் பணம் புரட்ட சுமுகிக்கு ஒரு வழியும் தெரியவில்லை.

ஒரு நாள் அவகாசம் கேட்டுக் கொண்டு வந்து, தமக்கை சுபாங்கிக்கு டெலிபோன் செய்து பேசினாள்.

சுபாங்கி பணம் தந்து விடுவாள் என்ற பெரிய நம்பிக்கை ஒன்றும் தங்கைக்குக் கிடையாதுதான். ஆனால்... ஒரு வேளை...

வெறும் நப்பாசையில்தான் சுமுகி தன் சகோதரியுடன் பேசியதே. ஆனால் ஓர் எஸ்டிடி கட்டணம் அதிகப்படி செலவானதுதான் மிச்சமாயிற்று.

வீட்டில் ஆண்கள் எல்லாரும் வெளியே போயிருக்கக் கூடிய நேரம் பார்த்துதான் சுமுகி கால் போட்டது. அக்காவுடைய மாமியார் எடுத்தால் வைத்து விடவேண்டும் என்று தயாராக இருந்தவளுக்கு சகோதரியே பேசவும், ரொம்ப நிம்மதியாக இருந்தது.

சுபாங்கியின் குரலைக் கேட்டதும், எல்லையற்ற ஆறுதலில் கண்ணீர்கூட வந்தது.

ஆனால் விவரம் கேட்டதும் அவளும் அழுதது தவிர வேறு பலன் இருக்கவில்லை. கண்ணீர்க் குரலில், "அம்மாவுக்குக் குணமானதும் எழுது சுமி. அல்லது இதே போலச் சொல்லு. மற்றபடி இதைச் சாக்கிட்டு அங்கே வந்து இருக்கும் சட்டி பானையைக்கூட என் மாமியார் எடுத்து வந்து விடுவார்கள். அது எதற்கு ஓர் அதிகப்படி நஷ்டம்? அதனால் முடிந்தவரை அக்கா என்று ஒருத்தி இருப்பதையே மறந்துவிடு கண்ணு" என்றாள் அவள்.

"உன்னால் எங்களை மறக்க முடிகிறதா அக்கா?"

"மறந்தால்தான் நிம்மதி என்பதால் மறக்கப் பழகிவிட்டேன் கண்ணம்மா. நினைத்தால் எனக்கும் அம்மாவுக்கும் மேலும் மேலும் நஷ்டம்தானே? மாமியார் குளித்து முடிக்கப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். ஷவர் தண்ணீர் விழுகிற சத்தம் நின்று விட்டது. சுமி வைத்து விடும்மா. அம்மாவை... அம்மாவைப் பார்த்துக்கொள். ஏதேனும்... ஏதேனும் ஆனால்கூட இங்கே தெரிவிக்காதே. அதைச் சாக்கிட்டு இது முறை அது சாங்கியம் என்று உன்னிடம் கூடப் பணம் பிடுங்க முயற்சிப்பார்கள்..."

"சாரி அக்கா. நான் வேறு உன் கஷ்டத்தைக் கூட்டி விட்டேன். மன்னித்துவிடு" என்றாள் தங்கை வருத்தத்துடன்.

"கஷ்டம் என்று இல்லையம்மா. பிடுங்குவதற்கு அங்கே பணம் இருந்தால் என்னைக் கஷ்டப்படுத்திக் காட்டுவதில் லாபம் உண்டு. நம் வீட்டைத்தான் வழித்துத் துடைத்து விட்டார்களே. பிறகு என்னை அழவைத்து என்ன லாபம்? அதனால் முன்னைப் போலப் பிரச்சினைகள் இப்போது இல்லை" என்றவள் அவசரமாக "வைத்துவிடும்மா. அம்மாவை... அம்மாவை இனிப் பார்ப்பேனோ என்னவோ? தினமும் சாமி கும்பிடும்போது உன்னையும் அம்மாவையும் நினைத்துக் கொள்கிறேன் என்று அம்மாவிடம் சொல்லு. வைக்கிறேன்" என்று ஒரு விசும்பலுடன் டெலிபோன் கருவியை வைத்தாள் சுபாங்கி.

இதில் எதை எப்படித் தாயிடம் சொல்லுவது?

சும்மாவே மூத்த மகளைப் பற்றி நினைத்தாலே லலிதாவின் கண் கலங்கும்.

எப்படியோ தமக்கையின் குரலைக் கேட்டதே சுமுகிக்கு உள்ளூர இதமாகத்தான் இருந்தது. அவளால் இங்கே ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் அவளாவது கொஞ்சம் பரவாயில்லாமல் இருக்கிறாள் என்றால் அதுவே நிம்மதி தானே?



மீண்டும் நம்பிக்கையில்லாமல் சுமுகி இன்னொரு முயற்சியும் செய்து பார்த்தாள்.

அவள் வேலை செய்த பிரைமரிப் பள்ளி முதலாளியைப் போய்ப் பார்த்தாள்.

விவரம் சொல்லிப் பணம் கேட்டால் பைத்தியமா உனக்கு என்ற எரிந்து விழுந்தார் அவர். "நீ கேட்கிற பணம் என்னிடம் இருந்தால். இன்னொரு பள்ளிக்கூடம் நடத்த இடத்துக்கு முன் பணம் கொடுத்துவிடுவேன். அதைவிட்டு உன்னிடம் கொடுக்க நான் என்ன புத்தி இல்லாதவனா? அவ்வளவு பணம் கேட்கிறாயே அதற்கு வட்டி கட்ட உன்னால் முடியுமா? இதை யோசிக்காமல் யாராவது உனக்குப் பணம் கொடுப்பார்களா? போ, போய் உன் அம்மாவை வீட்டுக் கூட்டிப் போய் கை வைத்தியமாய் ஏதாவது கஷாயம் வைத்துக் கொடு. கொடுத்துவிட்டு நாளைக்கே ஒழுங்காகப் பள்ளி வேலைக்கு வந்து சேர். சும்மா சும்மா லீவு போட்டால் சம்பளத்தில் வெட்டி விடுவேன்" என்று மிரட்டலோடு அவளை அனுப்பி வைத்தார் அவர்.

அவ்வளவு பணத்தை ஒரு வித ஈடும் இல்லாமல் யாரிடமும் எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால், இல்லை என்பதையே இதமாகச் சொல்லியிருக்கலாமே.

லலிதா வேலை செய்யும் இடமோ இதை விட மோசம். தர்ம நியாயப்படி அங்கே ஓரளவுக்கேனும், கொடுத்திருக்கத்தான் வேண்டும். ஆனால் தர்ம நியாயத்தைப் பார்த்தால் பணக்காரர் ஆவது எப்படி?

இரண்டு மூன்று பேரைத் தவிர அங்கே நிரந்தரப் பணியாளர்களாகக் காட்டுவதே கிடையாது. முப்பது ஆண்டு சர்வீஸ் ஆனவர்கள் கூட தற்காலிகப் பணியாளர்கள் என்றுதான் பதிவேட்டில் இருக்கும். ஐந்து ஆண்டுகளாக வேலை பார்க்கும் லலிதா எந்த மட்டும்? எதிர்த்து நின்று போராடத் துணையோ,

தெம்போ இல்லாமல் அவர்கள் கணக்கு முடித்துக் கொடுத்த சில ஆயிரங்களோடு, திரும்பி வந்தாள் சுமுகி.

அவளுக்குத் தெரிந்த இன்னும் ஓர் இடம் இருந்தது. ஆனால், அவள் அங்கே போகவே இல்லை. அங்கே போய்ப் பணம் கேட்க அவளுக்குக் கொஞ்சமும் மனம் வரவில்லை.

ஏனெனில் அவளைப் பொறுத்தவரை அது ஒரு பாலைவனச் சோலை. வறண்ட இந்த உலகத்தில் அவளுக்குச் சற்று நேரம் மன நிம்மதியைத் தரும் ஒரே இடம். அதுவும் பொய்த்துக் கானல் நீராகிவிட்டால் அவளால் அதைத் தாங்க முடியாது.




அதுவும் சுமுகி வேலை பார்க்கும் இடம்தான்.

புதுவேலை வெறும் ஒரு மணி நேரத்து வேலைதான். ஆனால் அதற்கே ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள். காலை எட்டரையிலிருந்து மாலை மூன்றரை வரை செய்யும் வேலைக்கு அவளுக்குக் கிடைக்கும் சம்பளமே ஆயிரத்து ஐநூறுதான். வேலையும் கடினம் இல்லை. அந்த வகையில் இந்தப் பணம் அவளுக்கு பண்டிகை போனஸ் போலத்தான்.

அது மட்டுமில்லை. ஏதோ வேலைக்கு வருகிறாள். செய்து விட்டுப் போகிறாள் என்று இராமல், போனதுமே பழச்சாறு காஃபி என்று ஏதாவது கொடுத்து உபசரிப்பார்கள்.

தினமும் தன்னால் இது வேறு செலவா என்று சுமுகிக்குத்தான் கூச்சமாக இருக்கும். ஆனால் தமயந்தி அம்மாள் விடவே மாட்டாள்.



"ஓர் இடத்தில் வேலை முடித்து விட்டு வருகிற பெண். அதுவும் சின்னப் பிள்ளைகளோடு தொண்டைத் தண்ணீர் வற்றக் கத்திக் கத்தி, அலுத்துக் களைத்துப் போயிருப்பாய். முதலில் இதைக்குடி. அப்போதுதான் என் வேலையைப் பார்க்க உனக்குத் தெம்பு இருக்கும். அதற்காகத்தான்... எல்லாம் சுய நலம்தான். என் வேலையைத் தெம்போடு பார்ப்பதற்காகத் தான் தருகிறேன். சும்மா குடி." என்ற வற்புறுத்திக் குடிக்க வைப்பார்.

அறுபதை ஒட்டிய வயது. அதற்கேற்ற கம்பீரம் கனிவு.

ஆனால் சொந்த மகனிடம் மட்டும் தன் பேச்சுத் திறமை கொஞ்சமும் செல்லவில்லை என்று அவ்வப்போது சொல்லி வருத்தப்படுவார்.

எந்த வகையில் இந்தத் தாயின் சொல்லை அவர் மகன் தட்டி நடந்திருக்கக் கூடும் என்று சுமுகிக்கு உள்ளூரக் குறுகுறுக்கும். ஆனால் அப்பொதெல்லாம் பசைபோட்டு ஒட்டியது போல வாயை இறுக மூடிக் கொள்வாள். அந்த மாதிரிக் கேள்வி அவளது நிலைக்கு ரொம்பவும் அதிகப்படி.

தமயந்தி அவரது சொந்த ஊரின் வரலாற்றைப் புத்தகமாக எழுதிக்கொண்டு இருந்தார். அவரது குறிப்புகளை வரிசைப்படுத்தி எளிய நடையில் எழுதிக் கொடுப்பது சுமுகியின் வேலை. தினமும் ஒரு மணி நேரமே வேலை நேரம்.

எந்தவித பந்தாவும் காட்டாமல் அவர் எளிமையாகப் பழகிய விதமே சுமுகியை அவர்பால் பெரிதும் ஈர்த்தது எனலாம்.

அவரது இயல்பு அதுவாக இருக்கலாம். எல்லோரையும் தன்னவராக எண்ணும் பண்பு. அதற்காக, வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதமே ஆன ஓர் ஆயிரம் ரூபாய்ச் சம்பளக்காரிக்கு அவளுடைய தாயாரின் சிகிச்சைக்காகப் பல லட்சம் ரூபாய் பணத்தை அவர் கொடுப்பார் என்று எதிர்பார்ப்பது நியாயமே கிடையாதுதானே.

ஆனால் அந்த 'இல்லை' என்ற வார்த்தையை பள்ளித் தலைவரின் பேச்சு முறையில் அந்தத் தமயந்தியும் தன் மனம் நோகிற விதமாகச் சொல்லி விடுவார்களோ சொன்னால் ரொம்பவே வேதனையாக இருக்குமே என்று எண்ணியே சுமுகி அந்த அம்மாளிடம் பண உதவி கேட்கக் கூட மனம் துணியாது சும்மா இருந்துவிட்டாள்.

எந்த வகையிலும் பணம் கிடைக்காது போகவே வேறு வழியின்றி சிகிச்சையின்றியே லலிதாவை வீட்டுக்கு அழைத்து வந்தாள் சுமுகி.

மருத்துவருக்குப் பரிதாபம்தான். ஆனால் அவரும் தரும வைத்தியசாலை நடத்தவில்லையே. வலி அதிகம் தெரியாதிருப் பதற்கான மருந்துகளை ஓரளவு இலவசமாகக் கொடுத்தார். தீர்ந்துவிட்டால் கடையில் வாங்கிக் கொள்ளும்படி மருந்துச் சீட்டு எழுதிக் கொடுத்தார்.

ஆனால் இந்த வலி மறக்கச் செய்யும் மருந்துகளால், வேறொரு துன்பம் நேர்ந்தது.

வலி குறைந்தது போலவே லலிதாவின் உடம்பில் சக்தியும் குறைந்து போனது.

இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்குக் கூட அவளுக்கு மகளின் உதவி தேவைப்பட்டது. அதன் விளைவாக சுமுகியால் தாயைத் தனியே விட்டுவிட்டு வேலைக்குப் போக முடிய வில்லை.

வேலை என்ன? தாயை விட்டு நகரவே முடியாத நிலை. அன்னையைக் கவனிக்க யாராவது ஆள் வைக்கலாமா என்று யோசித்துவிட்டு அந்த யோசனையைக் கைவிட்டாள் மகள்.

வீட்டு வாடகை. மருந்து போக அந்த மாதிரித் தாதி வைக்கும் அளவுக்கு அவளது வருமானம் இல்லை.



வேலைக்குப் போகாததால் அந்த வருமானமும் இப்போது நின்றிருந்தது.

'குந்தித் தின்றால் குன்றும் மாளும்.'

குன்றே அப்படி யென்றால்?

எவ்வளவோ சிக்கனமாகச் செலவு செய்த போதும், கையிருப்பு வேகமாக குறைந்து கொண்டு போகவும், சுமுகி மிரண்டாள். தாயின் நிலை வேறு.

மிரண்டு கலங்கி எவ்வளவோ யோசித்து அந்த யோசனையின் பயனின்மையை உணர்ந்து அழுது, ஓய்ந்து கடைசியாக சுமுகி ஒரு முடிவுக்கு வந்தாள்.

வீட்டில் விற்கக் கூடியதை எல்லாம் விற்று மொத்தப் பணத்தையும் சேர்த்தாள்.

கையில் பணம் இருக்கும்வரை தாயாருக்கு வேண்டியதை இதே போலச் செய்வது. உரிய வைத்தியம் செய்யாவிட்டால் ஒவ்வொரு நாளும் மரணம் நெருங்கி வரும் என்பது மருத்துவரின் கணிப்பு.

காலன் முந்துகிறானா, காசு தீர்கிறதா என்று காத்திருக்க வேண்டியதுதான்.

காசு தீர்வதாக இருந்தால் கடைசிக் காசில் இருவரின் பயணத்துக்கும் வகை செய்துவிட வேண்டியது. காலன் முந்தினாலும் அவளும் தாயுடன் சேர்ந்து கொள்ள வேண்டியது தான்.

அக்காதான் 'ஏதேனும் ஆனால்கூடச் சொல்லாதே' என்றாளே. எங்கோ, எப்படியோ இருக்கிறார்கள் என்ற நிம்மதியோடு அவள் இருக்கட்டும்.

இது முழுக்க முழுக்க சுமுகியின் சொந்த முடிவுதான். எப்போதும் அரை மயக்கத்தில் இருக்கும் லலிதாவுக்கு யோசிப்பதோ, முடிவு எடுப்பதோ எப்படி முடியும்.

ஆனால் முடிவு என்று ஒன்றை நிச்சயித்த பின் சுமுகி சற்று அமைதியானாள். இப்போது மனதில் வருத்தம்தான். அது இல்லை என்று நிச்சயமாகச் சொல்லவே முடியாது. ஏனெனில் இருபது வயதில் சாவது. அப்படி ஒன்றும் சந்தோஷமான விஷயம் இல்லை அல்லவா?

ஆனால் ஒரே உறவான தாயை இழந்தபின் அதுவும் இப்படி சிகிச்சைக்குப் பணமின்றித் துடித்துச் சாக விட்டபின் தான் மட்டும் தொடர்ந்து வாழ்வது பற்றி அவளால் நினைக்கக் கூட முடியவில்லை. அன்னைக்குப் பின் தனியாக வாழ்ந்து அவள் நல்ல நிலைமைக்கே வரக்கூடும். ஆனால் வைத்தியம் பார்க்க முடியாமல் தாயார் தவித்துத் தவித்து உயிரை விட்டதை அவளால் விழித்திருக்கும் ஒரு கணமேனும் மறக்க முடியுமா, அதை மறக்க முடியாதபோது சிரிக்கத்தான் முடியுமா?

வருந்தி வருந்தி, அப்படியேனும் ஏன் வாழ வேண்டும்? தேவையில்லை என்பது அவளது முடிவு.

அம்மாவைக் காப்பாற்ற முடியவில்லை. எடுக்கும் ஒவ்வொரு மூச்சுக்கும் அவள் வலி தாங்காமல் கஷ்டப் படுவதைக் கைகட்டிச் சும்மா இருந்து பார்க்க வேண்டிய நிலைமை நாளுக்கு நாள் அவளது மனதில் சுமையேற்றிக் கொண்டு இருந்தது.

அரை மயக்கத்தில் முனகிக்கொண்டு சுற்றுப்புறம் புரியாமல் கிடப்பதோடு, சில சமயங்களில் லலிதா இயல்பாக உறங்குவதும் உண்டு.

அந்தச் சமயங்களில் சுமுகியின் மனமும் நடப்பிலிருந்து மாறி இனிமையான விஷயங்களை நினைக்கத் தொடங்கும்.

தந்தை நினைவு அடிக்கடி வரும்.

அலுவலகத்திலிருந்து வரும்போது 'செல்லக்குட்டி' என்று அவளை அழைத்தபடிதான் வருவார். அருகே உட்கார வைத்துக் கொண்டு 'இந்தாடா கண்ணு' என்று ஏதாவது உண்ணக் கொடுப்பார்.



சின்னதாக ஒரு சாக்லேட் பார், பெர்க், கிட்காட் இப்படி ஏதாவது.

சாக்லேட் பழக்கம் வேண்டாம் என்று லலிதா ஆட்சேபிக்கவும், பழங்கள் வாங்கி வரத் தொடங்கினார். அதிலும் சுமுகிக்கு சீதாப் பழம் பிடித்துப் போகவே தினமும் அதில் ஒன்று கட்டாயம் வாங்கி வருவார். அவள் நிதானமாகக் கொட்டையைத் துப்பித் துப்பி உண்பதைப் பார்த்து ரசிப்பார்.

"பார் இவளை. ஒரு விதையை வெளியே துப்புகிறாளா? துண்டு காகிதத்தை எடுத்து வைத்துக்கொண்டு அதிலேயே சேர்த்து வைத்து குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுக் கையைக் கழுவிக்கொண்டு வருகிறாள் பார். எந்தக் குழந்தை இப்படிச் செய்யும்" என்று பாராட்டுவார்.

தந்தையை நினைக்கும் போது சுமுகிக்கு சீதாப்பழத்தின் ருசியும் சேர்ந்தே நினைவு வரும். அதே போல சீதாப் பழத்தைப் பார்க்கையில் தந்தையின் நினைவும்.

'சுகவன'த்தில்... தமயந்தி அம்மாவின் வீட்டிலும் இரண்டு சீதாப்பழ மரங்கள் இருந்தன. ஒரு மரம் ஜன்னல் வழியே பார்த்தால் தெரியும். இலைகளினூடே மறைந்திருந்த பழத்தை ஒரு தரம் தந்தையை நினைத்தபடி சுமுகி பார்த்ததைக் கவனித்துவிட்டு, பை நிறையப் பழங்களைப் பறித்துவரச் சொல்லி தமயந்தி அவளிடம் கொடுத்தார்.

ஒட்டு மாமரம், சீமை இலந்தை, சப்போட்டா என்று மற்ற பழமரங்களையும் அவளை அழைத்துப் போய்க் காட்டினார்.

வீட்டின் பின்புறமாகப் பழமரங்கள், முன்பக்கத்தில் புல்வெளி, பூச்செடிகள் என்று திட்டமிட்டு அமைக்கப்பட்ட தோட்டம் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்ததோடு பயன் தருவதாகவும் இருந்தது.

தோட்டம் மட்டும்தான் சுகம் தந்தது என்றில்லை.

தோட்டம் தாண்டி அந்த வீட்டுக்குள் செல்லும்போதும் அவளுக்கு மனசுக்கு இதமாகவே இருக்கும். பெரிய வீடு என்பதால் மட்டுமன்று. மொத்த அமைப்பு, சுவர்களுக்குப் பூசியிருக்கும் வண்ணம். இருக்கைகள், அவற்றின் உறைகள், ஜன்னல் திரைகள்... எல்லாமே ஒன்றிற்கு ஒன்று பொருத்தமாகப் பார்க்க அழகாக இருக்கும். பார்க்கும்போதே சந்தோஷமாக இருக்கும்.

அதற்கெல்லாம் காரணம் இந்தப் பெண்மணி என்று அறிந்தபோது சமுகிக்கு அவர் மீதுள்ள மதிப்பு அதிகரித்தது.

ஆனால் அவரிடம் தொடர்ந்து வேலை செய்ய அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

அவரிடம் வேலை செய்யவும் கொடுத்து வைக்கவில்லை. அந்த வீட்டில் தினமும் ஒரு மணி நேரத்தை மனதில் மகிழ்ச்சியுடன் கழிப்பதற்கும் அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

தாயாருக்கு உடம்பு சரியில்லாததால் கொஞ்ச நாள் வேலைக்கு வர முடியாது. என்று ஒரு கடிதம் அனுப்பியதோடு சரி. அதற்குமேல் சுமுகி ஒன்றுமே தெரிவிக்கவில்லை. தெரிவித்து ஆவது என்ன என்ற சலிப்பு.

விவரம் அறிந்து வருந்துவதாகவும், அவளுடைய தாயின் உடல் நிலை விரைவில் சீரடைய இறைவனை வேண்டுவ தாகவும். அன்னைக்கு குணமானதும் மீண்டும் வேலைக்கு வர வேண்டும் என்றும் தமயந்தியிடமிருந்து ஒரு பதில் வந்தது.

அதன்பிறகு அங்கிருந்தும் ஒன்றும் இல்லை.

எதிர்பார்ப்பதும் மடத்தனம்.

இந்த ஒரு மாதத்தில் சுமுகி என்ன பிரமாதமான வேலை செய்து கிழித்து விட்டாள் என்று அவளுக்காக அங்கே காத்துக்கொண்டு இருக்கப் போகிறார்கள்? எப்போதோ இன்னோர் ஆளை அந்த வேலைக்கு அமர்த்தியிருப்பார்கள். அவர்களுக்கு வேலை நடக்க வேண்டுமே.



இதில் தமயந்தி அம்மாவைக் குறை கூற முடியாது என்று சுமுகிக்கே தெரியும். ஆனால் உள்ளூர ஏக்கமாக இருந்தது.

அப்பாவும் இருந்து அவருக்கு அந்த சீதாப்பழ மரத்தைக் காட்டி 'இதிலிருந்து எனக்குப் பழம் பறித்துத் தந்தார்கள் அப்பா' என்றால் எவ்வளவு சந்தோஷப்படுவார்.

அதற்கும் வழியில்லை. அந்த வீட்டை இனிப் பார்ப்பதற்கும் வழியில்லை.

வேலை செய்வதற்காகவே என்றாலும் இந்த அழகான வீட்டில் ஒரு மணி நேரம் இருப்பதற்கே தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று அங்கே பணி புரிந்த காலத்தில் சுமுகிக்கு அவ்வப்போது தோன்றும்.

ஆனால் விதியின் கொடுமை, அந்த வீட்டில் நிரந்தரமாக வசிக்கும் உரிமையும் பெருமையும் உடைய அந்த வீட்டு மருமகளுக்கு அந்த சுகம் நிலைத்து இருக்கவில்லையே.




இந்த விவரம் சுமுகிக்குச் சொன்னது தமயந்தி அம்மாவேதான். மற்றபடி அவள் அதை நம்பியிருக்கவே மாட்டாள்.

திருமணமாகி மூன்றே மாதங்களில் ஒரு விபத்தில் அவள் இறந்து விட்டாள் என்று கேள்வியுற்ற போது சுமுகிக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது.

விபத்து. விதி கண்ட வழி.

மற்றபடி என்ன நோயாக இருந்தாலும், எவ்வளவு பணம் தேவைப்பட்டாலும் செலவு செய்து, அவளை மீட்டிருக்க மாட்டார்களா? அப்படிக் காப்பாற்றி விடக்கூடும் என்பதாலேயே விபத்தின் மூலம் விதி அவளது உயிரைப் பறித்திருக்கிறது.

கடவுளுக்குக் கண்ணில்லை என்பது இதுதான் போலும்.

இந்த அழகிய மாளிகையில், மானாய்த் துள்ளி வளைய வந்து கொண்டு இருந்திருப்பாளே.

மருமகள் இறந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டதை தமயந்தி இன்னொரு நாள் சொன்னார்.

மூன்று ஆண்டுகள் அவர் உயிரோடு இருந்திருந்தால் சின்னக் குழந்தை ஒன்று தன் மழலையால் எல்லோரையும் மகிழவைத்துக் கொண்டிருக்கும். ச்சு. பாவம்.

மனைவி இறந்து மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஆயினும் மறுமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கும் மகனைப் பற்றிக் கேள்வியுற்ற போது, தமயந்தி அம்மாளை எண்ணிப் பரிதாபப்பட்டாள் சுமுகி.

பேரன் பேத்தி என்று அவர்களுக்கும் எத்தனை ஆசைகள் இருந்திருக்கக்கூடும்?

சுபாவுடைய மகன் பரத்தை நினைத்து, லலிதா அவ்வப் போது கண்ணீர் விடுவாள். அவனைப் பார்க்க முடிய வில்லையே என்ற ஏக்கம். இருந்தும் தூக்கிக் கொஞ்ச முடியாத தாபம்.

இங்கே இல்லவே இல்லையே. எங்கோ நல்லபடியாக இருக்கிறான் என்ற நிம்மதிக்குக் கூட வழியில்லை.

ஆனால் கூடவே அந்த மகனிடம் மரியாதையும் உண்டாயிற்று.



'பெண்டாட்டி செத்தால், புது மாப்பிள்ளை' என்று பழமொழியே இருக்கிறது. அதற்குச் சரியாக மனைவி இறந்து மறு மாதமே கணவன் புது மாப்பிள்ளை ஆகி விடுகிற இந்தக் காலத்தில் இப்படியோர் ஆண்மகனா?

அதுவும் எல்லா வசதிகளும் இருக்கிறபோது.

அவள் இடத்தில் இன்னொருத்தியை நினைத்துப் பார்க்க தன்னால் முடியாது என்று விட்டானாம்.

எவ்வளவு பெரிய மனிதன்.

மகனுக்கு வயது முப்பதுகூட ஆகவில்லை என்று தமயந்தி கூறவும், மரியாதை ரொம்பவே கூடிப்போயிற்று.

அதுவரை அவள் வேலை செய்து கொண்டிருக்கும்போது, அவன் வந்தாலும் போனாலும் சுமுகி நிமிர்ந்து பார்த்ததே கிடையாது.

சும்மா ஒருத்தி தன் போக்கில் பார்த்தாலும், அவள் தன்னைத்தான் பார்த்ததாக ஆண்கள் பேசுவார்கள். அதனால் முடிந்தவரை யாரையும் நிமிர்ந்து பாராதே. அதிலும் சின்ன வயது என்றால் கண்டு கொள்ளாமலே இருந்துவிடு என்று லலிதா மகளது பதினைந்தாவது வயதிலேயே அவளுக்கு எச்சரிக்கை செய்திருந்தாள்.

தாய் சொல்லை மீறி சுமுகிக்குப் பழக்கம் இல்லை.

ஆனால் இப்போது இப்படிப்பட்ட உத்தமனைக் கண்ணாரக் காணும் ஆவல் உண்டாயிற்று. அப்படிப் பார்த்தபோதோ இவனுக்குத் திருமணமாகி, மனைவி இறந்து மூன்று ஆண்டுகள் ஆகியிருக்கக்கூடும் என்று அவளால் நம்பவே முடியவில்லை.

அன்றைக்குக் கையில் ஒரு கனகாம்பரமும், மல்லிகையும் கலந்து தொடுத்த மாலையைக் கையில் ஏந்தியவாறு போய்க் கொண்டிருந்தான் நித்யவாசன்.

தட்டில் வெட்டிய ஆப்பிள் துண்டுகளோடு வந்து கொண்டிருந்த தமயந்தி மகனைப் பார்த்ததும் நின்று "எவ்வளவு அழகான மாலை. இதை ஓர் உயிருள்ள கழுத்தில் போடாமல், வெறும் சட்டமிட்ட படத்துக்குப் போய் மாட்டுவேன் என்கிறாயே. உனக்கு ரசனையே இல்லையப்பா" என்று போலியாக அலுத்துக் கொண்டார்.

"என்னம்மா செய்வது? உயிருள்ள கழுத்தில் இதை அணிவித்தால், போட்டுவிட்டு நிமிருமுன் அவள் என் சிண்டைப் பிடித்துவிடுவாளே. அதற்கு பயந்துதான் இப்படி." என்று இலகுவாகப் பதிலுரைத்தவன் தாயின் கையிலிருந்த தட்டைப் பார்த்ததும், "கோல்டன் ஆப்பிளா, அம்மா?" என்று கேட்டபடி பழத்துண்டுகளோடு, தட்டில் இருந்த ஃபோர்க்கை எடுத்து ஒரு பழத் துண்டைக் குத்தி எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

"ஏய், ஏய். என்னடா நீ? நான் சுமுகிக்குக் கொண்டு வந்தேன். அதைப்போய்..." வேலையில் மூழ்கியிருந்த சுமுகியைப் பார்வையால் காட்டினார் தமயந்தி.

பெரிய ஹாலின் ஒரு ஜன்னல் புறமாக அமர்ந்து சுமுகி வேலை செய்து கொண்டிருந்தாள்.

தன் பெயரைக் குறிப்பிடக் கேட்டதும், அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

அதே சமயம் தாயின் பார்வையைத் தொடர்ந்து நித்யவாசனும், சுமுகி பக்கமாக திரும்பினான்.

சம்பளம் கொடுக்கும் முதலாளி.

கையில் இருந்த காகிதங்களை மேஜையில் வைத்தபடி, மரியாதை நிமித்தமாக சுமுகி எழுந்து நின்றாள்.

அதே மாதிரி அவள் எழுந்து நிற்பதைப் பார்த்துவிட்டுச் சும்மா திரும்பி போனால் நன்றாயிராது என்ற காரணத்தால், "வேறு ஃபோர்க் கொண்டு வரச் சொல்லி அவளுக்குக் கொடுத்து விடுங்கள் அம்மா" என்று தாயிடம் தணிந்த குரலில் சொல்லிவிட்டு, அவனும் அவள் புறமாக இரண்டு எட்டு எடுத்து வைத்து "நீங்கள்தான் சுமுகி. பிரமாதமாக வேலை செய்வதாக என் அம்மாவால் பயங்கரமாகப் புகழப்படும் பெண்மணி. என் கணிப்பு சரிதானே?" என்று முறுவலித்தான்.



அவன் இவ்வளவு சகஜமாகப் பேசக்கூடும் என்று எதிர்பார்த்திராத சுமுகி ஒரு கணம் திகைத்தாலும், உடனேயே சமாளித்துக் கொண்டாள். "என் பெயர் சுமுகி என்கிற வரையில் சரிதான் சார். அதற்குமேல் உங்கள் அம்மா பரிவில் சொல்லுவது." பதிலளித்தவளின் விழிகள் சட்டென மலர்ந்தன.

மாலையும் கையுமாக அவன் அவளை நோக்கி வந்ததும், அவள் அவசரமாக எழுந்ததும் வேறு விதமாக ஒப்புமையில் அவளுள் சிரிப்பு குமிழியிட்டது.

கள்ளமற்று விளையாட்டாகத் தோன்றியதுதான். ஆனால், அதை யாரிடமும் வெளிப்படையாகச் சொல்லவோ, சொல்லி வாய்விட்டுச் சிரிக்கவோ முடியாது. தப்பாகவும் தோன்றக்கூடும். எனவே தன் கற்பனையைத் தனக்குள்ளேயே அவள் அடக்கியதில் அவளது கண்களில் ஒரு கணம் மின்னல் ஒளிர்ந்தது.

அந்த மின்னலை வினாடிக்குள் கண்டு கொண்டவனுக்கு, விளக்கமும் உடனே புரிந்து விட்டது போலும்.

புன்னகை செய்து, "பயந்து விடாதீர்கள். என் மனைவிக்காக எடுத்துப் போகிறேன். வழக்கமாக மாலையை மதியமே கொண்டு வந்து விடுவார்கள். நானும் அப்போதே அணிவித்து விடுவேன். இன்று ஏதோ சாலை மறியல் என்று இப்போதுதான் மாலை வந்து சேர்ந்தது. அதனால்தான் இந்த நேரத்தில் இப்படி வர நேர்ந்தது..." என்று மீண்டும் சிரித்தான் அவன்.

நல்லவேளை. இவன் தப்பாக எடுத்துக் கொள்ளவில்லை என்று சுமுகி நிம்மதி அடைந்தாள்.

அதற்குள், தானே சென்று இன்னொரு ஃபோர்க்கை எடுத்துக் கொண்டு தமயந்தி வந்துவிட "இப்படியே எப்போதும் என் தாயாருக்கு உதவி செய்ய வேண்டும்." என்று பொதுப்படையாகக் கூறிவிட்டுத் தன் வேலையைப் பார்க்கச் சென்றான் அவன்.

தாயார் இதை வெறும் நகைச்சுவையாக மட்டும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று எச்சரிக்கிறானா? ஆனால் யார்தான் தவறாக நினைக்க மாட்டார்கள்? அவன் சாதாரணமாக நினைப்பதே அதிசயம்.

ஆனால் "பழைய காலத்து சுயம்வரப் பெண் போல மாலையைக் கையில் ஏந்திக் கொண்டு போகிறாயே" என்று தாயும் வேடிக்கை பேசவும் மற்ற இருவருக்குமே திடுக்கிட்டு விட்டது.

என்னவோ தமயந்தி ஞான திருஷ்டியால் அவர்கள் பேசியதைக் கண்டு கொண்டு அதைத் தொடர்வது போலத் தோன்றவும், நான் நினைத்ததையும் முழுவதும் கண்டுபிடித்து விடுவாரோ என்று அஞ்சி அவசரமாக மேஜை மேல் வைத்த காகிதங்களை எடுத்துத் தன் வேலையைத் தொடங்கினாள் சுமுகி.

"சரிதான்மா. சுயம்வரம், கல்யாணம் என்று இதைவிட்டால் உங்களுக்கு வேறு பேச்சு ஏது? தயவு பண்ணி இந்த வெட்டிப் பேச்சை விடுங்கள். உங்கள் சுமுகி மிரண்டு ஓடி விடப் போகிறார்கள். அப்புறம் வீணாக உங்கள் வேலை நின்று போகும். அதனால் தயவு பண்ணிச் சும்மா இருங்கள்" என்று அலுப்புற்ற பாவனையுடன் கூறிவிட்டு, நித்யவாசனும் அங்கிருந்து அகன்றான்.

தாயார் தவறாக நினைத்துவிடக் கூடும் என்று அவன் பேச்சை மாற்றவில்லையா? மீண்டும் திருமணப் பேச்சைத் தொடங்கி விடுவாரோ என்ற அச்சம்தான் காரணமோ?



மகன் கண்ணிற்கு மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு, தமயந்தி பெருமூச்செறிந்தார். "சும்மா வேடிக்கையாகத் திருமணம் என்றால்கூட இப்படி ஓடுகிறானே" என்று அவர் வருத்தத்துடன் முனகியது சுமுகிக்கு நன்றாகவே கேட்டது.

ஆனால் அந்தத் தாயின் வருத்தம் அவருடைய மகனுக்கு அல்லவா புரிய வேண்டும்? ஆனால் அதே சமயம் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக மறைந்துவிட்ட மனைவியிடம் நித்யவாசன் வைத்திருக்கும் பிரியத்துக்கு இந்தத் தாயும் மதிப்புக் கொடுத்துத்தானே ஆக வேண்டும் என்றும் அவள் மனம் வாதாடியது.

கோபப்படவில்லை. கொந்தளிக்கவில்லை. அதட்ட வில்லை. அதிகாரம் பண்ணவில்லை. ஆனால் வேடிக்கை யாகவே திருமணப் பேச்சு வேண்டாம் என்று எவ்வளவு அழகாகக் காட்டி விட்டுப் போகிறான்.

இவ்வளவு உறுதியான காதலை அடைய அந்தப் பெண் என்ன செய்திருப்பாள் என்று வியந்தது அவள் மனம்.

இதற்குரிய பதில் பின்னொரு காலத்தில் சுமுகிக்குக் கிடைத்தபோது அப்போதும் அவளுக்குப் பிரமிப்பாகத்தான் இருந்தது.

அப்போதைக்கு இப்படியொரு பதில் பிற்பாடு கிடைக்கப் போகிறது என்ற எண்ணமே இல்லாமல் அன்றாட வாழ்வில் மூழ்கியிருந்தாள் சுமுகி.

காலையில் எழுவதும், பள்ளி வேலைக்குச் செல்வதும், பள்ளி முடிந்தபின் ஆவலாகத் தமயந்தி வீட்டுக்குப் போவதும், அங்கே சுற்றுப்புறத்தை ரசித்தபடி வேலை செய்வதும்... அங்கே அவ்வப்போது நித்யவாசனைச் சந்திக்க நேரும்போது முதல் நாள் நினைவில் சிரிப்பு வருவதும் அதை வெளிக்காட்டாமல் சாதாரணமாக பேசுவதும்...

அன்றாட வாழ்க்கை அது பாட்டில் நடந்தது.

ஆனால் அவள் உள்ளூர நகைப்பதை அவனும் ஊகித்திருப்பானோ என்று சுமுகிக்கு ஒரு சந்தேகம் இருந்தது. ஆனால் இளம் வயது முதலாளியான அவனிடம் அதை வெளிப்படையாக அவள் கேட்க முடியாதே.

எனவே அவளது நிலைமைக்குத் தகுந்தவாறு மரியாதையோடு பேசிவிட்டு சாதுவாய்த் திரும்பி விடுவாள்.

அதுவும் உற்சாகமாகத்தான் இருந்தது.

வலியால் முனகிய லலிதாவின் குரல், பழைய நினைவுகளை அறுத்த சுமுகியை நடப்புக்கு இழுத்து வந்தது.

தாயைச் சற்று வசதியாகப் படுக்க வைத்துவிட்டு அவள் நிமிர்ந்தபோது வாயிற் கதவைத் தட்டும் ஒலி கேட்டது.




கதவைத் தட்டுவது யாராக இருக்கக் கூடும்? வீட்டு வாடகை. மளிகைக்கடை எதற்கும் பாக்கி கிடையாது என்றுதான் சுமுகி முதலில் நினைத்தாள்.

பிறகே எதிர் வீடு, பக்கத்து வீடு என்று அக்கம் பக்கத்தில் உள்ள யாரேனும் லலிதாவின் உடல் நிலை பற்றி விசாரிக்க வந்திருக்கக்கூடும் என்று தோன்றியது.

அவர்கள் மெய்யாகவே அக்கறை கொண்டிருக்கலாம். ஆனால் எந்த விதமான நம்பிக்கைக்கும் வழியற்றுப் போய் நிராசையுடன் நாளை எண்ணிக் கொண்டு இருந்தவளுக்கு, இவர்களுக்குப் பதில் சொல்வதே அலுப்பாக, ஒரு சுமையாக இருந்தது.



ஏதோ வேலையாக இருக்கிறாள் என்று எண்ணிப் போய்விட மாட்டார்களா என்று ஒரு கணம் பேசாமல் நின்றவள் கதவு ஓங்கித் தட்டப்படவும் பதறிப்போய் அவசரமாகக் கதவைத் திறக்க ஓடினாள்.

மாத்திரைகளின் உதவியால் வலியைப் பெருமளவு மறந்து உறங்கும் தாயை இந்தச் சத்தம் எழுப்பிவிட்டால்?

ஓடிப் போய்க் கதவைத் திறந்தால், முடிந்தவரை பற்கள் அத்தனையையும் காட்டிக் கொண்டு நின்றவன் கந்தன். தமயந்தி வீட்டில் எடுபிடியாக வேலை செய்கிறவன். கொஞ்சம் வெகுளித்தனமாகப் பேசுவான். அப்பாவி என்று தமயந்தி அம்மாளுக்கு அவன் மீது தனிப்பிரியம்.

அவர் சொல்லி சுமுகிக்கும், கந்தனைப் பிடிக்கும். தன்னால் ஆன உதவியாக அவனுக்கு வந்த கடிதங்களைப் படித்துச் சொன்னாள். ஊரில் இருக்கும் அவனுடைய தாய்க்கு தமக்கைக்குப் பதில் கடிதங்களும் எழுதிக் கொடுத்தாள். இதனால் எல்லாம் அந்தப் பையனுக்கும் சுமுகியிடம் பிரியம். மரியாதை.

இப்போது கையில் ஒரு பழக்கூடையுடன் நின்று கொண்டிருந்தான்.

தமயந்தி அம்மாள் அனுப்பியிருக்கிறார்கள்.

ஏதோ, தொண்டையை அடைத்துக் கொண்டு வந்ததைச் சமாளித்துக் கொண்டு அவள் பேசுமுன் தன் பெரிய குரலில் "என்னாக்கா நீயி.." என்று கந்தன் தொடங்கவும், சுமுகி பதறிப்போய் "ஷ்" என்று உதட்டின் மீது கை வைத்து அவனை அடக்கினாள்.

கண்களை விரித்து 'என்ன?' என்று சைகையில் கேட்டான் அவன்.

சற்று விலகி நின்று உள்ளே படுத்திருந்த தாயைக் காட்டினாள் அவள்.

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லைப்பா..." என்றவள் தொடர்ந்து பேசுமுன் "காய்ச்சலா?" என்று மீண்டும் தன் உரத்த குரலில் விசாரித்தான் கந்தன்.

"உஷ், உஷ்" என்று மறுபடியும் அவனை அடக்கிவிட்டு "சத்தம் போட்டால் விழித்துக் கொள்வார்கள் கந்தா. அப்புறம் ரொம்பக் கஷ்டப்படுவார்கள். அதனால் இங்கே சத்தமாகப் பேசவே கூடாது." என்றாள் சுமுகி.

"ஓகே. அப்படியா விஷயம்?" என்று கேட்டு அவள் சொன்னதை ஜீரணித்துக் கொண்டு "சரிக்கா. இனிமே மெல்லப் பேசுறேன். இந்தாக்கா. அம்மா கொடுக்கச் சொன்னாங்க" என்று முடிந்தவரை மெல்லச் சொல்லி பழக்கூடையை அவளிடம் கொடுத்தான் கந்தன்.

பெரிய கூடை. நிறையப் பழங்கள்.

"இவ்வளவு இங்கே செலவாகாது கந்தா. நீ கொஞ்சம் எடுத்துக் கொள்கிறாயா?" என்று நாலு ஆப்பிள் பழங்களை எடுத்து அவனிடம் நீட்டினாள் சுமுகி.

ஆனால் அந்தப் பழங்களை வாங்காமல், "எனக்கு இதெல்லாம் வேண்டாம் அக்கா. நீ எப்போ வேலைக்கு வருவே? அதைச் சொல்லு" என்று கேட்டான் அவன்.

எப்போது என்று சொல்வது?

"அது வந்து... கந்தா என் அம்மாவுக்கு உடம்பு ரொம்பச் சரியில்லை. அம்மாவைப் பார்த்துக் கொள்ள வேணும் இல்லையா? அதனால் நான் இனிமேல் வேலைக்கு வரமாட்டேன்" என்று வருத்தத்துடன் உரைத்தாள் சுமுகி.

இந்தச் செய்தியைக் கந்தன் ஏற்றவிதம் அவள் எதிர்பாராதது.

"ஆங்" என்று வாயைப் பிளந்தவன் உடனே ஆத்திரத்துடன் "அது எப்படி நீ வரமாட்டேன் என்று சொல்லலாம்? எங்கம்மா நான் எல்லோரும் எப்படி வருத்தப்



படுவோம் தெரியுமா? அப்புறம் எனக்குக் கடிதாசியெல்லாம் யார் எழுதித் தருவாங்க? அதெல்லாம் நினைச்சுப் பாராத நீ பாட்டுலே வரமாட்டேன் என்கிறாயே. அதெல்லாம் முடியாது. நீ வேலைக்கு வந்து தான் ஆவணும். கட்டாயம் வர வைக்கிறேன்னு நான் முத்துகிட்டே பந்தயம் கட்டியிருக்கேன். அதிலே நான் ஜெயிக்கணுமே. அதுக்காவனாச்சும் நீ கட்டாயம் வந்தே ஆவணும்" என்று அவளிடம் பிடிவாதம் பிடித்தான்.

ஓரளவு சொல்லிப் பார்த்துவிட்டு சுமுகி பொறுமை இழந்தாள்.

"ஏய் போ. போடா. நடக்கிற காரியமாகப் பேச வேண்டும். கண்ணை மூடிக்கொண்டு வாவா என்று கீறல் விழுந்த ரிக்கார்டு போலக் கத்திக்கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்? அவ்வளவுதான். நான் வரவில்லை என்றால் வரவில்லைதான். வரமாட்டேன் என்று உன் அம்மாவிடம் போய்ச் சொல்லு போ" என்று படபடத்தாள் அவள்.

"அப்ப நீ வரவே மாட்டியா?"

"இல்லை. மாட்டேன். போ. போய் மேடத்திடம் சொல்லிவிடு. கடிதத்திலே எழுதியிருந்த மாதிரி இனிமேல் நான் எப்பவும் என் அம்மாவோடுதான் இருப்பேன் என்று சொல்லு போ" என்று அதட்டலாகப் பேசி அவனை வெளியேற்றிக் கதவைத் தாளிட்டாள்.

மறுபடியும் கதவைத் தட்டினான் கந்தன். திறந்ததும். "மெய்யாலும் வரவே மாட்டியா? எனக்கு நம்பவே முடியலியே. நிஜம்மா வர மாட்டியா?" என்று பழைய கேள்வியையே அவன் திரும்பக் கேட்கவும் சுமுகியின் பொறுமை ரொம்பவே சோதிக்கப்பட்டது.

"நிச்சயம். நிச்சயம். நிச்சயமாக வரவே மாட்டேன். இன்னொரு தடவை தொல்லை பண்ணாமல் போடா. நம்ப முடியவில்லையாமே இவனுக்கு" என்று கதவை மறுபடியும்

சாத்தி கொஞ்சம் ஓசை கேட்கும் வண்ணம் தாள்ப்பாளையும் போட்டாள்.

கடைசியாக ஒரு நாள் நம்பித்தானே ஆகவேண்டும் என்று வெறுப்பும் வருத்தமுமாக நினைத்தது மனது.

கந்தன் அவ்வளவு எளிதில் போய்விட மாட்டான். மீண்டும் கதவைத் தட்டித் தொணதொணப்பான் என்று எதிர்பார்த்து அங்கேயே சற்று நேரம் நின்றாள்.

சில கண நேரம் அமைதி நிலவியது.

மறுபடியும் தொல்லை பண்ணாமல் கந்தன் போய்விட்டான் என்கிற சிறு விஷயம்கூடப் பெரிய ஆறுதலாகத் தோன்ற 'அப்பாடா' என்று அப்படியே கதவின் மேல் சாய்ந்து கண்மூடி ஒய்ந்து நின்றாள் சுமுகி.

அந்த ஆறுதல் கூட நீடிக்கவில்லை.

அவளது முதுகிலேயே தட்டுவது போலக் கதவு திரும்பவும் தட்டப்படவும், அதிர்ந்து துள்ளிக் குதித்த சுமுகி ஆத்திரத்துடன், "இதோ பார். உனக்கு ஒரு தரம் சொன்னால் ஒத்துக்கொள்ள முடியாதா? இதுதான் கடைசித் தடவை கேட்டுக் கொள். நானும் என் அம்மாவும் விரைவிலேயே இந்த உலகத்.. இல்லை இந்த ஊரை விட்டே போகப் போகிறோம். அதனால் நான் வேலைக்கு வர முடியாது. முடியாது. முடியாது. இதற்கு மேல் தொல்லை பண்ணாமல் மரியாதையாகப் போய் விடு" கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினாள்.

இனிப் போய்விடுவான் என்ற எண்ணியதற்கு நேர் மாறாகக் கதவு மேலும் சற்று அழுத்தமாகத் தட்டப்படவும், "வாயால் சொன்னால் நம்ப மாட்டாயா? இருவரும் செத்துக்கிடப்பதைப் பார்த்தால்தான் நம்புவாயா?" என்று கோபத்துடன் கதவைத் திறந்தவள் திகைத்து நின்றாள்.

ஏனெனில் கதவுக்கு அப்பால் நின்றவன் கந்தன் அல்ல.



நித்யவாசன். கேள்வியாய் அவளை நோக்கியபடி நின்று கொண்டிருந்தான்.

சற்று நேரம் சுமுகிக்கு மண்டை குழம்பிப் போயிற்று.

அவன் காதில் என்ன விழுந்திருக்கும்?

கந்தன் தான் புரிந்து கொள்ளாமல் தொல்லை செய்கிறான் என்று எரிச்சலில் அவள் என்னென்ன சொன்னாள்?

சொன்னது என்னென்ன என்பதும் உடனே நினைவு வந்துவிட சுமுகி திணறிப் போனாள். அதெல்லாம் கந்தனிடம் சொல்லலாம். இவனிடம் முடியாதே.

அவள் திணறிக்கொண்டு நிற்கையில், "உள்ளே போய்ப் பேசுவோமா?" என்ற கேட்டான் நித்யவாசன்.

என்ன பேசப் போகிறான்? விளக்கம் கேட்பான். எப்படி விளக்குவது என்று செயலற்றுப் போன மூளையைக் கசக்கி யோசித்தபடி "வ..வந்து.." என்று தொடங்கினாள் அவள்.

"நான் இங்கே ஏற்கனவே வந்தாயிற்று. வீட்டின் உள்ளே போய்ப் பேசலாமா என்று கேட்டேன்" என்றான் அவன் பிசிரற்று.

அவனை வாயிலில் நிற்க வைத்தே பேசுகிறோம் என்பது அதன் பிறகே உறைக்க அவள் முகம் சிவந்தது.

சட்டென வழி விலகி, "வா...வாருங்கள் சார். உ...உள்ளே வாருங்கள்" என்று அவனை வரவேற்றாள் அவள்.

வீட்டினுள் அடியெடுத்து வைத்ததுமே கோணல் மாணலாக விசிலடிப்பது போல லலிதா சிரமப்பட்டு மூச்சு விடும் சத்தம் கேட்க, அந்தப்பக்கம் திரும்பினான் நித்யவாசன்.

சில வினாடி கவனித்துவிட்டு, "ரொம்பவும் மோசமாக இருக்கிறார்கள் போலத் தோன்றுகிறதே." என்று கேட்டான் அவன்.

தன்னை மீறிக் கண்களில் பெருகிய நீரை மறைக்க, முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள் சுமுகி.




பொதுவாக சுமுகி சட்டென அழுகிறவள் அல்ல. அதுவும் அடுத்தவர் முன் நடக்காத ஒன்று.

'சிரிப்பதை நாலு பேரோடு சேர்ந்து செய்ய வேண்டும். அழுவதைத் தனிமையில் வைத்துக் கொள்ள வேண்டும்' என்பார் சுதர்சனம்.

இயன்ற வரை அதன்படிதான் அன்னையும் மகளும் நடந்து வந்ததும்.

அதனால்தான் சுதர்சனம் இறந்து, இந்த மாதிரிச் சிறு வீட்டில் வசிக்க நேர்ந்த போதும் அவர்கள் நிலையிறங்கி வாழ்கிறார்கள் என்பதுகூட யாருக்கும் தெரியாமலே இருந்து வந்தது.

ஆனால் தாயின் நிலையால் ஏற்பட்ட மன உளைச்சலோ, ஓய்வின்றிச் செய்து வந்த பணிவிடையும் சேர்ந்து கொண்டதோ சட்டென பலவீனப்பட்டுப் போனாள்.

ஆனால் அடக்க முடியாது கண்ணீர் வந்து விடவும், அவன் முன் அதைக் காட்டப் பிரியமின்றித் திரும்பியவளுக்குத் தொண்டையிலிருந்து சத்தமும் வெளிவர மறுத்தது.

அவனிடம் டிராமாப் போடுகிற மாதிரித் தோன்றிவிடக் கூடாதே என்ற பயத்தில் "இ...இதோ வருகிறேன்." என்று தெளிவற்ற குரலில் இயம்பிவிட்டு சமையலறையும் குளியலறையுமாகப் பயன்பட்ட அடுத்த அறைக்கு வேகமாகச் சென்றாள்.



அங்கே ஈரத்துணியால் முகத்தைத் துடைத்து சில பெரிய மூச்சுகளை எடுத்துத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு திரும்பி வந்தாள்.

ஒரு கூர்ந்த பார்வை தவிர நித்யவாசன் அவளைப்பற்றி எதுவும் கேட்கவில்லை. லலிதாவின் நோயைப்பற்றியும் அவளது சிகிச்சை பற்றியும் மட்டும் துருவித் துருவி விசாரித்தான்.

பிறகு, "ஒழுங்கான சிகிச்சை செய்யப் பணம் இல்லை என்பது புரிகிறது. ஆனால் இந்த வயதில் போராட்டமே இல்லாமல் உயிரை விட முடிவு செய்ததுதான் புரியவில்லை. பணத்துக்காக முயற்சியே பண்ணவில்லையா?" என்று கேட்டான்.

"முயற்சி பண்ணாமலா? கிடைக்கவில்லை" என்றாள் சுருக்கமாக.

"யாரிடம் கேட்டு கிடைக்கவில்லை? என்னிடம்... அம்மாவிடமாவது கேட்டிருக்கலாமே.. வேலை தொடங்கி ஒரே மாதத்தில் பெரிய தொகை கேட்பதும், கேட்டுக் கிடைப்பதும் கடினம்தான். கேட்கத் தயக்கமாகத்தான் இருக்கும். ஆனால் ஒரு பகுதியேனும் கேட்டிருக்கலாம். மீதியையும் கொஞ்சம் கொஞ்சமாகத் திரட்டியிருக்காலாம்" என்று அவன் கூறவும் அவளுக்கு எரிச்சல் உண்டாயிற்று.

என்னவோ அவள் முயற்சி எடுக்காமலே முடிவு செய்துவிட்ட மாதிரிக் கூறுகிறானே. ஆசைப்பட்டா சாவார்கள்?

தான் செய்த முயற்சிகளைப் பற்றி அவள் கூறிய போதும் அவனுக்கு அப்போதும் திருப்தியில்லை.

முதலமைச்சர் நிவாரண நிதிக்கு முயற்சித்திருக்கலாம். பத்திரிகைகளில் கருணை விளம்பரம் கொடுத்திருக்கலாம்.

குறைந்த பட்சமாக அவனுடைய தாயிடம் கூட அவள் கேட்கவில்லையே.

"நீங்களே சொன்ன மாதிரி வேலையில் சேர்ந்து அவ்வளவு சீக்கிரமாகப் பணத்துக்கு வந்து நிற்க மனம் வரவில்லை. அத்தோடு அம்மா ஐந்து ஆண்டுகளாக வேலை பார்த்த இடம். நான் இரண்டு ஆண்டுகளாகப் பணிபுரிந்த பள்ளி. இரண்டிலும் கிடைத்த பதிலுக்குப் பிறகு உங்கள் வீட்டில் எப்படி வாயைத் திறப்பது? அத்தோடு நீங்கள் சொன்ன மற்ற வழிகள் பற்றி நான் ஒரு தரம் நினைத்துப் பார்க்கத்தான் செய்தேன். ஆனால் அதில் பணம் கிடைக்கும் என்றோ அதுவும் டாக்டர் சொன்ன இந்த நாற்பது நாட்களுக்குள் கிடைக்கும் என்றோ எனக்குத் கொஞ்சமும் நம்பிக்கை ஏற்படவில்லை. அதனால்தான் முயற்சியும் செய்யவில்லை."

அவளது பேச்சைக் குறுக்கிடாது கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தவன் எதையோ சிந்தித்தபடி மேலும் சற்று நேரம் பேசாமலே உட்கார்ந்திருந்தான்

பிறகு, "உனக்கு உதவி செய்யத்தான் நான் விரும்புகிறேன் சுமுகி. அதை மனதில் வைத்து ஏன் எதற்காக என்று கேளாமல் உன்னைப் பற்றிய உன் குடும்பத்தைப் பற்றிய விவரங்களைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

அவன் சொன்ன உதவியில் சுமுகிக்கு அப்படியொன்றும் நம்பிக்கை உண்டாகிவிடவில்லை. வெறும் இரக்கம் காரணமாக அப்படிப் பல லட்சங்களை யாரும் தூக்கிக் கொடுத்துவிட மாட்டார்கள். ஆனால் வேறு ஏதாவது செய்யக் கூடுமோ? நாலு பேரிடம் சொல்லி, நிதி திரட்டி... அந்த மாதிரி எதுவும் செய்வது என்றால் அவளைப்பற்றி அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று கேட்கிறானா?

பிச்சைதான். கௌரவப் பிச்சை. இதனால் பிழைக்கிறாளோ. இல்லையோ அவள் தாய்க்கு இந்த வேதனையில் இருந்து சற்று விடுதலை கிடைக்குமானால்...



அவளது வாழ்விலும் சொல்லக் கூடாத பிரம்ம ரகசியம் எதுவும் கிடையாதே அதைச் சொல்வதால் என்ன கெட்டுவிடப் போகிறது?

சுமுகி சொல்லத் தொடங்கினாள்.

பன்னிரண்டு வயது வரை சுமுகிக்குத் துன்பம் என்றால் என்னவென்றே தெரியாமல் இருந்தது.

அவர்கள் பணக்காரர்கள் இல்லைதான். ஆனால் வரவுக்குள் செலவு செய்யத் தெரிந்தவள் லலிதா.

முத்துப் போல இரண்டு பெண்கள். சகோதரிகளுக்குள் போட்டி, பொறாமை எதுவும் வந்ததே இல்லை. காரணம் எட்டு ஆண்டு வயது வித்தியாசம். தமக்கை சுபாங்கிக்கு, தங்கை சுமுகி ஒரு குழந்தை மாதிரிதான். அவ்வளவு பிரியமாக இருப்பாள். தன் 'பாக்கெட்மணி'யைக் கூடச் சேர்த்து வைத்து, தங்கைக்குத்தான் பொம்மை, விளையாட்டுச் சாமான் என்று ஏதாவது வாங்கிக் கொடுப்பாள்.

சுபாங்கியின் திருமணம் வரை அப்படித்தான் இருந்தது.

அதன்பிறகு...

அதன்பிறகு அவளுக்கு உடன் பிறந்தவள், பெற்றோர் யாரையுமே நினைக்கக்கூட முடியவில்லை. சரியாக மூச்சு விடக்கூடப் பயந்து போனாள். 'நீ எப்படி மூச்சு விடலாம்? அதற்குத் தண்டனையாக, உன் அப்பாவிடம் இருந்து இவ்வளவு பணம் வாங்கிவா' என்று புகுந்த வீட்டினர் விரட்டி விடுவார்களோ என்ற அச்சம். அந்த அளவுக்கு அவள் கணவன் குடும்பம் இங்கிருந்து பணம் பிடுங்கியது.

இரண்டே பெண்கள். அதிலும் ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக அவள் ஒரே மகவு என்று எண்ணி வளர்த்த பாசம். கூடவே இன்னும் எட்டு, பத்து ஆண்டுகளில் அடுத்தவளுக்குச் சேர்த்துக் கொள்ளலாம் என்ற தைரியமும் சேர்ந்து கொள்ள, பெற்றவர்கள் இருந்ததையெல்லாம் வழித்து அவளுக்குக் கொடுத்தார்கள்.

ஒன்றும் கேளாமல் இருப்பதற்கு அவர்கள் ஒன்றும் அனாதை விடுதியிலிருந்து பெண் எடுக்கவில்லையாம். பெற்றவர்கள் இருந்தால் பெண்களுக்குச் செய்துதான் ஆக வேண்டுமாம். இது சுபாவுடைய கணவன் வீட்டு வாதம்.

மூன்று ஆண்டுகள் இது தொடர்ந்தது.

சுபாங்கிக்கு முதல் குழந்தை பிறந்த போது அவளுடைய மாமியார் வீட்டினர் ஆடிய ஆட்டம். தந்தை சுதர்சனத்துக்கே வெறுத்துவிட்டது.

"வேண்டாம்மா. நீ அங்கே போக வேண்டாம். உனக்குக் கல்யாணமே ஆகவில்லை என்று நினைத்துக் கொள்கிறேன்" என்றார் மகளிடம்.

ஆனால், "இந்தப் பிள்ளை இருக்கிறதே அப்பா. இது வளர்ந்து அப்பாவைக் கேட்கும்போது என்ன செய்வேன்?" என்று அவள் அழுது கரையவும், அது தாங்காமல் அலுவலகத்தில் அதிகபட்ச கடனை வாங்கி, மாமியார் வீட்டில் கேட்டதை எல்லாம் செய்து. அவளையும் குழந்தையையும் புகுந்த வீட்டில் கொண்டு விட்டு விட்டு வந்து படுத்தவர் மீண்டும் எழவே இல்லை.

இழவுக்கு வந்து அதற்கும் மாப்பிள்ளைக்கு ஏதேதோ செய்ய வேண்டும் என்று இரக்கமற்றுக் கேட்டார்கள்.

வீட்டில் இருந்த டீவியைக் காட்டி. "இதை விற்று உங்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொள்ளுங்கள். இதற்கு மேல் விற்க உருப்படியான பொருள் எதுவும் இந்த வீட்டில் இல்லை. அதனால் எதைக் கேட்டும் உங்கள் வீட்டிலிருந்து யாரும், என் மகளையும் சேர்த்துதான் சொல்லுகிறேன் யாரும் இங்கே வராதீர்கள்" என்று லலிதா பொங்கி விட்டாள்.

அப்போதும் விடாமல் அசிங்கம் பாராமல் அந்த டீவியை எடுத்துக் கொண்டுதான் சுபாங்கி வீட்டினர் போனார்கள்.



சுபாங்கி இரண்டாவது குழந்தை உண்டாகியிருப்பதாகக் கடிதம் வந்தது. லலிதா பதிலே எழுதவில்லை.

இருளின் போர்வையில் தாயார் கண்ணீர் வடித்தது சுமுகிக்குத் தெரியும். பெற்றவளுக்குப் பாசம் இராதா?

"அம்மா, அக்கா.." என்ற சின்னவள் மெல்லத் தொடங்கிய போது. "அக்கா பற்றிப் பேசாதே," அவளை அடக்கினாள் தாய்.

சுமுகி ஏக்கமாக நோக்கவும், "வேண்டாம்மா. அக்காவுடைய இன்னொரு குழந்தைக்கு முன்னைப் போலச் செய்ய நம்மால் முடியாது. எனக்கு அவள் மட்டும்தான் குழந்தை என்று இல்லை. உன்னையும் வலித்துதான் பெற்றேன். உனக்குச் செய்ய வேண்டிய கடமையும் இருக்கிறதல்லவா? இப்போதுதான் கஷ்டப்பட்டுச் சேர்த்து மூளியில்லாமல் உன் கழுத்தில் காதில் மெல்லிசாகவாவது தங்கத்தில் போட முடிந்தது. இதையும் கழற்றி அந்த வீட்டுக்குத் தாரை வார்க்க நான் தயாரில்லை. போகட்டும். இன்னும் செய்ய, இங்கே ஒன்றும் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். அப்படியே இருக்கட்டும் விடு" என்று முடித்துவிட்டாள்.

அக்காவைக் கொடுமைப்படுத்துவார்களே என்று சுமுகி கவலைப்பட்டபோது "என்ன கொடுமைப்படுத்தினாலும் அதற்குப் பயந்து இங்கிருந்து ஒன்றும் வராது என்றாகிவிட்டால் கொடுமைப்படுத்தி என்ன லாபம் சொல்லு. அத்தோடு பரத்துக்கு இரண்டு வயது ஆகப் போகிறது. பிள்ளை முன்னிலையில் ரொம்ப மோசமாக நடந்து கொள்ள மாட்டார்கள். அப்படியே நடந்தாலும் அவளது தலைவிதி விடு" என்று இறுகிய குரலில் தாய் கூறிய பிறகு தமக்கைக்காக மேலே வாதாட சுமுகிக்கும் துணிச்சல் இல்லை.

நன்றாகப் படித்ததால் தொழில் நுட்பப் படிப்புக்கு இல்லாவிட்டாலும் கல்லூரிப் படிப்புக்கு சுமுகிக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது. செயற்கை இழைத் தொழிற்சாலை ஒன்றில் லலிதாவுக்குக் கிடைத்திருந்த வேலை வீட்டுச் செலவை சமாளித்தது.

யோசிக்கும் போதே அவளுக்கு விடையும் தெரிந்து விட்டது.

அவன் வீட்டில் அவளை மரியாதைப் பன்மையில் அழைப்பான். இப்போது 'நீ' என்று ஒருமையில் பேசுகிறான். தற்கொலை செய்ய நினைத்தாள் என்ற இளக்காரமாக இருக்கிறதோ?

ஆனால் நித்யவாசனின் காரணம் வேறாக இருந்தது. விரைவிலேயே புரிந்தது.

"பார் சுமுகி. இப்பொழுது நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். அது உனக்குப் பிடிக்... அதை உன்னால் ஒத்துக் கொள்ள முடிகிறதா என்று பார்" என்று பீடிகையுடன் அவன் எண்ணத்தை இயம்பினான்.

அதைக் கேட்ட சுமுகிக்கு ஒன்றும் புரிபடவில்லை. தன் காதில் விழுந்ததை அவளால் நம்பவும் முடியவில்லை.

ஏனெனில் அவன் சொன்ன யோசனை அப்படி.




சற்று நேரம் சுமுகி ஒன்றும் பேசவில்லை.

என்ன பேசுவது?

வாழ்வில் எல்லாவிதச் செல்வங்களும் உடையவன் அவன். இன்றைக்கு அன்றாடம் காய்ச்சியைவிட மோசமான நிலைமையில் இருப்பவள் அவள். இருவரும் இணைந்து ஒருவருக்கொருவர் என்ன உதவி செய்ய முடியும்?



அத்தோடு அந்த 'இணைந்து' மேலும் அவளைக் குழப்பியது. அந்த வார்த்தைக்கு என்னென்னவோ பொருள் கொள்ளலாமே.

எனவே சும்மா பேந்த விழித்துக் கொண்டு நின்றாள்.

சில வினாடிகள் கழித்து நித்யவாசனே மீண்டும் பேசினான். "உனக்கு இவ்வளவு வியப்பளிக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. கொஞ்சம் சுதாரித்துக் கொண்டு விட்டாய் என்றால் இந்த யோசனைக்கான என் காரணங்களை பற்றிச் சொல்லுகிறேன்" என்றான் நிதானமாக.

அப்போதும் பேசத் தோன்றாமல் வெறுமனே தலையை மட்டும் ஆட்டினாள் அவள்.

"உனக்கு என் வீட்டு நிலைமை தெரியுமல்லவா? தெரியாமல் இராது. அம்மாதான் அவர்களோடு ஓர் ஐந்து நிமிஷம் பேசிக் கொண்டிருந்தாலே யார் என்று பாராமல் தன் குறையை அளக்கத் தொடங்கி விடுவார்களே. உன்னிடமும் சொல்லித்தான் இருப்பார்கள்.

"ஆனால் என்னால் என் மனைவியை மறந்து இன்னொரு பெண்ணை மனைவியாக எண்ணிப் பார்க்கக் கூட முடியாது. அந்த ஃப்ளாரசன்ட் பச்சைசம்கி உடையில் பாமினியைப் பார்த்த கணத்திலிருந்து நான் அப்படித்தான். அவளும் என்னிடம் அப்படியேதான் உணர்ந்தாளாம். எந்தப் பிறவியில் என்ன பாவம் செய்தேனோ, கடவுள் என்னைத் தனியே விட்டு அவளைப் பிரித்து விட்டார். அவளைத் தொடர்ந்து நானும் போயிருப்பேன். ஆனால் என் இழப்பை அம்மாவால் தாங்க முடியாது என்கிற ஒரே காரணத்திற்காகத்தான் அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். ஆனால் என்னைப் பொறுத்தவரை என் வாழ்நாள் முழுமைக்கும் அவளோடு வாழ்ந்த அந்த மூன்று மாதங்களே போதும். அந்தத் தேவதையை நினைத்துக்கொண்டு நிம்மதியாக இருக்கா விட்டால் இனி வாழ வேண்டியது எத்தனை ஆண்டுகள் என்றாலும் சுகமாகக் கழித்து விடுவேன். சுகம் என்பதே எனக்கு அதுதான்..."

அந்தப் பாமினியைக் கடவுள் எந்தப் பொருளால் செய்திருப்பார்? அவளைப் பற்றிப் பேசும்போதே இவன் குரல் இப்படி நெகிழ்கிறதே. இந்த மாதிரி ஓர் அன்பைப் பிரிந்து அவளால் எப்படிப் போக முடிந்தது?

"இதைச் சொன்னால் அம்மாவுக்குக் கொஞ்சமும் புரிவது இல்லை. என்னைப் பார்த்தால் போதும். மறுமணப் பேச்சைத் தொடங்கி விடுகிறார்கள். பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்றுகூடப் பார்ப்பது கிடையாது. நானும் அம்மா மனம் நோகக் கூடாது என்று சிரித்தே சமாளிக்கிறேன். ஆனால் அதுவும் தப்போ என்று தோன்றத் தொடங்கி விட்டது. ஏனென்றால் இப்போது கல்யாணத் தரகர்களையும் வரச்சொல்லியாகிறது" என்று பெருமூச்செறிந்தான் அவன்.

அவனது முக வாட்டமும், பெருமூச்சும் அவளுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. முதல் முறையாக புன்னகையற்ற அவன் முகத்தைப் பார்ப்பதும் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் அவன் சொன்ன யோசனைக்கும் இந்தக் கதைக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? அவனது இந்த நிலை மாற அவள் எந்த வகையில் உதவக்கூடும்?

அல்லது நித்யவாசன் வேறு என்னவோ சொல்லி அது அவள் காதில் வேறு மாதிரி கேட்டு விட்டதோ? அவளுக்கு இருந்த அலுப்பிலும் களைப்பிலும் அதுவும் சாத்தியம்தான்.

மற்றபடி இதுவரை அவன் சொன்ன கதையும், இந்த யோசனையும் எந்த விதத்தில் ஒத்துப் போகும்? நனைய மாட்டேன் என்று சொல்லிக் கொண்டே தண்ணீரிலே குதிப்பது போல அல்லவா இருக்கிறது?

ஆனால் வேறு எதற்காக அவனது சொந்தக் கதையை அவளிடம் சொல்லுகிறான்?

குழப்பத்துடன் சுமுகி எண்ணமிடும்போதே அவன் மேலே பேசினான்.



"இதற்கு மேல் என்ன நடக்கும் என்பதை உன்னால் ஊகிக்க முடிகிறதில்லையா? திரைப்படம் ஓடுவது போல எனக்குத் தெரிகிறது. அம்மா சில பெண்களைத் தேர்ந்தெடுப்பார்கள். இந்தப் பெண்ணைப் பார்க்க அந்தப் பெண்ணைப் பார்க்க என்று தினமும் என்னைத் துளைத்து எடுப்பார்கள். அது ஒரு போராட்டம் நடக்கும். அப்புறம் அம்மாவுக்கே ஒருத்தியைப் பிடித்துப் போகும். அவளைக் கட்டிக் கொள்ளாவிட்டால் செத்து விடுவேன் அது, இது என்று மிரட்டுவார்கள். அந்த மிரட்டலை என்னால் சமாளிக்க முடியாது என்று இல்லை. முடியும். அவர்களைப் போலவே நானும் பதிலுக்கு ஏதாவது மிரட்டினால் எல்லாம் சரியாகி விடும். ஆனால் எவ்வளவு மன வேதனைகள். எத்தனை வாக்கு வாதங்கள். வீடு முழு நரகம் ஆகிவிடும்.

"சுவனி சுமுகி. இதிலிருந்து தப்பிக்க நீ எனக்கு உதவி செய். உன் தாயின் மருத்துவச் செலவை நான் ஏற்றுக் கொள்கிறேன்." என்று பண்ட மாற்று வியாபாரம் செய்தான் அவன்.

ஆனால் போகாத ஊருக்கல்லவா இவன் வழி சொல்லுகிறான். அவன் இந்தப் பிரச்சினையில் சுமுகி என்ன உதவி செய்ய முடியும்?

அதையே அவனிடம் கேட்டாள். "இதில் நான் என்ன... நான் சொல்லி உங்கள் அம்மா கேட்க மாட்டார்களே."

"யார் சொன்னாலும் கேட்க மாட்டார்கள். அவர்கள் சொல்வதைத்தான் நாம் செய்தாக வேண்டும்" என்றான் அவன்.

"எப்படி?" என்று புரியாமல் கேட்டாள் அவள்.

"புரியவில்லை அல்லவா? அதாவது... கவனி, இது ஒரு தொழில்துறை ஒப்பந்தம் போலத்தான். வெளியே மட்டும் யாருக்கும் சந்தேகம் ஏற்படாதபடி நடந்து கொண்டால் போதும். அவ்வளவுதான். என்ன சொல்லுகிறாய்?"

அப்போதும் அவள் விழிக்கவும், "என்ன சுமுகி? விஷயம் என்னவென்று சரியாகப் புரியவில்லையா? யோசி சுமுகி.

உனக்கு வாழவே வழியில்லை. எனக்குத் திருமணம் செய்யப் பிடிக்கவில்லை. நாம் இருவரும் பெயருக்கு ஒரு திருமணம் செய்து கொண்டால் இருவர் பிரச்சினைகளும் தீர்ந்து போகும் என்பது என் கருத்து" என்றான் நித்யவாசன்.

பெயருக்கு ஒரு திருமணமா? அப்படியானால் அவனது தாலியைச் சுமப்பதற்காக அவன் அவளுடைய தாயை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றுவான்.

பிறகு?

பிறகென்ன? அன்னையின் இந்த வேதனை தீர்ந்து, அவள் உயிர் பிழைப்பாள் என்றால் அதற்கு மேல் வேறு என்ன வேண்டும்?

இந்த ஐடியாவின் நன்மை தீமைகளைச் சுமுகி சீர்தூக்கிப் பார்க்கிறாள் என்பதை அவளது முகபாவனையிலிருந்து கண்டு கொண்டு நித்யவாசன் தன் வழியில் அது பற்றி மேலும் விவரித்தான்.

"நாம் இருவரும் வெளிப்பார்வைக்கு மட்டும்தான் கணவன் மனைவி, சுமுகி. உள்ளே நமக்குள் ஒன்றுமே இராது. அது பற்றிய கவலையே உனக்கு வேண்டாம். என்னால் உனக்கு ஒரு பிரச்சனையும் இராது. இந்த மாதிரியாக நாம் இந்தத் திருமணத்தைச் செய்து கொண்டால், என் அம்மாவின் சித்ரவதையிலிருந்து எனக்கு நல்லபடியாக விடுதலை கிடைக்கும். மாமியார் என்ற முறையில் உன் அம்மாவுக்காக நான் செலவு செய்வதையும் யாரும் தப்பாகக் கருத மாட்டார்கள். ஆனால் சும்மா அந்தப் பணத்தை உனக்குத் தந்தேன் என்று வை. ஏதோ 'கசமுசா' என்று எல்லோருமே நம்மைப் பற்றித் தவறாகப் பேசுவார்கள். அப்படிப்பட்ட பேச்சினால் உன் வாழ்வு அநியாயமாக வீணாகிப் போகும்..."

பிசிறற்ற குரலில் கோர்வையாக நித்யவாசன் கூறியது அனைத்துமே அப்போது சுமுகிக்குச் சரியாகத்தான் தோன்றியது.



பெயரளவுக்கு மட்டும் ஒருவனுடைய மனைவியாக வாழும்போது மட்டும் ஓர் இளம் பெண்ணின் வாழ்வு வீணாகாமல், செழித்தா ஓங்கும் என்ற கேள்வியும் ஏனோ அப்போது அவளுக்குத் தோன்றாமலே போயிற்று.

எனவே, இனி இந்த வலி, வேதனைகளில் இருந்து மீண்டும் அன்னை பிழைத்து விடுவாள் என்பது மட்டுமே அவளது மனதை நிறைக்க, பெரும் நிம்மதியோடு சம்மதமாகத் தலையாட்டினாள் அவள்.

ஒரே ஒரு சந்தேகம் மட்டும்.

"என்னை உங்கள் தாயார் ஏற்றுக் கொள்வார்களா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"உன்னைத்தான் ஒரு முணுமுணுப்புகூட இல்லாமல் அம்மா மகிழ்ச்சியோடு ஏற்பார்கள்" என்று முறுவலித்தான் நித்யவாசன். "அந்த அளவுக்கு அம்மாவின் மனதைக் கவர்ந்து விட்டவள் நீ. மற்றபடி உன்வீட்டில் நிலைமை என்ன என்று அறிந்து வருமாறு என்னையே நேரில் அனுப்புவார்களா?"

வழக்கம்போலவே அவனது புன்னகை அவளைப் பதிலுக்கு முறுவலிக்க வைத்தது. அவளது ஐயத்தையும் அகற்றி நிம்மதியும் அடைய வைத்தது.

லலிதாவின் நிலைமையை நேரில் பார்த்தவன் நித்யவாசன். ஆதலால் உரிய வைத்தியர்களுடன் உடனே பேசி இரவே மருத்துவமனையில் அவளைச் சேர்த்துவிட்டான்.

உரிய மருந்துகளின் உதவியால் லலிதா சற்று அயர்ந்து உறங்கியதோடு இருபத்து நாலு மணிநேர மருத்துவக் கண்காணிப்பு தாய்க்கு இருக்கிறது என்று நிச்சயமும் இருக்கவே பல நாட்களுக்குப் பிறகு சுமுகியும் இரவில் நிம்மதியாகத் தூங்கினாள்.

தாயுடன் கூடவே அவளும் தங்கியிருக்க, நித்யவாசன் ஏற்பாடு செய்திருந்தான்.

தமயந்தி அம்மாள் வருங்கால மருமகளாக அவளை வந்து பார்த்ததே மருத்துவமனையில்தான்.

அது பற்றி சுமுகி குறிப்பிட்ட போது. "நீ எனக்கு மருமகளாக வருவதே எனக்குப் பெரிய சந்தோஷம் சுமிம்மா. கவலைப்படாதே. உன் அம்மாவுக்கு உடம்பு நன்றாகக் குணமானதும் உன் வீட்டுக்கு வந்து விருந்தே சாப்பிடுகிறேன்" என்று இதமாகப் பேசினாள் தமயந்தி.

சும்மாவே சுமுகிக்குத் தமயந்தி அம்மாளைப் பிடிக்கும்.

அதிலும் அவளது 'சுமிம்மா' என்ற அழைப்பு அவளை நெகிழ வைத்துவிட்டது.

அது அவளுடைய தந்தை அவளை அழைக்கும் விதம். மூத்த பெண்ணைச் 'சுபிக்குட்டி' என்பார். சின்னவள் சுமுகி 'சுமிம்மா'.

"சுபிக்குட்டி'க்குப் பொருத்தமாகச் 'சுமிப் பாட்டி' என்ற கூப்பிடாமல் விட்டீர்களே. அதுவே பெரிய விஷயம்" என்று லலிதா கேலி செய்வது அன்று நடந்தது போல சுமுகிக்கு நினைவு வந்தது 'பாட்டியா?' என்று அவள் கண்ணைக் கசக்கியதும் 'என்னம்மா நீங்கள்? சுமியை அழ வைக்கிறீர்களே' என்று சுபாங்கி தாயிடம் கோபப்பட்டதும் 'நன்றாகக் கேளம்மா' என்று தந்தை தார்க்குச்சி போட்டதும் தாயார் சிரித்ததும்.. கடவுளே. அதெல்லாம் இந்தப் பிறவியில் நடந்தவைதானா?

தமயந்தியின் அழைப்பு. சுமுகிக்கு இன்னொன்றை நினைவுப் படுத்தியது.

அவளுடைய தமக்கை சுபாவுக்கு விவரம் தெரிவிக்க வேண்டாமா?

தங்கையின் திருமண விஷயமும் தெரிவிக்க வேண்டும். கூடவே தாயின் சிகிச்சை பற்றியும் சொல்ல வேண்டும்.

பாவம் அன்னையின் உடல்நிலை பற்றி வாய்விட்டுப் புலம்பக்கூட முடியாமல் அடக்கிக் கொண்டு உள்ளூரக் கலங்கிக் கொண்டிருப்பாள். அந்தக் கலக்கத்தையாவது தீர்க்க வேண்டும்.



கலக்கத்தையும் தீர்க்க வேண்டும். மனம் களிக்கவும் செய்ய வேண்டும்.

முதல் முறை செய்தது போலவே காலைப் பத்தரை மணிக்கு மேல் சுபா வீட்டுக்கு போன் செய்தாள்.

இம்முறையும் எடுத்தது சுபாங்கிதான்.

போனில் தங்கையின் குரலைக் கேட்டதும் சுபா பதறிவிட்டாள். "சுமி அ... அம்மாவுக்கு அம்மாவுக்கு..." என்று குரல் தழுதழுக்க, முடிக்க முடியாமல் தடுமாறினாள்.

தமக்கையின் பயம் உணர்ந்து, "அச்சச்சோ. அம்மாவுக்கு ஒன்றும் இல்லை அக்கா. குணமாகிக்கொண்டு வருகிறது. பெரிய மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சையெல்லாம் உரியபடி நடக்கிறது. அம்மாவைப் பற்றி இனிக் கவலை வேண்டாம் என்று சொல்லத்தான்' முக்கியமாக நான் உனக்கு போன் செய்தது. அத்தோடு இன்னொரு முக்கியச் செய்தி" என்று தொடங்கி தன் திருமண விவரம் கூறினாள் தங்கை.

ஒப்பந்தம் பற்றி எதுவும் கூறாமல் விடுத்து வெறும் திருமண விவரம் மட்டும் தெரிவித்துவிட்டு, "திருமணத்துக்கு உன்னால் வர முடியுமாக்கா? அழைப்பு அனுப்புகிறேன்" என்றாள் தங்கை.

"வேண்டாம்மா" என்று பதறினாள் சுபாங்கி. "நீ சொல்வதைப் பார்த்தால் சற்று வசதியானவர்கள் போலத் தெரிகிறது. அதனால் தகவலே தெரிவிக்காதே. நம் இரண்டு பேருக்குமே நல்லதில்லை. நீ நன்றாக இருக்கிறாய் என்பதே எனக்குப் போதும்," என்று உருகிச் சொன்னாள்.

"ஆனால் நீ நன்றாக இல்லையேக்கா" என்று கலங்கினாள் சுமுகி.




ஒப்பந்தத் திருமணம் என்றால் சுமுகி அதைக் குறையாக... குறைப்பட வேண்டியதாக இதுவரை கருதவில்லை.

பாலன்னம் சாப்பிடுகிறவர்களுக்குப் பாதாம்கீர் இல்லாதது குறையாகத் தோன்றலாம். ஆனால் பட்டினி கிடப் பவர்களுக்குப் பழைய சோறே தேவாமுதம்தானே?

அதுபோல லலிதாவுக்குச் சிகிச்சை செய்ய முடிந்தது ஒன்றே பெரிதாகத் தோன்ற, வரப்போகும் திருமணத்தைச் சுமுகி சந்தோஷமாகத்தான் எதிர்பார்த்தாள்.

கூடவே தமயந்தி அம்மாள் வந்து போனது அவளது மகிழ்ச்சியைப் பெருக்கியது. தன் தமக்கைக்கு இந்த மாதிரி மாமியாரும், புகுந்தவீடும் அமையவில்லையே என்ற வருத்தத்தையும் தந்தது.

இந்த மாதிரி அமையவிட்டாலும் பரவாயில்லை. படு மோசமாக அல்லவா அமைந்து விட்டது. மாற்ற முடியாத, விடிவே இல்லாத வேதனை அல்லவா?

ஆனால், "எனக்கு ஒன்றும் இல்லை கண்ணு." என்று மறுத்தாள் சுபா. "இங்கே எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. நான் நன்றாகத்தான் இருக்கிறேன்," என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஏதோ அரவம் கேட்க "ஐயோ" என்று பதறினாள் அவள்.

சுமுகி கலக்கத்துடன் காத்திருக்கையில் "யார் போனில்?" என்று ஓர் ஆண் குரல் கேட்டது.



அறிந்தாக வேண்டும் என்ற வேகத்தில் கேட்பது போலன்றி சிறு அசட்டையுடன் கூடிய கேள்வி. கூடவே ஒரு சிறு குழந்தையின் பேச்சுக் குரலும் கேட்கவே குழந்தையோடு விளையாடியபடி வந்தவன், சுபாங்கி போனில் பேசுவதைப் பார்த்துவிட்டு இயல்பாகக் கேட்ட கேள்வி என்று அவள் ஊகித்தாள்.

ஆனால் தொடர்பைத் துண்டித்துவிட அவளுக்கு மனம் துணியவில்லை. தன்னால் அக்காவுக்கு என்ன பிரச்சினை வந்து விட்டதோ என்ற கவலையில் டெலிபோன் கருவியை இறுகப் பற்றிய வண்ணம் அசையாமல் நின்றாள்.

"யாரோ தெரியவில்லை." என்றாள் சுபாங்கி தயக்கத்துடன்.

"யார் என்று தெரியாமலா இவ்வளவு நேரம் பேசுகிறாய்?" என்று கேட்ட அவளுடைய கணவன் குரலில் கேலிச் சிரிப்பு தெரிந்தது.

சுமுகிக்கு ஆச்சரியமாக இருந்தது என்னவென்றால் அவன் குரலில் மட்டம் தட்டுதலோ, குத்தலோ இல்லாமல் வெறும்கேலி மட்டுமே இருந்ததுதான். அல்லது வெறும் குரலை வைத்துக் கண்டுபிடிக்க அவளுக்குத்தான் சரியாகத் தெரிய வில்லையோ?

சுபாங்கியும் ரிசீவரை வைத்துவிடவில்லை. தங்கைக்கு தெரியட்டும் என்று எண்ணினாளோ, என்னவோ, ரிசீவரை மூடாமல் கையில் வைத்துக் கொண்டே பேசினாள்.

"ஆமாம்பா. யாருக்கோ திருமணமாம். ஏதாவது உதவி செய்ய வேண்டுமாம். ஒன்றும் முடியாது, என்றால் விட மாட்டேன் என்கிறாள்" என்று புகார் செய்யும் குரலில் கூறினாள்.

"அடராமா. இதற்கா இந்தப் பாடு? சேச்சே. விடும்மா. பேசாமல் ரிசீவரைப் பட்டென்று போட்டாய் என்றால் அப்புறம் அவள் என்ன செய்வாளாம்? பாரடி செல்லம் உன் அம்மாவை. இதற்குப் போய் தன் அழகான முகத்தை இப்படிக் கன்ற

வைத்துக் கஷ்டப்படுகிறாளே. வைத்துவிடு சுபி. அல்லது ரிசீவரை என்னிடம் கொடு. சுருக்கென்று மண்டையில் அடித்தாற்போல இரண்டு வார்த்தை சொல்லி,'' என்று அவன் கூறவும், ''இல்லையப்பா. நானே சொல்லி முடித்து விடுகிறேன்.'' என்று மீண்டும் தங்கையிடம் பேசினாள் சுபாங்கி.

''என்ன? எல்லாம் காதில் விழுந்ததா? யார் என்ன சாபம் போட்டாலும் எனக்கு ஒரு குறையும் வராது. அன்பான கணவர், முத்துப் போல ஒரு பிள்ளை, ஒரு பெண். தேவைக்கு வருமானம். சந்தோஷமாக இருக்கிறேன். புரிகிறதா?'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சுமுகி சிரிக்கத் தொடங்கி விடவும் ''ஏய் வைடி. போனை'' என்று ஓர் அதட்டலுடன் ரிசீவரை வைத்தாள்.

அவள் கணவனிடம் சொன்ன கதைக்குப் பொருத்தமான அதட்டல்.

தமக்கையின் பேச்சை நினைத்து நினைத்துச் சிரிப்பு வந்தது சுமுகிக்கு.

அவளுடைய கணவனுக்குத் தெரியாமலே சகோதரிகள் இருவரும் பேசி முடித்தது பெரிதாக தோன்றவில்லை. ஆனால் புகுந்த வீட்டில் சுபாங்கி கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கவில்லை. அங்கே அவளை நல்ல விதமாகத்தான் நடத்துகிறார்கள் என்பது பெரும் ஆனந்தமாக இருந்தது.

தீவிர சிகிச்சைப் பகுதியில் முழு மயக்கத்தில் லலிதா இருப்பது கூட, அவளது மகிழ்ச்சியைக் குறைக்கவில்லை. சொல்லப் போனால் அவளுக்கும் சிகிச்சை வெற்றிகரமாகத்தான் நடத்துகிறார்கள் என்பது பெரும் ஆறுதல்தான்.

இன்னோர் ஆறுதல், மருத்துவமனைக்கு வந்தவன்தான். இரண்டொரு தரம் அவளைக் கூர்ந்துவிட்டு, ''என்ன முகத்தில் 'பல்ப்' போட்டிருக்கிறது?'' என்று கேலி போல விவரம் கேட்டான்.



''அது'' என்று தமக்கை வீட்டைப் பற்றி எப்படிச் சொல்வது என்று ஒரு கணம் தயங்கினாள் சுமுகி. ஆனால் அவனுக்கு எல்லாம் தெரியும் என்பது நினைவு வர, சுபாங்கியுடன் பேசியது பற்றி விவரித்தாள். ''கொடுமை செய்தாலும் ஒன்றும் பெயராது என்று ஆகிவிட்டால், அப்புறம் வீணாகக் கொடுமைப்படுத்த மாட்டார்கள் என்று அம்மா கூறினார்கள். இன்றுவரை எனக்கு அதில் நம்பிக்கை கிடையாது. அம்மாவை மீறி எதுவும் செய்ய மாட்டாமல், அந்த வீட்டாருக்குத் திருப்தியாகச் செய்வதும் சாத்தியம் இல்லாமல் உள்ளூர வருத்தப்பட்டுக் கொண்டிருப்பேன். ஆனால் அம்மா சொன்னதே சரியாகி விட்டதா? அதுதான் சந்தோஷமாக இருக்கிறது'' என்று மகிழ்ச்சியோடு அவனைப் பார்த்தாள்.

நித்யவாசனின் முறுவல் முழுமையாக இல்லாதது போல சுமுகிக்குத் தோன்றியது.

பாவம், அவனுக்கு என்னென்ன தொல்லையோ?

சும்மாவே அவனுக்கு வேலை அதிகம். தினமும் மனைவி படத்துக்குப் புதுப் பூவினால் கட்டிய மாலை அணிவிப்பது என்று வைத்துக் கொண்டிராவிட்டால் மதிய உணவுக்கு வீட்டுக்கு வருவதைக்கூட நிறுத்தி விடுவான் என்று தமயந்தி ஒருநாள் புலம்பியதுண்டு.

இருக்கும் வேலையோடு அதிகப்படியாக இந்த மருத்துவமனை விஷயம் வேறு சேர்ந்து கொண்டதே. ஆனால் அவன் ஒரு தரமேனும் வந்து போனால்தான் அவளுக்கே நடப்பதில் நம்பிக்கை வந்தது.

விளிம்பு வரையிலும் போய்விட்டு வந்ததாலோ என்னவோ, தன் தாய்க்கு மெய்யாகவே சிகிச்சை நடப்பது நிஜமா, அல்லது பகல் கனவில் ஒரு பகுதியா என்ற ஐயம் சுமுகிக்கு அவ்வப்போது தோன்றிவிடும்.

நனவுதான் என்று உறுதிப்படுத்திக் கொண்ட பிறகும் அன்று ஏதோ ஒரு பரிதாபத்தில் திருமணம் என்றுவிட்டு இப்போது

எப்படிக் கைகழுவுவது என்று நித்யவாசன் எண்ணுவானோ. அப்படியோ, இப்படியோ என்று கண்டபடி நினைத்து அவள் மனதைக் குழப்பிக் கொள்வதும் அவ்வப் போது நடப்பது தான்.

முழுநேரமும் வேலை, வேலை என்று ஓய்வின்றி ஓடிக் கொண்டிருந்தவள். பெற்றவளுக்குச் செய்யும் பணிவிடை கூட இல்லாமல் ஒரு வேலையும் இல்லாமல் சோம்பி இருக்க நேர்ந்தது. இந்த மாதிரி வேதனையாகிப் போயிற்று.

'சும்மா இருக்கும் மனம் சைத்தானின் உலைக்களம்' அல்லவா? வினாடி காலத்துக்குள் உலகை வலம் வந்து விடும் வல்லமை படைத்த மனம், பல மணி நேரம் தனியாகக் கிடக்கையில் என்னவெல்லாம் எண்ணக் கூடும்?

ஆனால் அவளது இந்தக் குழப்பங்கள் எல்லாம் நித்யவாசனைக் கண்டதும் சூரியனைக் கண்ட பனியாக மறைந்துவிடும்.

லலிதாவின் உடல் நிலை பற்றி அக்கறையுடன் விசாரிப்பதும் மேற்கொண்டு செய்யவேண்டிய சிகிச்சைகள் பற்றி மருத்துவரோடு ஆலோசனை நடத்துவதுமாக நடப்பது மெய்தான் என்று தோன்ற வைத்தான்.

திருமணத்தில் உறுதியாக இருப்பதையும் உணரவைத்தான்.

எனவே அன்று மருத்துவமனைக்கு வந்த நித்யவாசனிடம் மனதில் உள்ளதைக் கலந்து கொள்வது பற்றி அவளுக்குத் தயக்கம் ஏற்படவில்லை. அன்று நடந்ததை எல்லாம் சொல்லிச் சிரித்தவள், அவன் முகத்தைப் பார்த்ததும் மனம் சுட, "சும்மாவே உங்களுக்கு அதிக வேலை என்று உங்கள் அம்மா சொல்லுவார்கள். இப்போது தினமும் இங்கே வருவது வேறு அதிகப்படி வேலையாகச் சேர்ந்து விட்டதே. ரொம்பவும் சிரமமாக இருக்கிறதா?" என்று சிறு வருத்தத்துடன் வினவினாள்.



மறுப்பாய்த் தலையசைத்தான் நித்யவாசன். "சிரமமாக இருந்தால் வந்திருக்க மாட்டேன். ஒரு போன் காலோடு நிறுத்தியிருப்பேன். ஆனால் இதைச் சொல்லு. உன் அக்கா திருமணத்துக்கு வந்தால் உனக்கும் உன் தாயாருக்கும் சந்தோஷமாக இருக்கும் அல்லவா? உன் அம்மா வேலை பார்த்து வருமானம் வந்து கொண்டிருக்கவில்லை எனும் போது, அப்படி எதை அவர்களிடம் உன் அக்கா வீட்டார் கேட்க முடியும்?" என்று வினவினான்.

"அம்மாவிடம் கேட்டுப் பயன் இல்லைதான். ஆனால் உங்களிடம்?"

"என்னது? என்னிடமா? என்னிடம் அவர்கள் எப்படிக் கேட்க முடியும்? நமக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை. திருமணம் நடந்த பிறகும் உன் அக்கா கணவனைப் போல நானும் ஒரு மருமகன்தானே? அதே உறவு. என்னிடம் அவர்கள் எப்படிப் பணம் கேட்பார்கள்?"

"ஏன் கேட்கக் கூடாது? வருங்கால மாமியாருக்காக இவ்வளவு செலவு செய்கிறவர் மைத்துனிக்காகச் சில லட்சங்களேனும் ஏன் கொடுக்கக் கூடாது என்று கேட்பார்கள்?"

"என்ன? நிஜமாகவே அப்படி செய்வார்களா சுமுகி?" என்று வியந்து கேட்டான் நித்யவாசன்.

"அப்படி எண்ணித்தானே திருமணம் பற்றிய தகவலே தெரிவிக்க வேண்டாம் என்று அக்கா சொல்லுகிறாள். வெறுமனே சொல்லவில்லை. மன்றாடுகிறாள்" என்று சுமுகி பெருமூச்செறிந்தாள். "ஏனென்றால் இங்கிருந்து பணம் பறிப்பது என்று வந்துவிட்டால் முதல் வதைப்படுவது அவள்தானே? ஆளாளுக்கு அவளைப் பந்தாடத் தொடங்கிவிடுவார்கள். முன்பு என்ன பாடுபட்டாள்."

சிறு மௌனத்தின் பின், "திருமணம் என்று தகவல் தெரிவித்து விட்டாய் அல்லவா? உன் அக்கா அவள்

வீட்டிலிருந்தே மனதால் உன்னை வாழ்த்தட்டும்'' என்று இந்தப் பேச்சை முடித்தான் அவன்.

உடம்பு தேறி வந்த லலிதாவுக்கும் விஷயம் அறிந்தது மிகுந்த மகிழ்ச்சி.

இரண்டாவது தாரம் என்ற உறுத்தல், நித்யவாசனை நேரில் கண்டதும் மறைந்து போயிற்று.

ஆனால் திருமணம் முடிந்த பிறகு மருமகன் வீட்டில் வசிக்க அவள் ஒப்பவில்லை.

"உடம்புதான் குணமாகி விட்டதே. முன்போல ஏதாவது வேலை தேடிக் கொள்கிறேன். உன் கணவன் வீட்டாருக்குச் சங்கடமாக இருக்குமானால் வேற்றூரில் வேலை பார்க்கிறேன்'' என்று பிடிவாதம் பிடித்தாள். "மற்றபடி பெண்ணோடு சேர்ந்து வரும் சீதனம் போல நானும் வந்து உட்கார என் மனம் இடம் தராது'' என்றாள்.

"நான் அவனுடைய தாய். நீங்கள் அவளைப் பெற்றவர். இரண்டு உறவுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?'' என்று தமயந்தியே எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் லலிதா அதை ஒத்துக் கொள்வதாக இல்லை.

இவள் திரும்பவும் வேலை பார்க்கிறேன் என்று பிடிவாதம் பிடித்து, மறுபடியும் உடம்பைக் கெடுத்துக் கொள்வாளோ என்ற பயம் எல்லோருக்கும் வந்தது.

இந்த ஒப்பந்தத் திருமணத்தின் அடிப்படையே வீணாகி விடுமோ என்று சுமுகி கலங்கினாள்.

எதிர்காலமே இல்லாத ஒரு திருமணம். நித்யவாசனைப் பொறுத்த வரையில் ஒப்புக்காக அவனுடைய தாயாரை அமைதிப்படுத்துவதற்காக மட்டுமே செய்யப்படும் பொய்த் திருமணம். சுமுகியும் இதை ஏற்றுக் கொண்டாள் என்றால், அதன் முக்கியக் காரணம் தன் தாய் வேதனைப் பட்டுச் சாகக் கூடாது



என்பது மட்டுமே. தாயின் மரண வேதனையைக் கண்டு தவித்தாக வேண்டிய நிலையில் இருந்து மீள முடிந்தது. முன்னதன் அளவு முக்கியமற்ற, அடுத்த ஒரு காரணமே.

இப்போது முழு ஆரோக்கியம் அடைவதற்கு முன்பாகவே, ஏதாவது வேலை செய்து லலிதா மீண்டும் உடலைக் கெடுத்துக் கொள்வதானல் அவளுடைய மகள் இந்தப் பொருளற்ற திருமணத்தை ஒப்புக் கொண்டதில் அர்த்தமே இல்லையே.

சிகிச்சைக்காக நித்யவாசனின் பணத்தை இப்படித் தண்ணீராய்ச் செலவு செய்த பிறகு சுமுகி பின் வாங்கவும் முடியாது.

பின்வாங்குவதா?

சட்டென சுமுகியின் உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடியது.




அன்று வரை சுமுகி திருமணத்துக்காக ஏங்கியவள் அல்ல.

சொல்லப் போனால் சுபாங்கியின் திருமணத்தைத் தொடர்ந்து அவளுடைய குடும்பம் அனுபவித்த அவதியில் திருமணம் என்ற சொல்லே அவளுக்குக் கசப்பாகத்தான் இருந்தது. அவளது திருமணத்துக்காகச் சேர்ப்பது பற்றி லலிதா பேசும்போதெல்லாம் பெரும்பாலும் அவளுக்கு எரிச்சல்தான் வரும்.

எல்லோரும் சுபாங்கி வீட்டினர் போல இருக்க மாட்டார்கள். நிறைய நல்லவர்கள் உண்டு என்று பல்வேறு உதாரணங்களைக்

காட்டி வெகு சிரமப்பட்டுத்தான் லலிதா அவளை மாற்ற முடிந்தது.

அப்போதும் திருமணத்தை அவள் அதிக ஆவலாக எதிர் நோக்கினாள் என்று சொல்ல முடியாது.

தாயின் நோய் விவரமும், நோய் அதிகமான காரணமும் தெரிந்த பின் திருமணம் பற்றி மீண்டும் அவளது மனம் அலுத்துச் சலித்திருந்தது.

அதை மாற்றியது நித்யவாசன்தான்.

தன் திருமணத்தால் தாய் சுகமடைந்து உயிரோடு இருக்கப் போகிறாள் என்பதே பெரிய சுகம். அதைத் தருகிறவனை_ தந்தும் இருப்பவனைக் கணவனாக என்ன கடவுளாகவே ஏற்கலாம்.

வெறும் பெயரளவுக் கணவனாகவே இருந்தாலும் நித்யவாசனைக் கணவனாக நினைத்துவிட்டு அதை எப்படி மாற்ற முடியும்? நிச்சயமாகக் கூடாது.

திருமணத்தை மறுக்கும் எண்ணம் இப்போது சுமுகிக்குக் கொஞ்சமும் கிடையாதுதான். ஆனால் முதலில் இந்த மாதிரித் திருமணத்தில் அவள் தன் எதிர்காலத்தையே பணயம் வைத்தது வீணாகித்தானே போகும்?

சுமுகி முகம் வாடி நிற்பதைப் பார்த்துவிட்டு பெற்றவளுடன் கலந்து பேசி நித்யவாசன் ஓர் ஏற்பாடு செய்தான்.

ஊட்டி செல்லும் வழியில் 'லவ்டேல்' பகுதியில் நித்யவாசனுடைய சகோதரி குடும்பத்துக்கு ஓர் எஸ்டேட் இருக்கிறது. அதை ஒட்டியிருக்கும் பழப் பண்ணையின் உரிமையாளர் நித்யவாசனுடைய நண்பன். சில மாதங்களில் அவன் குடும்பத்தோடு வெளிநாடு போகிறான். அவனது பண்ணையை நிர்வகிக்க அவனுக்கு ஆள் வேண்டும்.

கணக்கு வழக்குகள் பார்க்கத் தெரியும் என்பதால் லலிதா அந்த வேலையைப் பார்க்கலாம். அவர்களுக்குத் தேவை, நம்பிக்கையான ஆள் மட்டுமே. இன்னும் பத்து நட்களுக்குள் சென்றால் பண்ணை நிர்வாகத்தில் நல்ல பயிற்சி தந்துவிட்டு அவர்கள் நிம்மதியோடு கிளம்புவார்கள்.



அத்தோடு தமயந்தி அம்மாளே லலிதாவைக் கூட்டிப் போய் விட்டுவிட்டு தன் மகளின் எஸ்டேட் நிர்வாகியிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்தால் அந்த நிர்வாகியுடைய குடும்பம் முழுமையும், லலிதாவுக்கு வேண்டியதை பார்த்துச் செய்யும்.

லலிதா விரும்பியது போலத் தனியாக இருக்கலாம். தன் வருமானத்துக்கு வேலை பார்க்கலாம். ஆனால் அன்னைக்கு என்ன ஆகிவிடுமோ என்ற அவளுடைய மகள் கவலைப்பட வேண்டியது இல்லை.

பெரும் சுமை இறங்கியவளாக சுமுகி நன்றி கூற முயன்றபோது, "என்னைச் சுற்றி இருப்பவர்கள் நிம்மதியாக இருக்க வேண்டும் என்பது என் விருப்பம். அதற்காக இயன்றவரை முயற்சிப்பதும் பழக்கம்தான். இதில் பெரிதாக நினைக்க ஒன்றுமில்லை," என்று முடித்துவிட்டான் அவன்.

உண்மைதானா? அவனுடைய தாயாரின் மன நிம்மதிக்காகத்தானே இந்தத் திருமணமே. ஆனால் தாயாரின் மகிழ்ச்சி வெறும் திருமணச் சடங்கைக் கண்ணாரக் காண்பதோடு நின்று விடுமா?

விரைவிலேயே ஒரு சின்னக்... வேண்டாம். இப்போது அதைப் பற்றியெல்லாம் நினைக்கக் கூடாது. நடப்பது நல்ல படியாக நடக்கட்டும். பசித்தவனுக்குப் பழையது போல அவளுக்கு அது போதும்.

அது ஒன்றே போதும். அந்த அளவில் அவள் திருப்தி அடைவதுதான் நியாயம்.

தன் தேவதையை நினைத்தபடி நித்யவாசன் சுகமாக வாழ்வதைப் பார்த்துக் கொண்டே அவனுடைய மனைவி என்ற பெயரில் சுமுகியும் வாழ்ந்து முடித்து விடுவாள்.

அவளுடைய தாயின் உயிரை மீட்டுத் தந்து, நல்லபடியாக வாழ வைத்தவனின் ஒப்பந்த நிபந்தனையை அவள் முழு மனதுடன் நிறைவேற்றியாக வேண்டும்.

இப்படித் தீர்மானித்து அதன்படியே நடந்தவள் மனதில் சிறு நிரடலை ஏற்படுத்தியது தமயந்திதான்.

லலிதாவை நர்சின் பராமரிப்பில் விட்டுவிட்டுப் போகலாம் என்ற நிலை வந்ததும் சுமுகியை அழைத்துச் சென்று அவளுக்குத் தேவை என்று அவர் நினைத்ததை எல்லாம் மருமகளுக்குப் பரிசு என்ற பெயரில் வாங்கிக் குவித்தார்.

முதலில் அவைகளைப் பெற்றுக் கொள்ள சுமுகி மிகவும் தயங்கினாள். இந்தப் பரிசு மழையைத் தடுத்து நிறுத்துமாறு நித்யவாசனிடமும் கேட்டுக் கொண்டாள்.

ஆனால் அவனுடைய மனைவியாக ஆன பிறகு அந்த நிலையில் இவையெல்லாம் தேவைப்படும் என்று நித்யவாசனே அவளிடம் எடுத்துச் சொன்ன பிறகு அதன் உண்மை உணர்ந்து, தமயந்தி கொடுப்பனவற்றை மறுத்துப் பேசாமல் வாங்கிக் கொண்டாள்.

அதுபோல வாங்கச் செல்லும் போதெல்லாம் மகனைப் பற்றி நிறையப் பேசுவார்.

அவளுடைய நித்யன் சிறு குழந்தையாக இருந்ததில் தொடங்கி இன்று வரையிலான வளர்ச்சிப் பட்டியல்.

அந்தந்த வயதில் அவன் கெட்டிக்காரத்தனமாக என்னென்ன செய்தான் என்ற நிகழ்ச்சிக் கோவை.

பெரியவர் சொல்லச் சொல்லக் கேட்கையில் கூடச் சேர்ந்து சிரித்து பிரமித்த போதும் பிற்பாடு அந்த உரையாடலின் நினைவு ஏதோ ஒரு வகையில் தன் அமைதியைக் குலைப்பதாக... ஒரேயடியாக அமைதி குலைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. ஆனால் அது லேசாகக் கலைவது போல சுமுகி உணர்ந்தாள்.



அவ்வப்போது தமயந்தி அம்மாள் சொன்ன நிகழ்ச்சிகள் தானாக நினைவு வந்தன. அதற்கு மேல் அவனைப் பற்றிய கற்பனைகள்.

முதலில் சுகமாக இருந்த போதும் முடிவில் ஒரு திருப்தியற்ற மனநிலைதான் உண்டாகவும் சுமுகி விழித்துக் கொண்டாள்.

இது அவளுக்கு நல்லதல்ல. நித்யவாசனிடம் அவள் ஒப்புக் கொண்டுள்ள திருமண விதிகளுக்கு முரண் எழுப்பக் கூடியது. அதற்கு அவள் இடம் கொடுக்கக் கூடாது. அது நன்றி மறந்த செயல்.

தமயந்தியின் பேச்சிலிருந்து சுமுகி இன்னொன்றையும் உணர்ந்தாள்.

அவருக்கு மகனுடைய முதல் மனைவியைப் பிடிக்க வில்லை.

'பிடிக்கவில்லை' என்று இன்னோரன்ன வார்த்தைகளால் அவர் சொல்லாது விடுத்தாலும் இலை மறை காய் போல, ஒரோரு தருணங்களில் அவ்ரது மனோபாவம் வெளிப்பட்டு சுமுகியை வியப்பில் ஆழ்த்தியது.

நித்யவாசனானால் பாமினியைத் தேவதை என்கிறான். அவனுடைய தாயார் சராசரிக்கும் ரொம்பக் கீழே என்கிறாரே.

மருமகள் என்றாலே வெறுக்கும் மோசமான மாமியாராகத் தமயந்தி அம்மாளைக் கற்பனை செய்து பார்க்கக் கூடச் சின்னவளால் முடியவில்லை. அவர் ஒருவரை வெறுப்பதனால் தப்பு மற்றவரிடம் தான் இருக்க வேண்டும்.

அதே சமயம் நித்யவாசனால் தேவதையாக மதிக்கப்படும் ஒருத்தி மோசமானவளாக இருக்க முடியாது என்பதிலும் அவளுக்கு உறுதி இருந்தது.

அதெப்படி ஒருவருக்குத் தேவையாக இருப்பவள் இன்னொருவருக்குப் பேய் பிசாசாக இருக்க முடியும்?

சந்திரனின் ஒரு பக்கம் வெளிச்சமாகவும், மறுபுறம் ஒரே இருட்டாகவும் இருக்குமாமே. அது போலத்தான் அந்தப் பாமினியுமா?

இருக்குமா?

பொதுவாகத் தமயந்தி அம்மாளின் தேர்வு நேர்த்தியாக இருக்கும். துணிமணி என்றாலும் சரி, நகைகள் என்றாலும் சரி, 'காடி' என்று யாரும் முகம் சுளிக்க முடியாது. அது பற்றிய பேச்சின் போதுதான் முதல் முறையாக அவர் பாமினி பற்றிப் பேசியதே.

சுரிதார் செட்டுகளோடு அணிவதற்காக சற்று மெல்லியதாக நகை வாங்கிக் கொண்டு இருந்தார்கள். அழுத்தமும் கனமுமாய் இருந்தவற்றை ஒதுக்கிவிட்டு நல்ல நகாசு வேலைப்பாட்டுடன் கூடிய நகைகளாகத் தேடினாள் சுமுகி.

"பாமினிக்கு நகை என்றாலே தங்கத்தை உருட்டித் திரட்டியதாக இருந்தால்தான் பிடிக்கும். இருப்பதில் அதிகக் கனம் உள்ளதைத்தான் தேர்ந்தெடுப்பாள்." என்றார் தமயந்தி சற்று இளப்பமான குரலில்.

திகைப்புற்று அவர் முகத்தைப் பார்த்தாள் வருங்கால மருமகள்.

சுமுகி தேர்ந்தெடுத்த பொன்மாலையை விரித்துப் பிடித்து, அவள் கழுத்தில் வைத்துப் பார்த்தபடி அவர் இயல்பாகத் தன் போக்கில் சொன்னதுதான். இறந்து விட்ட மூத்த மருமகளைப் பற்றிப் பேசுவதை உணர்ந்தாற் போலக் கூடத் தோன்றவில்லை.

சுமுகி புரியாமல் நோக்குவதைக் கவனித்துவிட்டு, "என்னம்மா நன்றாக இருக்கிறதுதானே? வாங்கிவிடலாம் அல்லவா?" என்று தமயந்தி கூறவும் பாமினி பற்றி அவர் கூறியது வெறும் பேச்சுப் போக்கில்தான். வேண்டும் என்று சொல்லியதல்ல என்று சின்னவள் உணர்ந்தாள்.



முன்பு நடந்தது மனதில் இருந்து இப்போது தானாக வாயில் வந்திருக்கிறது.

ஆனால் நித்யவாசனின் நடை, உடையிலும் ஓர் அமர்ந்த தன்மையைத்தான் சுமுகி கண்டிருக்கிறாள். கைக் கடிகாரம் விலை உயர்ந்ததே என்றாலும், தோல் 'ஸ்டிராப்' தான். வைரம் பதித்த சங்கிலி மாட்டவில்லை. வெறும் தங்கம்கூட இல்லை. கைக்கு மூன்று விரல்களில் மோதிரம். அடுத்த கைக்கு குறைந்தது ஐந்து பவுனில் கைச்சங்கிலி... ஊகூம் இந்த மாதிரி ஒன்றும் கிடையாது.

ஒழுங்காக வெட்டப்பட்டு சுத்தமாகப் பளபளத்த சீரான நகங்கள் தவிர, ஒரு விதமான நகையுமே கிடையாது.

இவனுக்கும் அந்த பாமினியின் 'காடி' நகைகளுக்கும்... எப்படிப் பொருந்தும்? இவனுக்கும் ஆச்சரியமாக இருந்தது சுமுகிக்கு.

அடுத்த முறை நித்யவாசனின் வீட்டுக்குச் சென்றபோது உணவுக்குச் சமையல்கார அம்மாவிடம் சொல்வதற்காகத் தமயந்தி உள்ளே செல்லவும், இவள் பாமினி படத்தின் அருகில் சென்று அதை உற்றுப் பார்த்தாள்.

அந்தப் படம் நித்யவாசன் எடுத்து, பாமினி இருக்கும் போதே அவளது ஆசைப்படி பெரிதுப்படுத்தப்பட்டதாம்.

ரொம்ப அழகாக இருந்தாள்.

அத்தோடு அந்தப் படத்தில் பாமினி அணிந்திருந்த நகைகளும் நன்றாகத்தான் இருந்தன. தங்கத்தை அடித்து உருட்டித் திரட்டி வைத்தமாதிரிக் கொஞ்சம் கூட இல்லை. எளிமையாகவே தோன்றின. பின்னே?

இதற்கு இருவித விளக்கங்கள் இருக்கக்கூடும்.

ஒன்று பாமினி கணவனிடம் வேறு முகம் காட்டியிருக்க வேண்டும். அல்லது ஏனோ அவளை வெறுத்து தமயந்தி பொய் புகன்றிருக்க வேண்டும்.

இரண்டையுமே ஒத்துக்கொள்ள சுமுகிக்குப் பிடிக்க வில்லை.

பாமினி பொய்த்தாள் என்றால் நித்யவாசன் தாங்க மாட்டான். அந்த அளவுக்கு அவள் மீது காதல் அவனுக்கு. அதே சமயம் வேண்டும் என்றே தமயந்தி பொய் சொல்லக்கூடும் என்று அவளாலேயே ஒத்துக் கொள்ள முடியாது.

அந்த மாதிரிச் சில்லரைத் தனங்களுக்கு அப்பாற்பட்டவர் தமயந்தி.

பின்னே?




நகைக் கடைக்குப் போய் வந்ததில் இருந்து சுமுகிக்கு மனம் குழம்பிக் கொண்டே இருந்தது.

தன்மீதே கூட ஒரு சந்தேகம்.

மெய்யோ, பொய்யோ நித்யவாசனுடைய மனைவியாகப் போகிறவள் அவள். தானாக அவளது மனம் அவனுடைய முதல் மனைவியிடம் குறை காணத் தோன்றுகிறதோ?

நகாசு வேலை நகைகளுக்குக் கூலி, சேதாரம் அதிகம். கணவன் பணத்தை அப்படி வீணாக்கக் கூடாது என்று பாமினி கனமான நகைகளைத் தேர்ந்தெடுத்து வாங்கியிருக்கலாம்.

தமயந்தியின் 'இளப்பமான' குரல்கூட சுமுகியின் கற்பனையாகவே இருக்குமோ? அவர் தன் போக்கில் சொன்னதைத்தான் இவள் தப்பாக அர்த்தம் செய்து கொண்டாளோ?



பாமினியிடம் உயிரையே வைத்திருக்கும் நித்யவாசனுக்கு இது தெரிந்தால் சுமுகியைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைப்பான்? சீச்சீ. மனதை இன்னும் கொஞ்சம் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறெல்லாம் தன்னைத்தானே கடிந்து கட்டுப்படுத்திக் கொண்டபின்தான் சுமுகி ஒருவாறு அமைதியுற்றாள்.

ஆனால் இதேபோல இன்னொரு சம்பவமும் நடந்து மீண்டும் அவளைக் குழப்பியது.

'ஜரிகை உருக்கினால் எவ்வளவு கிடைக்கும்?' என்று கேட்டு, அது ஒரு நல்ல தொகையாக இருக்கக் கூடியதான, நிறைய ஜரிகை உள்ள சேலையைத்தான் பாமினி வாங்குவாள் என்று துணிவாங்கும்போது சொன்னார் தமயந்தி.

ஜரிகை நல்லதா என்று தெரிந்து கொள்வது புத்திசாலித் தனம்தான்.

அனால், சேலை வாங்கும்போது உழைக்குமா, நமக்குப் பொருந்துமா என்று பார்ப்பதை விடுத்து அது பழசாகிப் போன பிறகு அதிகம் பெறுமா என்பதைக் கணக்கிட்டு வாங்குவதும் என்னவோ போலத்தான் சுமுகிக்குத் தோன்றியது.

அடி மனதில் பணத்தையே பெரிதாக நினைக்கிற தன்மை.

ஆனால் படத்தில் இருந்த அழகு முகம் அப்படிச் சொல்லவில்லையே.

இந்தப் பாமினி உண்மையில் எப்படிப்பட்டவள்? அதைத் தெரிந்து கொண்டே ஆகவேண்டும் போல ஒரு வேகம் உண்டாகிவிட சுமுகி தன் வருங்கால மாமியாரிடம் பாமினியைப் பற்றிப் பேச்செடுத்தாள்.

லலிதாவுக்கு இப்போது பெரிதும் குணமாகி விட்டிருந்தது.

அவளைப் போன்ற பெரிய நோய் வந்து குணமடைந்தவர் களுக்குச் 'செக்கப்' உடல் பயிற்சி, மருத்துவக் கண்காணிப்பு

போன்றவை தொடர்ந்து தேவைப்படக்கூடும். அப்படிப் பட்டவர்கள் தங்குவதற்காக மருத்துவமனை வளாகத்திலேயே சிறு குடில்கள் இருந்தன. இப்போது லலிதா அங்குதான் இருந்தாள்.

ஒரு நர்ஸ் எப்போதும் துணையிருக்கும்படி நித்யவாசன் ஏற்பாடு செய்திருந்தான்.

பொதுவாகக் கடை கண்ணிக்குச் சென்றால் மருத்துவ மனைக் குடிலுக்குச் சென்று, லலிதாவிடம் எல்லாவற்றையும் காட்டிவிட்டு, தமயந்தி அம்மாவோடு அவரது வீட்டுக்குப் போய், அங்கே சுமுகிக்கென தயாராகியிருந்த அறையில் அவற்றைப் பத்திரமாகப் பூட்டி வைத்துவிட்டு, பெரியவரோடு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு அதன்பின் தாயிடம் திரும்புவது இப்போது சுமுகிக்குக் கிட்டத்தட்டத் தினசரி வழக்கம் ஆகிவிட்டிருந்தது.

அப்படிப் பேசிக் கொண்டிருந்த போது, ஒரு நாள் சுமுகி தமயந்தியிடம் கேட்டே விட்டாள். "தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள் அம்மா..." என்று தொடங்கியவளின் பேச்சில் குறுக்கிட்டு, "கட்டாயம் உன்னைத் தப்பாகத்தான் நினைப்பேன்." என்று கடும் குரலில் சொல்லி அவளைத் திகைக்க வைத்தார் தமயந்தி.

சுமுகி பேந்த விழிக்கவும், "இப்படி என்னை 'அம்மா, அம்மா' என்று அழைத்தால் கட்டாயமாக உன்னைத் தப்பாகத் தான் நினைப்பேனாக்கும்" என்று தன் புதிரை உடைத்துச் சின்னவளைச் சிரிக்க வைத்துத் தானும் சிரித்தார்.

புன்னகையோடு, "சாரி அத்தை. வாயில் பழைய பழக்கமே வந்து விடுகிறது" என்று மன்னிப்புக் கேட்டாள் வருங்கால மருமகள்.

கூடச் சேர்ந்து முறுவலித்துவிட்டு, "சரி, இப்போது சொல்லு. என்ன சொல்ல வந்தாய்?" என்று விசாரித்தார் தமயந்தி.



அப்போதும், "பிற்பாடு உங்கள் மகனை நன்றாகப் புரிந்து கொள்ள உதவும் என்றுதான் கேட்கிறேன்" என்று பீடிகையின் பின்னரே, "உங்கள் மூத்த மருமகள் எப்படிப்பட்டவள் அத்தை? என்ன மாதிரிப் பழகுவாள்?" என்று பாமினியைப் பற்றிய விவரம் கேட்டாள் சுமுகி.

தமயந்தி உடனடியாக ஒன்றும் கூறவில்லை.

புருவம் சுருக்கி யோசித்துவிட்டு, "செத்து விட்டவள்" என்று வாய்க்குள் முனகினார். பிறகு வருங்கால மருமகளை ஏறெடுத்துப் பார்த்து, "அவள் முடிந்துவிட்ட அத்தியாயம் அம்மா. அடியோடு மறக்கப்பட வேண்டியவள், எல்லோராலுமே. இந்த நேரத்தில் அவள் பேச்சு எதற்கு? விடு." என்று முடித்துவிட்டார்.

இதற்குமேல் பிடிவாதமாகப் பாமினி பற்றி அவரிடம் கேட்க சுமுகிக்குத் தயக்கமாக இருந்தது.

இதுவரை தமயந்தி அம்மாளோடு சுமுகிக்கு ஒரு நல்ல உறவு இருந்தது.

இந்தப் பாமினியைப் பற்றி விடாமல் கேட்கப் போய் அந்த நல்ல உறவில் விரிசல் விழுந்து விடக் கூடாதே.

நித்யவாசனிடம் கேட்பதற்கோ அவளுக்கே பிடிக்கவில்லை.

அவனானால் பாமினியை ஆகா, ஓகோ என்று புகழுவான். இவளோ இல்லாத மகிழ்ச்சியை இருப்பது போலக் காட்டிப் புன்னகை செய்ய வேண்டும். அது வேறு சங்கடம்.

பாமினியைப் பற்றிய அவனது மதிப்புரை சரியானதாக இருக்குமா என்பதிலும் இப்போது சுமுகிக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டிருந்தது.

கண்டதும் காதல், உடனே திருமணம், திருமணமாகி மூன்றே மாதங்களில் இறந்தே போய்விட்டாள். மோக மயக்கம் தணிந்து

குறை நிறைகளைச் சீர்தூக்கிப் பார்க்க நித்யவாசனுக்கு அவகாசமே இல்லையே.

ஆசையாக நக்கிக் கொண்டிருந்த மிட்டாயைப் பறிகொடுத்த சிறுவனைப் போன்ற நிலைதானே அவனதும்? முதலில் இருந்த இனிப்புப் பூச்சுக்கு உள்ளே, கசப்பு இருந்ததா என்று அறியுமுன்னரே, மிட்டாய் பறி போய் விட்டது. அவனளவில் இனிப்பு மட்டும்தானே தெரியும்? இழப்பின் தவிப்பு வேறு இனிப்பை இன்னமும் அதிகமாக்கிக் காட்டும்.

நித்யவாசனின் அபிப்ராயம் சரியாக இருப்பது அபூர்வமே.

ஒரு வேளை பாமினி இனிமையான பெண்ணாக இருந்திருக்கலாமே அப்படியில்லை என்றும் சொல்வதற்கில்லை.

ஆனால் அவள் அப்படியில்லையோ என்ற சந்தேகத்தைக் கூட இப்போது அவனால் சகிக்க முடியாது. தன் தேவதை எப்படிப்பட்டவள் என்று சுமுகி விசாரிப்பதே அவனுக்கு ஆத்திரமூட்டலாம். எனவே இந்த விசாரணையைச் சுமுகி நிறுத்திக் கொள்வதுதான் அவளுக்கே நல்லது.

எனவே தன் குழப்பங்களைச் சுமுகி தனக்குள்ளே வைத்துக் கொண்டாள்.

திருமணத்துக்கு மூன்று தினங்கள் முன்னதாகத் தாயின் இளமையான பிம்பம் போல வந்து சேர்ந்த நாத்தனாரையும் சுமுகிக்குப் பிடித்துப் போயிற்று.

ஏழை பாழை, தந்தை இல்லாதவள் என்று எந்த விதமான குறையும் சொல்லாமல் அந்தக் குடும்பத்தின் மூன்றாவது நபரான அவளும் சுமுகியைப் பிரியமாகவே ஏற்றுக் கொண்டாள்.

தாயோடு டெலிபோனில் பேசியதிலேயே அவளுக்குத் தம்பியின் தேர்வு பிடித்துப் போய்விட்டதாம்.

பல்வேறு விதங்களில் சுமுகியிடம் தன் பிரியத்தைத் தமயந்தி காட்டியிருந்த போதும் அவர் மகளின் இந்த அறிவிப்பு சுமுகிக்கு மிகவும் மகிழ்ச்சியூட்டியது.



சுமுகியைப் பற்றி அவர் உயர்வாகக் கூறியிருந்தால்தானே மானசி இப்படிச் சொல்ல முடியும்?

பேத்திகளைக் கூட்டி வரவில்லை என்ற தமயந்திக்கு வருத்தம்தான்.

"அடுத்த வாரம் தேர்வு அம்மா. இங்கே கூட்டி வந்தேன் என்றால் மாமா, பாட்டி, திருமண விழா என்று படிப்பு பற்றிய நினைவே போய்விடும். அப்புறம் இரு மடங்கு பாடு பட்டுப் படிக்க வைக்க நேரும். ஆதனால் பெரிய விடுமுறையின் போது கூட்டி வருகிறேன். இப்போது நான் மட்டுமாகச் சுமுகியோடு ஆசை தீரப் பழகப் போகிறேன்." என்றாள் மானசி.

ஆனால் அப்படிச் சொன்னாளே தவிர தாய் வீட்டில் தங்கியிருக்கவே அவளுக்கு நேரம் இருக்கவில்லை.

வெளிநாட்டில் வசிக்கப் போகிறவர்களுக்கு இது ஒரு தொல்லை.

நெருங்கிய உறவினர்கள் சந்திப்பதும், சொந்த ஊர் செல்வதும் 'லவ்டேல்' பண்ணையைப் பார்ப்பதுமாக அவள் கணவரோடு சுற்றிக் கொண்டே இருக்க நேர்ந்ததில் சுமுகியோடு அவளால் நன்றாகப் பழக முடியாது போயிற்று.

சின்னவளுக்கும் அதில் ரொம்பவே வருத்தம்தான்.

பிரியமாகப் பேசும் இவளுடன் நிறைய உரையாட முடியாதது ஒரு வருத்தம் என்றால் இவளிடமாவது பேச்சுவாக்கில் பாமினியைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பும் தட்டிப் போயிற்றே என்பது இன்னொன்று.

மானசியும் அவள் கணவரும் தங்கள் எஸ்டேட்டைப் பார்த்துவரப் போகிறார்கள் என்றதுமே பண்ணை நிர்வாகியிடம் லலிதாவைப் பற்றிச் சொல்லி வைக்கும்படி நித்யவாசன் தமக்கை கணவனிடம் கூற எல்லோரும் 'ஓ' வென்று சிரித்தனர்.

வருங்கால மாமியாருக்காகப் பார்க்கிறானாம்.

சுமுகியின் மனமும் நெகிழ்ந்தது.

இவ்வளவு செலவு பண்ணிப் பிழைக்க வைத்துவிட்டோம். மேற்கொண்டு வாழவும் ஓர் ஏற்பாடு செய்துவிட்டோம் என்று அவன் சும்மா இருந்து விடவில்லை. உடையவர்களான தமக்கையும், அவளுடைய கணவரும் நேரில் சொன்னதால் நிர்வாகி அதை வேத வாக்காக ஏற்றுச் செய்வார் என்பதால் அவர்களிடமும் சொல்லி அனுப்புகிறான்.

இதற்காக அவனிடம் நன்றி சொல்லத் தொடங்கினாள் சுமுகி.

ஆனால் அவளது நன்றியுரையை நித்யவாசன் ஏற்க வில்லை. "நான் செய்வதாக ஏற்றுக் கொண்ட பொறுப்பைத் தானே செய்கிறேன். இதற்கு நீ நன்றி கூறத் தேவையே இல்லை" என்று முடித்துவிட்டான்.

இதில் அவளுக்கு ஏதோ செய்தி இருப்பது போல சுமுகிக்குத் தோன்றியது.

அவனைப் பொறுத்த அளவில் ஒரு காரணத்துக்காக அவளை மணக்கிறானே தவிர, அவளிடம் ஆசையோ நேசமோ கிடையாது. அவளிடமே அன்பு கிடையாது எனும்போது அவளுடைய தாயாரைப் பற்றி அவனுக்கு என்ன வந்தது.

வருங்கால மனைவி என்று அவளிடமோ, வருங்கால மனைவியுடைய தாயார் என்று லலிதாவிடமோ நித்யவாசனுக்குப் பாசம் பொங்கி அவன் எதுவும் செய்ய வாய்ப்பில்லை.

ஒப்பந்தப்படி ஏற்ற பொறுப்பை இம்மி கூடக் குறை வராமல் நிறைவேற்றுகிறேன். அவ்வளவே.

அவனைப் போலவே அவளும் ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பது அவனது எதிர்பார்ப்பு. அதனால் நன்றி தேவையில்லை என்கிறான். அவ்வளவே.



என்னவோ வானத்தில் சொகுசாக மிதந்து கொண்டிருந்த ரதம் தரையிறங்கி சென்னைச் சாலையில் ஓடுவது போல உணர்ந்தாள் சுமுகி.

விஷயம் தெரியாமல் நித்யவாசனுடைய தாயாரும், தமக்கையும் அவளிடம் என்னதான் உண்மையான பிரியம் காட்டினாலும் அவனுக்கு அவள் வெறும் ஒப்பந்த மனைவிதானே? ஒப்பந்தப்படி நடப்பது மட்டுமே அவளது கடமை. மற்றபடி மகிழ்வும் நெகிழ்வும் அவளுக்கு உரியவை அல்ல என்று சொல்லாமல் சொல்லுகிறானா.

ஒப்பந்தப்படி மகிழவும், நெகிழவும் அவளுக்கு உரிமை இல்லாதிருக்கலாம். ஆனால் ஒரு நல்ல செயலுக்கு நன்றி செலுத்துவது கூடவா தப்பு?

அவளது நன்றியுரையை இரண்டாவது தடவையாக அவன் எப்படித் தடுத்து நிறுத்தலாம்?

'சுருசுரு' வென்று உள்ளே எழுந்த கோபத்தை வெளிக் காட்டாமல் அப்போதைக்கு சுமுகி அடக்கிக் கொண்டாள்.

இருக்கட்டும். அதற்கும் எப்போதேனும் வாய்ப்புக் கிடைக்கும்.

எல்லோரும் வாழ்த்த சுமுகி நித்யவாசனின் திருமணம் பொதுவாக நல்லபடியாகவே நடந்தேறியது.

மணமகன், மணமகளிடம் மற்றவர்கள் எதிர்பார்த்ததை இருவரும் செய்தார்கள்.

நித்யவாசன் விரும்பியது போல இதை ஒரு மெய்யான திருமணமாகவே எல்லோரும் நினைத்தார்கள்.

பெற்றவள், தமயந்தி இருவரின் மகிழ்ச்சி நிரம்பிய முகங்களைப் பார்க்கும் போது 'பரவாயில்லை இது போதும்' என்றே சுமுகிக்குத் தோன்றியது. இரண்டு மாதங்களுக்கு முன் இருந்த நிலையை அவள் மறந்து விடவில்லை. அதை நினைக்கையில் இது சொர்க்கம்.

இரவில் கணவனுக்குப் பால் எடுத்துப் போன சுமுகி பால் 'ஜக்'கை மேஜைமேல் வைத்துவிட்டு அவன் காலில் விழுந்து பணிந்தாள்.

நெருப்புப் பட்டது போலத் துள்ளிக் குதித்துப் பின்னடைந்தான் நித்யவாசன். "இது என்ன முட்டாள்தனம் சுமுகி? நான் சொன்ன எதையும் நீ காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லையா? நான் என்ன சொன்னேன்? நீ என்ன பைத்தியக்காரத்தனம் செய்து கொண்டு இருக்கிறாய்" என்று ஆத்திரத்துடன் வினவினான் அவன்.

"நான் என்ன தப்பு செய்துவிட்டேன்?" என்று அவனை நேராகப் பார்த்து நிதானமாகக் கேட்டாள் அவள்.




சுமுகியின் நேர்ப் பார்வையினாலோ, என்னவோ பதில் சொல்ல நித்யவாசன் ஒரு கணம் திணறித் தயங்கினான்.

ஆனால் பல ஆண்டுகளாகப் பல்வேறு மனிதர்களைச் சமாளித்து வெற்றிகரமாகத் தொழிலை நடத்தி வரும் அனுபவம் கை கொடுக்க, "என் காலில் விழுந்தாயே," என்று சற்றுத் தணிந்த ஆனால் அழுத்தமான குரலில் குற்றம் சாட்டினான்.

ஆனால் அந்தக் குரலுக்கும் அடங்கிவிடாமல், "அதில் என்ன தப்பு?" என்று திருப்பிக் கேட்டாள் மனைவி.

"என்ன... தப்பா? நீ என்ன புரிந்துதான் கேட்கிறாயா? நம் திருமணம் எப்படியிருக்க வேண்டும் என்று அன்றே சொன்னேனே? எல்லாப் பெண்களையும் போலத் திருமண



இரவில் நீயும் என் காலில் விழுந்தாள் அதற்கு என்ன அர்த்தம்?" என்று மீண்டும் அடக்கப்பட்ட ஆத்திரம் நிரம்பிய குரலிலேயே கேட்டான் அந்தக் கணவன்.

"ஆனால், நாம்தான் எல்லாக் கணவன் மனைவி போல இல்லையே," என்றாள் அவள் பதிலுக்கு. "அப்படியிருந்தும், நான் உங்கள் காலில் விழுந்தேன் என்றால் அதன் அர்த்தமே வேறாகத்தானே இருக்க முடியும்?"

"அப்படி என்ன அர்த்தம்?"

"அர்த்தமா? நான் உங்கள் காலில் விழுந்ததன் காரணம், என் நன்றி அறிவிப்பு." என்று நிதானமாக சொல்லி முடித்தாள் சுமுகி.

"என்னது? என்ன நன்றி?" என்று அப்படி ஒன்றும் கிடையாது என்பது போன்ற குரலில் நித்யவாசன் வினவினான்.

சுற்றுமுற்றும் பார்த்து அறையின் ஓர் ஓரமாகக் கிடந்த மேஜையின் முன் கிடந்த நாற்காலியை எடுத்து வந்து, படுக்கை ஓரச் சிறு வட்ட மேஜைமுன் போட்டுக் கொண்டு அமர்ந்தாள் அவள்.

அலங்காரமாக அணிவிக்கப்பட்டிருந்த அதிகப்படி நகைகளைக் கழற்றி அந்த மேஜைமீது வைத்தபடி, அவள் சொன்னாள். "உங்கள் உதவி இல்லையானால், என் அம்மா வலித்து, சித்ரவதைப்பட்டு இறந்திருப்பார்கள். நானும்..." என்று சொல்லிக் கொண்டிருந்தவளை இடையிட்டுப் பேசிய அவன் குரலில் மீண்டும் அழுத்தம் தொனித்தது.

"அதிலிருந்து அவர்களை மீட்டுக் குணப்படுத்துவது, நம் ஒப்பந்தத்தின்படி என் பொறுப்பு. அதைச் செய்ததற்காக நீ எனக்கு நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை" என்றான் அவன் தெளிவாக.

காலில் விழுகிற அளவுக்கு அவன் அருகில் சென்றது, நித்யவாசனுக்குப் பிடிக்கவில்லையா? அல்லது அந்தப்

பாமினியும் இதே போலக் காலில் விழுந்திருந்து. அந்த நினைவு வந்து விட்டதா?

இரண்டுமே வலி தந்த போதும். வெளியில் காட்டிக் கொள்ளாமல், "என் அம்மாவைக் குணப்படுத்தியது. ஒப்பந்தப் படியாக இருக்கலாம். ஆனால் அதன்பின் அம்மாவுக்கு வேலைக்கு ஏற்பாடு செய்தது. வேலை பார்க்கும் இடத்தில் அம்மாவைப் பார்த்துக் கொள்ள வசதி செய்தது. இதில் எதுவும் நம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டது இல்லையே." என்று முறுவலித்தாள் சுமுகி.

ஒரு கணம். நித்யவாசனின் முகத்தில் திகைப்பு தெரிந்தது.

அது மாறி. அவன் பேசத் தொடங்குமுன். "இதற்கெல்லாம் நன்றி தெரிவிக்க இதுவரை எனக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. வாய்ப்புக் கிடைத்தாலும் நீங்கள் சொல்ல விடுவது இல்லை. அதனால்தான், இப்போது முந்திக் கொண்டேன்" என்று விடாமல் கூறி முடித்து தன் அழகிய பல் வரிசை தெரியப் புன்னகை செய்தாள் சுமுகி.

அவளை வெறித்து நோக்கி, "உனக்குப் பொருத்தமாகத் தான் பெயர் வைத்திருக்கிறார்கள்," என்றான் அவன் வெற்றுக் குரலில். "ஆனால் ஒன்றை மறந்து விடாதே. விலையற்றுக் கிடைப்பது உலகில் ஒன்றும் இல்லை." என்றான் புருவ மத்தியில் லேசான முடிச்சுடன்.

"அதாவது. இந்த உதவிகள் பிரதி பலன் கருதிச் செய்தவையே என்கிறீர்களா?" என்று உடனே கேட்டுவிட்டாள் அவள். "இப்படி உங்களுக்காக நான் வேறு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?" என்று அதையும் கேட்டாள்.

அவள் கழற்றி வைத்திருந்த நகைகளில் ஒன்றை எடுத்துப் பார்த்துவிட்டு. அவன் அவளிடம் சொன்னான். "என் மனைவி என்ற நிலையில். பணத்தால் வாங்கக் கூடிய பல சுகங்கள் இங்கே உனக்குக் கிடைக்கும். ஆனால் இந்த வீட்டில் உனக்குப் பல சங்கடமான சூழ்நிலைகளும் ஏற்படக் கூடும். அவற்றை முகம் மாறாமல் சகிப்பதற்காக நான் அளிக்கும் ஊக்க போனஸ் என்று வைத்துக் கொள்ளேன்" என்று பூடகமாகவே பேசினான் நித்யவாசன்.



ஆனால். அவனது குறிப்பைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள் இல்லை அவள். சொல்லப் போனால், முன்பே அவள் யோசிக்கத் தொடங்கியதுதான். யோசிக்கக் கூடாது என்று அடக்கி வைத்தும்கூட.

வெறுமனே மகனின் மறு திருமணத்தோடு, தமயந்தி திருப்தி அடைந்துவிட மாட்டார். கொஞ்ச நாளிலேயே அடுத்த கட்டம் பற்றிப் பேச்சு எழும். அப்போது. அவனைக் காட்டிக் கொடாமல், சுமுகி சமாளிக்க வேண்டும்.

ஆனால், வெளிப்பார்வைக்கு மட்டுமான திருமணம் என்ற நித்யவாசன் சொன்னதுமே, இதெல்லாம் அதில் அடக்கம் என்று ஒரு சராசரி மூளை உள்ள பெண்ணுக்குக் கூடப் புரிந்திருக்கும் தானே?

சுமுகி என்ன, அதைவிட மட்டமா?

எப்படியும், என்னவோ பேய் பிசாசு நெருங்கியது போல, முதலில் அவன் துள்ளி குதித்து அதட்டியது. ரொம்பவே அதிகப்படி என்று எண்ணியவளாய். "நிச்சயமாக வைத்துக் கொள்ளலாம்," என்று தாராளமாய் ஒத்துக் கொண்டாள்.

அவள் ஒரு சிறு பெருமூச்சுடன் திரும்பவும். "வெளிப் பார்வைக்கு மட்டுமே கணவன் மனைவி என்று நீங்கள் முதலில் சொன்ன போதே. இதை எல்லாம் நான் எதிர்பார்த்திருக்க வேண்டும்தானே," என்றவள் தொடர்ந்து. "ஆனால், நீங்கள் ஏன் என்னை வேறு மாதிரி தப்பாக ஏன் நினைத்தீர்கள்? நான் என்ன, அவ்வளவு மோசமா? அல்லது முட்டாளா?" என்று வினவினாள்.

சும்மா விவரம் கேட்பது போலச் சாதாரணமான குரல்.

சற்று நேரம், ஊசி விழுந்தால் கூடக் கேட்கும் போல, அங்கே நிசப்தம் நிலவியது.

ஒன்றும் நடவாதது போலக் கழற்றி வைத்த நகைகளைக் கவனத்துடன் எடுத்து தமயந்தி சொல்லியிருந்தபடி, அந்தச் சிறு மேஜையில் இருந்த இழுப்பறையைத் திறந்து, அதனுள் அடுக்கி, உள்ளேயே இருந்த சாவியை எடுத்து இழுப்பறையைப் பூட்டினாள்.

“சாவி உங்களிடமே இருக்கட்டும்.” என்றவள், படுக்கையை அணுகி ஒரு தலையணையின் கீழ், சாவியை வைத்துவிட்டு இன்னொரு தலையணையையும் ஒரு போர்வையையும் எடுத்துக் கொண்டு திரும்பினாள்.

போர்வையை எங்கே விரித்துப் படுக்கலாம் என்று யோசித்தவள் போலச் சுற்று முற்றும் பார்த்தவள், குளியலறைக் கதவைத் தவிர, இன்னொரு கதவைப் பார்த்ததும், அதை நோக்கி நடந்தாள்.

நித்யவாசன் சிலைக்கு அப்போதுதான் உயிர் வந்ததுபோல, “சற்றுப் பொறு சுமுகி.” என்று அவளைத் தடுத்தான் அவன்.

“அது வராந்தாக் கதவு. அங்கே குளிரடிக்கும். இங்கேயே அந்த சோஃபாவில் இல்லது இன்னொரு பெட்ஷீட் தருகிறேன், விரித்துக் கொள், அல்லது நான் சோஃபாவில் படுத்துக் கொள்கிறேன்.” என்றான்.

மறுப்பாய்த் தலையசைத்து, “சோஃபா நீளம் உங்களுக்குப் போதாது. கால் இடிக்கும்” என்றாள் சுமுகி.

அவள் மீண்டும் திரும்ப முற்படவும், “நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும், சுமுகி” என்று நித்யவாசன் இறங்கிய குரலில் கூறினான்.

விரிந்த விழிகளை உயர்த்தி, அவனைப் பார்த்தாள் அவள்.

சற்றே முகம் கன்ற, “ஆமாம், சுமுகி இத்தனை நாட்களில் வரம்பு மீறி நீ என்னைப் பார்த்ததுகூடக் கிடையாது. உன்னைப் போய் நான் அந்த மாதிரி அர்த்தம் தொனிக்கும்படி அதட்டியது ரொம்பத் தப்பு. ஆனால் நீ திடுமெனக் காலில் விழவும் சும்மாவே யாரும் காலில் விழுந்தால் எனக்குப் பிடிக்காது. அதிலும் என் மனைவி இறந்த பிறகு உன் வயதுப் பெண்கள் பலர் நடந்து கொண்ட முறையில் எனக்கு இளம் பெண்களிடம் உள்ள நம்பிக்கையே போய் விட்டிருந்தது. பாமினி எப்பேர்ப்பட்ட உத்தமி என்பதுகூட, எனக்கு அப்போதுதான் மிக நன்றாகத் தெரிந்தது. அவளுக்கு மற்ற ஆண்களுடன் பேசக் கூடப் பிடிக்காது. சேலை முந்தானையை துப்பட்டாவை இழுத்துத் தோளை மூடிக் கொள்ளாமல், அடுத்தவர் முன் வரவே மாட்டாள். முகத்தையே பாதி மூடிக் கொள்வாள். அவ்வளவு கூச்சம்” என்று தன் பாமினியின் நினைவில் மூழ்கினான் நித்யவாசன்.



‘இழுத்து மூடிய சேலைக்குள்ளே, அவிசாரிகளும் இருப்பது உண்டு...’ என்று தன்னை அறியாமல் எண்ணம் ஓடவும், சுமுகி உடல் குலுங்கிப் போனாள்.

நித்யனுடைய தேவதையை, அவள் எவ்வளவு கேவலமாக நினைத்து விட்டாள். அவனுக்குத் தெரிந்தால், என்ன வேதனைப் படுவான்?

வேதனைப் படுவதோடு சுமுகியையும் வெறுத்து விட மாட்டானா?

இதை விடவும், அறிமுகமற்ற ஒருத்தியை இவ்வளவு மோசமாக நினைப்பதானால் அவளது புத்தி எவ்வளவு மட்டமாகிப் போயிருக்க வேண்டும் என்று எண்ணிக் கூனிக் குறுகிப் போனாள், அவள்.

தமயந்தி அம்மாகூட, பாமினி முடிந்துவிட்ட அத்தியாயம். அதனால் மறக்கப் பட வேண்டியவள் என்றுதானே சொன்னார். ‘பணத்தில் குறி’ என்பதே சுமுகியின் சொந்த ஊகம் தானே?

அதற்காவது, கொஞ்சத்துக்குக் கொஞ்சம் அவளுடைய குணம் பற்றி நினைக்க கற்பனை செய்ய மாமியாரின் பேச்சு

அடிப்படையாக இருந்தது. அதை வைத்து ஏதோ முடிவு செய்து கொண்டாள் எனலாம்.

ஆனால் இப்போது எந்த ஒரு காரணமும் இல்லாமலே அல்லவா, பாமினியைப் பற்றி மோசமாக.. வெறுமனே மோசமாக என்று கூடச் சொல்ல முடியாது. படு கேவலமாக நினைத்தது. பெரிய தப்பு அல்லவா?

அந்தத் தப்புக்குப் பிராயச்சித்தமாக பாமினியைப் பற்றி, நித்யவாசன் புலம்பியதையெல்லாம் சுமுகி பொறுமையோடு காது கொடுத்துக் கேட்டாள்.

அவன் சொன்னதைக் கேட்ட பிறகு அவளுக்கே பாமினியிடம் மரியாதை உண்டாயிற்று.




**பா**மினியின் அழகைப் பற்றியோ, கண்டதும் அவர்கள் கொண்ட காதலைப் பற்றியோ, வேற்று ஆண்களோடு பேசிப் பழக அவள் கூசியது பற்றியோ, நித்யவாசன் கூறியது எதுவும் சுமுகிக்குப் பெரிதாகப் படவில்லை.

பாமினியின் படத்தைப் பார்க்கையில், அவள் அழகாக இருந்ததோடு, அழகு படுத்திக் கொள்ளத் தெரிந்தவள் என்பதும், பெண்ணான அவளுக்குப் புரிந்திருந்தது.

காதல், அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள விஷயம்.

மற்றவர்களோடு பழகிய தன்மையும், இன்னமும் பலருக்கு இருப்பதுதான்.



ஆனால், அப்படி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைக் குணங்களின் மொத்த உரு தனிமையில் கட்டுப் பாடற்ற வேகத்துடன் காதல் புரிவாள் என்று அவன் சொன்னது என்னவோ முரண்பாடாக சுமுகிக்குத் தோன்றியது.

ஒருவேளை கணவன் மனைவி என்று ஆகிவிட்டால் அப்படித்தான் நடந்து கொள்ளத் தோன்றுமோ? ரொம்பவும் நெருக்கமாக?

அவனது பேச்சின் மூலம் அவளை மீறி எழுந்த கற்பனை அவளைக் கன்ற வைத்தது.

நல்லவேளையாக நித்யவாசனே உடனே தன்னைத் திருத்திக் கொண்டு, இந்தப் பேச்சை நிறுத்தி விட்டான். "சாரி சுமுகி, பேச்சுவாக்கில் என்ன சொல்வது என்று இல்லாமல் வாயில் வந்துவிட்டது. இதை நான் உன்னிடம் சொன்னது தப்பு. வேறு மாதிரிப் பெண் என்றால் வக்கிரம் என்று கூட எடுத்துக் கொள்ளுவாள். நீ ரொம்பவும் புரிந்து கொள்ளுகிறவளாக இருப்பது நான் செய்த புண்ணியம். ஆனால் எப்படியும் இன்றைக்கு நான் இப்படிப் பேசியிருக்கவே கூடாது. மன்னித்துக்கொள்" என்று மறுபடியும் மன்னிப்புக் கேட்டான்.

அவன் உணர்ந்து ரொம்பவே வருந்திப் பேசுகிறான் என்பது புரிய, "எதற்கு மன்னிப்பு? நம் திருமணம் ஒரு வியாபார ஒப்பந்தம் மாதிரி என்றாலும், நாம் நண்பர்களாக இருக்கலாம் தானே? நல்ல நண்பர்களுக்கிடையே ஒளிவு மறைவுக்கு அவசியம் கிடையாது. நீங்கள் எதையும் மறைக்காமல் என்னிடம் சொல்கிறீர்கள் என்பதில் எனக்கு மகிழ்ச்சிதான்" என்று சுமுகியே அவனுக்கு ஆறுதல் கூறும்படி ஆயிற்று.

ஆனால் அப்படிச் சொன்னதுமே, அவளுக்கே சஞ்சலமாகிப் போயிற்று. வாய்ப்புக் கிடைத்தது என்று நித்யவாசன் ஒரேயடியாகப் பாமினி பற்றிப் பேசத் தொடங்கினான் என்றால் என்ன செய்வது? என்னதான் அவளும் மனம் ஒப்பி ஏற்றுக் கொண்ட நிலைதான் என்றாலும், அவளும்

ஓர் இளம் பெண்தானே? ஆசாபாசங்கள், அவை நிறைவேற வழியற்ற இழப்பின் வேதனை எல்லாமே, கொஞ்சமேனும் தோன்றத்தானே செய்யும்?

ஆனால் அவள் சொன்னதைக் கேட்டதும், உடனே முகம் மலர்ந்து, "நீ சொல்வது மெய்தான், சுமுகி. நீ எனக்கு நல்ல சினேகிதிதான். அதை என் உள்ளுணர்வு முதலிலேயே உணர்ந்திருக்கிறது. அதனால்தான் நீ எப்படிப் போனால் எனக்கென்ன என்று எப்போதுமே, என்னால் விட முடியவில்லை. உன்னைச் சாக விட்டுவிடக் கூடாது. அதற்கு என்ன வழி என்று யோசித்தபோதுதானே, ஒரு கல்லில் இரு மாங்காயாக, இந்தத் திருமண யோசனையே எனக்குத் தோன்றியது." என்று அவன் வெளிப்படையாகப் பேசியது ஏனோ அவளுக்கே மிகவும் ஆறுதலாக இருந்தது.

நித்யவாசன், அவனது சொந்த வசதிக்காக மட்டுமாக, இந்தத் திருமணத்தை ஏற்பாடு பண்ணவில்லை. அவளுக்காகவும், அப்போதே யோசித்திருக்கிறான். அதாவது கொஞ்சமாக என்றாலும் அவளிடமும் அக்கறை இருந்திருக்கிறது.

ஒரு திருமணத்துக்கு இந்த அடிப்படை போதாதுதான். ஆனால் இதுதான் உண்மைத் திருமணமே இல்லையே. அத்தோடு ஒன்றுமே இல்லாததற்கு வெறும் கால் ரொட்டி கூட, மேல் அல்லவா?

தனக்குத்தானே கூட, என்னதான் மறைத்தாலும், உள்ளூர இருந்த ஏக்கம் சற்றே குறைந்துபட, கணவனாகி விட்டவனை நோக்கி, சுமுகி முறுவலித்தாள்.

பதிலாக முறுவலித்துவிட்டு, "மெய்தான், சுமுகி. யோசித்துப் பார்க்கும்போதுதானே நமக்கே உண்மை நன்றாகப் புரிகிறது" என்றவன் தொடர்ந்து, "மற்றபடி, நான் பாமினியைப் பற்றி யாரிடமுமே அவ்வளவாகப் பேசியது கிடையாது, சுமுகி. அம்மாவிடம்கூட எனக்காக ஒத்துக் கொண்டார்களே தவிர, என்



காதல் திருமணத்தில் அம்மாவுக்கு அவ்வளவு திருப்தி கிடையாது. அத்தோடு அவளை நினைத்தபடி நான் தனி மரமாக நின்று விடுவேனோ என்ற கவலை வேறு இருந்ததால், அவள் பேச்சை எடுத்தாளே அதில் அவ்வளவாகக் கலந்து கொள்ள மாட்டார்கள். எனக்கும் அம்மாவிடம் ரொம்பச் சொல்ல வராது. அந்தப் பேச்சு, அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்று நன்றாக உணர முடிகிறபோது, எப்படிப் பேசுவது? உன்னிடம்தான் என்னவோ, மனம்விட்டுச் சொல்ல முடிகிறது சுமுகி" என்று கூறியபோது அவளுக்கே பாவமாகி விட்டது.

தமயந்தியிடம் வேலை செய்தபோது, பெற்றவரிடம் கேலியும் கலகலப்புமாகப் பிரியமாக அவன் பழகியதைக் கண்டு வியந்த ஞாபகம், சுமுகிக்கு வந்தது.

வாய்விட்டுப் பேசக்கூட முடியாமல், உள்ளூர அடைத்து வைத்துக் கொண்டு இருந்த அப்போதும், தாயின் நிம்மதிக்காகச் சிரிப்பும் கலகலப்புமாகவே இருந்திருக்கிறான்.

தன் சிறு எரிச்சலைக்கூட, வீட்டு மனிதர்கள் அத்தனை பேரையும் உணர வைத்து வாட்டும் எத்தனை குடும்பத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நடுவே, இவன் எப்பேர்ப்பட்ட உயர்ந்த மனிதன்.

மனம் உருகிவிட, "இப்போதுதான், உங்களுக்கு ஒரு சினேகிதி கிடைத்து விட்டேனே. என்னென்ன சொல்ல வேண்டுமோ, தாராளமாகச் சொல்லுங்கள்" என்று புன்னகையோடு அனுமதி வழங்கினாள் அவள்.

பாவம். இவனது ஆறுதலுக்காகவேனும் பாமினி புராணத்தைக் கேட்டுத்தான் ஆக வேண்டும்.

அவள் எண்ணியது போலவே, அவனும் பாமினி பற்றித் தான் பேசினான். ஆனால் அந்தப் புராணத்தின் கடைசிப் பகுதியில்தான், சுமுகியின் மனம் அடியோடு மாறிப் போயிற்று.

நல்ல வேளையாக ஏற்கனவே தன்னைத்தானே திருத்திக் கொண்டிருந்த நித்யவாசன், தன் முதல் மனைவியுடனான காதல் அந்தரங்கள் பற்றி மேலே விவரிக்கவில்லை.

அவளது குணநலன்கள் பற்றி எடுத்துச் சொன்னவன், பாமினி தன் கணவன் குடும்பத்தின் மீது கொண்டிருந்த பற்றையும், அதன் நிருபணமாக அவள் உயிரையே விட்டதையும் பற்றி விவரமாகக் கரகரத்த குரலில் கூறியபோதுதான், சுமுகியுள் அந்த மாற்றம் நிகழ்ந்தது.

யாரையுமே மாற்றி விடத் தக்க சம்பவம்தான்.

பாமினிக்கு அரிய பொருட்களின் மீது ஆர்வம் மிகுதியாக உண்டு. பார்த்து ரசிக்கும் ஆசை. அவளது ஆசையைத் திருப்தி செய்வதற்காகவே மூன்று தலைமுறைகளாக அவர்கள் குடும்பத்தில் இருந்து வரும் வைர நகைகளைப் பாங்க் பெட்டகத்தில் இருந்து, நித்யவாசன் எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான்.

அது அவளது உயிருக்கே உலை வைக்கும் என்று ஒரு சிறு துணுக்கின் அளவு தெரிந்திருந்தால் கூட, அவன் அந்த நகைகளை வீட்டுப் பக்கமே கொண்டு வந்திருக்க மாட்டான்.

ஆனால், விதி யாரை விட்டது,

தன்னைக் கொல்லப் போகும் காலன், அந்த நகைகளுள் இருப்பது தெரியாமல் பாமினி அடிக்கடி அந்த நகைகளை வீட்டு இரும்புப் பெட்டியிலிருந்த எடுத்து வைத்து அழகு பார்ப்பாள். அணிந்து ரசிப்பதில் கூட, அவ்வளவு ஆர்வம் இருந்தது இல்லை. சும்மா கையில் எடுத்து எத்தனை வைரங்கள் என்ன அளவு எப்படிக் கட்டியிருக்கிறார்கள் என்று வியந்து பாராட்டுவாள்.

விதிக்குத் துணை போவது அறியாமல், அவள் அடிக்கடி எடுத்துப் பார்த்து சந்தோஷப்படட்டும் என்ற இரும்புப் பெட்டியைத் திறக்கும் விதத்தையும் தாயார் தடுத்தும்



கூடக் கேளாமல் நித்யவாசன் மனைவிக்குக் கற்றுக் கொடுத்திருந்தான்.

'இன்றைக்குப் பத்து மணி இருக்கும். நீங்களும் பக்கத்தில் இல்லாமல் போரடித்ததா? நம் குடும்ப வைரங்களைப் பார்த்துப் பொழுதை ஆனந்தமாகக் கழிக்கலாம் என்று பார்த்தால் எனக்கு நம் இரும்புப் பெட்டியைத் திறக்கவே தெரியவில்லை, டார்லிங். எனக்கு அழுகையே வந்துவிட்டது' என்று அவள் உதட்டைக் குவித்த பிறகு அவளது விருப்பத்தை நிறைவேற்றாமல் அவனால் எப்படி இருக்க முடியும்?

அன்றே இரும்புப் பெட்டியைத் திறக்கும் முறையை அவளுக்குக் கற்றுக் கொடுத்து விட்டான்.

"அவளுக்கு அதில் எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?" என்றுரைத்த நித்யவாசனின் குரல், அந்த சந்தோஷத்தை அவள் எப்படிக் காட்டியிருப்பாள் என்று எளிதாக ஊகிக்க வைத்தது.

முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டி விடாமல், தரையைப் பார்த்த வண்ணம் சுமுகி பேசாதிருந்தாள்.

அன்றைய நினைவு தந்த ஆனந்தம் மறைத்து அது அழிந்து போன நிராசையை அடக்கி ஒருவாறு பேசத் தொடங்கினான்.

அவன் வீட்டில் நடந்தது எல்லாமே, எப்படியோ அந்தக் கொலைகாரனுக்குத் தெரிந்திருக்கிறது.

அது எப்படி என்பதை இன்றுவரை யாராலும் கண்டுபிடிக்கவே முடியவில்லை. வீட்டு வேலைக்காரர்களைப் பொறுத்த வரையில், எல்லோருமே நம்பிக்கையானவர்கள்.

ஒருவேளை, பாமினியே கவனக் குறைவாக எங்காவது வாயை விட்டிருக்கக்கூடும். அதைத் தற்செயலாகக் கேட்டிருந்த திருடன் நோட்டம் விட்டுக் கொண்டே இருந்து, தருணம் பார்த்துச் செயல்பட்டிருக்கவேண்டும் என்பது காவல் துறையின் முடிவு.

அப்படித்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் கடைசியாக நித்யவாசனும் வர வேண்டியிருந்தது. ஆனால் அதற்கு இன்றுவரை நிரூபணம் இல்லை.

எப்படியோ அன்று வீட்டில் யாரும் இல்லை. நித்யவாசன் அலுவலகத்துக்கும், தமயந்தி சொந்த ஊருக்கும் சென்றிருந் தார்கள்.

வரப்போவது தெரியாமல், வேலையாட்கள் எல்லோரையும், பாமினி ஒரோர் அலுவல் நிமித்தம் வெளியே அனுப்பி வைத்திருந்தாள்.

வாயிலில் நிற்கும் காவலாளைக் கூட, அவர்களுக்கு திருமணமாகி, மூன்றாம் மாத நிறைவு நாளுக்கு அலங்காரம் செய்யப் பூ வாங்கிவருமாறு அனுப்பி விட்டிருந்தாள்.

எனவே அந்தத் திருடன் வீட்டினுள் வந்தபோது பாமினிக்கு உதவி செய்ய வீட்டில் யாருமே இல்லை.

கத்தி முனையில் இரும்புப் பெட்டியைத் திறக்க வைத்து, இந்த வைர நகைகளோடு வீட்டில் இருந்த பணம் பாமினிக்கு வாங்கிக் கொடுத்திருந்த நகைகள் எல்லாவற்றையும் அவளை விட்டே மூட்டை கட்ட வைத்ததைக் கூட மன்னித்து விடலாம். அவற்றை மட்டும் அவன் திருடிப் போயிருந்தால், நித்யவாசன் நிச்சயம் அவனை மன்னித்திருப்பான்.

ஆனால், அந்தத் திருடன் பாமினியையே காரை ஓட்ட வைத்திருக்கிறான்.

எந்தவிதப் பாதகத்துக்கும் அஞ்சாத திருடன் ஒருவன் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டும் போது, பணிவது தவிரப் பாவம், பேதைப் பெண் அவளால் வேறு என்ன செய்ய முடியும்?

அப்போது அவள் கெட்டிக்காரத்தனமாக ஒரு வேலை செய்தாள். காரை விபத்துக்கு உள்ளாக்கி விட்டாள்.



"அந்த விபத்துதான் அவளது உயிரைக் குடித்தது" என்று வேதனை தொய்ந்த குரலில் கூறி முடித்த நித்யவாசனுக்குச் சில கணங்கள் மேலே பேசவே முடியவில்லை.

அவனைத் தட்டிக் கொடுத்து தோளை வருடி ஒரு வகையிலும் கணவனுக்கு ஆறுதல் அளிக்க முடியாமல் சுமுகி வருந்தினாள்.

கூடவே ஆர்வம் கலந்த பரபரப்பு.

விபத்து உயிரைக் குடித்தது என்றால் இந்த விவரங்கள் எல்லாம் யாரால் எப்படித் தெரிந்திருக்கும்?

மூன்றாண்டுப் பழக்கத்தில் தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டு நித்யவாசன் தன் கதையைத் தொடர்ந்தான்.




அவளது உயிரைக் கொன்ற அந்த விபத்து, பாமினியே ஏற்படுத்தியதுதான்.

உயரைக் கொடுத்தேனும், நித்யவாசனின் குடும்ப நகைகளைக் காப்பாற்றியே ஆக வேண்டும் என்ற உறுதியோடு யோசித்ததில், அவளுக்கு இந்த வழிதான் தோன்றியதாம்.

கணவனின் சொத்தைக் காப்பாற்றுவதற்காக, அவள் செய்த தியாகம்.

ஆனால் எந்தச் சொத்தையும் விட, ஏன் எல்லாச் சொத்துக்களையுமே விட அவளுடைய கணவனுக்கு அவள்தான் முக்கியம் என்று பாமினி எண்ணிப் பார்க்க வில்லையே என்று அப்போதும் மருகினான் நித்யவாசன்.

சொத்துப் போனால், சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் போன உயிரைத் திருப்பிக் கொண்டு வர முடியுமா? அவனுடைய உயிரே அவள்தான் என்பதைக் கொஞ்சமும் யோசிக்காமல் அசட்டுத்தனமாகப் பாமினி திட்டம் போட்டு விட்டாள்.

காரைக் கொண்டுபோய் ஏதாவது மரத்தில் மோதினால் கையில் கத்தியோடு அருகே உட்கார்ந்திருக்கும் திருடனுக்கும் அடிபடும் அல்லவா? குறைந்த பட்சமாகத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் கத்தி மீதுள்ள பிடியாவது தளரும்தானே? அதற்கு மேல் அவனால் எப்படி மிரட்ட முடியும்? அத்தோடு விபத்து என்றால் கூட்டம் சேரும். அந்தக் கூட்டத்தின் கண்முன்னே, திருடன் நகைகளைத் தூக்கிக் கொண்டு ஓட முடியாது அல்லவா?

இதையெல்லாம் கணக்கிட்டுதான் பாமினி மரத்தில் காரை மோதியிருக்கிறாள்.

அந்த விபத்தில் பாமினிக்கும், அதிகமாக ரத்தம் கொட்டும் பெரிய அடி இல்லைதான். ஆனால் உள் காயம். மரத்தில் கார் இடித்த வேகத்தில், 'ஸ்டியரிங் வீல்' நெஞ்சில் இடித்திருக்கிறது. அதுதான் அவளைப் பலி கொண்டுவிட்டது.

ஆனால் அதே சமயம் பாமினியின் நோக்கமும் நிறை வேறிவிட்டது.

பாமினிக்கு உயிர் நிலையில் பெரிய அடி என்றால் வில்லனுக்கும் லேசாகவேனும் அடிபட்டிருக்க வேண்டும்.

ஆனால் கூட்டம் சேரத் தொடங்கவே இங்கே இருந்தால் மாட்டிக் கொள்வோம் என்று பயந்து திருடன் சத்தமின்றி நழுவி விட்டான். அவன் ஓடிய வேகத்தில் திருடிய நகைகளைக் கூட எடுத்துக் கொள்ளவில்லை.

எல்லாவற்றையும் பாமினியே விவரித்துச் சொன்ன பிறகுதான், எல்லோருக்கும் எல்லாம் தெரிந்தது என்று நித்யவாசன் கூறவும், சுமுகிக்கும் விஷயம் புரிந்தது.



மற்றபடி நுணுக்கமான பல விவரங்கள் எப்படி வெளிவர முடியும்? அதுவும் பாமினியும் அந்தத் திருடனும் மட்டுமே சம்பந்தப்பட்ட விவரங்கள்.

பிடிபட்டிருந்தால்கூட அந்தத் திருடன் இத்தனை விவரங்களையும் சொல்வான் என்று எதிர்பார்க்க முடியாதே. அதிலும் முதலில் வீட்டு நிலவரம் பற்றி அறிந்து கொண்ட விதம் பற்றித் தெளிவுப்படுத்தப் படவே இல்லையே. அதைச் சொல்லாதவன் மற்றதை மட்டும் எப்படிச் சொல்லுவான்?

ஆக எல்லாவற்றையுமே பாமினியேதான் சொல்லி யிருக்கிறாள். அதுவும் தெளிவாக. இவ்வளவு தெளிவாக விவரம் தெரிவிக்கச் சக்தி இருந்திருக்கிறது. ஆனால், பிழைத்து 'எழ முடியவில்லையா? பாவம்.

"மினி பேசிய விதத்தைப் பார்த்தபோது, அவள் இறக்கக்கூடும் என்று நானும் எதிர்பார்க்கவே இல்லை, சுமுகி. விபத்து என்று ஓடியபோது பயந்து கலங்கியது. அனாவசியம் என்றுகூட நினைத்தேன். இருபத்து நாலு மணி நேரம் கழித்துதான் பிழைப்பது பற்றி உறுதியாகச் சொல்ல முடியும் என்று டாக்டர் சொன்னதைக் கூட நான் பெரிதாக நினைக்க வில்லை. சும்மா விபத்து என்றாலே வைத்தியர்கள் சொல்லுகிற வழக்கமான வாசகம் என்றே எண்ணினேன். ஆனால்... ஆனால், முடிவு நெருங்கிவிட்டது என்று டாக்டரைப் போலவே பாமினிக்கும் தெரிந்திருக்கிறது, சுமுகி. ஏனென்றால்... அவள் என்னிடம் ஒரு வரம்..." என்று அன்றைய நினைவில் நித்யவாசன் பேச மாட்டாமல் தடுமாறினான்.

பச்சை ரணத்தைக் கீறுவதுபோல, அன்றைய நினைவில் அவன் துடிப்பது புரியவும், அவனைத் தன்னிடம் மனம் விட்டுப் பேசச் சொன்னதே தவறோ என்று சுமுகிக்குத் தோன்றியது.

ஆனால் கொட்டித் தீர்த்து விட்டால் கணவன் கொஞ்சம் அமைதி அடையக் கூடுமோ என்ற எண்ணம் அவன் பேச்சில் குறுக்கிட விடாமல் அவளைத் தடுத்தது.

அத்தோடு அவளுக்கே இவ்வளவு தெளிவாகப் பேசிய பாமினி, சாவை எதிர்பார்த்ததை உறுதிப்படுத்தும் விதமாகக் கணவனிடம் என்ன வரம் கேட்டாள் என்று அறிந்து கொள்ளும் ஆவலும் இருந்தது.

வழக்கம் போலவே தன்னைச் சமனப்படுத்திக் கொண்டு நித்யவாசனே தொடர்ந்தான். "அவளுக்கு ஏதேனும் ஆகிவிட்டால் நான் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று இறைஞ்சிக் கேட்டாள், சுமுகி. சும்மா என்றால், இன்னொருத்தியை நான் தற்செயலாகப் பார்த்தாலே மினிக்குப் பிடிக்காது. முகத்தை முழ நீளம் தூக்கி வைத்துக் கொண்டு 'சள்ளுப் புள்ளு' என்று காய்வாள். அப்படி உரிமை பாராட்டுகிறவள், இன்னொருத்தியை மணந்து கொள்ளும்படிக் கேட்டாள் என்றால்... அப்போதே பிழைக்க மாட்டோம் என்று அறிந்து கொண்டு விட்டாள் என்று தானே பொருள்? ஆனால் அப்போதும் பார். அவள் தன்னை நினைக்கவில்லை. நான் நல்லபடியாக வாழ வேண்டும் என்று என்னைப் பற்றித்தான் அவளது கவலை. எப்பேர்பட்ட அன்பு" என்று பெருமூச்சு விட்டான்.

நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டிய அன்புதான்.

அந்த அன்பை இழந்து நிற்பவனிடம் பரிதாபப்படவும் வேண்டும்தான்.

சுமுகிக்கும் பரிதாபமாகத்தான் இருந்தது. ஆனால் நித்யவாசனை எப்படித் தேற்றுவது என்றும் அவளுக்குப் புரியவில்லை. இந்த மாதிரி இழப்புக் கூடக் காலப் போக்கில் சரியாகி விடக் கூடுமா?

அவளுக்கே சந்தேகமாக இருக்கையில் அதைச் சொல்லி அவனுக்கு ஆறுதல் கூறுவது எப்படி சாத்தியம்?

ஆனால் கணவன் வேதனையில் தவிப்பது தாளாமல், அவனது கவனத்தை வேறு பக்கம் திருப்ப, சுமுகி முயன்றாள்.



"ஆனால், சார், அந்தத் திருடன் என்ன ஆனான் என்று தெரியவே இல்லையா? அவன் யார் என்ற சிறு துப்புக் கூடவா கிடைக்கவில்லை? குறைந்த பட்சமாகக் காரில் அவனது கைரேகையாவது பதிந்திருக்குமே?" என்று அதே யோசனையாக இருப்பவள் போன்று சிறு புருவச் சுளிப்புடன் வினவினாள்.

அவள் விரும்பியது போலவே, நித்யவாசனும் அவனது தவிப்பிலிருந்து மீண்டு வந்தான். "என்ன கேட்டாய்? அந்த... அந்தத் திருடனைப் பற்றித்தானே? அவன் பொல்லாத கைகாரன், சுமுகி. சரியான கிரிமினல். விபத்தில் அவனுக்கும் கொஞ்சமாவது அடிபட்டிருக்கும்தானே? குறைந்த பட்சம் அதிர்ச்சியாவது ஏற்பட்டிருக்கும். அந்த நிலையில் அவனை யாரும் கண்டுபிடித்து விடக்கூடாது என்று அவன் சம்பந்தமான தடயங்களை ஒன்று விடாமல் அழித்துவிட்டுத்தான் ஓடியிருக்கிறான். வேற்றுக் கைரேகை என்று காரில் ஒன்று கூட இல்லை. இன்னோர் ஆள் காரில் இருந்த மாதிரி அடையாளமே இல்லை. பாமினிக்கு நினைவு வந்து விவரம் சொல்லவில்லை என்றால் இவள் தனியே செல்லும்போது கார் வசமிழந்து மரத்தில் மோதியதாகத்தான் தோன்றியிருக்கும்."

"ரத்தம்? ரத்தக் கறையேனும் இருந்திருக்குமே? அதையும் அவன் கழுவிக் கொண்டு இருந்திருக்க முடியாதே சார்."

"அதை நாங்கள் எல்லோருமே யோசித்தோம், சுமுகி. உயிர் போகிற அளவுக்கு அடிபட்டிருக்க பாமினிக்கே, ஓரிரு சிறு கசிவுகள் தவிர, வெளிப்படையான ரத்த சேதம் எதுவும் இல்லை. அவன் ரத்த காயம் படாமலே தப்பியிருக்கலாம் என்று விபத்தை விசாரித்த கமிஷனர் சொன்னார். ஆனால் பாமினியின் பக்கத்தில் அமர்ந்திருந்ததால், அவளைப் போலவே 'ஸ்டிராப்' போடாததால், அவனுக்கும் ஊமையடி நிச்சயம். எனவே எல்லா மருத்துவமனைகளுக்கும் இந்த மாதிரி அடிபட்ட சிகிச்சைக்காக யாராவது வந்தால் தகவல் கொடுக்கும்படி, போலீசில் அறிவித்து விட்டார்கள். அதனால் வெளிப்படையாகச் சிகிச்சை எடுத்துக்

கொள்ள முடியாமல் அவனும் செத்தே போயிருப்பான். கடவுளே தண்டனை கொடுத்திருக்கிறார். என்றார் கமிஷனர்."

'பொயட்டிக்ஜஸ்டிஸ்' என்பார்கள் அது போலவா? ஆனால் அவன் அப்படிச் செத்தது ஒன்றும் நிச்சயம் இல்லையே. அத்தோடு அதனால் உங்களுக்கு என்ன பிரயோஜனம்?" என்றாள் அவள் எரிச்சலோடு.

வழக்கைக் கண்டுபிடிக்கத் தெரியாமல் வேதாந்தம் பேசுவதா, என்பது அவளுக்கு.

"இதையேதான் நானும் நினைத்தேன்," என்றவன், திடுமென எதையோ யோசித்து, "சுமுகி, சற்று முன் நீ என்னை என்னவென்று கூப்பிட்டாய்? 'சார்' என்றுதானே? ஜாக்கிரதை அம்மா முன்னிலையில் மறந்தும் என்னை இப்படி அழைத்து விடாதேம்மா. அம்மாவுக்குப் புத்தி கூர்மை மிகவும் அதிகம். உடனே எல்லாவற்றையும் ஊகித்து விடுவார்கள். அவர்களது நிம்மதிக்காகச் செய்தது. அப்புறம் அடிப்படையே, வீணாகி விடும்."

அவன் எச்சரித்தது சரிதான். மாமியார் நிச்சயம் கண்டு கொள்ளுவார்.

ஆனால் நித்யவாசனை அவள் வேறு எப்படி அழைப்பது?

கணவனாக எண்ண முடியவில்லை. அப்படி எண்ணிவிடக்கூடாது என்பது ஒப்பந்த விதி. நண்பர்களாக இருக்கலாம் என்று ஐடியாக் கொடுத்தவள் அவள்தான் என்றாலும் அதை ஏற்று அவன் செய்ததுபோல மனதைக் கொட்ட, அவளால் முடியாதே.

அப்படிக் கொட்டினால் அதைத் தாங்க அவனால் முடியாது.

எந்த நெருக்கமும் இல்லாது இருந்தாலும் காட்டக் கூடாத இந்த நிலையில் அவள் வேறு எப்படி அவனை அழைப்பது?



இப்போது எண்ணியதையும் வெளிப்படையாகச் சொல்ல முடியாமல், "உங்களை என்னவென்று அழைப்பது?" என்று மட்டும் கேட்டாள் சுமுகி.

"அதற்கென்ன? எத்தனையோ இருக்கிறதே. நித்யா, நித்யன், வாசு, வாசன்... என் நண்பன் ஒருவன் என்னை 'வாஷ்' என்று என்னை அழைப்பான். அதுபோல நீயும் எப்படிவேண்டு மானாலும் கடவுளே, அதற்காகக் 'கழுதை, குதிரை' என்று கூப்பிட்டு விடாதேம்மா. அம்மா ஒத்துக் கொள்ளும் விதமாக ஏதோ ஒரு சுருக்கம்" என்று சற்று இலகுவாகப் பேசியவனின் முகம் சட்டென வாடியது.

"டார்லிங், டியர் இந்த மாதிரி மட்டும் எதுவும் வேண்டாம், சுமுகி" என்றான் எங்கோ பார்த்தபடி.

இந்த 'டார்லிங்'கும் 'டியரு'ம் பாமினியின் அழைப்பு முறைகள் என்று ஊகிக்கத் தெரியாதவள் அல்ல சுமுகி. அவளை எண்ணி அவன் வருந்துவதும், இவ்வளவு விஷயங்கள் அறிந்துவிட்ட பிறகு இப்போது அவளை ரொம்ப அதிகமாகப் பாதிக்கவில்லை.

ஆனால், நீ எந்தப் பெயரிட்டு அழைத்தாலும், எனக்கு அதுபற்றி ஒன்றுமே இல்லை என்பது போல, அவன் பேசியது அவளுக்கு வருத்தமாகத்தான் இருந்தது.

சுமுகி தன் மனைவி என்ற எண்ணம், அவனுக்குக் கொஞ்சம்கூட இல்லாததால் தானே அப்படி என்று அவளது மனம் நொந்தது.

என்ன செய்வது?

'மஞ்சள் கயிறு மாயம்' என்று நம் நாட்டில் ஒன்று இருக்கிறதே.




மகனின் திருமணம் முடிந்ததுமே, பெரிய பொறுப்பு தீர்ந்த உணர்வு தமயந்திக்கு.

தம்பியின் திருமணத்துக்காக வந்த மானசி, மறுநாளே, ஹாங்காங்குக்குப் பறந்து விட்டாள். பிள்ளைகளைப் பார்க்க வேண்டுமாம். ஒரு வாரத்துக்கு மட்டுமாக, நண்பர் வீட்டில் விட்டு வந்திருந்தார்களே. "அதெல்லாம் பார்க்க வேண்டிய நகரம், சுமுகி. நீயும் நித்யனும், கட்டாயம் வாருங்கள். டேய், கட்டாயம் கூட்டி வாடா," என்ற அழைப்புடன் அவள் கிளம்பி விட்டாள்.

சம்பந்தி அம்மாள் லவ்டேல் பண்ணையில் நல்லபடியாகக் குடியமர்த்தப் போவதாகச் சொல்லிவிட்டு, தமயந்தியும் லலிதாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

"புது மாதிரித் தேனிலவாக, எங்களைப் போலப் பெரியவர்கள் குறுக்கீடு இல்லாமல் வீட்டிலேயே கொண்டாடுங்கள். நாங்கள் ஜாலியாக ஊட்டி, குன்னூர் எல்லாம் சுற்றிப் பார்த்துவிடுகிறோம். அப்புறம் சுமி அம்மாவைப் பண்ணையில் விட்டுவிட்டு வருகிறேன்." என்று எல்லோர் முன்னிலையிலும் இலகுவாகப் பேசிவிட்டு, சுமுகியிடம் தனிமையில், "உன் அம்மாவுக்கு அந்தக் குளிர் ஒத்துக் கொள்கிறதா என்று பார்க்கத்தான், கூடப் போகிறேன், சுமுகி. தனியாகப் போகவிட்டால் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், வெளியே சொல்லாமல், உள்ளேயே வைத்துக் கொண்டு பழைய மாதிரிப் பெரிதாக எதையும் இழுத்துக் கொள்வார்களோ என்று எனக்குப் பயம். கூடவே போய், கொஞ்சநாள் அருகிலேயே



பக்கத்தில் மானசியின் பண்ணையில் இருந்து கொண்டு கவனிக்கிறேன். உன் அம்மா உடம்பு தாங்கும் என்றால் விட்டு விட்டு வருகிறேன். அல்லது எப்படியாவது என்னுடனேயே திரும்பவும் கூட்டி வந்து விடுகிறேன்" என்று அவர் சொன்ன போது சுமுகிக்குத் தொண்டை, வாய் எல்லாமே அடைத்துப் போயிற்று.

இவ்வளவு நல்ல பெண்மணியை ஏமாற்றுகிறோமே, என்று உள்ளூரத் தவித்தாள்.

ஆனால், இந்த விஷயத்தில் அவளுக்கு வேறு வழியில்லையே.

மனதில் இருந்ததை நூற்றில் ஒரு பங்குகூட வெளிப்படுத்த முடியாமல், வெறுமனே, "நன்றி அத்தை" என்றுரைத்து தமயந்தியின் கையைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள் அவள்.

"என்னம்மா, பெரிய நன்றி? நீ எனக்குச் செய்திருப்பதை விடவா, இது பெரிது? இன்னும் என் பேரக் குழந்தையையும் கண்ணால் பார்த்து விட்டேன் என்றால் அப்புறம் எனக்கு என்ன வேண்டும்?" என்று விழிகளில் துளிர்த்த ஒரு துளி நீரை விரலால் சுண்டி விட்டார், தமயந்தி.

அந்த நேரம் பார்த்து நித்யவாசனும் வந்துவிடவே, முகம் மாறாமல் காப்பதே சுமுகிக்குச் சிரமம் ஆகிப் போயிற்று.

கணத்தில் நிலைமையைப் புரிந்து கொண்டு, "என்னம்மா எல்லா சராசரி அம்மாக்களையும் போலத்தானா நீங்களும்? அப்புறம் உங்கள் புத்தகம் என்னவாயிற்று? நம் ஊர்க் கோவிலின் பெருமை, ஊர் வரலாறு– எல்லாம் அவ்வளவுதானா? நான் வேறு என் அம்மாவின் புகழைப் பயங்கரமாகப் பாடி, உங்கள் புத்தகத்தைப் போட, ஒரு பிரசுரத்தாரையும் தயார் பண்ணி, அவரும் 'எங்கே கையெழுத்துப் பிரதி?' என்று என்னைத் துளைத்து எடுத்துக் கொண்டிருக்கிறார். இப்போது

அவரிடம் நான் என்னம்மா, சொல்வது?'' என்று பாதி கிண்டலும் பாதி தீவிரமாகவும் கேட்டான்.

தூக்கத்திலிருந்து விழித்தவர் போலத் திடுக்கிட்டு நிமிர்ந்தார், அன்னை. "ஓ." என்று தலையை லேசாக உலுக்கிக் கொண்டு, மகன் முதுகில் வேடிக்கையாகத் தட்டினார். "இதற்குத் தானடா, உன்னைப் போல ஒரு பிள்ளை வேண்டும் என்பது நல்லவேளை, நினைவுப் படுத்தினாய். சுமி அம்மாவுக்கு லவ்டேல் ஒத்துக்கொள்கிறதா என்று பார்த்துவிட்டு, ஒத்துக் கொண்டால் அப்படியே ஊர்பக்கமும் போய்விட்டு வருகிறேனடா. நீ கவலைப்படாதே, சுமி. சம்பந்திக்கு அங்கே ஒத்துக் கொள்ளவில்லை என்றால், அவர்களையும் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் விடுகிறேன். கிராமம் ஒத்துக் கொண்டால் அங்கேயே ஏதாவது ஏற்பாடு செய்யலாம்'' என்று தமயந்தி உற்சாகமாகக் கூறவும், அந்த உற்சாகம் சுமுகியையும் தொத்திக் கொண்டது.

அவளுடைய அன்னை, இனி எப்படியும் நன்றாக இருப்பாள். அதைவிட, இந்த மகளுக்கு என்ன வேண்டும்?

பேசியபடியே தமயந்தி சென்ற பிறகு, அவளுடைய கணவன், "சாரி, சுமுகி. ஆனால் இதெல்லாம் தவிர்க்க முடியாதது. சகித்துத்தான் ஆகவேண்டும்'' என்றது கூட, அவளது உற்சாகத்தை அடியோடு அழித்து விட வில்லை.

புன்னகையுடனேயே அவனைப் பார்த்து, "சகிப்பதென்ன? அத்தைதான், அதற்கு இரு மடங்கு ஈடுகட்டி விடுகிறார்களே'' என்றாள் அவள்.

யோசனையாகத் தலையாட்டிவிட்டுப் போனான் அவன்.

முதலில் நினைத்தது போல, சுமுகிக்கு வாழ்க்கை அப்படி ஒன்றும் கடினமாக இருக்கவில்லை.

பெரியவர்கள் யாரும் இல்லாததால், எப்போதும் கவனத்துடன் நடிக்கத் தேவை இல்லாது போயிற்று. கூப்பிட்டால்



தவிர, அவர்கள் இருக்கும் இடத்துக்கு வேலையாட்களும் வருவதில்லை என்பதால் நித்யவாசன் வீட்டில் இருக்கும்போது, இருவருமே இயல்பாக இருக்க முடிந்தது.

நித்யவாசனின் இயல்பு கலகலப்பாக பேசுவது என்பதால், அப்போதும் நல்லபடியாகவே பொழுது கழிந்தது.

ஓரிரு நாட்கள் கணவனின் பழக்க வழக்கங்களைக் கவனித்த சுமுகி அதற்கேற்ப நடந்து கொள்ளலானாள்.

காலை எழுந்து, பல் துலக்கிக் குளித்துவிட்டு வருகிறவன், முதலில் அவனது அறையில் மாட்டி வைத்திருந்த பாமினியின் படத்தைத் துடைத்துச் சுத்தம் செய்வான்.

பிறகு, ஹாலில் உள்ள பெரிய படத்தை மாலையை அகற்றித் துடைப்பான்.

ஏற்கனவே, காலையில் கதம்பமாகக் கட்டிய மாலை வந்து காத்திருக்கும். சரமும்.

அவை இரு படங்களுக்கும் அணிவித்துவிட்டு, அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டு அலுவலகத்துக்கு ஓடுவான்.

மதியம் வந்து இரண்டு படங்களுக்கும் முறையே மல்லிகைப் பூமாலை, சரத்தை அணிவிப்பான். மீண்டும் வேகமாகச் சாப்பிட்டுவிட்டு அலுவலகத்துக்கு விரைவான்.

வெளியே இருக்கும் வேலைக்குத் தக, மாலையிலோ, இரவிலோ திரும்பி வருவான்.

அவன் நிதானமாக ரசித்து உண்பது இரவில்தான்.

தளர்ந்து அமர்ந்து டீ.வி. பார்ப்பது, புத்தகம் படிப்பது எல்லாம் நடக்கும். பிறகு, வீட்டு தோட்டத்திலேயே சற்று நேரம் உலவிவிட்டுத் தூங்கப் போவான்.

மதியம் மனைவி படத்துக்கு மாலை போடுவது மட்டும் இல்லை என்றால், மகன் வீட்டுக்கு வரவே மாட்டான் என்று தமயந்தி அம்மாள் சொன்னது அவளுக்கு நினைவு வந்தது.

மறுநாள் குளித்துவிட்டு பாமினியின் படத்தை நெருங்கி, பழைய பூவை எடுப்பதற்காகக் கையை நீட்டிய நித்யவாசன் சட்டெனக் கையைப் பின்னுக்கிழுத்தான்.

படத்தில் இருப்பது...

வேகமாகக் கீழே ஹாலுக்குப் போய்ப் பார்த்தால், அங்கே ஒரு நாற்காலியின் மீது ஏறி நின்று, படத்துக்குக் கதம்ப மாலையை மாட்டிக் கொண்டிருந்தாள் சுமுகி.

கணவன் வந்தது உணர்ந்தபோதும், செய்கிற வேலையை விட்டுத் திரும்பிப் பார்க்கவில்லை அவள்.

'உன்னை யார் செய்யச் சொன்னது? நீ எப்படிச் செய்யலாம்?' இதுபோன்ற கோபக் கேள்விகள் இதுவரை வரவில்லை.

இவன் தன்னை மட்டுமே நினையாமல், மற்றவர் நிலையையும் கவனிக்கிறவன் ஆயிற்றே. வேலையாட்கள் காது கேட்கிற இடத்தில் நின்று கொண்டு எதுவும் சொல்லமாட்டான் என்ற நம்பிக்கைதான்.

ஆனால், அப்படிக் காது கேளாத இடமும் உண்டே.

அவன் வந்த வேகத்தில் சுமுகிக்குக் கொஞ்சம் கலக்கம் தான்.

படத்துக்கு மாலையை அணிவித்துவிட்டுக் கவனமாக இறங்கி, இமை தூக்கி, அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

எந்தவித உணர்ச்சியையும் காட்டாத முகபாவம். கண்ணில் மட்டும் யோசனை.

இந்த யோசனை தப்பாக இருந்துவிடக் கூடாதே.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "உங்கள் பாமினிக்கு இந்த வேலை நான் செய்யலாம்தானே? பிடிக்கவில்லை, கோபம் என்றால் சொல்லித் தீர்த்து விடுங்கள்" என்று தணிந்த குரலில் கூறினாள்.



"எதற்கு, இது?" என்று படத்தைக் காட்டி அவளைப் போலவே குரலைத் தணித்தே அவனும் பேசினான். "மூத்த மனைவி படத்துக்கு மாலையிட்டு பூஜை செய்து தெய்வமாக ஏற்று ஆராதனை செய்யும் உத்தம இளைய மனைவி கதையெல்லாம், நம் ஒப்பந்தத்துக்கு ஒத்து வராது என்பது தெரியும் அல்லவா?"

முகத்தின் சூடு தணியும் வரை சுமுகி பேசவில்லை. பின்னரே அவளது பதிலுக்காகக் காத்திருந்தவனிடம், "மனிதராகப் பிறந்த யாரையும் நான் கடவுளாக ஏற்பது இல்லை," என்றாள் அழுத்தம் திருத்தமாக. தொடர்ந்து, "பாமினி நல்லவள் என்பதால், இந்த மாலைக்குத் தகுதியுடையவள் அவ்வளவே. ஆனால் நான் இந்த வேலையை எடுத்துச் செய்ததன் முக்கிய காரணம், நண்பராக ஏற்ற ஒருவர், இந்த வேலைகளை எல்லாம் செய்துவிட்டு அலுவலுக்கு நேரமாகி விட்டது என்று அவசரமாக அரை வயிற்றுக்குச் சாப்பிட்டுவிட்டு ஓட வேண்டாமே என்பதுதான். அந்த நல்ல எண்ணத்துக்கு இப்படி விமரிசனம் வரும் என்று தெரிந்திருந்தால்..." என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தியவள், அவனது முகம் கன்றவும், "கடந்த மூன்று ஆண்டுகளாகப் பல பெண்கள் உங்களிடம் மட்டமாக நடந்து கொண்ட காரணத்தால் இப்படியோர் எண்ணம் உங்களுக்குத் தோன்றி யிருக்கலாம் என்று நினைக்கிறேன். ஆனால் என் வரையில் அது சரியல்ல. முழுத் தப்பு" என்று கூறி முடித்தாள்.

தலையசைத்து, "தப்புதான். தப்பேதான். உன் விஷயத்தில் இப்படி நினைத்தது, பெரிய தப்புதான். அதற்காக என்னை மன்னித்துக் கொள், சுமுகி..." என்றான் நித்யவாசன். "ஆனால், நீ இப்படி ஏறி இறங்கி கஷ்டப்படுவானேன்? நானே பார்த்துக் கொள்கிறேனே."

"ஒரு தரம் நாற்காலியில் ஏறி இறங்குவது கஷ்டமா? அப்படியென்ன, எனக்கு அறுபது வயதா, அல்லது எழுபதா?" என்று கேட்டுவிட்டு, "காலையில் பொட்டு வைக்கக்

கண்ணாடியில் பார்த்தபோது அப்படி ஏதும் தெரியவில்லையே. முகம் இருபதுகளின் தொடக்கமாகத்தான் தோன்றியது." அவள் தீவிரமாக யோசிக்கவும், நித்யவாசனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

வாய்விட்டுச் சிரித்துவிட்டு, "இருபதுகளின் தொடக்கமே தான் தாயே. அதேபோல, அந்த நாற்காலியில் பத்து தடவை ஏறி இறங்குவதிலும், உனக்குச் சிரமமே கிடையாது என்று, அதையும் ஒத்துக் கொள்ளுகிறேன். கூடவே உட்கார்ந்து நிதானமாகச் சாப்பிட முடியாதது பற்றி நீ சொன்னதையும் ஒத்துக் கொள்ளுகிறேன். நேரமே கிடைப்பதில்லை சுமுகி. ஆனால் வேறுவழி?" என்று தோளைக் குலுக்கினான் அவன்.

"வழி இருக்கிறது. ஆனால் நீங்கள்தான் அவசியமற்று ஏதேதோ கற்பனை செய்து பயந்து போகிறீர்கள்," என்று புன்னகை செய்தாள் சுமுகி.

தோல்வியை ஒத்துக் கொள்கிறவன் போல, புன்னகை யோடு, லேசாகக் கையை உயர்த்தி விரல்களை விரித்துக் காட்டினான் அவன்.

அன்றிலிருந்து பாமினியின் படங்களுக்கு மாலை போட்டு அலங்கரிக்கும் பொறுப்பு சுமுகியினுடையதாயிற்று.




தமக்கையின் திருமணத்துக்குப் பிறகும், படிக்கும்போதும், பலவேலைகளில் சுமுகி தாயாருக்கு உதவி செய்வாள். படித்து முடித்த பிறகோ, வேலை அதன்பின் இரண்டாவது வேலையும் சேர்த்துச் செய்தாள்.



அப்புறமும், தாயாருக்குப் பணிவிடை. அப்புறம் திருமணம். அது தொடர்பான அலைச்சல்.

இப்படி, எதையாவது செய்து கொண்டே இருந்தவள், திருமணம் ஆனபிறகு செய்வதற்கு எதுவும் இல்லாமல் முதலில் சற்றுத் திணறிப் போனாள்.

பிறகு தானாகவே சில பொறுப்புக்களை இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

தொடக்கம், பாமினி படங்களைச் சுத்தம் செய்து, அலங்கரிப்பது.

மல்லிகைதான் பாமினிக்குப் பிடிக்கும் என்று படத்துக்கு மாலை மாற்ற என்று தினமும் மதியம் ஒரு தடவை வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவன், காலையில் கதம்ப மாலை அணிவித்த காரணத்தை நித்யவாசனிடம் கேட்டாள். மறுநாள் வைத்திருந்தால் மல்லிகைப் பூக்களின் காம்பு உலர்ந்து மாலைக் கட்டிலிருந்து பூக்கள் உதிர்ந்து விடுவதால் இப்படி என்று விளக்கம் சொன்னான் அவன்.

வீட்டில் காடாகப் பூத்துக் கிடக்கும் மலர்களின் நினைவு வந்தது, சுமுகிக்கு.

சும்மா இருக்கும் நேரத்தில், மொட்டுகளைப் பறித்து, அடர்ந்த சரமாகத் தொடுத்து வைத்து மறுநாள் படங்களுக்கு அணிவித்தாள். நித்யவாசனே பாராட்டும் அளவு இருந்தது.

பூப்பறித்ததோடு, தோட்ட வேலையிலும் கொஞ்சம் ஈடுபட்டாள்.

அதைத் தொடர்ந்து வீட்டில் பூ அலங்காரம் செய்தாள்.

ஜாடிகள், குவளைகள், கிண்ணங்களில், அங்கங்கே பூக்கள் கண்ணைக் கவர்ந்தன.

கூடக் கூட வந்து நின்று உதவி செய்த கந்தனுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தாள்.

சமையல் அறையிலும், ஏதாவது ஒரு பதார்த்தத்தை அவள் முன்னின்று செய்து நித்யவாசனுக்குப் பரிமாறினாள்.

"எதற்கு வீணாகக் கஷ்டப்படுகிறாய்?" என்று தொடங்கியவன், அவள் பதில் கூறுமுன்னரே அவசரமாக, "இல்லை, கேட்கவில்லை. சரியானதாக, ஏதாவது விளக்கம் வைத்திருப்பாய். ஆனால் நானும் உன்னைத் தப்பாக நினைத்துக் கேட்கவில்லை. அநாவசியமாகச் சிரமப்படுவானேன் என்று மட்டுமாகத்தான் கேட்டேன்" என்று தொடர்ந்து கூறினான்.

"எனக்கும் பொழுது போக வேண்டும் அல்லவா?" என்று பதில் சொன்னாள் அவள். உடனே குரலைத் தணித்து, "இதெல்லாம் அத்தை வந்ததும், அவர்கள் காதுக்குப் போனாலும் போகும் அல்லவா? அதற்காகவும்தான்." என்றும் கூறவும், அவன் அதற்கு மேல் வாயைத் திறக்கவில்லை.

நித்யவாசனைப் பொறுத்த அளவில் இந்த மாற்றங்கள் அவனுக்கும் பிடித்தமாகவே இருந்தன. மிக வசதியாகவும் இருந்தன.

முதலாவதாக காலை வேளைகளில் எல்லாவற்றையும் நிதானமாகச் செய்ய, அவனுக்கு நேரம் கிடைத்தது.

ஆறு மணிக்கு விழித்ததிலிருந்து, அரக்கப் பறக்க ஓடாமல், அவன் எப்போதும் விரும்பியது போலப் பல் துலக்கியதும், தோட்டத்தில் அன்றலர்ந்த மலர்களைப் பார்த்து ரசித்தபடி, காலைச் சிலுசிலுப்பில் சற்று நேரம் நடக்க முடிந்தது.

அமர்ந்து பத்திரிகையைப் படிக்க முடிந்தது.

குளித்துவிட்டு வந்து நிதானமாகச் சிற்றுண்டியை ரசித்து உண்ண முடிந்தது.

பாமினி படத்தை ஒரு தரம் ஆசையாகப் பார்த்துவிட்டுப் பரபரப்பின்றி வேலைக்குக் கிளம்ப முடிந்தது.

இதைப் போலவே மதியமும், பாமினி படத்துக்குப் புதுமாலை அணிவிப்பதைச் சுமுகி பார்த்துக் கொள்வாள் என்ற



நம்பிக்கை இருந்ததால், அவள் வீட்டிலிருந்து அனுப்பிய உணவைச் சாப்பிட்டுவிட்டு அதிக நேரம் வேலை செய்ய முடிந்தது.

மதியம் அதிக வேலை செய்ய முடிந்ததால், மாலையில் சீக்கிரமே வீடு திரும்பவும் முடிந்தது.

தொழில் ரீதியாக டின்னர் இருந்தாலும்கூட, வீட்டுக்கு வந்து அன்றையத் தொழில் தொடர்பான இறுக்கம் தளரச் சற்று நேரம் இலகுவாகப் பேசிக் கொண்டு இருந்துவிட்டே சென்றான்.

இது எல்லாமே, பாமினியின் படத்துக்கான ஆராதனையைச் சுமுகி எடுத்துக் கொண்டதால் மட்டுமே ஏற்பட்ட விளைவு அல்ல.

அவனது நேரமின்மையின் காரணம் வேறு.

பாமினியின் படத்தைத் துடைக்கும் போதே இப்படித் தூசி ஒட்டி விட்டதே, உயிரோடு இருக்கும் போது முகம் சுத்தமாகப் பளிச்சென்று இருக்க வேண்டும் என்று ஒரு நாளைக்குப் பத்து முறை வெளிநாட்டு வாசனை சோப்பைத் தேய்த்துத் தேய்த்து முகத்தைக் கழுவுவாளே என்ற நினைவில் தொடங்கி, அந்த சோப்பை வாசனை பிடிக்கச் சொல்லி, அவள் கொஞ்சியது, குழைந்தது எல்லாம் அவனது மன அரங்கில் திரைப்படமாக ஓடத் தொடங்கிவிடும்.

அதிலிருந்து ஒருவாறு மீண்டால், பூமாலை. எந்தெந்தப் பூக்கள் பிடிக்கும், அவைகளை எந்தெந்த மாதிரி அணிந்து கொண்டு அவனை நெருங்குவாள் என்று அந்த மலரும் நினைவுகள் வரிசையாகப் படையெடுக்கும்.

இப்படியெல்லாம் கொஞ்சியவள் இப்போது இல்லையே என்ற ஏக்கம். இப்படி அற்பாயுளில் போய்விட்டாளே என்ற வருத்தம். அதைத் தொடர்ந்து அவனுக்காகவே, அவனது பொருளைக் காப்பதற்காகவே நேர்ந்த அவளது மரணம், அவளது தியாகமும், அன்பும் ஆசையும்...

அப்புறம் அவசரமாக ஓடத்தான் நேரமிருக்கும்.

இப்போதும், பாமினியின் நினைவே இல்லாமல் போய் விட்டது என்று சொல்ல முடியாது. ஆனால் ஏற்கனவே சுத்தமாகப் பளிச்சென்று இருக்கும் படத்தைப் பார்க்கையில், 'ஐயோ, இப்படியாகி விட்டதே' என்று பழைய கழிவிரக்கம் மனதை அடைத்துக் கொண்டு தோன்றுவது இல்லை.

மாறாக, முழுக்க முழுக்கப் பாமினியிலேயே ஏக்கத்துடன் மூழ்கியிருந்தது மாறி, வீட்டுப் பூக்களால் அழகாகக் கட்டப் பட்டிருந்த மாலையை, புதுப் பூக்களின் மலர்ச்சியை ரசிக்கத் தோன்றியது.

ஜாதி, வாடா மல்லி, செவ்வந்தி, கனகாம்பர மலர்களை விதம் விதமாக வரிசையில் வண்ணப் பொருத்தத்துடன் அழகாகத் தொடுத்து அணிவித்தவளைப் பாராட்டத் தோன்றியது.

நாலைந்து வகைப் பூக்களைக் கொண்டு, இத்தனை விதமாகக் கருத்தைக் கவரும் வகையில் பூத்தொடுக்க, சுமுகி எப்படித் தெரிந்து கொண்டாள் என்று நித்யவாசன் ஆச்சரியப் பட்டான்.

கல்லூரியில் நுண்கலை எடுத்துப் படித்தாளா? அல்லது ஹோம் சயன்ஸில் படித்த வண்ணக் கலவையா... என்றெல்லாம் சுமுகியின் திறமையைப் பற்றி ஆர்வத்துடன் விசாரித்தான்.

விளக்கம் கூறிவிட்டு, அவள் அவனைப்பற்றி விசாரித்தாள்.

இதில் தொடங்கிப் பல்வேறு விஷயங்களைப் பற்றி... ஆகாயம் எனும் கூரையின் கீழ், இந்த அகண்ட உலகத்தில் கலந்து பேச விஷயங்களா இல்லை?

தன் தொழிலைப் பற்றி, அதிலுள்ள வாய்ப்புகள், அதில் வந்த பிரச்சினைகள், இனி வரக் கூடியவை பற்றி நித்யவாசன் சொன்னான்.

தினமும், காலையிலும் மாலையிலும் கணவன் மனைவி இருவரும் நன்றாகவே அரட்டை அடித்தனர். சிறு கேலியும் கிண்டலுமான பேச்சும் இருவருக்கும் இயல்பாக இருந்ததால், உரையாடலும் சுவாரசியமாகவே சென்றது. பலமுறை, "நேரமாகிவிட்டதே" என்று நித்யவாசன் சிறு வருத்தத்துடன் தான் எழுந்திருப்பான்.



அவன் பிரிந்து செல்லும்போது, சுமுகிக்கும் மனதுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்.

ஆனால் இதில் அவள் வெளிப்படையாகக் குறைப்பட ஒன்றும் கிடையாது. அவர்களது விசித்திரத் திருமணத்தில், இதற்குமேல் அவள் எதிர்பார்க்கவும் கூடாதுதானே?

சொல்லப் போனால், அவள் எதிர்பார்த்ததை விடவும் அவளுக்குக் கிடைத்தது அதிகம்.

அவளுடைய தாயின் சிகிச்சையும், திருமதி நித்யவாசன் என்ற பெயரும்தான், அவன் தருவதாகச் சொன்னது.

ஆனால் அன்னையின் தொடர்ந்த நல்வாழ்வு வருமானத்துக்கான் ஏற்பாடு, திருமதி நித்யவாசனாக, சுமுகிக்கு அளிக்கப்படும் மரியாதை, அவள் அனுபவிக்கும் போகங்கள், எல்லாமே அவளுக்குப் போனஸ் என்று தானே கொள்ள வேண்டும். அதிலும் முக்கியமாகத் தாயின் நிம்மதி.

எனவே, அந்த வகையில் அவளும் நூறு சதவீதமாக இல்லா விட்டாலும், கிட்டத்தட்டத் திருப்தியாகத்தான் இருந்திருப்பாள்.

ஒரு சில நிகழ்ச்சிகள் மட்டும் நடவாமல் இருந்திருந்தால்.

பாமினியைப் பற்றி, நித்யவாசன் அடிக்கடி பேசுவான் என்பது சுமுகி எதிர்பார்த்ததே. ஆனால் அவனது பேச்சிலிருந்து அவள் உருவாக்கிய பாமினி, பல்வேறு முரண்பாடுகளின் மொத்த உருவமாக இருந்தாள்.

மிகவும் கூச்ச சுபாவம் என்றான். ஆனால், அவளே அவனைத் தேடி வந்து பழகினாள் என்றான். காதலில் வேகம் அது இதென்று நித்யவாசன் பிதற்றியது வேறு.

வைர நகைகளை அணிந்து பார்க்கக் கூட ஆசை கிடையாது என்றான். ஆனால் தமயந்தி அம்மாளின் சொற்கள், அவளைத் தங்கத்துக்கும் பணத்துக்கும் அதிக ஆசைப் படுகிறவளாகக் காட்டின.

கணவனை மகிழ்விக்க, விதம் விதமாக அலங்காரம் செய்து கொள்கிறவள், அந்த வீட்டில் இருந்த மற்ற யாரையும் மனிதராக மதித்ததாகவே தெரியவில்லை. திட்டுவது தவிர, வேலையாட்களிடம் பாமினி பேசியதே இல்லையாம்.

மறு திருமணம் பண்ணியே தீர வேண்டும் என்றவள், சும்மா ஒரு நடனம் நன்றாக இருந்தது என்று கூறினாலே, அந்த நாட்டியக்காரியைப் பார்த்தாயா என்று ஆத்திரப்பட்டுக் கத்துவாள் என்றான்.

சின்னத் தலைவலியைக் கூடத் தாங்காதவள், தனக்கே அடி படக்கூடும் என்று தெரிந்தும், அவளாக விபத்தை உண்டு பண்ணியது எப்படி?

குழந்தை மாதிரிப் பயமும் தடுமாற்றமும் உடையவள் எப்படித் துணிந்து காரை ஓட்டுவாள்?

அவசியம் ஏற்படும்போது, சிறு மான்கூடப் புலியையே எதிர்க்கும் என்பார்கள். இயல்புக்கு மாறாக, மனிதர்களும் என்னென்னவோ செய்யக்கூடும். ஆனால் அன்றாட வாழ்க்கையிலுமா, அப்படி?

இந்தக் குழப்பங்கள் எதையும், சுமுகி கணவனிடம் வெளியிட்டு விவாதித்தது இல்லை. தங்கள் இருவருக்கும் இடையே, அது விரிசலை உண்டு பண்ணக்கூடும் என்பது அவளது அபிப்பிராயம்.

மூத்தவளைப் பற்றிக் குறைத்துப் பேச முயற்சிப்பதாக, நித்யவாசன் எண்ணி விட்டால், வேறு வினையே வேண்டாம். கணவனின் நேசத்துக்குத்தான், ஒரு நாளும் வழியில்லை என்றால், இப்போது துளிர் விட்டு வளர்ந்து கொண்டிருக்கும் நட்பும் நாசமாகிப் போகும்.



ஆனால் கணவன் சொல்வதை எல்லாம் ‘அப்படியா, அப்படியா?’ என்று கேட்டுத் தலையாட்டிக் கொண்டு சும்மா இருக்கவும், அவளால் முடியவில்லை.

கணவனிடமே கேட்க முடியாததை, வேலையாட்களிடம் விசாரிப்பதும், சுமுகிக்குத் தரக்குறைவாகத் தோன்றியது. கிட்டத்தட்ட வம்பு பேசுவது போலத்தானே?

பாமினியின் பெரிய போட்டோவைக் கூர்ந்து பார்ப்பாள். ஆனால், அதை மட்டும் வைத்து அவளது குண நலன்களைத் தீர்மானிக்க, சுமுகிக்குப் பிடிக்கவில்லை. அது சரியாக இருக்கும் என்றும் தோன்றவில்லை.

இப்படி யோசித்த போதுதான், அங்குள்ள குடும்ப போட்டோ ஆல்பங்களைப் பார்க்கும் எண்ணம், சுமுகிக்கு வந்ததே. அப்படி அவற்றைப் பார்த்த போதுதான், சுமுகியின் நிம்மதி முதலில் கலைந்ததே.




**போ**ட்டோ ஆல்பம் பற்றி, நித்யவாசனிடம் சமுகி கேட்டபோது, சட்டென அவன் முகம் வாடிப் போயிற்று.

“மினியின் படங்கள் என்று அதிகம் இராது, சுமுகி. அவளுக்கு போட்டோ எடுத்துக் கொள்வதில் ஆர்வம் கிடையாது. எனக்குச் சொந்தமான அவளது படத்தை அடுத்தவன் எவனோ பார்த்து, பிரிண்ட் போடுவதா என்பாள். அந்நிய ஆண்களிடம், அந்த அளவு ஒதுக்கம். கடைசியாக, போலோராய்டு காமிரா வாங்கி, வீட்டிலேயே எடுத்துக் கொண்டவைதான். அவைகளைத்தான் ஆல்பத்தில் போட்டு

வைத்தாள்'' என்று சோகமாகச் சொல்லி ஆல்பம் இருக்கும் இடத்தைக் காட்டிச் சென்றான்.

ஆல்பத்தில் முதலில் இருந்த சில படங்கள், தனித்தனியே ஒருவரை ஒருவர் எடுத்தவையே. ஆவற்றுள் பாமினியின் படங்களே அதிகம்.

ஆசை மனைவியை விதம் விதமாகப் படமெடுத்திருந்தான் நித்யவாசன்.

ஆனால் அதன் பிறகு...

'பிரிண்ட்' போடக் கூட வெளியார் யாரும் பார்க்கப் போவது இல்லை என்ற தைரியத்தில் கண்ட விதமாகப் படம் எடுத்திருந் தார்கள். காமிராவை, 'செட்' பண்ண வசதிப் படாததாலோ என்னவோ படுக்கை வரை போகவில்லை. அவ்வளவே.

ஒரு சிலதைப் பார்ப்பதற்குள்ளாகவே, சுமுகியின் முகம் கன்றிப் போயிற்று. நெஞ்சு படபடத்து மூச்சு விடுவதே சிரமமாகிவிட, ஆல்பத்தை மூடி வைத்து விட்டாள்.

இந்த மாதிரி 'ஏ' படங்களை எடுத்ததையே மறந்துபோய், ஆல்பம் இருந்த இடத்தைக் கைகாட்டி விட்டுப் போய் விட்டானா?

எப்படியோ? நித்யவாசன் மாலையில் திரும்பி வருமுன், தன்னை இயல்பாக்கிக் கொள்ள, சுமுகி படாதபாடு பட்டுப் போனாள்.

இப்போதும் உள்ளூர ஒரு முரண் உறைத்தது. வெளி ஆண் படத்தைக் கழுவி பிரிண்ட் போடுவதுகூடப் பிடிக்காதவள், இப்படி அரை குறை ஆடையிலும் அதிகப்படியான ஒட்டுதல் நிலையிலும் படங்களை எடுத்து, ஆல்பம் வேறு போட்டு வைத்திருக்கிறாளே.

கணவனோடு எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும் ஆனால் ஆல்பத்தை அடுத்தவர் பார்க்க நேராது என்று என்ன நிச்சயம்?



ஒரு வேளை, வேறு யாரும் பார்க்க நேராது என்ற நிச்சயம்தானா? இப்படி இடை வழியில் போக நேரும் என்று அவளுக்கு எப்படித் தெரியும்? பாவம்.

பாவம் என்று ஒரு புறம் பரிதாபப்பட்ட போதும், அந்தப் படங்கள் சுமுகியை ரொம்பவே பாதித்தன.

அவளே ஒப்புக் கொண்ட அவளது ஒப்பந்தத் திருமணத்தின் விதிப்படி, இந்த ஆசை நிலைகள் எல்லாம் அவளுக்கு அடியோடு மறுக்கப்பட்டவை ஆயிற்றே. வாழ்க்கை முழுமைக்கும்.

விழித்திருக்கும் போது முயன்று கட்டுப்படுத்திக் கொண்ட போதும், தூக்கத்தில் மனம் கட்டறுந்து கண்ட இடம் சுற்றியது. பாமினியின் இடத்தில் தன்னை வைத்துக் கனவு கண்டுவிட்டு, விழித்து எழுந்ததும் பெரும் வேதனையில் ஆழ்ந்தது.

தூங்கவே பயந்து கால் ஓயுமட்டும் அறைக்குள்ளேயே நடந்து விட்டு, அலுத்துக் களைத்த பிறகே படுக்கத் தொடங்கினாள். கனவற்ற ஆழ்ந்த உறக்கம், அப்போதுதானே, சாத்தியம்?

லலிதாவை லவ்டேலில் விட்டுவிட்டு, அங்கேயே சில நாட்கள் தங்கியிருந்து விட்டு தமயந்தி அம்மாள் மீண்டும் சென்னை திரும்பி வந்தார்.

மகனும் மருமகளும் பழகிக் கொண்ட முறை அவருக்குத் திருப்தியை அளித்தது.

மகன் அதிக நேரம் வீட்டில் செலவிடுவதையும், இருவரும் இலகுவாகப் பேசிக்கொள்வதையும் பார்த்து மகிழ்ந்தவருக்கு ஒன்று மட்டும் குறையாகப்பட்டது.

மூத்தவளுக்காக, சுமுகி செய்த வேலை. அவளது படத்துக்காக.

மருமகள் அழகாகப் பூத்தொடுப்பதைப் பார்த்து ரசித்தவள், அவைகளைப் பாமினியின் படங்களுக்குச் சூடுவதைக் கண்டதும், ''என்னம்மா இது?'' என்று புருவம் சுளித்தார்.

சொல்வது அறியாமல், சுமுகி விழியுயர்த்திப் பார்க்கவும், "பாமினி இறந்து போக வேண்டும் என்று நான் நினைத்தது இல்லை. ஆனால் எப்போதும் எனக்கு அவளிடம் நல்ல அபிப்ராயம் கிடையாது. பையன் இவ்வளவு பைத்தியமாக இருக்கிறானே என்று அவளைப் பொறுத்துப் போனேன். ஏதோ விதி முடிந்தது. போய்ச் சேர்ந்தாள். நித்யன் அவளை மறக்க வேண்டும் என்று நினைத்தேன். அதற்குக் காலம் அவ்வளவாக உதவவில்லை. இன்னொருத்தி வந்தால்தான் மறக்கும் என்று எண்ணியே, அவனது திருமணத்துக்கு அவ்வளவு ஆசைப் பட்டேன். இப்போதேனும் அது மறந்து விடும் என்று பார்த்தால், நீயே அவளை நினைவுப்படுத்துவாய் போலத் தெரிகிறதே," என்று தன் அதிருப்தியைத் தெரிவித்தார்.

ஆக, தமயந்திக்கு முதல் மருமகளைப் பிடிக்கவில்லை தான். அவளைக் குறைவாக நினைக்கிறார் என்று சுமுகி எண்ணியதும் சரிதான். ஆனால் அதைப் பற்றி வெளிப் படையாகப் பேச, அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

ஒருவேளை, பாமினியின் முரண்பாட்டில் தமயந்தி அம்மாள் கெடுதலை மட்டும் கண்டிருந்தால்?

கணவனின் கருத்துக்கு நேர் விரோதமான ஒன்றை மாமியார் சொன்னால், 'இருதலைக் கொள்ளி எறும்பு' என்பார்களே, அது போல அவள் திண்டாட நேரலாம்.

அத்தோடு மாமியார் கருத்தை ஏற்று நடந்தால் கணவனின் வெறுப்புக்கும் ஆளாக நேரலாம்.

உயிர் மூச்சுப் போல அவளுக்கு இன்றியமையாததாகிக் கொண்டிருந்த நித்யவாசனின் பேச்சும் சிரிப்பும் இல்லாமல் அவளால் எப்படி உயிர் வாழ முடியும்?

சுமுகியின் பதிலை எதிர்பாராமலே, தமயந்தி தொடர்ந்தார். "அவன் மறுபடி திருமணமே செய்து கொள்ளாமல் தனியாகவே இருந்து விடுவானோ என்று மிகவும் பயந்தேன்.



நல்லவேளையாக, அது மாறி உன்னை மணந்து பிரியமாகவும் இருக்கிறான். இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு மெல்ல அவள் படம் அவள் தொடர்பான எல்லாவற்றையும் தூக்கித் தூரப் போட்டு விடம்மா. அவள் நினைவே அற்றுப் போய் விடட்டும்" என்று மருமகளுக்குப் புத்தி சொன்னார்.

இதை ஒத்துக் கொள்ளவும், சுமுகிக்கு மனம் வரவில்லை. என்ன இருந்தாலும் மாமியாருக்குப் பிடிக்காமல் போனாலும் நித்யவாசனிடம் ஆசை வைத்த பெண். அவனது சொத்தைக் காப்பதற்காக உயிரையே தியாகம் செய்தவள். அவளது நினைவு 'அற்றுப் போகுமாறு' செய்வது நியாயம் ஆகாதே.

நித்யனைப் பொறுத்தவரை, அது முடியாத காரியமும் கூட.

தமயந்தி அம்மாளிடம் இதையெல்லாம் எடுத்துச் சொல்லி வாதம் புரிவதும் முடியாத ஒன்று. கணவன் விஷயத்தை அவரிடம் சொல்லவே முடியாதே.

எனவே மாமியாரிடம் மறுத்துப் பேசாமல், மெல்லிய புன்னகை மட்டும் செய்தாள் மருமகள்.

அதை ஒப்புதலாக ஏற்று திருப்தி அடைந்து தன் புஸ்தகத்துக்குக் குறிப்புகள் எடுப்பதற்காக சொந்த ஊர் சென்றார் அவர்.

திரும்பி வரும் போது, நல்ல செய்தி சொல்ல வேண்டும் என்ற அன்புக்கட்டளையோடு.

இந்த மாதிரிக் கட்டளையைக் கேட்ட பிறகு, மனம் அமைதியாக இருக்குமா? அது பாட்டில் தரையில் விழுந்த மீனாய், ஒரு மூச்சு துடியாய்த் துடித்து ஓய்ந்தது.

இரண்டாம் திருமணம் என்பதாலோ அவனளவில் ஒப்பந்தத் திருமணம் என்பதாலோ, சுமுகியைச் சும்மா ஒரு கோயிலுக்கு அழைத்துச் சென்று பேருக்குத் தாலியைக் கட்டி, நித்யவாசன் கல்யாணத்தை முடித்து விடவில்லை.

காரணம் அவனுடைய தாயார் தமயந்தியின் பிடிவாதம்.

முதல் திருமணத்தை 'அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாற்போல' என்பது போல அவன் சரியாகச் செய்யவில்லையாம். யாரையும் கூப்பிடவும் இல்லையாம். உற்றார் உறவினரின் ஆசி இல்லாத காரணத்தினாலேதான் அந்த வாழ்வு. அரையும் குறையுமாக முடிந்து போய்விட்டதாம். இந்த முறை எல்லாம் நல்ல விதமாகச் செய்து நல்லபடியா 'ஆயிரம் காலத்துப் பயிராக'ப் பிள்ளை வாழ வேண்டுமாம்.

லலிதாவும் அதற்கு ஒத்து ஊதினாள். மகளின் திருமணம் சிறப்பாக நடப்பதைக் கண்ணாரக் கண்டு மகிழும் ஆவல் எந்த தாய்க்குத்தான் இராது?

நித்யவாசனைப் பொறுத்த வரையில், இது தாயின் திருப்திக்காகச் செய்யும் திருமணம். திருமணம் அப்படி என்றால் முறைகளிலும்தான் ஏன் குறை வைக்க வேண்டும்?

எனவே ஆடம்பரமாக இல்லாவிட்டாலும் நிதானமான அளவில் நெருங்கிய உறவினர், நட்பாளர்களை அழைத்திருந் தான். நல்ல விருந்தும் கொடுத்திருந்தான்.

அதன் தொடர்ச்சியாகப் புதுத் தம்பதியரும், அவ்வப்போது விருந்துக்கு அழைக்கப்பட்டனர்.

இந்த உறவு நட்பு இரண்டுமே நித்யவாசனுடையவை. அவனுக்கு இது மறுமணம் என்பதும் நினைவிருந்ததாலோ, அல்லது முதல் மனைவியிடம் அவனுக்கு இருந்த காதலை அறிந்திருந்ததாலோ என்னவோ, அவர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்துகளில் கேலி என்ற போர்வையில் யாரும் அளவு மீறி பேசவில்லை.

ஆனால், இந்த விருந்துகளில் ஒரு விசித்திரமான உண்மையைச் சுமுகி கண்டுபிடித்தாள். நித்யவாசனுடைய மனைவியாக வாழ்ந்த இந்த மூன்று மாதங்களில் பாமினி இந்த மாதிரி எந்த விருந்துக்கும் சென்றது கிடையாது.



"அழைத்தும் அப்போது நித்யன் அந்த மனைவியோடு விருந்துக்கு வந்ததே இல்லை. மிசஸ் சுமுகி. 'வருகிறோம்' என்று எங்களிடம் ஒத்துக் கொண்டு போவார். மறுநாளே, போன் செய்து 'வசதிப்படவில்லை' என்று விடுவார். உண்டா, இல்லையா என்று உங்கள் நித்யனிடமே கேட்டுப் பாருங்கள், மேடம். 'கோஷா'க்குடும்பம் என்று கூட நாங்கள் எல்லோரும் பேசிக் கொள்வோம். ஆனால் உங்களை அழைத்து வந்திருக்கிறாரே எப்படி? எங்கள் கண்களில் பட்டு விடாமல் காப்பதற்கு அவர்கள் என்ன உங்களை விடப் பெரிய ரதியா?" என்று ஒரு நண்பர் அந்த உண்மையைச் சொன்னதோடு, வத்தியும் வைத்தார்.

வத்தி வைத்த நண்பர் சேது, நித்யவாசனுக்கு மறைத்து சுமுகியிடம் எதையும் பேசவில்லை. எனவே வேடிக்கைக்குச் சொன்னதுதான் என்பது நிச்சயம். அத்தோடு கூடவே அவருக்குப் பல காலமாக உள்ளூர இருந்த குறையையும், கிடைத்த வாய்ப்பில் வெளிப்படுத்தி விட்டார்.

ஆனால் அவர் சொன்னதில் இருந்த ஏதோ ஓர் உண்மையில் நித்யவாசன்தான் சற்றுத் திணறிப் போனான். பதில் சொல்ல மாட்டாமல், கணவன் சங்கடப்படுவதை சுமுகி உணர்ந்தாள்.

ஒருவேளை பாமினி மகா ரதியென்றுதான், பெரும்பாலும் சம வயதினராக இருந்த இந்த நண்பர்களிடையே நித்யவாசன் தன் ஆசை மனைவியை அழைத்து வரவில்லையோ என்ற எண்ணம் சட்டெனத் தோன்றி, சுமுகியை உறுத்தியது.

சுமுகி அழகென்றே நித்யவாசனுக்குத் தோன்றாததால்தான் என்று எண்ணம் ஓடும்போதே, சட்டெனத் திருமண இரவன்று அவன் சொன்னது நினைவு வந்துவிட, "அவர்கள் பாமினி சற்று கூச்ச சுபாவம் உடையவர்கள். பெண்களுக்கு மட்டுமான கான்வென்ட் பள்ளியில் படித்தவர்கள் என்று நினைக்கிறேன். அந்நிய ஆண்களிடம் பேசவே, சங்கடப்படுவார்களாம். நீங்கள்

எல்லோரும், என்னவெல்லாம் பேசுகிறீர்கள். கல்லூரியில், சக மாணவர்களோடு சகஜமாகப் பேசிப் பழகி படித்த நானே திணறிப் போகிறபோது, அவர்கள் பாவம். நடுநடுங்கிப் போயிருப்பார்கள். அதனால்தான் நித்தி, அவர்களை அழைத்து வரவில்லை, போல'' என்று சிறு முறுவலோடு அமைதியாக உரைத்தாள் அவள்.

ஏதோ கட்டவிழ்ந்தாற்போல, ''நித்தியாமே'' என்று 'ஓ'' என்று சிரித்துக் கை தட்டினார்கள். எல்லோரும் ''உங்கள் நித்தியை யாரும் ஒரு வார்த்தை சொல்லக் கூடாதாக்கும்? நீளமாய், வக்காலத்து வாங்கிக் கொண்டு வருகிறீர்கள்,'' என்று கேலி பேசினார் இன்னொருவர்.

அதற்கும் ஓர் அசட்டுச் சிரிப்பு வெடித்தது.

இறுக்கம் அகன்றுவிட, அரும்பு மீசையை முறுக்கிப் பெருமை காட்டி, மேலும் நகைக்க வைத்தான் நித்யவாசன்.

''ம்ம்ம். அவ்விடத்திலே 'நித்தி' இங்கே? நம்ம நண்பரின் செல்லச் சுருக்கம் என்னவோ?'' என்று துருவினார் ஒருவர்.

அப்படி ஒன்றும் கிடையாதே.

'நித்தி'யும் கிடையாதுதான். ஆனால் இப்படி ஒன்றை, இந்த நண்பர்கள் இயல்பாக எதிர்பார்க்கக்கூடும் என்று ஊகித்து, சுமுகி சொன்னது. ஆனால், தன் 'மினி'யிலேயே மூழ்கிக் கிடக்கும் நித்யவாசனுக்கு, இதை எண்ணிப் பார்க்கக் கூட முடியுமோ, என்னவோ?

நித்யவாசனை முந்திக் கொண்டு அவசரமாக, ''எங்களுக்குள் எத்தனையோ. அதையெல்லாம் கேட்கலாமா?'' என்று மர்ம முறுவல் பூத்தாள் சுமுகி.

''அப்பாடியோவ். மேடம் முன்னிலையில் நண்பரைச் சாதாரணக் கேலி கூடப் பண்ண முடியாது போல இருக்கிறதே. வரிந்து கட்டிக் கொண்டு வந்து விடுகிறீர்களே'' என்று வியந்தார் இன்னொருவர்.



இதற்கும் பதிலாக ஏதோ சொல்ல முயன்ற மனைவியின் தோளில் கையை வைத்து, ''செல்லப் பெயரைச் சொன்னால் இன்னமும் அதிகமாகக் கேலி செய்வீர்களோ, என்ற அச்சம்தான். அதனால்தான் இப்படி வேகவேகமாக வரிந்து கட்டுவது'' என்றான் நித்யவாசன் இலகுவாக.

''ஆஹா. அப்படி என்ன பிரமாதமான பெயர்? அதைச் சொல்லாமல் இங்கிருந்து போக விடவேமாட்டோம்.'' என்றுரைத்து முற்றுகையிடுவது போல, அவர்களைச் சுற்றிலும் சூழ்ந்து நெருங்கி நின்றது நண்பர் கூட்டம்.

''உங்களிடம் இருந்து தப்பிச் செல்வதற்காகவாவது, சொல்லி விட வேண்டியதுதான்.'' என்ற நித்யவாசன், சுமுகியின் கையைப் பற்றித் தூக்கி, விரல்களில் முத்தமிட்டு, ''சுகிம்மா, சொல்லி விடுவோமா?'' என்று மென்குரலில் வினவி, ''இந்த சுமுகி, என் சுகி'' என்று இயம்பினான்.

தாலி கட்டிய கணவனின், அந்த முதல் நேசத் தொடுகையில் மெய்சிலிர்த்து நின்றாள் சுமுகி.




இதுவும், மெய்யான நேசம் காட்டும் செயல் அல்லதான். அவளது 'நித்தி'யைப் போல் அவனது 'சுகி'யைப் போலப் பொய்மைதான். சூழ நின்ற நண்பர்களுக்காகச் செய்தது.

விரல்களில் நித்யவாசனின் உதடுகள் பட்டதும் தன்னை மீறி உடல் சிலிர்த்த சுமுகி, உடனே உண்மை உணர்ந்து இறுகியும் போனாள்.

''சுகி'யா? ஆஹா, என்னப் பிரமாதம், ரசிகனய்யா, நீர்.''

தொடர்ந்த கைதட்டல் சிரிப்பொலியில், சுமுகி இறுகி நின்றது, யாருக்கும் தெரியாது போயிற்று.

"இதுவே மேல்நாடாக இருந்திருந்தால் ஒரு நல்ல அசைவ முத்தத்தைப் பார்த்து ரசித்திருக்கலாமே. அடடா" என்று ஒரு நண்பர் வருத்தப்பட, "ஏன்? அந்த அசைவத்தை இங்கும் யாரும் வெறுப்பதில்லையே, நண்பர் நித்யனுக்கு எங்கள் அனுமதி தாராளமாக உண்டு" என்றார் இன்னொரு நண்பர்.

"இலவசமாகப் படம் காட்டவா? அதற்கெல்லாம் நாங்கள் தயாரில்லை, சாமி. ஊகூம் இதற்குமேல் இங்கே இருப்பது சரிப்படாது, சுகிம்மா, வா, வா, உடனே கிளம்பி விடலாம்" என்று சிரித்த முகமாகவே கூறி, மனைவியின் கையைப் பற்றி லேசாக இழுத்தவாறு, நித்யவாசன் மெய்யாகவே கிளம்பிவிட, மற்றவர்களும் நகை முகமாக விடை கொடுத்தனர்.

"நினைவு படுத்தி விட்டோமா? அவசரமாக ஓடுகிறீர்களே" என்ற கேலியுடன்.

நினைவு படுத்துவதா? எதை? நினைப்பதற்கோ, நினைத்து ரசிப்பதற்கோ, அவர்கள் வாழ்வில் ஒன்றுமே இல்லையே.

முதல் முறையாக முழுமையான வெறுமையை உணர்ந்த சுமுகிக்குப் பேச முடியவில்லை.

நித்யவாசனும் எதை நினைத்தானோ, திரும்புகையில் வெகு நேரம் காரினுள் சத்தமே இருக்கவில்லை.

கடைசியாக, "நீ சொன்னதுதான் நிஜமாக இருக்கவேண்டும், சுமுகி" என்றான்அவன் மொட்டையாக.

என்ன சொன்னாள்? எது, நிஜம்?

தான் என்ன சொன்னோம் என்று யோசித்துப் பார்த்தும், நித்யன் எதைப் பற்றிப் பேசுகிறான் என்று சுமுகிக்குப் புரியவில்லை, கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரமாக அந்த நண்பர் குழாத்துடன் இருந்திருக்கிறார்கள். என்னென்னவோ பேசியிருக்கிறார்கள். அவள் இருக்கும் இடத்தில் பேசப்பட்ட



அத்தனை உரையாடல்களிலும், சுமுகியும் கலந்து கொண்டிருக்கிறாள்.

இதில் இவன் எதைச் சொல்லுகிறான் என்று எப்படி இனம் காண்பது?

அது என்னவாக இருக்கும் என்று அவளது உள்ளுணர்வு சொன்னதை ஏற்க, அப்போது அவளுக்கு மனமில்லை.

ஆனால் அவளது பதிலை எதிர்பாராமல், நித்யவாசனே தொடர்ந்தான்.

"நீ சொன்னது போல, மினிக்குப் பயமாகத்தான் இருந்திருக்கும். யார் யார் என்னென்ன பேசுவார்களோ, பதில் சொல்லத் தெரியாமல் போய் விடுமோ என்ற கலக்கம், அதனால்தான், இதுபோல விருந்துகளுக்கு வரவே முடியாது என்று ஒரேயடியாக மறுத்திருக்கிறாள். அது புரியாமல், என்ன பெரிய கூச்சம்? என்ன பெரிய நாணம்? நான் என்ன ஓநாய்க் கூட்டத்து நடுவிலா, அவளைக் கூட்டிப் போகப் போகிறேன்? அசட்டுத்தனமாக, வாக்குத் தவற வைத்து விட்டாளே, நம் நண்பர்கள், என்னை என்ன நினைப்பார்கள் என்று அவளிடம் எனக்குக் கோபம்கூட வந்ததுண்டு. அது தாழ்வுணர்ச்சியால் வந்த பயம் என்று உணர்ந்து பரிதாபப்படாமல்... என்ன மடத்தனம், பார்" என்று வருத்தப்பட்டான்.

சுமுகியின் உள்ளுணர்வு சரியாகத்தான் சொல்லியிருக்கிறது. அவனும், பாமினியைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டு இருந்திருக்கிறான். ஆனால், ஊகம் சரியானது என்பதால் மனதிற்குச் சுகமாக இருக்கவில்லையே.

உண்மை அறியாத நண்பர்களுக்காக நடித்ததுதான் என்றாலும், அவளது விரல்களின் மீது அவனது உதடுகள் பதிந்த இடம், இன்னமும் அவளுக்கு குறுகுறுத்துக் கொண்டிருந்ததே.

இந்த நேரத்தில், பாமினியைப் பற்றி அவளால் எப்படிப் பேச முடியும்? அவளும் உயிரும் உணர்வும் உள்ள மனிதப் பிறவிதானே?

வெகு சிரமப்பட்டு, தன் தாயாருக்கு நித்யவாசன் செய்திருப்பதையும், அதற்காக அவள் அவனோடு செய்து கொண்ட ஒப்பந்த விதிகளையும் அந்த ஒப்பந்தத்திற்கு அப்பாற்பட்டு, அவன் தொடர்ந்து உதவுவதையும், பலதரம் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்துதான், சுமுகியால் மீண்டும் மனதைச் சமநிலைக்குச் கொண்டு வர முடிந்தது.

ஆனால், எப்படியும் கொண்டு வந்து விட்டாள் என்பதுதான் முக்கியம். அந்த அளவுக்கு அவளால் மனதைக் கட்டுப்படுத்த முடிந்ததே. அதுவே பெரிய விஷயம்.

எனவே அவளது மனப் போராட்டங்களைப் பற்றிச் சற்றும் அறியாமல் நித்யவாசன் உற்சாகமாக வளைய வந்தான்.

சமயத்தில், 'நித்தி' என்று அவனைக் குறிப்பிட்டு நிலைமையை வெகு அழகாகச் சமாளித்தாளாம். வேறு யாரும் அவனை அப்படி அழைத்ததே இல்லையாம். அந்த ஒரு வார்த்தையில் அவர்களது வாழ்க்கையைத் துருவி ஆராய்ந்து கொண்டிருந்த அத்தனை வாய்களையும் அடைத்து விட்டாளாம். ஏனெனில், பாமினியிடம் மயங்கிக் கிடந்தது, எல்லோருக்கும் தெரியுமாம்.

அத்தோடு அவனுக்கும் அந்தப் பெயர் மிகவும் பிடிக்கிறதாம்.

ரொம்பவே பாராட்டினான். சட்டென, 'சுகி' என்ற பெயர் அவன் மனதில் தோன்றவும், அவள்தான் காரணம் என்றான். அவளது 'நித்தி'யைப் போலவே அழகான காதுக்கும், கருத்துக்கும் சுகம் தருவதாக இருக்க வேண்டும் என்று அவன் அவசரமாக யோசிக்கும்போதே, சட்டென அந்தப் பெயர், அவன் மனதில் தோன்றிவிட்டது.

அதுவும், அவளுக்கு மிகவும் பொருத்தமான பெயராக.

அவர்களுக்குத் திருமணம் ஆன நாளில் இருந்து, சுமுகி அவனுக்குச் சுகத்தைத்தானே, கொடுத்திருக்கிறாள். புது மணத் தம்பதிகள் என்பதால் மற்றவர்கள் கற்பனை செய்யக் கூடிய விதமான சுகம் இல்லை அது. ஆனால் அம்மா அனுமதித்த, அவளால் ஆகக்கூடிய அத்தனை வழிகளிலும் அவள் அவனுக்கு உதவியாகத்தான் இருந்திருக்கிறாள்.



அவளை மணந்த பின்னரே, பல ஆண்டுகளுக்குப் பிறகு நித்யவாசன் நிம்மதியாக ஏன் சந்தோஷமாகக் கூட இருப்பதாகச் சொல்லலாம்.

அரக்கப் பரக்க ஓடாமல், பரபரப்பின்றி நிதானமாக, எதையும் எல்லாவற்றையும் செய்ய முடிவதன் பலனை உடல் தெம்பிலும், உள்ளூர ஊறும் உற்சாகத்திலும், அவனுக்கே உணர முடிந்தது.

குடும்பம், வீடு, தோட்டம் தவிர, தொழில் தொடர்பாகவும், அவனால் சுமுகியோடு மனம் விட்டுப் பேச முடிந்தது. தொழிலின் நெளிவு சுளிவுகளை முழுதாக அறியாதவள்தான் என்றாலும், அவள் ஆர்வத்துடன் கேட்பதே, அவனுக்கு உற்சாகம் தந்தது. கூடவே சிக்கல்களைத் தெளிவாக விவரிக்கும் போது அவற்றுக்கான தீர்வுகளை அவனாகவே கண்டு கொள்ளவும் முடிந்தது. பணிபுரிவோர் சம்பந்தமான உணர்ச்சிப் பூர்வமான பிரச்சினைகளுக்குச் சுமுகி தந்த யோசனைகள் சரியாக இருந்தன.

அத்தோடு, 'யாருக்கு வந்த விருந்தோ' என்றிராமல், அவனது தொழில் பேச்சுகளை சுமுகி ஆர்வத்துடன் கவனித்து வந்ததால், வரவர தொழில் விஷயத்திலும் சமதையாகக் கலந்து ஆலோசிக்க முடிந்தது.

இடையிடையே கேலிப் பேச்சுகளும் சேர்ந்துகொள்ள, இந்த உரையாடல்கள் அவனுக்கு மிகவும் பிடித்துப் போயின.

அதை அவளிடம் வெளிப்படையாகக் கூறவும் செய்தான். 'வாழ்க்கையிலேயே முதல் முறையாக வடிகட்டாமல் வெளிப் படையாக என்னால் பேச முடிகிறதும்மா. ரொம்ப ரொம்ப தாங்க்ஸ்'' என்று அவன் நன்றி கூறவும், சுமுகி ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"அப்படியானால், அத்தையிடம் கூட, மறைப்பீர்களா? அப்புறம் பாமினி...?"

"பொதுவாக, அம்மாவிடம் நான் பிரச்சினைகளைச் சொல்வதில்லை, சுகி..." என்றவன் அவள் முகத்தில் திகைப்பைக் கண்டு, "என்ன?" என்று வினவினான்.

தலையசைத்து, "பக்கத்தில் நண்பர்கள் யாரும் இல்லையே, என்று பார்த்தேன்" என்று முறுவலித்தாள் அவள்.

"நண்பர்... ஓ, 'சுகி' என்றதற்கா? இனி எப்போதுமே, உன்னை அப்படித்தான் கூப்பிடப்போகிறேன். அம்மா, நான், உன் அம்மா... பணியாட்கள் உள்பட இன்னும் சூழ இருக்கும் எல்லோருக்கும் எது சுகம் என்று யோசித்துச் செய்கிறாளே. உனக்கு அந்தப் பெயர்தான் பொருத்தம்" என்று உணர்ச்சி வசப்பட்ட குரலில் கூறினான் நித்யவாசன்.

"ஐயோ, ஐயோ. குடையைக் காணோமே. எங்கே குடை? எங்கே? எங்கே?" என்று சுற்றுமுற்றும் தேடினாள் சுமுகி.

"குடையா? எதற்கு? அதுவும் நடு வீட்டில்?" என்று கண்களில் ரசனை கலந்த எதிர்பார்ப்பும் சிரிப்புமாக வினவினாள் அவன்.

"குடையை வேறு எதற்குத் தேடுவார்கள்? நனைந்து விடாமல் இருப்பதற்காகத்தான். சற்று முன், இங்கே ஒரே பாராட்டு மழை பொழிந்ததே" என்று சுமுகி மிடுக்காகப் பதிலிறுக்கவும், வாய் விட்டு நகைத்தான் நித்யவாசன்.

அவன் சிரிப்பதை ரசித்தபடி, "எனக்குச் சளி பிடித்து, இருமித் தும்மாமல் இருக்க வேண்டுமானால், இப்படி வீட்டுக்குள் மழை பொழிவதை, இத்துடன் நிறுத்தி விடுங்கள்" என்று முடித்துவிட்டு "சொல்லுங்கள், நீங்கள் அத்தையிடம் உங்கள் பிரச்சினைகளை ஏன் சொல்வதில்லை? அவர்கள் எவ்வளவோ பெரிய அறிவாளி ஆயிற்றே" என்று கேட்டாள் சுமுகி.



"எப்படியெப்படி? அறிவாளியா? உன்னை மருமகளாக்க ஒத்துக் கொண்டதால், நித்யவாசன் தொடர்ந்து விஷயத்துக்கு வந்தான். "நீ சொல்வது போல, அம்மா அறிவாளிதான். ஆனால் அம்மாவிடம் நான் எதையும் சொல்லாத காரணம், அறிவு தொடர்பானது அல்ல, சுகி. அப்பாவுக்குப் பிறகு, நான் திடுமெனத்தானே, தொழிலைக் கவனிக்கும்படி ஆயிற்று. முதலில் சின்னப் பிரச்சினை என்றாலும் பயந்து போய், அம்மாவிடம்தான் ஓடுவேன். நான் என்ன தப்பு செய்ததில், இப்படியாகி விட்டதோ என்று நடுங்குவேன். எனக்குத் தைரியம் சொல்லித் தேற்றி அந்த பயத்தை அவர்கள் ஏற்று இரவு முழுவதும் பூஜையறையில் கிடப்பார்கள். ஒருதரம் அதைக் கண்ட பிறகு முடிந்தவரை அம்மாவிடம் பிரச்சினையோடு போவதே இல்லை. பிறகு, அதுவே பழகிவிட்டது."

அன்றைய நினைவில் அவனும், அது பற்றிய கற்பனையில் அவளும் சில கணங்கள் பேசாதிருந்தனர்.

சற்றுக் கனமாகி விட்ட சூழ்நிலையை மாற்ற விரும்பி, "அம்மாவிடம் சொல்லாதிருப்பது பழகி விட்டதா? அல்லது பிரச்சினை பழகிப் போய் விட்டதா?" என்று அவள் குரலில் கேட்கவும் அவன் புன்னகை செய்தான்.

"இரண்டும்தான். பிரச்சினையைச் சமாளிக்காமல், சம்பாதிப்பது முடியாதே." என்றான், பதிலாக.

"ஆமாமாம். பிரச்சினையும் பணமும் இணை பிரியாத இரட்டையர்களாமே? கேள்விப்பட்டேன்" என்று சிரித்தாள் சுமுகி.

பதிலாக முறுவலித்தவன் கண்களில் யோசனை தெரிந்தது. "அடுத்து பாமினியைப் பற்றிக் கேட்டாயில்லையா? பாமினி, ஒரு குழந்தை மாதிரி, இந்த வேலையில் லாபம் சில லட்சம் என்றால், ஒரேயடியாகக் கைத்தட்டிக் கூச்சலிட்டு மகிழ்வாள். அதே சமயம் எதிலாவது லாபம் கிடைக்காது, ஏதாவது கஷ்டம் என்றாலோ உட்கார்ந்து ஒரு மூச்சு அழுவாள். கண்டபடி

கத்துவாள். அதனால் அவளிடம் லாபம் தவிர மற்றதை நான் சொல்லுவதே இல்லை. சொல்லி அவளையும் கஷ்டப் படுத்துவானேன்? பாவம்'' என்று முடித்தான் அவன்.

மீண்டும் முரண்பாடு.

இவன் சொல்லும் குழந்தைத்தனமான கத்தலும், தமயந்தி அம்மா சொன்ன பணக்கணக்கீடும்.

முதலிலேயே பிடிக்காமல் போனதால், பாமினி கபடற்றுக் கணக்கிட்டதுகூடத் தமயந்தி அம்மாளுக்குத் தவறாகவே தோன்றி விட்டதோ?

பசுவும் மாடும் ஒரே மிருகம்தான். ஆனால் ஒப்பிட்டுச் சொல்லும் விதத்தில் நேர் எதிர்மறையாகப் பொருள் பட்டு விடுவதில்லையா?

பாமினி பேசியவிதம், மாமியாருக்கு அப்படிப்பட்டிருக்கும் போலும்.

ஆனால், அதைப் பற்றித் தொடர்ந்து யோசிக்க முடியாமல், "எனவே இந்த சுமுகியாரைத்தான் மதி மந்திரியாக ஏற்று என் சிக்கல்களை எல்லாம் எடுத்துச் சொல்லி ஆலோசனை பெற்று வருகிறேனாக்கும்'' என்று நித்யவாசன் புன்னகையோடு கூற, அந்தப் பேச்சில் அவளது மனம் ஈடுபடலாயிற்று.

'சுகி சுகி' என்று அவளை அழைக்கத் தொடங்கியவன், அவளும் தன்னை 'நித்தி' என்றே கூப்பிட வேண்டும் என்றான். தனிமையில் அப்படி கூப்பிட்டுப் பழகினால்தான் மற்றவர்கள் முன்னிலையிலும், அதே போல அழைக்க வருமாம்.

மாற்றி அழைத்து விட்டால், அவனுடைய நண்பர்கள் தப்பாக நினைப்பார்களே.

எனவே இருவரும் ஒருவருக்கொருவர் 'சுகி'யும் ஆனார்கள்.

"வரும் வழியில், ஒரு 'ஷோ கேசி'ல் பார்த்தேன். உனக்கு நன்றாக இருக்கும் என்று தோன்றவே வாங்கி வந்தேன்'' என்று



அவ்வப்போது எதையாவது கொண்டு வந்து கொடுத்தான். அப்படி கணவன் தன்னை நினைத்தான் என்பதே சுமுகிக்கு மகிழ்ச்சி தந்தது.

அடிக்கடி வெளியே அழைத்துச் சென்றான்.

நண்பர் குழாத்துடன் சேர்ந்து சுற்றுவதும் வழக்கம் ஆயிற்று.

அப்படிச் சேர்ந்து சுற்றும்போது, தோளை இடித்துக் கொண்டு ஒட்டி அமர்வது, கைகோர்த்து நடப்பது போன்றவை சர்வ சாதாரணமாயின. அவனுக்கு எப்படியோ, சுமுகிக்குச் சொர்க்க சுகமே.

அவனும் பாதிக்கப்பட்டிருந்தான் என்பது, விரைவிலேயே அவளுக்குத் தெரிய வந்தது.




ஒரு விடுமுறை நாளன்று, குடும்ப சகிதமாக நண்பர்கள் எல்லோரும் முட்டுக்காடு போய் வந்தனர்.

ஆட்டமும் பாட்டுமாக, வேடிக்கை விநோதங்கள் அன்று சற்று அதிகமாகவே இருந்தன.

'பாஸிங் த பக்'கில், மனைவியோடு சேர்ந்து ஆங்கில நடனம் ஆடும்படி, நித்யவாசனுக்கு வந்தது.

பேச்சும் விளையாட்டுமாக நாளைக் கழித்து விட்டு, அவரவர் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, இரவாகி விட்டது.

காரை 'ஷெட்'டில் நிறுத்தும்படிச் சொல்லிச் சாவியைப் பணியாளிடம் கொடுத்துவிட்டு, சுமுகியோடு சேர்ந்தே வீட்டுக்குள் சென்றான் நித்யவாசன்.

உள்ளே சென்றதும், அவளது கையைப் பற்றி முத்தமிட்டு, "என் மினி என்னை விட்டுப் போகவே இல்லை போல, மனது மகிழ்ச்சியாக இருக்கிறது. சுகிம்மா. உன்னை, அவளாகவே காண்கிறேன்" என்றான் நித்யவாசன்.

அன்றைக்குச் சுமுகியும் ஒத்துழைத்திருந்தால், அவர்களது தனிப்பட்ட உறவில் ஒரு திருப்பம் நேர்ந்திருக்கும்.

ஆனால் 'அவளாகக் காண்கிறேன்' என்றால் அதை ஒத்துக் கொள்ள முடியாமல் அவள் மனம் முரண்டியது. அப்படி ஓர் அவமானத்தைச் சகித்தால்தான் இல்லறம் என்றால் அது அவ்வளவு பெரிய தேவையாக அவளுக்குத் தோன்றவில்லை.

இந்த தடைகளையெல்லாம் உடைத்துக் கொண்டு அவளுக்காகவே அவளை விரும்பி, அவன் என்று வருகிறானோ வரட்டும். அதுவரை இந்த வாழ்வே அவளுக்குச் சம்மதம்தான்.

ஆனால் கணவனோடு இருக்கும் சுமூகமான உறவைக் கெடுத்துக் கொள்ளவும், சுமுகிக்கு பிரியம் இல்லை.

எனவே கையை விடுவித்துக் கொண்டு, "உங்களுக்கு வயிறு காலி என்று நினைக்கிறேன். பசி மிகுதியில் ஆள் முகம் கூட, அடையாளம் தெரியாமல் பாமினி போல என்கிறீர்கள். எனக்கும்கூட, இப்போது நல்ல பசிதான். ஃப்ரிஜ்ஜில் சமையல்காரம்மா ரொட்டி, தோசை மாவு ஏதாவது வைத்திருக்கிறார்களா என்று பார்க்கிறேன். சூடாக ஏதாவது உள்ளே போட்டால்தான் தாங்கும். கை கால் கழுவிவிட்டு வாருங்கள். அதற்குள் என்னமாவது பண்ணி வைக்கிறேன். இருவருமாகச் சேர்ந்து பேசிக் கொண்டே சாப்பிடலாம்" என்று பேசியவாறே உள்புறம் விரைந்தாள்.

ஒரு கணம் தயங்கி நின்றுவிட்டு, "உத்தரவு மகாராணி. தங்கள் கட்டளைப்படி நடக்கிறேன்" என்று தானும் இலகுவாக உரைத்துத் தன் அறையை நாடிப் போனான் நித்யவாசன்.



கலகலப்பான பேச்சும், சிரிப்பும் இருவருக்குமே கை வந்தவை என்பதால், உடனேயே எல்லாம் சரியாகி விட்டது.

வாழ்க்கையும், தொடர்ந்து நல்லபடியாகவே சென்றது எனலாம்.

இப்போதைக்கு, இப்படியே இருக்கட்டும் என்றே சுமுகி எண்ணினாள்.

'மாறுவது மனம்' என்பார்கள்.

முதல் இரவன்று காலில் விழுந்ததற்கே, என்ன என்னவோ கற்பனை செய்து கொண்டு கோபத்தில் குதித்தவன் நித்யவாசன். இப்போது இந்த அளவுக்கு மாறிவிடவில்லையா? இன்னும் மாறுவான். சுமுகியிடம் மெய்யான நேசமும் கொள்ளுவான்.

அந்த நல்ல நாள் வந்தே தீரும். விரைவிலேயே.

உள்ளத்தில் நம்பிக்கையோடு சுமுதி காத்திருக்கலானாள்.

ஆனால் அந்த நம்பிக்கையை அலைத்துக் குலைப்பதற் கென்று, ஒருவன் வந்து சேர்ந்தான்.

அன்று சுமார் பதினோரு மணியளவில் சமையல் அறையில் கணவனுக்குப் பிடித்த காளான் மஞ்சூரியனை, சுமுகியே செய்து கொண்டிருந்தபோது "அக்கா உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்கள்," என்று கந்தன் ஓடி வந்து, அவளிடம் தகவல் தெரிவித்தான்.

பெரிதாக ஒன்றும் நினையாமல் தன் வேலையிலேயே கவனமாக "ஐயாவைத் தேடி வந்திருப்பார். காரியக்காரர் கிட்டே போய் யார் என்று பார்க்கச் சொல்லு" என்றாள் அவள்.

"அய்யோ இல்லைக்கா. அவரு உங்களைத்தான் பார்க்கணுமாம். சீக்கிரம் வாங்க, அக்கா. அய்யோ வாங்க அக்கா" என்று பிடிவாதம் பிடித்தான் பையன்.

இவன் விடாமல் தொணப்புவான் என்ற அறிந்திருந்ததால், சமையல்கார அம்மாளிடம் காளான் பொறுப்பை ஒப்படைத்து விட்டு சுமுகி முன்புறம் சென்றாள்.

வேலைக்காரப் பையனின் பரபரப்பின் காரணம் சுமுகிக்குப் புரிந்தது.

அலையலையாகப் படிந்திருந்த கேசத்திலிருந்து கால் ஷூ வரை, அவனிடம் ஒரே பளபளப்பு.

ஒற்றைக் காதில் ஒரு வளையம் பளபளப்பு. கழுத்தில் சங்கிலி, கையில் வாட்ச் செயின் பளபளப்பு. கால் ஷூவில் முகம் பார்க்கலாம்.

கையில் இருந்த சிகரெட் பெட்டி கூட தங்கத்தில் பளபளத்தது.

யோசனையாகப் பார்த்துவிட்டு, "மன்னிக்க வேண்டும். நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?" என்று வினவினாள் சுமுகி.

அதற்குள் எழுந்து, இடைவரை குனிந்து மேல்நாட்டு முறைப்படி வணக்கம் தெரிவித்தான் அவன். "ஹல்லோ சுமுகி" என்று தெரிந்தவன் போலப் பேசத் தொடங்கியவன், அவள் ஒரு நிமிர்வுடன் நேராக நோக்கவும், "பெயரைச் சொன்னேன் என்று கோபப்பட வேண்டாம், சுமுகி. நான் உனக்கு உறவினன். அத்தான். அக்கா கணவன் மாதிரி முறை," என்று விவரம் தெரிவித்தான்.

கணத்தில் அக்கா சுபாங்கியின் நினைவு மனத்திரையில் பளிச்சிட, வந்தவனை ஆவலாகப் பார்த்துவிட்டுத் திரும்பினாள் சுமுகி. அவன் சுபாங்கியுடைய கணவர் அல்ல. அவர் முகம் நீண்ட சதுரமாக இருக்கும். ஐந்து ஆண்டுகளில் முகம் மாறுவதில்லை. அதுவும் இந்த வயதில்.

ஆனால் இவனும் அக்கா கணவர் மாதிரி என்றுதானே சொன்னான். வேறு எந்த அக்கா கணவன்?

"புரியவில்லையே" என்றாள் சுருக்கமாக.

"நா...ன்" என்றவனின் பார்வை ஒரு புறமாய்த் தொங்கிய பாமினியின் படத்தில் பதிந்தது. "நான் பாமினிக்குச் சொந்தக்காரன்" என்று விளக்கினான்.



பாமினியுடைய அக்கா கணவன் போலும். ஆனால் உடன் பிறந்தவர் பெற்றோர் யாரும் இல்லாத அனாதை என்று கணவன் சொன்னதும் நினைவு வர, சற்றுத் தயங்கி யோசித்தாள். ஒன்று விட்ட தமக்கையாக இருக்குமோ?

"உட்காருங்கள்" என்று உபசரித்தவள், பணியாளிடம் திரும்பி, "சமையல்கார அம்மாவிடம் போய், காபி ஜூஸ் ஏதாவது வாங்கி வா," என்று கந்தனை அனுப்பினாள்.

மீண்டும் புதியவனிடம் திரும்பி, "அவர் வீட்டில் இல்லையே. உங்கள் வரவை போன் பண்ணி, அவருக்குத் தெரிவிக்கிறேன். உங்கள் பெயரை என்னவென்று சொல்லட்டும்?" என்று மூலையில் முக்கோண வடிவ தாங்கியில் வைக்கப் பட்டிருந்த டெலிபோன் கருவியை நோக்கி நடந்தபடி கேட்டாள்.

"ஒரு நிமிஷம்" என்று அவளை நிறுத்தினான் வந்தவன். "நித்யவாசனை உடனே அழைத்தாக வேண்டிய அவசியம் இல்லை. சொல்லப் போனால் நான் பார்க்க வந்தது உன்னைத் தான்," என்று பற்கள் அத்தனையையும் காட்டிப் புன்னகை செய்தான்.

பதிலுக்குச் சிரிக்கத் தோன்றவில்லை அவளுக்கு. பாமினியுடைய உறவினன், அவளை எதற்காகப் பார்க்க வேண்டும்? அதுவும் அவளை மட்டும்.

அவள் கேள்வியாய்ப் புருவம் சுருக்கவும், "பாமினி அழகி. கெட்டிக்காரி. அவளது இடத்தை இட்டு நிரப்புவது எளிதல்ல. இட்டு நிரப்பியது மட்டுமின்றி, அவளை விடச் சிறப்பாக இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். அதனால்தான் பார்த்துப் பாராட்டிப் போக வந்தேன்." என்றான் அவன்.

அந்தக் குரலில் பாராட்டுதல் இல்லை என்பது நிச்சயம். பாமினியுடைய உறவினனிடம் அதை எதிர்பார்ப்பதும் தப்பு. ஆனால், அவனது குரல் அவளைக் குழப்பியது.

எங்கள் வீட்டுப் பெண்ணுக்கு நீ எந்த விதத்தில் நிகர் என்று ஏளனம், வெறுப்பு, கோபம் எதை வேண்டுமானாலும் ஒத்துக் கொள்ளலாம். ஆனால் அவன் குரலில் தொனித்த திருப்தி?

உள் மனம் எச்சரிக்க, உள்ளூரக் கவனத்துடன், அவனுக்கு எதிரே இருந்த சோஃபாவில் சென்று அமர்ந்து "உங்கள் பெயர் என்ன என்று நீங்கள் இன்னமும் சொல்லவில்லையே?" என்று வினவினாள். "பாமினிக்கு உறவினர் யாரும் இருப்பதாக, நித்யன் சொன்னதில்லை. பெற்றவர்கள், உடன் பிறந்தவர் யாரும் கிடையாது என்றும் சொல்லியிருக்கிறார்."

ஒப்புதலாக அவன் தலையாட்டியதே இவளுக்கு வியப்புதான். உறவென்று சொல்லிவிட்டு இல்லை என்பதற்கும் தலையாட்டுகிறானே.

அதைப் பற்றிக் கேட்பதற்குள் கந்தன் காபியோடு வந்து சேர்ந்தான்.

"காபியை இங்கே தந்துவிட்டு, நீ போப்பா," என்று உரிமையுள்ளவன் போலப் பணியாளை அனுப்பிவிட்டு அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி, "ஆமாம். யாருமற்ற அனாதை என்று நித்யவாசனிடம் கூறும்படி, நான்தான் அவளுக்குச் சொல்லிக் கொடுத்தேன்" என்று தொடர்ந்து அவன் இயல்பான குரலில், சாதாரணமாகக் கூறவும், சுமுகிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவள் திகைத்து நோக்கவும், "அப்படிச் சொன்னால்தானே, நித்யவாசனின் மனம் பாகாய் உருகிப் போகும்," என்று முன் போலவே, சாதாரணமாகவே சொல்லி, மேலும் சுமுகியைத் திகைக்க வைத்துவிட்டு, அவன் காபியை ரசித்து அருந்தலானான்.

ஒரு மிடறு அருந்தியவன், சுமுகியின் முகத்தைப் பார்த்துவிட்டு மீண்டும் தலையை ஆட்டினான். "ஆம் சுமுகி. அப்படி உருகினால்தானே, என்ன, ஏது என்று துருவித் துழாவாமல், அவளை உடனே மணந்து கொள்ளுவான்? இப்போது விஷயம் புரிகிறதா?" என்று நோகாமல் மேலும் ஒரு குண்டைப் போட்டுவிட்டு மறுபடியும் காபியைக் குடிக்கத் தொடங்கினான்.



சுமுகியின் வாழ்வு திருப்பங்களே இல்லாத நேர்ப் பாதை இல்லை. அவள், பிரச்சினைகளை அனுபவிக்காதவளும் அல்ல. ஆனால், அந்தப் பிரச்சினைகளோ, திருப்பங்களோ இந்த மாதிரி ஒரு நிலைக்கு அவளைத் தயார்ப்படுத்தி இருக்க வில்லை.

இவன் பேச்சை நம்புவது என்றால் நித்யவாசன், உயிராகக் கருதி மணந்த பாமினி இன்னமும் உயிராகவே அவன் கருதிக் கொண்டிருக்கும் பாமினி, அவனை ஏமாற்றி மணந்தவள் என்று ஆகிறது. அது எப்படி முடியும்?

அவள் சந்தேகமாகப் பார்க்கவும், காபியை முடித்துக் கப்பைக் கண்ணாடி மேஜை மீது வைத்துவிட்டு, "கண்ணைப் பறிக்கும் பச்சைநிற ஃப்ளாரசன்ட் சம்கி உடையில் ஓர் அழகான பெண்... உன்னை மாதிரி நிஜ அழகு இல்லாவிட்டாலும், நன்றாக அழகு படுத்திக் கொள்ளத் தெரிந்த பெண், மாலை மாலையாகக் கண்ணீர் விட்டால் குறுக்குக் கேள்வி கேட்கவா தோன்றும்? ம்?" என்று சிரித்தான் வந்தவன்.

சுமுகி இப்போது முழுமையாக அதிர்ந்து போனாள்.

முதல் சந்திப்பில், பாமினி அணிந்திருந்த உடை வரை, சரியாகச் சொல்லுகிறான் என்றால், இவன் நடந்த கதை முழுவதுமே அறிந்தவனாகத்தானே இருக்க வேண்டும்?

எந்த விதத்தில் அறிந்தான்?

அவன் சொல்லுவது போலத் திட்டமிட்டு நடந்திருந்தால், நித்யவாசனின் வாழ்வில் ஒரு பெரும் மோசடி நடந்திருக்கிறது என்றல்லவா, ஆகிறது?

அல்லது வேறு ஏதாவது வழியில் விவரத்தை அறிந்து கொண்டு அதை வைத்து இப்போது மோசடி பண்ண, இவன் முயற்சிக்கிறானா?

ஆனால் அப்படிப் புதிதாக மோசம் பண்ண நினைக்கிறவன் பழைய மோசடியைத் திட்டமிட்டு நடத்தியவனே, தான்தான் என்று எப்படிச் சொல்லுவான்?

சுமுகி குழம்பிப் போனாள்.

"என்ன? இப்போது நம்பத் தோன்றுகிறதா?"

சுமுகி மறுப்பாய் தலையசைத்தபோதும், அந்த மறுப்பில் வேகம் இருக்கவில்லை. கூடவே அவனது இளிப்பு வேறு எரிச்சலூட்ட, "நீங்கள் யார்? அதை இன்னமும் சொல்ல வில்லையே" என்று சற்று அழுத்தமான குரலில் வினவினாள்.

அப்பாவியாகப் புருவங்களை உயர்த்தினான் அவன். "அதுதான் சென்னேனேம்மா. பாமினிக்குச் சொந்தக்காரன். உனக்கு அக்கா புருஷன் மா..திரி" என்று சொல்லி அவன் மீண்டும் சிரிக்கவும், சுமுகி ஆத்திரத்தோடு எழுந்தாள்.

இதில் என்ன பெரிய ஜோக்?

"என்ன உளறுகிறீர்கள்? ஒழுங்காகப் பதில் சொல்லுங்கள். அல்லது, வெளியே போங்கள்," என்று சீறினாள்.

"நான்ஒழுங்காகத்தான் சொன்னேன், சுமுகி. அது உனக்குப் புரியவில்லை என்றால் நான் என்ன செய்யட்டும்? நான் பாமினிக்கு, பாமினிக்கே சொந்தக்காரன். அதாவது பாமினி எனக்குச் சொந்தமானவள். அதேசமயம் பாமினி உனக்கு யார்? சக்களத்தி. அக்கா முறை. அதனால் உனக்கு நான் அக்கா புருஷன் மாதிரி. உறவு முறை இப்போது புரிகிறதா?"

பிரமித்து நின்றாள் சுமுகி.




வாழ்வில் நேர்ந்த பல்வேறு அனுபவங்கள். அதனால் கிடைத்திருந்த நெஞ்சுத்திடம். தைரியம். அறிவுக் கூர்மை.



எல்லாம் கைவிட்டுவிட, அந்த அழையாமல் வந்த விருந்தாளியின் முன் பேந்த விழித்தபடி சுமுகி நின்றாள்.

அவன் விரும்பிய பாதிப்பைக் கண்டுவிட்ட அவன், திருப்தியோடு தலையை ஆட்டிக் கொண்டான். பிறகு, "இனி உட்கார்ந்து விவகாரம் பேசுவோமா?" என்று கால் மேல் காலைப் போட்டுக் கொண்டு வசதியாக அமர்ந்தான்.

தன்னைச் சமாளித்துக் கொள்வது, சுமுகிக்கு இன்னமும் கடினமாகத்தான் இருந்தது. ஆனால் வந்திருந்தவனின் அமர்த்தலான போக்கு உசுப்பிவிட, ஒருவாறு சுதாரித்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

அவனைக் கூர்ந்து நோக்கிவிட்டு, "விவகாரம் பேசுவதா? எப்படி? நீங்கள் இன்னும் உங்கள் பெயரைக் கூடச் சொல்லவில்லை. நீங்கள் சொல்வது உண்மை என்பதற்கான அத்தாட்சி ஏதும் தரவில்லை. அதெல்லாம் இல்லாமல், வாய்ச் சவடால் அடிப்பவரோடு நான் எதையுமே பேசுவதற்கில்லை. எழுந்து வெளியே போங்கள்" என்றாள், முடிந்தவரை அழுத்தமான குரலில்.

அவனும் அவளை ஒருதரம் கூர்ந்து பார்த்தான். "நான் பொய் சொல்லுவதாக நினைக்கிறாய், இல்லையா? அப்படியில்லை. உனக்கு வேண்டிய அத்தாட்சிகளை இதோ தருகிறேன். வந்து... வீட்டினர் பேசிக் கொண்டு இருக்கும் இடத்துக்கு பேச்சு காதில் விழுகிற தூரம் வரை, இந்த வீட்டு வேலையாட்கள் வர மாட்டார்கள் என்று முன்பு பாமினி சொல்லியிருக்கிறாள். இப்போதும், அப்படித்தானே?" என்று கேட்டு மீண்டும் அவளைக் கலங்க அடித்தான் அவன்.

என்ன மாதிரி மனிதர்கள் இவர்கள்? புருஷன் என்கிறான். அந்தப் பெண்ணை அடுத்தவன் மனைவியாக வாழ விட்டுவிட்டு, அவளோடு பேச்சு வார்த்தையும் வைத்துக் கொண்டிருக்கிறான். அவளானால், அந்த அடுத்தவனுடைய காதல் மனைவியாக அதுவும் ஆருயிர்க் காதலியாக வாழ்ந்து

கொண்டு முன்னவனோடு இந்த வீட்டு நடப்புகள் குறித்து உரையாடியிருக்கிறாள்.

இல்லை. இவன் சொல்வது எதுவும் உண்மையாக இராது.

ஆனால் இந்த வீட்டு நடப்பு அதுதான்.

சுமுகி மௌனமாகத் தலையாட்டவும், அவன் அருகில் வைத்திருந்த கைப்பெட்டியை எடுத்து மடியில் வைத்து திறந்து அதிலிருந்த ஒரு கவரை எடுத்துக் கொண்டு மீண்டும் மூடி வைத்தான்.

கவரை அவளிடம் நீட்டி, "நித்யவாசனுடைய இரண்டாம் மனைவி கெட்டிக்காரி என்று கேள்வி. அதனால் அசட்டுத் தனமாகக் கிழித்துப் போட மாட்டாய் என்று நினைக்கிறேன். நெகட்டிவ் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. மூர்த்தி – சத்யபாமா திருமணம் என்று ஆல்பமும் இருக்கிறது. சத்யபாமாதான் பாமினி என்று சொல்ல வேண்டியது இல்லை" என்று சொன்னான்.

வீட்டில் இருந்த இன்னோர் ஆல்பத்தின் நினைவு வர, அவன் – அந்த மூர்த்தி கொடுத்த கவரை வாங்கவே, சுமுகிக்குக் கை கூசியது. அதுவும் இதுவும் எப்படி ஒத்துப் போகும்?

தயக்கத்துடன் கவரை வாங்கி, உள்ளிருந்ததை எடுத்துப் பார்த்தாள்.

அவள் நினைத்தது போல, அவை புகைப்படங்கள்தான். அவனும் பாமினியும் கழுத்தில் மாலையுடன் இருந்தார்கள். தாலி கட்டிக் கொண்டிருக்கும் போது எடுத்தது கூட ஒன்று இருந்தது. திருமணம் ஏதோ கோயிலில் எடுத்தது போலத் தோன்றியது.

இது எப்படி மெய்யாக இருக்க முடியும்? புகைப்படத்தில் இப்போது என்னென்னவோ திருட்டு வேலை செய்யலாம். எந்தக் கோயில் என்று தெரிந்தால் விசாரித்து... பின்னணியைக் கூர்ந்து பார்த்தாள் சுமுகி.



"எந்த ஊர்க் கோயில் என்று கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டாம்" என்று அந்தப் படங்களை வாங்கி உள்ளே வைத்துக் கொண்டான் அவன். "ஆனால் கோயிலில் உள்ள புரோகிதர் பணியாட்கள் எல்லோரும் இருக்கிறார்கள். படத்தைக் காட்டினால் எங்கேயும் சாட்சி சொல்லுவார்கள். ஆல்பத்தில் திருமணத் தேதி இருக்கிறது."

இதையெல்லாம் இவன் எதற்காகத் தன்னிடம் வந்து சொல்லிக் கொண்டு இருக்கிறான்?

காரியமாகத்தான் என்றான் மூர்த்தி. "உன்னால் எனக்குச் சில காரியங்கள் ஆக வேண்டும். அந்தக் காரியங்களை நீ செய்து கொடுத்தால், மூச்சு விடாமல் வந்ததே தெரியாமல் போய் விடுவேன். இல்லாவிட்டால் இதெல்லாம் வெளியே வந்துவிடும்."

அவனது முதல் பேச்சில் இருந்தே. மூளையை மரத்துப் போகச் செய்து கொண்டிருந்த திகைப்பை ஒதுக்கி, அவசரமாக யோசித்து, முயன்று கேலியாகச் சிரித்தாள் சுமுகி. "மனோ தத்துவத்தில் டாக்டர் பட்டம் வாங்கியிருப்பீர்கள் போலத் தெரிகிறதே. என்ன அருமையான மிரட்டல்," என்று ஏளனமாக உதட்டைப் பிதுக்கினாள்.

"ஏன்? என் திட்டத்தில் என்ன குறை?" என்று முகம் கறுக்க வினவினான் அவன்.

"பின் என்ன, மிஸ்டர் மூர்த்தி? உங்கள் வாய் வார்த்தைப் படியே பார்த்தாலும் பாமினி என் சக்களத்தி. அவள் மோசமானவள் என்று நித்யனுக்குத் தெரிந்தால் எனக்கு என்ன குறைந்து விடும்? லாபம்தானே?"

"இப்போது யோசிக்காமல் பேசுகிறாய். இதெல்லாம் முதலில் நித்யவாசன் கைக்கு வரப் போவதில்லை. எல்லாப் பத்திரிகைகளுக்கும் போகும். உன் புருஷனைத் தொழில் அதிபர்கள் சங்கத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்

போகிறார்களாமே. இந்தச் சமயத்தில் இந்தச் செய்தி பத்திரிகையில் வந்தால், அவனது பெயரும் புகழும் என்ன ஆகும் என்று எண்ணிப்பார்.''

"ரொம்பவே கேவலமாகத்தான் இருக்கும். ஆனால் இதில் நித்யனுடைய தப்பு என்ன? முன் திருமணத்தை மறைத்துத் தப்பு செய்தவள், பாமினிதானே? அவளைத்தானே, தவறாகப் பேசுவார்கள்?''

"ஆனால், நான் பத்திரிகைகளுக்கு கொடுக்கிற செய்தி, அப்படியிராதே. மணமான பெண்ணிடம் தொழில் அதிபரின் மோகம். பொய்க் குற்றம் சாட்டிக் கணவனைச் சிறைக்கு அனுப்பிவிட்டு முதல் மணத்தையே மறைத்து மனைவியாக்கி உல்லாசம், என்று அல்லவா செய்தி அனுப்புவேன். இன்னும் பாமினியின் மரணத்தையே கேள்விக் குறியாக்கி, அவள் அலுத்துப் போனதால் நேர்ந்ததோ என்றால், அப்புறம் உன் நித்யனை எத்தனை பேர் நம்புவார்கள், சொல்லு.''

அவனது பேச்சில் ஒன்று உறைக்க, "சிறையா? அப்படியானால் நீ சிறையில் இருந்த குற்றவாளியா? இதுபோல என்னென்ன குற்றங்கள் செய்தாயோ, பாவி...'' என்றாள் சுமுகி.

"என்ன குற்றம் என்றால் என்ன? அது, நித்யவாசனின் பணத்தைக் கொண்டு சுமத்தப்பட்ட பொய்க் குற்றம் என்று முதலிலேயே பரப்பி விடுவேனே. பாதிக்கப்பட்ட கணவனின் குமுறல் என்று தலைப்புடன் செய்தி அனுப்புவேன். கொஞ்ச நாட்களாக இந்த மாதிரி செய்திகள் இல்லாமல் பத்திரிகைகள் காய்ந்து கிடக்கின்றன. இதைக் கொடுத்தால் செய்தி உண்மை என்பதற்குச் சான்றும் இருப்பதால் நிறையப் பணமும் தந்து சலாம் போட்டு வாங்கிப் பிரசுரிப்பார்கள்.''

"மாட்டார்கள். நித்யனுக்குப் பத்திரிகைகாரர்களிடம் செல்வாக்கு உண்டு. இதைப் பிரசுரம் செய்ய வேண்டாம் என்று சொன்னால் செய்யவே மாட்டார்கள்'' என்று ஒரு வழி கண்டுபிடித்தாள் சுமுகி.



ஒரு கணம் திகைத்துவிட்டு, "எல்லாப் பத்திரிகைகளையும், அப்படிக் கட்டுப்படுத்த முடியாது. யாரையும் மதிக்காமல் கொள்கைக்காகப் பத்திரிகை நடத்தும் சிலரைப் போலவே பரபரப்புச் செய்திகளுக்காகவே பத்திரிகை நடத்துகிறவர்களும் உண்டு. அவர்களை வைத்து என் வேலையை முடித்துக் கொள்வேன். தெரிந்து கொள்'' என்றான் மூர்த்தி எக்களிப்புடன்.

அவன் சொல்வது மெய்தானே என்று சுமுகி மனம் சோரும்போதே அவன் மேலும் பேசினான். "ஆனால், நித்யவாசன் அப்படிப் பத்திரிகையாளர்களிடம் எதையும் சொல்ல வழியில்லை என்பதும் எனக்கு நிச்சயம். ஏனென்றால் பத்திரிகையாளர்களைக் கூப்பிட்டு இப்படிச் செய்தி வந்தால் போடாதே என்று சொல்வதற்கு முதலில் அவனுக்கு விஷயம் தெரிந்தாக வேண்டுமே,'' என்றான் அவன்.

"தெரிவதற்கென்ன? நானே அவரிடம் சொல்லப் போகிறேனே,'' என்றாள் அவள் பதிலுக்கு.

"தாராளமாகச் சொல்லு. அடுத்த நிமிஷமே, நடுத்தெருவில் நிற்பாய். நித்யவாசனுக்குப் பாமினியிடம் அபார மயக்கம். என்னதான் இயற்கைத் தேவைக்காக உன்னுடன் குடும்பம் நடத்தினாலும், பாமினியிடம் உள்ள பிரியம் இன்னமும் குறையவில்லை என்பதற்கு ஹாலில் இவ்வளவு பெரியதாகக் கிடக்கும் இந்தப் படமும், மாலை மரியாதைகளுமே சான்று. பாமினி இருந்தபோது, அவளைப் பற்றி வம்பு பேசியதாக அவள் பொய்ப் புகார் செய்ததில், பல ஆண்டுகளாகப் பணி புரிந்தவர் என்றும் பாராமல் நித்யவாசன் ஒருவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியதாக என்னிடம் சொல்லியிருக்கிறாள். உன் ஆசையைக் கெடுப்பானேன்? நீயும் உன் முயற்சி செய்து பார். உன் அதிருஷ்டம் எப்படி இருக்கிறதோ, பார்ப்போம்.'' என்றவாறு மூர்த்தி எழுந்தான்.

இது சுமுகியும் அறிந்த விஷயமே. "அவன் திமிரைப் பார், சுகி. பாமினி உயிருடன் இருந்தபோது, அவளைப் பற்றிச்

சொன்னதே எனக்குக் கோபம். அவள் இறந்து விட்டாள். தன் நிலை பற்றி எடுத்துச் சொல்லக் கூட வழியில்லாத பரிதாப நிலை. அப்போது மீண்டும் அவளைப் பற்றிக் கோள் சொல்லிக் கொண்டு என்னிடம் வந்து நிற்கிறான். என் மினி இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவளைப் பற்றிக் குறை சொன்னால் கேட்டுக் கொண்டு நான் சும்மா இருப்பேனா? கால் செருப்பைக் கையில் தூக்கியே விட்டேன். அம்மா வந்து தடுத்து விட்டார்கள். இல்லாவிட்டால், அன்று சேது தொலைந்திருப்பான். கண்ணில் பட்டால் கொன்று விடுவேன் என்று மிரட்டி விரட்டினேன்." என்று பாமினி மூலம் அறிந்ததாக மூர்த்தி தெரிவித்ததற்குப் பிறகாக நடந்த விவரத்தையும் சேர்த்து நித்யவாசனே முன்பு பாமினியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த சமயத்தில், அவளிடம் சொல்லியிருந்தான்.

அந்த சேதுவின் நிலைமைதான், அவளுக்கும் நேருமா?

நேராது என்று சர்வ நிச்சயமாகத் தலை நிமிர்ந்து சொல்லும் திடம், அவளுக்கு வர மறுத்தது. சேதுவைப் போல அவளை நடத்த மாட்டான்தான். ஆனால் அவளது பேச்சையும், பொறுமையாகக் காது கொடுத்துக் கேட்பானா என்பது சந்தேகமே. எப்படியும், கேட்கச் செய்துதான் ஆக வேண்டும். உண்மை உணர்வதோடு நித்யன் நிதானமாகச் செயல்படவும் வேண்டும்.

செய்வானா?

அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தி, "அந்தக் கதை உனக்கும் தெரியும் போலிருக்கிறதே," என்று கர்வத்துடன் சிரித்தான்.

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்... இறந்தாலும் ஆயிரம் பொன்" என்று சொல்லுவார்கள். பாமாவும் அப்படித்தான். இப்போது நீயும் அதேபோல இந்த வீட்டில் இருந்தாலும் வெளியேற்றப்பட்டாலும் எனக்குப் பயன்படுவாய்



என்றே தோன்றுகிறது" என்றுரைத்து அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

சட்டெனத் திரும்பிக் கொண்டு, "முதலில் வெளியே போங்கள்," என்றாள் சுமுகி.

"அப்படியானால், என் கதையைப் பத்திரிகைகளுக்கு கொடுத்து விடட்டுமா?"

பாவி, உனக்கு என்ன வேண்டும்? இப்படி வந்து தொல்லை செய்கிறாயே என்று கத்த சுமுகிக்கு விருப்பம்தான். ஆனால் அதையே அவனுக்குப் பயந்து பேரம் பேசுவதாக அந்த மூர்த்தி எண்ணிவிடக் கூடாதே.

உதடுகளை அழுந்த மூடியபடி, அவள் அசையாமல் நிற்கவும், மூர்த்தியின் முகம் கடுத்தது. "இப்படிப் பேசாமல் நின்றால் நானும் பேசாமல் போய் விடுவேன் என்று நினைக்காதே. எனக்குப் பணம் வேண்டும். ஒன்று நீ எனக்குச் செய்து கொடுக்கும் வேலையின் மூலம் அந்தப் பணம் வரவேண்டும். அல்லது பத்திரிகைகள் மூலமாய் வரவேண்டும். எது என்பதை, உன் முடிவில் விட்டு விடுகிறேன். ஆனால் என் வருமானம் வந்தே ஆக வேண்டும்" என்று அதட்டிப் பேசியவன், அப்போதும் அவள் பதில் சொல்லாமல் அப்படியே நிற்கவும், "சரிசரி... இந்த விஷயம் எல்லாம், உனக்கும் அதிர்ச்சியாகத்தானே இருக்கும்? கொஞ்சம் ஆற அமர யோசித்து, அப்புறமாகப் பதில் சொல்லு. இரண்டு நாள் கழித்து நானே தொடர்பு கொள்ளுகிறேன்" என்று முடித்து விட்டு, அங்கிருந்து வெளியேறிச் சென்று விட்டான்.

சோர்வுடன், சோஃபாவில் தொப்பென உட்கார்ந்தாள் சுமுகி.

என்னவோ, தாங்க முடியாத பாரத்தைச் சுமந்து கொண்டிருப்பது போலத் தலை கனத்தது.

இப்போது அவள் என்ன செய்வது நல்லது?

நித்யவாசனோடு, மனம் ஒன்றுபட்டு வாழ்வது குறித்து, இப்போதுதான் கனவு காணத் தொடங்கியிருந்தாள். அதற்குள் இப்படியொரு குழப்பமா?

கணவனோடு ஒன்றி வாழ்வது இன்றியமையாத விஷயம். அது தடைப்பட்டு விடாமல் இருப்பதற்காக என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

மானத்தை விட்டுக் கொடுப்பது தவிர.

சரியாகச் சொல்லப் போனால், இதில் சுமுகியின் தப்பென்று எதுவுமே கிடையாது. நித்யவாசன் உண்மை உணரும்போது, அது அவளுக்குத்தான் நன்மையாக முடியக் கூடும்.

அவன் பெண்ணினத்தையே, வெறுத்து ஒதுக்காவிட்டால்.

ஆனால் முதலில் அவள் சொல்வதை, அவன் காது கொடுத்துக் கேட்க வேண்டுமே. பூனைக்கு மணியை எப்படிக் கட்டுவது?




'இன்று ஒருவன் வந்திருந்தான். அவன் பாமினியைப் பற்றி, இப்படிச் சொன்னான். சான்று வைத்திருப்பதாகவும் சொல்லுகிறான்' என்று மடமடவென்று ஒப்பித்து விடலாமா என்று ஒரு தரம் சுமுகி யோசித்துப் பார்த்தாள்.

ஆனால் சேதுவைச் செய்த மாதிரி, மூர்த்தியைப் போய் அடிக்கிறேன் என்று நித்யவாசன் கிளம்பி விட்டால்?

ஏற்கனவே அந்த மூர்த்தி பரப்பப் போவதாகச் சொன்ன வதந்தியை அது உண்மையாகத் தோன்றச் செய்து விடாதா? அவனோ பொய் சொல்ல அஞ்சாத பாவி.



இதை வேறு விதமாகத்தான் கையாள வேண்டும் என்று உள்ளூர, சுமுகி அதே சிந்தனையாக இருந்தது. அவளது இயல்பை அறியாமலேயே பாதித்தது போலும்.

எப்போதும் போலச் சாதாரணமாகப் பேசிக் கொண்டு இருப்பதாகத்தான் அவள் நினைத்தாள்.

ஆனால் மாலையில் வீடு திரும்பி, சிற்றுண்டிக்கு உட்கார்ந்த சற்று நேரத்திலேயே, "என்ன விஷயம், சுகி?" என்று நித்யவாசன் கேட்டு விட்டான்.

தட்ப வெப்பம் இதமாக இருக்கும் நாட்களில், மாலையில் தோட்டத்தில் அமர்ந்து காபி டிஃபனை முடித்துக் கொள்வது அவர்கள் வழக்கம். இருப்பதைக் கொறித்துக் கொண்டு ஊர்க்கதையெல்லாம் பேசுவார்கள். அன்றைய நடப்புகளைப் பரிமாறிக் கொள்வார்கள்.

மூர்த்தியின் வரவு பற்றி, இப்போது சொல்வது சரியல்ல என்று எண்ணியது, சுமுகியின் இயல்பான பேச்சுக்குத் தடை கட்டியது. அதை மறைக்க, அவள் முயன்று பேசத்தான் செய்தாள்.

ஆனாலும், அதைக் கண்டுகொண்டு கணவன் கேட்டது, வியப்பாகவும், விசித்திரமான வகையில் ஆறுதலாகவும் கூட அவளுக்கு இருந்தது.

அந்த அளவுக்கு அவளை உணர்ந்து கொண்டிருக்கிறானே. மனதில் பிரியமும், அக்கறையும் இல்லாமல் அது முடியுமா? இன்னும் கொஞ்சகால அவகாசம் கிடைத்திருந்தால், யாராலும் பிரிக்க முடியாதபடி, இருவரும் மனம் ஒன்றியிருப்பார்களே.

அதற்குள், இந்த பாவி வந்து நிற்கிறானே.

பேரலையாக, உள்ளே எழுந்த ஏக்கத்தை மறைத்துக் கொண்டு, "ஒன்றும் இல்லை. அம்மாவை, அக்காவை நினைத்துக் கொண்டேன். கூடவே இருந்துவிட்டு மாதக் கணக்கில் ஆண்டுக்கணக்கில் பாராமலே இருப்பதை எண்ணிப்

பார்த்தேனா, கொஞ்சம், வருத்தமாகி விட்டது'' என்று சமாளித்தாள் அவள்.

"அதற்கென்ன? அத்தையை நீ எப்போது வேண்டுமானாலும் போய்ப் பார்க்கலாமே. உன் அக்கா விஷயம்... அது நீதான் முடிவு செய்ய வேண்டும். போக வேண்டும் என்றால், வேண்டிய ஏற்பாடு நான் செய்கிறேன்'' என்று அவளுக்கு இதமாகப் பேசினான் நித்யன்.

"ஆனால்... நான் என்ன சின்ன பாப்பாவா, சும்மாச் சும்மா அம்மா அம்மா என்று போய் நிற்பதற்கு? போன மாதம்தானே போய் வந்தேன்? கொஞ்ச நாள் ஆகட்டும்'' என்று அவள் முறுவலிக்க, "பாப்பா மாதிரி ஏங்க மட்டும் செய்யலாமாக்கும்?'' என்று கேலியாகக் கேட்டான் அவன்.

"நான் ஒன்றும்...'' என்று தொடங்கிவிட்டு, லேசாக அசடு வழிந்தாள் சுமுகி. இப்போதுதான் ஏக்கம் என்று சொல்லிவிட்டு உடனே மறுப்பது எப்படி?

உடனேயே சமாளித்து "நான் என்ன அம்மா அம்மா என்று குழந்தை மாதிரி அழவா செய்தேன்?'' என்று அவள் கேட்க, "அடுத்தபடி அதுதானே. கைக்குட்டையைக் கூடத் தயாராக எடுத்து வைத்து விட்டேன்'' என்று அவன் முறுவலிக்க, அவளுக்கும் மெய்யாகவே சிரிப்பு வந்து விட்டது.

இருவரும் சிரித்துக் கொண்டிருந்தபோது, "காபி அனுப்பவான்னு சமையல் அம்மா கேட்கிறாங்க'' என்று கேட்டபடி, கந்தன் வந்தான்.

கொண்டுவரச் சொல்லிப் பணித்ததும், உடனே போகாமல், "அய்யா நீங்களும் சிகரெட்டு குடிங்கய்யா...'' என்று கேட்டுக் கொண்டான்.

"என்னது? சிகரெட்டா?'' என்று வியப்புடன் வினவினான் நித்யவாசன்.



"என்ன சுகி, என் நுரையீரல்கள் ஆரோக்கியமாய் இருந்து, நான் அதிக காலம் வாழ்வதில் இவனுக்கு என்ன நஷ்டம்?'' என்று அவன் வேடிக்கையாகக் கேட்க, அவளும் வியப்பும் வேடிக்கையுமாகவே கந்தனை நோக்கினாள்.

"என்ன கந்தா, அன்றைக்கு விளம்பரப் படத்தைப் படித்துக் காட்டச் சொன்ன போதுகூட, சிகரெட் குடிப்பது உடல் நலத்துக்குக் கேடு என்று வாசித்துக் காட்டினாயே, இப்போது ஏன் அய்யாவை சிகரெட் குடிக்கச் சொல்லுகிறாய்?'' என்று விசாரித்தாள். "அய்யா உடம்பு சுகமாக இருக்க வேண்டாமா?''

"அய்ய, அதுக்கில்லைம்மா.'' என்று எட்டுக் கோணலாய் உடம்பை வளைத்தான் கந்தன். "சிகரெட்டு குடிச்சா, இன்னைக்கு வந்தாரே, அந்த அய்யா மாதிரி தங்கத்துல பளபளன்னு சிகரெட்டுப் பெட்டி வச்சுக்கிடலாமில்ல? அதான் சொன்னேன்'' விஷயத்தைப் போட்டு உடைத்துவிட்டு, காபி எடுத்துவர, வீட்டை நோக்கிச் சென்றான்.

சொல்வது அறியாமல் சற்று நேரம் சுமுகி திகைத்துப் போனாள்.

மூர்த்தி வந்ததை நித்யவாசனிடம் அவள் மறைப்பதாக இல்லை என்றாலும், இப்படித் திடுதிப்பென்று சொல்வதாகவும் இல்லை. பாமினி பற்றிப் பேசிவிட்டு தகுந்த சமயம் பார்த்துச் சொல்ல நினைத்தால், இந்த அசட்டுக் கந்தன் இப்படிப் பண்ணிவிட்டானே.

இப்போது முன்பே ஏன் சொல்லவில்லை என்ற கேள்வி வேறு வருமே. மறந்து போயிற்று என்றால், ஒத்துக்கொள்ள முடியாது.

சுமுகி தடுமாறிக் கொண்டு இருந்த ஒரு சிறு மௌனத்தின் பின், "நம் தோட்டத்து மனோரஞ்சிதம் மொட்டு வைத்திருக்கிறதா, சுகி? வாசனை மூக்கைத் துளைக்கிறதே!'' என்றான் நித்யவாசன்.

அவளாகச் சொல்லாததை, அவன் துளைத்துக் கேட்க வில்லையாம். நீயாகச் சொல்லு என்று சொல்லாமல சொல்லுகிறான்.

“அவன் வந்து மிஸ்டர் மூர்த்தி...” என்று யோசித்தபடியே தொடங்கியவள், அந்த மூர்த்தி சொன்னதையே ஓரளவு பின்பற்றி, “அவர் எனக்கு அக்கா வழியில் உறவு. அது நமக்கும் தேவை இல்லாத உறவு. அதனால்தான் சொல்ல வேண்டாம் என்று விட்டுவிட்டேன்” என்று கூறி முடித்தாள்.

“அதெப்படி, வேண்டாத உறவாகும்? அக்காவுக்கு ஏங்குகிறவள்...”

‘அக்காவா? அந்த அக்காவும், இவள் இந்தப் பாமினியும் ஒன்றா?’

சட்டெனக் குறுக்கிட்டு, “அந்த அக்காவே இல்லாதபோது... அதாவது உறவு வேண்டாம் என்று என் அக்காவே விட்டுவிட்ட பிறகு சுற்றி வளைத்து இது எதற்கு? வேண்டாம்தான்” என்று கறார்க் குரலில் முடித்து விட்டாள் சுமுகி.

தோளைக் குலுக்கி, “உன் உறவு. உன் விருப்பம்” என்றான் நித்யவாசன்.

இப்படி இலகுவாக மூர்த்தியை அவர்களது வாழ்விலிருந்தும் விரட்ட முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

ஆனால் இந்தப் பேச்சு அப்போதையத் தேவையை எடுத்துக் காட்ட கந்தன் வந்து கொடுத்து விட்டுப் போன காஃபியை நித்யன் ரசித்துக் குடித்து முடிக்கும்போது, சுமுகி மெல்லத் தொடங்கினாள்.

“நித்தி, எனக்கு ஒரு சந்தேகம்.”

“என் மீதா? வேண்டாம்மா. சந்தேகம் தீராத வியாதி என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் என்னைப் பொறுத்த



வரையில், நான் மகா உத்தமன். மனைவி தவிர மற்ற பெண்ணை நினைத்ததே இல்லை” என்று முறுவலித்தான் அவன்.

“அதை எழுதி நெற்றியில் ஒட்டிக் கொண்டால், அவ்வப் போது படித்துத் தெரிந்து கொள்ளுவேன்” என்று உடனே பதில் சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் சுமுகி. இது வேடிக்கை பேசுகிற நேரமா?

“அப்படியானால், எழுதப் படிக்கக்கூட, உனக்குத் தெரியுமா? என்ன ஆச்சரியம்.”

“பெரிய ஆச்சரியம். எழுதப் படிக்கத் தெரியாதவளைத்தான் உங்கள் அம்மா, அவர்களது கட்டுரையை எழுத நியமித்தார் களாக்கும்?”

“அம்மாவுக்கு, உன்னிடம் பிரியம், பார்த்ததுமே, மருமகளாக்கத் தீர்மானித்து விட்டார்கள். அதனால் வேலை கொடுக்கிற சாக்கில், உன்னை உள்ளே கொண்டு வந்து விட்டார்கள்.”

“அம்மாடி. என்ன கதை.”

“சில உண்மைகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் ஒத்துக் கொள்ளும்படிதானே இருக்கிறது? அதிருக்கட்டும். உனக்கு என்ன சந்தேகம்? எதைப்பற்றி?” என்று நித்யன் விஷயத்துக்கு வந்தான்.

மீண்டும் தயக்கம் வந்துவிட்டது சுமுகிக்கு.

இப்போது இலகுவாகத்தான் பேசுகிறான். ஆனால் விஷயத்தைக் கேட்ட பிறகு, சட்டென உணர்ச்சி வசப்பட்டு, கையை ஓங்கிவிட்டால்? பாமினி விஷயம் அவளைப் பற்றி இதுவரை சுமுகி எதிர்மறையாகப் பேசியதே இல்லை. பேசினால், என்ன ஆகும் என்று சொல்வதற்கும் இல்லை.

வேலையாட்களுக்குக் காது கேட்காத தூரம்தான். ஆனால் கண்ணால் பார்க்க முடியுமே. யாராவது பார்க்க நேர்ந்து விட்டால்?

ஆனால் எழுந்து உள்ளே போவதானால், எல்லாம் புதிதாகத் தொடங்க வேண்டும். அத்தோடு இலகுவாகப் பேசிக் கொண்டிருக்கும் இந்த மனநிலை மாறி, அலுவலைப் பற்றிய பேச்சில் மூழ்கிவிடக் கூடாது.

அப்புறம் கம்ப்யூட்டரை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான் என்றால், பிறகு இந்தப் பேச்சுக்கு இடமே இராது.

அதைவிட, வேலையாட்கள் விஷயத்தை அலட்சியம் செய்து இங்கேயே பேசுவது நல்லது. அதுவும் அவனாகவே கேட்பதால், அந்தப் பேச்சைத் தொடர்வதும் எளிது.

எனவே, "இதைச் சந்தேகம் என்று சொல்ல முடியாது. ஐயம் தெளிதல் என்பார்களே, அதுபோல என்று சொல்லலாம்" என்ற பீடிகையுடன், சுமுகி கேட்டாள், "பாமினியைப் பற்றித் தப்பாக ஒரு பேச்சு யாராவது சொன்னால்..." என்று விஷயத்துக்கு வந்தாள்.

ஆனால், அவள் வாக்கியத்தை முடிக்கக் கூட இல்லை. அதற்குள் குறுக்கிட்டு "கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவேன்" என்றான் நித்யவாசன். அழுத்தமான குரலில், தெள்ளத் தெளிவாக.




நித்யவாசனின் மனதில் பாமினிக்கு மிக உயர்ந்த இடம் உண்டு என்பது. சுமுகிக்குத் தெரியும். இந்த மாதிரிப் பதிலும் அவள் ஓரளவு எதிர்பார்த்ததுதான். எனவே முகம் மாறாமலேயே, "சொல்வது யாராக இருந்தாலுமா?" என்று லேசாக விழி விரித்துக் கேட்டாள் சுமுகி.



ஏதோ நினைவில், நித்யனின் முகம் இறுகிக் கடுத்தது. "உனக்குத்தான் தெரியுமே சுகி, சேதுவை எப்படி நடத்தினேன் என்று. அதேதான் இப்போதும். ஐம்பது, அறுபது லட்ச ரூபாய் மதிப்புள்ள நகைகள். இப்போது அதைவிடக் கூட மதிப்பு ஏறியிருக்கக்கூடும். ஆனால் அவள் உயிரை வாங்கியவை என்று அப்படியே பையோடு சுருட்டி, மூலையில் வீசியவைதான். இன்றளவும் அவைகளை நான் தொட்டுப் பார்த்தது இல்லை. அவளது உயிருக்கு முன், அந்த நகைகள் எனக்குத் தூசு என்று புரியாமல், அவை என் சொத்து என்பதற்காக, அந்த அற்ப நகைகளைக் காப்பதற்காக உயிரையே விட்டவள் பாமினி. அவளைக் குறை சொன்னால், என்னால் எப்படித் தாங்க முடியும்? அதைக் கூடப் பொறுத்துப் போனால், அப்புறம் நான் என்ன மனிதன்?" என்று நீளமாக விளக்கம் சொன்னான் அவன்.

நீயும், பாமினியைப் பற்றிப் பேசக்கூடாது என்று எச்சரிக்கிறானா? அப்படித்தான் சுமுகிக்குத் தோன்றியது.

சும்மா என்றால், பேசாமலே விட்டு விடலாம்தான். தன்னிடம் உள்ள அன்பு, இன்னமும் வளர்ந்து அவளை அவளுக்காகவே அவன் விரும்பும்வரை காத்திருக்கவும், அவள் தயாராகத்தான் இருந்தாள்.

ஆனால் இப்போது எதற்கும் அவகாசம் இல்லாமல், தலைக்கு மேல் கத்தியை வைத்துக் கொண்டு அந்தப் பாவி மூர்த்தி மிரட்டி கொண்டிருக்கிறானே.

இரண்டு நாட்களில் அதாவது அன்றைக்கு மறு நாள் வந்து நிற்பானே.

அவனைச் சமாளிக்க வேண்டுமானால் இப்போது இவனுடன் அவள் பேசித்தான் ஆக வேண்டும். இருவருமாக யோசித்து, அவன் கையில் இருக்கும் ஆயுதத்தைச் செயல் இழக்கச் செய்வது பற்றித் திட்டமிட்டுச் செயல் படவேண்டும்.

"ம்ம்ம்..." என்று இமைகளைத் தாழ்த்தி, யோசிப்பது போலப் பாவனை செய்து, "அத்தை? அத்தைக்கு பாமினியிடம்

அவ்வளவாக... ஓர் இது கிடையாதுதானே? அது எதனால் இருக்கக் கூடும்?'' என்று கேட்டாள். கொஞ்சம் விளையாட்டு பாவனையாகவே.

"ஏய்... சுகி... சுகி... அம்மா விஷயம் அடியோடு வேறு. அது உரிமைப் பிரச்சினை, சுகிம்மா. அன்றுவரை நான் அவர்களுடைய மகன் மட்டும்தான். இன்னொருத்தி, அவன் மீது உரிமை கொண்டாடுவதைத் தாங்க முடியவில்லை. அதனால்தான் பாமினியிடம் அவர்களுக்கு அவ்வளவாக... ஓர் இது இல்லை'' என்று அவளைப் போலவே சொல்லிக் காட்டினான் நித்யவாசன்.

சுமுகிக்கு, இது அநியாயமாகப்பட்டது. பாமினியின் குணம் தெரிந்த பிறகும், மகனுக்காக, அவளைச் சகித்தவரை, இப்படிச் சொல்வதா என்று எண்ணியவள், "அத்தை போன்ற உலகாயதம் அறிந்த அறிவாளி கூடவா அப்படி நடப்பார்கள்?'' என்று வேண்டும் என்றே விளக்கம் கேட்டாள்.

அவளுக்குப் பதில் சொல்லும் போதேனும், அவனும் யோசிக்க மாட்டானா?

ஆனால், "இந்த உரிமைப் போராட்டம் இல்லாத இடமே கிடையாதும்மா'' என்றான் அவன். "உலகத்தின் இந்த முனையிலிருந்து அந்த முனை வரை, 'அங்கிங்கெனாதபடி, எங்கும் நீக்கமற நிறைந்த'து, கடவுளுக்கு அடுத்தபடி, இதுதான், மாமியார், மருமகளின் உரிமைப் போராட்டம்'' என்று ஒரு தோள் குலுக்கலோடு முடித்தான் அவன்.

"அதெப்படிச் சொல்வீர்கள்? அத்தை என்னை ஏற்றிருக்கிறார்களே?'' என்று மடக்கினாள் சுமுகி.

"காரணம், நீ அவர்கள் தேர்வு. பார்த்து, பழகி, பிடித்துப் போய் மருமகளாக்கிக் கொள்ளலாம் என்று அம்மாவே எண்ணிய பெண். அவர்களை எனக்கு அன்னியமாக்கி விடமாட்டாய் என்ற நம்பிக்கை இருந்திருக்கும், கண்டதும் காதல் கொண்டு அவசரப்பட்டுப் பாமினியை மணந்து அழைத்து



வந்தது, அம்மாவிடம் எவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விட்டது, தெரியுமா? எவ்வளவு முயன்றும் அம்மாவுக்குத் தன்னைப் பிடிக்கவில்லையே என்று பாமினி என்னிடம் பலமுறை அழுதிருக்கிறாள். கொஞ்ச காலம் போனால் அம்மா புரிந்து கொண்டு விடுவார்கள் என்று எனக்குத் தெரியும். அதனால், அந்தக் 'காலம்'தான் கிடைக்காமல் போய்விட்டது. என்ன செய்வது?'' என்று மறுபடியும் தோளைக் குலுக்கினான் நித்யவாசன்.

தமயந்தி அம்மாளுக்குப் பாமினி 'பசு'வாகத் தெரிய வில்லை. 'மாடா' கப்பட்டிருக்கிறாள் என்று நினைத்தது சுமுகிக்கு நினைவு வந்தது. ஆனால் பெரியவரின் அபிப்பிராயம்தான் சரியாக இருந்திருக்கிறது.

மருமகளாயிற்றே என்று அணியும், துணியுமாக அதிலும் உயர் ரகமாக வாங்கிக் கொண்டுத்தவரைப் பற்றிக் குறை வேறு கூறியிருக்கிறாளே.

பாமினி ஒரு நாளுமே பசுவாக இருந்தது இல்லை. நித்யவாசனின் பார்வைக்கு மட்டுமே அவள் பசு. இயல்பில் மற்றதுதான்.

முரண்பாடு, முரண்பாடு என்று சுமுகி குழம்பியதும் சரியாகவே இருந்திருக்கிறது. 'பசு'வாக, அவள் வேஷம்தான் போட்டிருக்கிறாள். வேஷம் போடாத, அல்லது வேஷத்தை மறந்திருந்த நேரங்களில் உண்மைக் குணம் வெளிப் பட்டிருக்கிறது.

ஆனால், இந்த உண்மையை நித்யவாசன் உணரும்படி செய்வது எப்படி?

நல்ல வேளையாகப் பழங்கதையின் நினைவால் நித்யன் ஒரேயடியாகச் சோகத்தில் மூழ்கிப் போய்விடவில்லை. அப்படி மூழ்கியிருந்தால் இந்தப் பேச்சைத் தொடர முடியாமலே போயிருக்கும்.

மாறாக, "நல்லவேளையாக அம்மாவுக்கு உன்னிடம் அந்த மாதிரி வெறுப்புத் தோன்ற வாய்ப்பில்லாது போயிற்று. என்னைப் போலவே அம்மாவும் உன் சொல்படித்தானே ஆடுகிறார்கள்." என்று முறுவலித்தான் நித்யவாசன்.

கிடைத்தது வாய்ப்பு என்று, "என் சொல்படி ஆடுகிற ஆட்களா, நீங்கள்? அதையும் பரிசோதித்து விடுவோமே. சொல்லுங்கள். இப்போது பாமினியைப் பற்றி நான் ஏதாவது சொன்னால்?" கடைக் கண்ணால் நோக்கிப் புன்னகையோடு கேட்டாள், சுமுகி.

ஒரு கணம் உறைந்து போனாற்போல உட்கார்ந்திருந்தான் நித்யவாசன்.

பிறகு மெல்ல எழுந்து அவளுக்குக் கைகொடுத்து எழுப்பி விட்டான். "நாம் உள்ளே போய்ப் பேசுவோமா?" என்று அவளது கையைப் பற்றியபடியே நடந்தான்.

கூடச் சேர்ந்து நடந்தபோது சுமுகிக்கு உள்ளூர ஒரு சந்தேகம். சேதுவுக்கு ஊரறிய நடந்த மண்டகப்படி. மனைவி என்பதால் அடுத்தவர் கண்ணில் படாமல் அவளுக்கு அறைக்குள் நடக்கப் போகிறதா?

கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் அவனோடு இணைந்து நடந்தாள் அவள்.

அவர்களது அறைக்குள் சென்றதும் அவளது அடுத்த கையையும் சேர்த்துப் பற்றி "வேண்டாம்மா" என்றான் கம்மிய குரலில்.

அவளை அருகிழுத்துத் தோளோடு லேசாக அணைத்து, "கடவுள் எனக்கு இரண்டு ரத்தினங்களைக் கொடுத்திருக்கிறார். ஒன்று கிடைப்பதே, உலகில் அபூர்வம். ஒன்றைத் தந்து பறித்தவர், இரக்கப்பட்டு இன்னொன்னறையும் தந்திருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். இது கண்ணாடிக் கல் ஆனால் என்னால் தாங்க முடியாதும்மா" என்று வருத்தமாகக் கூறினான்.



அவனது அணைப்பை விட்டு விலகாமலே, "இந்த ரத்தினம், கண்ணாடிக்கல் ஆகிவிடக் கூடும் என்று எதிர் பார்க்கிறீர்களா?" என்று கேட்டாள் சுமுகி.

"அப்படியல்ல. ஆனால் என் கண்மணிக்குக் கூடச் சக்களத்தி என்ற வெறுப்பு வந்து விட்டதே என்று துடித்துப் போவேன்" என்றான் அவன்.

ஆக, அவளாகச் சொல்லி, அவனுக்குப் புரிய வைப்பதற்கில்லை.

விழி உயர்த்திக் கணவன் முகத்தைப் பார்த்து, "அப்படியல்ல, நித்தி. பாமினியைப் பற்றி வேறு மாதிரி ஒருவர் சொல்லக் கேட்டேன்..." என்று இன்னொரு விதமாகத் தொடர முயன்றாள்.

மறுபடியும் குறுக்கிட்டு, "காது கொடுத்துக் கேளாதே. தைரியம் இருந்தால் என் கணவன் முன்னிலையில் இதைச் சொல்லு என்று சொல்லிவிட்டு ஒதுங்கிப் போய்விடு. அதற்குப் பிறகு நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றான் அவன் இறுகிய குரலில்.

அவன் எப்படிப் பார்க்கக் கூடும் என்பதை அவன் குரல் பறை சாற்ற, "அந்த ஆளை, மறுபடி சந்தித்தால் சொல்லுகிறேன்" என்பதோடு முடித்து விட்டாள் அவள்.

ஒரு 'பிளாக்மெயிலு'க்குப் பணிவது தப்புதான். ஆனால் இவனது நன்மைக்காகவே அந்த மூர்த்தியை அவளேதான் சமாளித்தாக வேண்டும். மற்றபடி, பத்தி பத்தியாகப் பத்திரிகைகளில் சந்தி சிரிக்கும்படி ஆகி விடும்.

நித்யவாசனும், அதற்கு மேல் விவரம் கேட்டானில்லை. அவனை உறுத்துகிற விஷயம். ஆனால், பெரிதாக உறுத்தாமலேயே போய்விட்டது. இனி அதை நினைக்கத் தேவையில்லை. விட்டுவிடலாம். நிம்மதி.

ஆனால் சுமுகியால் அப்படி இருக்க இயலவில்லை.

இருப்பதற்கு மூர்த்தி விடவில்லை.

நித்யவாசன் இல்லாத நேரம் பார்த்து வந்து மீண்டும் சுமுகியைச் சந்தித்தான்.

"என்ன? உன் கணவனிடம், உண்மையைச் சொன்னாயா? இல்லை போலத் தெரிகிறதே. அல்லது உன்னையும் நம்பவில்லையா? படத்தில் மாலை அப்படியே தொங்குகிறது. ஆனால் உன் உடம்பிலும், காயம் வீக்கம் எதையும் காணோம். அப்படியானால் சொல்லவே இல்லையா?" என்று கழுகுப் பார்வையுடன் விசாரித்தான் அவன்.

"அதைப் பற்றி உனக்கு என்ன வந்தது? நீ வந்த விஷயத்தைச் சொல்லு" என்று முடிந்த அளவு கறார்க் குரலில் சுமுகி கூறினாள்.

"என்னது? 'நீ'யா? மரியாதை தேய்ந்து விட்டதா? போகட்டும் மரியாதையா, பணம் தரப் போகிறது? ஆனால் இங்கே விஷயம் புரியவில்லையே. நீ சொல்லி, அவன் நம்ப முடியாது என்று முடித்துவிட்டானா? அல்லது சொன்னால் நம்மை விரட்டி விடுவானோ என்று பயந்து அவனிடம் சொல்லாமல் நீயாகவே எனக்குப் பணம் தர முன் வந்திருக்கிறாயா? என்ன நடந்தது?" என்று தன் காரியத்திலேயே கண்ணாக விசாரித்தான் மூர்த்தி.

"என்ன நடந்தாலும், அதைப் பற்றி உனக்கு ஒன்றும் இல்லை. நீ எதற்காக வந்திருக்கிறாய்? அதை மட்டும் சொல்லு, போதும்."

"ம்ம்ம்... உன்னிடம் செருப்படி வாங்க எனக்கு இஷ்ட மில்லை. அல்லது லட்டு மாதிரி இருக்கும் உனக்காக என்றுகூட, சொல்லுவேன். இல்லை, இல்லை. பார்வையால் எரித்து விடாதே. நான்தான் அப்படிச் சொல்லுவதாக இல்லையே. முக்கியமாக உனக்கும் சேர்த்துச் சோறு போடப் பணத்துக்கு நான் எங்கே போவேன்?"



"அதையெல்லாம் யோசிக்க வேண்டிய அவசியமே இல்லை. அதனால், கண்ட பேச்சுப் பேசி வெறுப்பேற்றாமல், நீ எதையெண்ணி முதலில் இங்கே வந்தாயோ, அதை மட்டும் சொல்லு, அது போதும்" என்று எரிச்சலை மறையாது காட்டினாள், சுமுகி.

உதட்டைப் பிதுக்கினான் மூர்த்தி. "அதுவும் சரிதான். அநாவசியப் பேச்சில், காலத்தைக் கடத்துவானேன்? ஆனால் தொண்டை காய்கிறது. கொஞ்சம் காபி கொண்டு வரச் சொன்னாயானால், குடித்துவிட்டுப் பேசத் தெம்பாயிருக்கும்."

எரிச்சலை அடக்கிக் கொண்டு காபிக்குச் சொன்னாள் சுமுகி.

காபியை வைத்துவிட்டு வேலையாள் அகன்றதும், "சொல்வதைக் கொஞ்சம் சீக்கிரம் சொல்லி முடி. இந்தப் பகுதி நல மன்றத்திலிருந்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கூட வந்தாலும், வரலாம்" என்றாள் சுமுகி.

"மெய்யாகவா? உன் புருஷன் வெளியே போவதைப் பார்த்துவிட்டுத்தானே, நான் வந்தேன். அதற்குள்ளாகவா, திரும்பி வருவான்? ஒருவேளை அவனிடம் நான் பயப்படுவேன் என்று நினைத்தாயா? அவன் பிடிதான் என்னிடம் மாட்டிக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விட்டாய் போல..." என்று மூர்த்தி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "வாருங்கள், உள்ளே வந்து உட்காருங்கள்" என்று கூட வந்தவர்களை உபசரித்த வண்ணம், நித்யவாசன் உள்ளே வந்தான்.

வந்தவர்கள் அந்தப் பகுதியில் வசிக்கும் முக்கிய மானவர்கள். எல்லோருமாகச் சேர்ந்து ஏதோ தரும காரியத்துக்காகப் பெரிய அளவில் பணம் வசூல் பண்ணிக்கொண்டு இருந்தார்கள். தன்னால் வர முடியாவிட்டால், ஒரு தொகைக்குக் காசோலை கொடுக்கும்படி, நித்யன் ஏற்கனவே சுமுகியிடம் சொல்லியிருந்தான். ஆனால் இப்போது அவனும் மற்றவர்களோடு கூடவே வந்திருந்தான்.

அறிமுகம் ஆனவர்கள் என்பதால் சுமுகியும் எழுந்து வந்தவர்களை வரவேற்றாள்.

"வாருங்கள் வாருங்கள் வீட்டில் அழைத்து வரவில்லையா? என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று உபசரிக்கும்போதே இந்த மூர்த்தியை என்ன விதமாய் அறிமுகம் செய்வது என்று சுமுகிக்கு யோசனை ஓடியது.

இவன் சொன்ன மாதிரியா? இந்தப் பெரிய மனிதர்கள் நடுவில் என்ன அசம்பாவிதம்.

வந்தவர்கள் பார்வையோடு கணவனும் மூர்த்தியைக் கவனிக்கவே, "இவர் நான் நேற்றே சொன்னேனே..." என்று இழுத்தாள்.

"ஓ– ஏதோ அக்கா வழி உறவு என்றாயில்லையா?" என்று கேட்டவன், கூட வந்தவர்களிடம் திரும்பி, "சார் சுமுகிக்குத் தூரத்து உறவு. பெயர் என்னவோ சொன்னாயே.. பெயரை மறந்து விட்டேன்..." என்று யோசனையாக மூர்த்தியைப் பார்த்தான்.




நித்யவாசனின் பார்வையில் வித்தியாசமாக எதுவும் இல்லை. ஆனால் அவசரமாக எழுந்து, "மூர்த்தி சார்" என்று தானே பதில் சொன்னான் மூர்த்தி.

மூர்த்தியின் கையில் இருந்த தங்க சிகரெட் பெட்டியின் மீது, நித்யனின் பார்வை விழ, "ஓ" என்று மீண்டும் ஒரு தரம் அவனைப் பார்த்தான் நித்யவாசன்.

"உட்கார்ந்திருங்கள், மிஸ்டர் மூர்த்தி, சுமுகிக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது" என்று கூட வந்தவர்கள் பக்கம்



திரும்பியவன், மறுபடி மூர்த்தியின் புறம் திரும்பிப் பார்க்கவே இல்லை.

'செக் புக்'கை எடுத்து வா. வந்தவர்களுக்குத் தாக சாந்திக்கு ஏற்பாடு செய்... என்று சுமுகிக்கும் ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே இருந்தான்.

மற்றவர்கள் கிளம்பிய பிறகும் சுமுகிக்குக் கூட்டல், கழித்தல் வேலை இருந்தது.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு, "அதிக வேலை இருந்தால் நான் இப்போது கிளம்புகிறேன், சுமுகி, பிறகு.." என்று மூர்த்தி இழுத்தபோதும், அவனை ஏறிட்டும் பாராமல், கையில் இருந்த கணக்கில் கவனமாக, "செய்யுங்கள் மூர்த்தி. இன்னும் சில நாட்களுக்கு இந்தக் கணக்கு வேலையே எங்கள் இருவருக்கும் சரியாக இருக்கும். அதற்கு அப்புறம் பார்ப்போம்" என்று முடித்துவிட்டு, "அப்புறம் இதைச் செலவுக் கணக்கில் எழுது, சுமுகி..." என்று அவளுக்கு வேலை கொடுக்கத் தொடங்கி விட்டான்.

மூர்த்திக்கு உபசாரம் செய்து கொண்டிருக்க, சுமுகிக்கு மட்டும் ஆசையா என்ன? அவளும் கணக்குப் புத்தகத்தை விட்டுப் பார்வையை உயர்த்தினாள் இல்லை.

சில கணங்கள் நின்று பார்த்துவிட்டு, வேறு வழியின்றி முகம் கறுக்க மூர்த்தி வெளியே சென்றான்.

அவன் வெளியே போன பிறகு, "இவன்தான் தங்க சிகரெட்டுப் பெட்டிக்காரனா? நீ வேண்டாத உறவு என்றது, சரிதான், சுமுகி. ஆளைப் பார்த்தாலே கொஞ்சம் நம்பிக்கைக்கு உரியவனாகத் தெரியவில்லை. மீண்டும் வந்தால் முகம் கொடுத்துப் பேசாதே" என்று எச்சரித்தான் நித்யவாசன்.

இவனைச் சரியாகத்தான் கணித்திருக்கிறான். ஆனால் பாமினியைப் புரிந்து கொள்ளவில்லையே. அதற்கு என்ன விலை கொடுக்க நேருமோ என்று எண்ணியபடியே சுமுகி

சுமுகி நினைத்தது போலவே விரைவிலேயே மூர்த்தி அவளுடன் தொடர்பு கொண்டான்.

இம்முறை, அவன் குரலில் அதிகாரம் இருந்தது. "உன் பின்னே ஓடி வருகிற நிலைமை, எனக்கு இல்லை. குண்டு இருப்பது என் கையில். அதை வெடிக்க விட்டால் என்ன ஆகும் என்று யோசித்து என்னிடம் மரியாதையாக நடந்து கொள்" என்று மிரட்டிப் பேசினான்.

"உனக்கு என்ன தேவை என்று அன்றே கேட்டேன். நீதான் ஒழுங்காகப் பதில் சொல்லாமல், ஏதேதோ உளறிக் கொண்டு நேரம் கடத்தினாய். இப்போது வேண்டுமானாலும் சொல்லு..." என்றவளை இடைமறித்து, "அதை டெலிபோனில் சொல்ல முடியாது. உன் வீட்டுக்கு வரவும் எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் நான் நல்ல சாப்பாடு சாப்பிட்டு நாளாகிறது. ஐந்து நட்சத்திர ஹோட்டல் சாப்பாடு" என்று ஹோட்டலின் பெயரைச் சொல்லி, அங்கே வரச் சொன்னான் மூர்த்தி.

"கவனி, எனக்குப் பசி தாங்காது. அதனால் பன்னிரெண்டு மணிக்குச் சரியாக வந்துவிடு. ஹோட்டல் பில்லுக்குப் பணம் எடுத்துவர மறக்காதே" என்றதோடு ரிசீவரை வைத்து விட்டான்.

கையிலிருந்த டெலிபோன் கருவியை வெறித்துப் பார்த்து விட்டுக் கீழே வைத்தாள் சுமுகி.

பிரச்சினையை தான் கையாளும் முறை தவறோ என்று உள்ளூர ஒரு கலக்கம் உண்டாயிற்று.

ஆனால் வேறு என்ன செய்ய முடியும்?

நித்யவாசனிடம் அதிரடியாகப் பிடிவாதமாக விஷயத்தைச் சொல்லலாம். ஆனால் அதன் விளைவு எதிர்மறையாகப் போய் விட்டால்?

எதிர்மறையாகத்தான் போகும் என்கிற நிச்சயமும் இப்போது பெருமளவு ஏற்பட்டு விட்டதால், இதை அவளேதான் சமாளித்தாக வேண்டும் என்பதோடு, தன்னால் சமாளிக்க முடியும்



என்ற முடிவுக்கும் சுமுகி வந்து விட்டாள். நித்யவாசன் அவளை மணந்திராவிட்டால், எத்தனை மூர்த்திகளை எதிர்கொள்ள நேர்ந்திருக்குமோ? இந்த ஒரு மூர்த்தியைச் சமாளிக்க முடியாவிட்டால் எப்படி?

எவ்வளவு முடியுமோ? அவ்வளவு குறைவாகக் கொடுத்து, மூர்த்தி வைத்திருக்கும் ஆதாரங்களைக் கைப்பற்ற வேண்டும்.

அவை கைக்கு வந்து அழிக்கப்பட்டுவிட்டால் இந்தப் பிரச்சினை இத்தோடு தீர்ந்து விடும்.

முன்பு எண்ணியது போலக் காலப் போக்கில் நல்ல குடும்ப வாழ்வும் நிச்சயம்.

அதற்காக இதுபோல விலை கொடுப்பதில், தப்பு இல்லை என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள் சுமுகி.

'தாஜி'ல் போய் உட்கார்ந்ததுமே, "இதோ பார், இந்த மாதிரி மிரட்டுவது சட்டப்படி குற்றம். ஆனால் நீ மனைவியை இழந்திருக்கிறாய், அதற்காக ஏதேனும் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். அளவோடு கேட்டால் தர முயற்சிக்கிறேன். பேராசைப் பட்டால், ஒன்றும் கிடைக்காது. சொல்லு எவ்வளவு பணம் எதிர்பார்க்கிறாய்?" என்று முடிந்த வரை நிதானமாகக் காட்டிக் கொண்டாள் சுமுகி.

அவன் மெனு கார்டில், உணவு வகைகளைத் தேர்ந்தெடுப்பதில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருந்தான்.

அடுத்த சில நாட்களில் பல ஐந்து நட்சத்திர ஹோட்டல் களுக்கு அவளை இழுத்தடித்து, ஆயிரக்கணக்கில் தின்றே தீர்த்தான்.

வெறும் பழச்சாறை முன்னே வைத்துக் கொண்டு அதையும் குடிக்கப் பிடிக்காமல், குமட்டக்குமட்ட, சுமுகி அவன் உண்பதைப் பார்த்துக் கொண்டிருக்க நேர்ந்தது.

ஒருதரம், அதே ஹோட்டலுக்கு தொழில் முறை லஞ்சுக்காக நித்யவாசனும் வந்திருக்க, மயிரிழையில் அவன் பார்வைக்குத் தப்பினாள்.

சந்திக்க நேர்ந்திருந்தால், அவளே தேவையற்ற உறவு என்று ஒதுக்கிய ஒருவனோடு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் உட்கார்ந்து உண்பதை என்னவென்று விளக்க முடியும்?

கடைசியாகப் பொறுமை இழந்து, "இதுதான் கடைசித் தடவை. இனி உன்னோடு நான் எங்கேயும் வரமாட்டேன். வீட்டுச் செலவுப் பணத்தை எடுத்து, கணக்கு வழக்கில்லாமல் நான் உனக்குத் தீனி போட்டுக் கொண்டு இருக்க முடியாது" என்று சுமுகி கறார்க் குரலில் கூறவும், எரிச்சலுற்று, "நல்ல சாப்பாடு, நாலு நாள் நன்றாகச் சாப்பிடலாம் என்று பார்த்தால் என்னமோ, பஞ்சப் பிசுநாரி போல, இதற்கே இவ்வளவு கணக்குப் பார்க்கிறாயே" என்றான் மூர்த்தி.

"இது என் கணவர் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணம், அதை இப்படி வீணாக்க முடியாது."

"பெரிய கணவன், என் பெண்டாட்டியை வைத்துக் கொண்டிருந்தானே... அதற்குத் தண்டனை என்று வைத்துக் கொள்."

நீதானே, அனுப்பி வைத்தாய் என்ற கேள்வி, சுமுகிக்கு தோன்றத்தான் செய்தது. ஆனால், அதைச் சொல்லி வாதம் பண்ண வாய் கூசியது. அத்தோடு இந்த அசிங்கத்தை எல்லாம் பேசி என்ன லாபம்? எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்த விவகாரத்தை முடித்துக் கை கழுவுவதுதான் நிம்மதி.

"தீர விசாரிக்காமல், பாமினியை மணம் செய்ததற்கான அபராதம் என்றுதான் உனக்குப் பணம் தர முன் வந்தேன். ஓசிச் சாப்பாட்டுக்காக, நீ இழுத்தடிப்பதானால், நான் போகிறேன். என்ன வேண்டுமோ, நீ நித்யனிடமே கேட்டு வாங்கிக் கொள்" என்று அழுத்தம் திருத்தமாக சுமுகி கூறி முடிக்கவும், மூர்த்தி யோசித்தான்.



இந்தச் சாப்பாட்டு ருசிக்காகப் பெரிய விஷயத்தை விட்டுவிடக் கூடாது. பொதுவாகப் பிரச்சினைகளைப் பெண்கள் மூலம் தீர்த்துக் கொள்வது நல்லது. குறைந்த பட்சமாகக் கை நீட்ட மாட்டார்கள். நீட்டினாலும், வலி குறைவாக இருக்கும். எளிதில் மிரண்டும் போவார்கள்.

"சரி, உன்னிஷ்டம். எனக்கு நீ பணம் ஒன்றும் தர வேண்டாம். ஆனால்..."

"ஆனால்?"

"உன் குடும்பத்தில் பழைய வைர நகைகள் ஒரு செட் இருக்கின்றன. அவை வேண்டும்" என்றான் மூர்த்தி.

கணவன் சொன்ன மதிப்பு நினைவு வர, சுமுகியின் விழிகள் விரிந்தன. அறுபது லட்சத்துக்கும் அதிகமான மதிப்புள்ள நகைகள். "என்ன பேராசை" என்றாள் அவள் திகைப்புடன்.

"பேராசையோ, பேய்த்தனமான ஆசையோ? அந்த நகைகளுக்காகத்தான் பாமாவை உன் புருஷனிடம் அனுப்பி வைத்தேன். ஒரு லாட் அடித்துவிட்டால் அப்புறம் நல்லபடியாக வாழலாம் என்று நினைத்தேன். ஆனால் இடைவழியில் எல்லாம் தாறுமாறாகி விட்டது. அவளுக்கு அதிக ஆசை வந்து விட்டது. என்னையும் பழைய குற்றம் ஒன்றில் பிடித்து விட்டார்கள். ஒரு மாதம் முன்புதான் வெளியே வந்தேன். இது கைக்கு வருமுன் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று ரொம்ப ஒழுங்காக இருக்கிறேன். நகையை எடுத்துத் தந்தாயானால், மூச்சுக் காட்டாமல் ஓடி விடுவேன். அதாவது உனக்கு வேண்டிய ஆதாரங்களைத் தந்து விட்டு."

"செய்ததெல்லாம் இழி செயல், இதற்கு இவ்வளவு பணமா?"

"உனக்கும், இது லாபம்தானே? எப்படியும் சக்களத்தி நினைவுக்கு நடக்கும் மரியாதைகள், உனக்கு மகிழ்ச்சியாகவா இருக்கும்? கூடவே நித்யவாசனின் மூடத்தனமும், அம்பலம் ஆகாது. மூடத்தனம் மட்டுமல்ல. பத்திரிகைகளுக்கு நான்

கொடுக்க இருக்கும் கதைப்படி கொடுமையான வில்லத்தனமும் கூட இதிலிருந்து தப்பிப்பதற்கு இந்த ஒரு செட் நகைகள் பெரிய விலையா?"

எப்படியும் நித்யவாசனிடம் இருந்து அவளது அறுபது லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளைத் தூக்கி இந்தப் பாவியிடம் கொடுப்பது பற்றி சுமுகியால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை.

மறுப்பாகத் தலையசைத்தாள் அவள். "இதோ பார். இது என்னால் முடியாத காரியம். இந்த நாலு மாதங்களில் என் கணக்கில் கிட்டத்தட்ட ஐந்து லட்ச ரூபாய் இருக்கிறது. இதை வேண்டுமானால் என்னால் தர முடியும். மற்றபடி இந்த நகைகள் எங்கே இருக்கின்றன என்று கூட எனக்குத் தெரியாது. அதனால் அதிகத்துக்கு ஆசைப்படாமல் என்னிடம் இருக்கும் பணத்தை வாங்கிக் கொண்டு போய் விடு" என்றாள்.

"உன்னிடம் எவ்வளவு பணம் இருந்தாலும் கொடு. தாராளமாக வாங்கிக் கொள்ளுகிறேன். ஆனால் அத்தோடு போகிற கதை நடக்காது. என் படங்களுக்கும் அவைகளை நான் பயன்படுத்தப் போகும் விதத்துக்கும் விலை அந்த நகைகள் தான். அவை இருக்கும் இடம் கூடத் தெரியாது என்று மறுபடியும் பாடாதே. நித்யவாசன் உன் புருஷன். அவனை மயக்கி, அந்த நகைகளைக் கொண்டு வருவது உனக்கு ஒன்றும் முடியாத காரியம் அல்ல. இன்றைக்கே கொண்டு வந்தாக வேண்டும் என்று இல்லை. பத்தோ, பதினைந்தோ நாட்கள் எடுத்துக் கொள். அதற்காக இப்படியே நகட்டி விடலாம் என்று நினைக்காதே. இருபது நாட்கள் உனக்கு கெடு. அதற்குள்ளாக நகைகள் வந்து சேராவிட்டால் பத்திரிகைகளில் உன் புருஷன் சந்தி சிரிப்பது நிச்சயம்" என்று முடித்தான் மூர்த்தி.

வீடு வந்து யோசித்துப் பார்த்த சுமுகிக்கு மூர்த்தியின் ஆசை நிறைவேறக் கூடியதாகத் தோன்றவில்லை.



என்னதான் நித்யவாசன் ஆராய்ந்து பாராமல் பெண் கொண்டது சரியில்லை என்றாலும், அதற்கு இந்த அறுபது லட்சம் மிக அதிகப்படியான தண்டனை.

அறியாமல் தவறு செய்த நித்யனுக்கே இந்தத் தண்டனை என்றால் தெரிந்தே தப்பு செய்த மூர்த்திக்கு எவ்வளவு பெரிய தண்டனை கொடுக்க வேண்டும்? அவனுக்கு மட்டும் விள்ளாமல் விரியாமல் அறுபது லட்சத்தை அள்ளிக் கொடுப்பதா?

கூடாது என்று முடிவு செய்தாள் சுமுகி.

வேறு மாதிரிதான் அவனை ஒத்துக் கொள்ளச் செய்ய வேண்டும்.

ஆனால் இந்த நகைகளைக் கொடுத்தேனும், இந்தச் சிக்கலில் இருந்து விரைவில் விடுபட வேண்டும்என்று வேகம் கொண்டு அவள் துடிக்கும் அளவுக்கு அன்று ஒன்று நடந்தது.




அன்று மாலையில், நித்யவாசன் வெகு தாமதமாகவே வீடு திரும்பினான். கிட்டத்தட்ட இரவு தொடங்கிவிட்டது.

தாமதமாக வந்தவன், உடனேயே உடம்பு கழுவப் போய்விட்டான்.

வழக்கம்போல வந்து, மாலைப் பேச்சுக்கு உட்கார்ந்திருந் தால் சுமுகியாலும் சரியாகப் பேச முடிந்திராதுதான்.

அவள் மனம்தான் மூர்த்தியை எப்படிச் சமாளிப்பது என்பதிலேயே மூழ்கியிருந்ததே. அவனிடம் எப்படிப் பேசுவது

என்ன பேசுவது? அவள் தரும் பணத்தை வாங்கிக் கொள்வது எப்படி நல்லதாகும். மற்றபடி எப்படி ஒன்றுமில்லாமல் போய்விடக் கூடும் என்பதையெல்லாம் அவன் உணர்ந்து ஒத்துக் கொள்ளும் விதமாக எப்படி எடுத்துச் சொல்வது, என்று அவளுக்கு முழுக்க முழுக்க அதே யோசனைதான்.

இரவு உணவு முடிந்து, தோட்டத்தில் சற்று நேரம் நடக்கும் போதும், அதைப் பற்றிதான் யோசித்துக் கொண்டிருந்தாள்.

எப்படியும் அறுபது லட்சத்துக்கு மேலான பெறுமானம் உள்ள நகைகளுக்குக் குறி வைத்தவன், அவள் தரக்கூடிய ஐந்தாறு லட்சத்தை எப்படி ஒத்துக் கொள்வான் என்று அதே கவலை. எப்படியாவது ஒத்துக் கொள்ள வைத்தாக வேண்டும். அதற்கு எப்படியெப்படிப் பேசுவது?

ஒன்றுமே முடியாவிட்டால் கணவனிடம் சொல்லியே விடலாமா? ஆனால் பிரச்சினை பெரிதாகிக் கைமீறி விட்டால்?

சுமுகியின் மனம் இதே நினைவில் இருக்கும்போது வழக்கமான கலகலப்புடன் அவள் பேசுவாள் என்று எதிர்பார்க்க முடியாது.

அவளைப் போலவே நித்யவாசனும் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் போன்று, அவனிடமிருந்தும் பேச்சு சரளமாக வரவில்லை.

இடையில் ஒரு தரம், "கொஞ்சம் நாட்களாகப் பகலில் அடிக்கடி வெளியே போகிறாயோ சுகி?" என்று நித்யவாசன் வினவ, பதில் சொல்வதற்குள் சுமுகி திணறிப் போனாள்.

அடுத்த கேள்வியாக, எங்கே போனாய் என்று கேட்டால் என்ன சொல்வது?

"ஏன் கேட்கிறீர்கள்?" என்று தடுமாற்றத்தை மறைக்க முயன்றபடி, பதில் கேள்வி கேட்டாள்.

கீழ்க்கண்ணால் அவளைப் பார்த்துவிட்டு, "போன் செய்தபோது நீ வீட்டில் இல்லை என்றார்கள்" என்றான் அவன்.



"என்னிடம் யாரும் சொல்லவே இல்லையே, நான் திரும்பக் கூப்பிட்டுப் பேசியிருப்பேனே."

"நான்தான் சொல்ல வேண்டாம் என்று விட்டேன்."

சற்றுத் தயங்கிவிட்டு, "ஏதேனும் முக்கியமான விஷயமா?" என்று சுமுகி விசாரித்தாள்.

"முக்கியம் ஒன்றுமில்லை. உன்னுடன் சற்று நேரம் பேச வேண்டும் போல இருந்தது. அப்படியே ஏதாவது பெரிய ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வரலாம் என்று நினைத்தேன்..."

'ஐயோ'வென்று வந்தது அவளுக்கு.

வேலை நடுவிலும், அவளிடம் பேச ஆசைப் பட்டிருக்கிறான். ஸ்டார் ஹோட்டலில் அவனோடு உட்கார்ந்து கேலியும் கிண்டலுமாக ஆனந்தமாகப் பேசியபடியே சுவையாகச் சாப்பிட்டிருக்கலாம். அதற்குப் பதிலாக அந்தப் பாவி கொட்டிக் கொள்வதைப் பார்த்து மனம் வெறுத்து நிமிஷத்தை யுகமாகக் கழித்துக் கொண்டிருந்தாள்.

மீண்டும் ஒருதரம், அவன் பார்வை அவள் மீது படிந்தது. "வெளியே... எங்கே என்று சொல்லவில்லையே? யாராவது சினேகிதிகளோடு... 'ஷாப்பிங்'?"

அவனது காரணத்தை ஆவலாகப் பிடித்து, "ஆ...மாம். பழைய சினேகிதி ஒருத்தி வந்தாள். அவளோடு சுற்ற வேண்டியதாகிவிட்டது." என்று சமாளித்தாள் அவள்.

நல்லவேளையாக அந்த சினேகிதி யார், என்ன என்று நித்யவாசன் மேலே ஒன்றும் கேட்கவில்லை.

அவன் அப்படித் துருவிக் கேட்கிற பழக்கம் உள்ளவனும் இல்லை. இந்த அளவு கேட்டது கூட, அதிசயம்தான்.

முதலில் சில நாட்களுக்குப் பிறகு அவளை அப்படியே நம்புகிறவன். ஆனால் அந்தப் பாமினியை இவன் முதலில் இருந்தே அப்படி நம்பியதால் வந்த வினையல்லவா இது.

எப்படியோ, இனி இப்படி வெளியே போகக் கூடாது. இன்னொரு தரம், நித்யவாசன் தேடும்போது அவள் வீட்டில் இல்லாவிட்டால், நன்றாயிராது.

ஆனால் வெளியே போகாமல் மூர்த்தியை ஒத்துக் கொள்ள வைப்பது எப்படி?

உறங்கச் செல்லுமுன், நித்யன் இன்னொன்று சொன்னான்.

"நாம் இருவரும் வாழும் வாழ்க்கை இயற்கைக்குப் புறம்பானதாக உனக்குத் தோன்றவில்லையா, சுகி?" என்று அவன் கேட்டபோது சுமுகி அப்படியே திகைத்துப் போனாள்.

திடீரென்று இது என்ன கேள்வி?

அவள் கேள்வியாய் நோக்க, அவன் தொடர்ந்து விவரித்தான்.

"நாம் இருவரும் கணவன் மனைவி. ஒரே அறையில் வசிக்கிறோம். உறவு தேடும் வயதுதான். இருவருமே, எதையும் துறந்த ஞானிகளும் அல்ல. ஆனால் அவர்களைப் போலவே நாம் நடந்து கொள்வது விசித்திரமாக இல்லை?"

ஒற்றைப் புருவம் தூக்கி அவன் கேட்க, உள்ளூரப் பூ விரிந்தாற்போல சுமுகியுள் ஒரு சந்தோஷம்.

இப்படித்தான் வாழ வேண்டும் என்று நிபந்தனை விதித்து, அவளை மணந்து கொண்டவன் அவன். அதை அவள் மீறி விடுவாளோ என்று ஒரு சமயத்தில் ஆத்திரப்பட்டவனும் அவனேதான். சற்றே மாறி வருவது அவள் உணர்ந்தது. முழுதும் மாறுவான் என்பது அவளது நம்பிக்கை.

ஆனால் இப்போதைக்கு அவனிடம் இருந்து இப்படியொரு கேள்விதானே விசித்திரம்?

கண்ணில் சிரிப்புடன், "என்ன செய்வது? கண்ணைக் குருடாக்கும் மின்னலோ, அதைத் தொடர்ந்து அண்ட சராசரத்தையும் கிடுகிடுக்கச் செய்யும் இடியோ, வரவே மாட்டேன் என்கிறதே நான் நடு நடுங்கி வந்து உங்களோடு ஒட்டிக் கொள்வதற்கு" என்று இலகுவாகப் பேசிப் பச்சரிசிப் பல் தெரியச் சிரித்தாள் அவள்.



அவன் முகத்திலும் முறுவல் மலர்ந்தது. "வராததைக் காதைப் பிடித்து இழுத்து வரவா முடியும்? அதெல்லாம் இல்லாமலே, ஒட்டிக் கொள்ள வேண்டியதுதான்" என்று அவளைப் போலவே கூறியவன், அவனது பேச்சின் பொருள் உணர்ந்து, அவள் திகைத்து நோக்குமுன், அவளை அருகிழுத்து அணைத்தான்.

சற்று நேரம் என்ன நடக்கிறது என்றே புரியாத நிலை அவளுக்கு.

அவன் மெல்லத் தலை நிமிர்ந்த போது, இருவருக்குமே மூச்சு வாங்கியது.

கணவன் மார்பில் முகம் புதைத்து அவனது அணைப்பில் நிற்கையில், சுமுகியின் நெஞ்சு பந்தயக் குதிரையாக ஓடிற்று.

மனம் அதற்கு மேல், வேகமாக வேலை செய்தது.

இது, 'அவளாக'க் கருதி அணைக்கிற அணைப்பு அல்ல. அப்படியானால், சுமுகியை அவளுக்காகவே விரும்பத் தொடங்கி விட்டானா?

இப்போது நிர்மலான மனதுடன் இவனோடு இணைய முடியாமல் கழுத்தில் கத்தியை வைத்துக் கொண்டு அந்த மூர்த்தி வந்து நிற்கிறானே.

அவளுள் வேறு நினைவு வந்து தொல்லை செய்தது போலவே, நித்யவாசனிடமும் சிறு மாறுதல்.

மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தி, "அன்று உன்னைத் 'சோழா' ஹோட்டலில் பார்த்தேன். அந்த மூர்த்தியோடு" என்றான் குற்றம் சாட்டுவது போல.

பதில் சொல்ல வாயைத் திறந்த சுமுகி சட்டென மௌனமானாள். இவனிடம் என்னவென்று விளக்குவது?

உண்மையைச் சொல்லலாம். ஆனால் அவன் இளகி நின்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பாமினி மீது குற்றம் சுமத்துவது போல ஆகாதா?

முக்கியமாக நித்யனே அப்படி எண்ணிவிட்டால்?

கையில் எந்தவித அத்தாட்சியும் இல்லாமல் அதைப் பற்றி இவனிடம் பேசுவது தற்கொலைக்குச் சமம்.

அதைக் கொலைக்குச் சமம் என்றும் சொல்லலாம். வளர்ந்து வரும் அன்பை, அதன் மூலம் மலரக் கூடிய நல்ல எதிர்காலத்தைக் கொலை செய்வதாகி விடும்.

ஆனால் ஆல்பம், நெகட்டிவ் என்று அசைக்க முடியாத சாட்சியோடு அவனிடம் சொன்னால் தன்னிடமும் அன்பு இருக்கும்போது இவள் என்னதான் சொல்கிறாள் என்று கொஞ்சம் கேட்கத் தோன்றாதா?

எப்படியும் அதுவரை இவனிடம் எதைச் சொல்வதும் சரியல்ல.

தன் பதிலுக்காகக் கணவன் காத்திருப்பதை உணர்ந்து, "மூர்த்தியைத் தற்செயலாக..." என்று தொடங்கியவள், அவன் எந்த நேரத்தில் அவளோடு மூர்த்தியைப் பார்த்தானோ என்று தோன்றவும், "அந்தப் பக்கம் பார்த்தேன் நட்சத்திர ஹோட்டல் சாப்பாடு வேண்டும் என்று கேட்டதால், மறுக்க முடியாமல் கூட்டிப் போனேன்" என்று ஒரு மாதிரி உண்மையையே கூறி முடித்தாள்.

"ஓஹோ..." என்றான் அவன் ஒற்றைச் சொல்லாக.

சற்று முன் இருந்த உணர்ச்சி வேகம் அடியோடு மறைந்து விட, 'உச்சு'க் கொட்டி விட்டு அவனிடமிருந்து அகன்று சென்று மேஜையில் கிடந்த நூலகப் புத்தகத்தை எடுத்தாள் சுமுகி.

அவனும் அவளைத் தடுக்கவில்லை. ஆனால், "உறவினர் என்பதால் உனக்கு மறுக்க முடியவில்லை போல. ஆனால்



முடிந்தவரை அந்த ஆளை வெட்டி விட்டுவிடு, சுமுகி. என்னவோ அவரிடம் தப்பு இருப்பது நன்றாகவே தெரிகிறது. நீயே பார். வெட்கமின்றி ஒரு பெண்ணிடம் இப்படிச் சாப்பாடு கேட்கிறானே. அதுவும் கழுத்தில் சங்கிலி விரல்களில் மோதிரம் தங்கத்தில் சிகரட் கேஸ் என்று வைத்துக் கொண்டு. இப்படித் தொடங்கி ஏதாவது சங்கடத்தில் மாட்டி விட்டுவிடப் போகிறான்" என்றான் அவன்.

ஏற்கனவேதான் நித்யனையே மாட்டி வைத்திருக்கிறானே. அது தெரியாவிட்டாலும் அவன் சொல்வது அவளது நன்மைக்காக. எனவே ஒப்புதலாகத் தலையாட்டினாள் மனைவி.

அதன் பிறகு வழக்கம் போலப் பேச்சு இலகுவாகச் சென்றது.

"அப்படியே மாட்டினாலும் வீர, தீர பராக்கிரமசாலியான என் கணவர் வந்து என்னைக் காப்பாற்ற மாட்டாரா, என்ன?" என்று அவள் கேட்க, "இதோ இப்போதே வந்தேன், சுந்தரி. எங்கே? எங்கே என் ஏகே ஃபார்ட்டி செவன்?" என்று அவன் தேட, எப்போதும் போல அங்கே நகையொலி பரவியது.

அன்றிரவில் தூக்கமின்றிப் படுத்துக் கிடக்கும் போதுதான் அந்த நகைகளைக் கொடுத்தேனும், மூர்த்தியிடமிருந்து மீண்டால் என்ன, என்று சுமுகிக்கு முதலில் தோன்றியது.




வழக்கம்போல, விளக்கணைத்துப் படுத்துவிட்ட போதும் தூங்கி விட்ட பாவனையில் அசையாமல் படுத்துக் கிடந்த போதும் அவளால் பொட்டுக் கண் மூட முடியவில்லை.

நித்யவாசனின் அணைப்பு அவளை என்னென்னமோ எண்ண வைத்தது.

பேச்சு, குணம், தோற்றம் எல்லாவற்றிலும், பொருத்த மானவர்கள். இருவருக்குமே, உள்ளூரப் பிரியமும் இருந்தது. ஆவல் இருந்தது. ஆசையும் இருந்தது.

அப்படியிருக்க, எதற்காக இந்த சன்னியாசி வாழ்க்கை?

தொண்டையில் சிக்கிய முள்ளாக உறுத்தும் அந்த மூர்த்தியை மட்டும் பிரச்சினை இல்லாமல் விரட்டிவிட முடியுமானால்... அதன் பின் சுகம் மட்டும்தானே?

பாமினியின் நினைவு முற்பிறவியாய் மாறிவிட, அப்புறம் அவனும் அவளும் தானே?

மூர்த்தியைப் பிரச்சினையின்றி விரட்ட ஒரே வழி, அந்த நகைகளைக் கொடுப்பது மட்டும்தான்.

என்ன பெரிய நகை?

வாழ்வு முழுவதற்குமான சந்தோஷத்துக்கு முன், இந்த நகைகள் அவை எத்தனை லட்சம் பெறுமானாலும், ஏன் கோடி ரூபாயே என்றாலும் என்ன பிரமாதம்?

ஏன்? நித்தியே, அவற்றைத் தூசு எனவில்லையா? பாமினியின் உயிருக்கு முன், அந்த நகைகள் 'தூசு' என்றான் அவன். எதிர்கால நிம்மதியின் முன் சுமுகிக்கு அவை தூசாகப் பட்டன.

ஏனெனில் மூர்த்தி விரும்பியது கிடைக்காவிட்டால் அவன் தன் கதையைப் பத்திரிகைகளுக்குக் கொடுப்பது நிச்சயம். சான்று இருப்பதால் அவன் சொன்ன மாதிரியே பரபரப்புப் பத்திரிகைகள் அதைப் பிரசுரிப்பதும் நிச்சயமே.

நித்யவாசனின் பெயரும் புகழும் அழிவதோடு அது அவனது தொழிலையும் பாதிக்கக் கூடும். சட்டப்படியும், என்னென்ன பிரச்சினைகள் எழும்பக் கூடுமோ.



இதனாலெல்லாம், அவனது நிம்மதியும், அதன் தொடர்ச்சியாகக் குடும்பத்தில் அத்தனை பேர் நிம்மதியும் கெடுவது சர்வ நிச்சயம்.

அந்த நகைகளைக் கொடுப்பதன் மூலம் இவை அத்தனையையும் அடக்கிவிட முடியுமானால் கொடுத்து விட்டால் என்ன என்றே, அவளுக்குத் தோன்றியது.

தாயார் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சமயம் தவிர சுமுகி எப்போதுமே பணத்தை மிகப் பெரிதாக நினைத்தது இல்லை. அநாவசியச் செலவு செய்தது இல்லை. தாயின் ஆலோசனைப்படி இயன்றவரை சேமித்தது உண்டு. மற்றபடி பணம்தான் மிகமிக முக்கியம் என்று எண்ணியதில்லை. சுபாங்கி வீட்டினர், பணம் பணம் என்று பேயாய்ப் பறந்து அந்த வகையில் புண்ணியம் கட்டிக் கொண்டார்கள். என்ன பெரிய பணம்? இதற்குப் போய் இப்படிப் படுத்துகிறார்களே என்று பணத்தின் மேலேயே ஓர் அசட்டை.

நகை விஷயமும் அப்படித்தான்.

இப்படி வீட்டில் எல்லோருடைய நிம்மதி, மகிழ்ச்சி, கௌரவம் அத்தனையையும் அழிய விட்டுவிட்டு அந்த நகைகளைக் காப்பாற்றி என்ன பிரயோஜனம்?

சொல்லப் போனால் இந்த நகைகள் ஒருநாள் அவளுக்குத் தான் சொந்தமாகப் போகிறவை. அவை வேண்டும் என்று அவளே நினைக்காதபோது பிறகென்ன பிரச்சினை?

நகைகளைக் கொடுத்து நிம்மதியை விலைக்கு வாங்கி விடுவது என்று சுமுகி ஓரளவு எளிதாகவே தீர்மானித்து விட்டாள்.

ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருந்தது.

அந்த நகைகள் எங்கே இருக்கின்றன என்பதே, அவளுக்குத் தெரியாது. இதுவரை நித்தியிடம் அதுபற்றிக் கேட்கும் எண்ணம் அவளுக்குத் தோன்றியதில்லை.

இப்போது அவைகளை எப்படி எடுத்து எப்படி மூர்த்தியிடம் சேர்ப்பிப்பது? அப்படியே அவனிடம் சேர்ப்பித்து விட்டாலும் அவன் அதற்குமேல் தொல்லை பண்ணாமல், எப்படிப் பாதுகாத்துக் கொள்வது? அத்தோடு நகைகளைக் கொடுத்தால் அதை நித்யனிடம் சொல்லாமலே இருந்துவிட முடியாது. என்றாவது அவனாக அந்த நகைகளைத் தேடினால் கேவலமாகி விடும்.

பிரச்சினைகள் இருக்கத்தான் செய்தன. ஆயினும் நகைகளைக் கொடுத்து விடுவது என்று முடிவு செய்த பிறகே சுமுகியால் அமைதியாகத் தூங்க முடிந்தது.

மறுநாள், அந்த வைர நகைகளைப் பார்க்க வேண்டும் என்று நித்யவாசனிடம் சுமுகி கேட்டாள்.

சற்றுத் திகைத்துவிட்டு, "இதுவரை நீ இப்படிக் கேட்டதில்லையே. இப்போது ஏன் கேட்கிறாய்?" என்று வினவினான் அவன்.

இந்தக் கேள்வியை எதிர்பார்த்திருந்ததால், "சும்மாதான், நித்யா, பாமினி அடிக்கடி பார்த்துக் கொண்டிருப்பாள் என்று சொன்னீர்கள் இல்லையா? அப்படி என்ன வேலைப்பாடு என்று பார்க்க நினைத்தேன்" என்று கோர்வையாகப் பதில் சொன்னாள் அவன் மனைவி.

"அந்தச் சனியனில் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? விட்டுத் தொலை" என்றுவிட்டு நித்யன் போய்விட, சுமுகி சற்றுத் திணறினாள்.

ஆனால் பெரிதாகக் கவலைப்பட்டு விடவில்லை.

இன்னும் ஒரு தரம் கேட்டால் அவளுடைய நித்தி மறுக்க மாட்டான் என்பது அவளுக்கு நிச்சயம்.

ஆனால் அதற்கு அவசியம் இல்லாமல் சற்றுப் பொறுத்து அவனே அந்த நகைகளைக் கொணர்ந்து, அவளிடம் கொடுத்தான். "அறைக்குள் போய் கதவை உள்ளே-தாளிட்டுக் கொண்டு பார். அப்படியே உன் பாங்க் 'லாக்கரி'ல் பத்திரப் படுத்தி வை. இப்போது அவை உன்னிடம் இருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம். ஏற்கனவே இதற்காக ஓர் உயிர் பலியாகி இருக்கிறது. இப்போது உன்னையும் இழக்க நான் தயாரில்லை" என்றான், வறண்ட குரலில்.



சுமுகிக்குத் தன் அதிருஷ்டத்தை நம்பக் கூட முடிய வில்லை.

கணவனின் சந்தேகத்தைக் கிளப்பாமல் நகைகளை மீண்டும் எப்படிக் கேட்பது என்று அவள் திட்டம் போட்டுக் கொண்டிருக்க அதே நகைகள் பழுத்த பழம் போல, அவள் கையில் வந்து விழுகின்றனவே. அதுவும் அவளது 'லாக்கரி' லேயே வைத்துக் கொள்ளச் சொல்லுகிறான். உடனே அவனிடம் திருப்பிக் கொடுக்கக் கூடத் தேவையில்லை. பிறகு வாழ்க்கை நல்லபடியாக ஆன பிறகு அவனிடம் எதையும் மறைக்காமல் நிம்மதியாகச் சொல்லிவிடலாம்.

வியப்பை மறைத்துத் தலையாட்டினாள் அவள்.

அந்த வீட்டில் யாரும் அவளுக்கு எதிராக எதுவும் செய்யக்கூடும் என்ற எண்ணம் இல்லாவிட்டாலும் கணவன் சொன்னது போல, அறைக்குள் வைத்தே சுமுகி அந்த நகைகளைப் பிரித்துப் பார்த்தாள்.

பார்த்த அளவில் அவளுக்குச் சற்று ஏமாற்றமே.

திருமணமாகி இவ்வளவு நாளில் வைரங்களைப் பற்றி அவள் அறிந்திருந்த அளவில் அந்த நகைகளில் கட்டப் பட்டிருந்த பெரிய சைஸ் வைரங்கள் விலை உயர்ந்தவை என்பது சுமுகிக்குப் புரிந்தது. அழுத்தமான கழுத்தாரமும், பொருத்தமாக வளையல், மோதிரம், காதணியுமாக அத்தனை லட்சத்துக்குத் தகுதிதான். வங்கி வேறு. பருக்கை பருக்கையாக நீல நிற ஒளியைச் சிந்திய பழைய காலத்து 'பெல்ஜியம் கட்டிங்' வைரங்களில் பூரிப்பும். அவற்றின் விலை மதிப்பை எடுத்துக் காட்டின.

இவற்றின் விலை மதிப்புக்காகத்தான், பாமினி இவற்றை அடிக்கடி எடுத்துப் பார்த்திருக்கிறாள். இப்போது மூர்த்தி இவைகளைக் கேட்பதும் அதற்காகத்தான்.

வெறும் பணக்கணக்கு.

'இவற்றுக்காக ஓர் உயிர் பலியாகிவிட்டது' என்று நித்யவாசன் சொன்னது நினைவு வந்து சுமுகியின் உடல் சிலிர்த்தது.

அப்படியானால் அப்படிக் கத்தியைக்காட்டி மிரட்டியவன், மூர்த்தியா, வெறும் மிரட்டல்காரன் என்று நினைத்தால் அவன் கொலைக்கஞ்சாதவனும் கூடவா? அதுவும் கூட்டாளியாகச் செயல்பட்ட மனைவியை. இவனிடம் நகைகளை எடுத்துக் கொண்டு தனியே எப்படிப் போவது? அவளையே கொன்றுவிட்டு நகைகளை எடுத்துச் செல்ல மாட்டான் என்று, என்ன நிச்சயம்?

இல்லை. இவனைத் தனியிடத்தில் சந்திப்பது, தப்பு.

தனியிடமாக இல்லாவிட்டால் அவன் தருகிற நெகட்டிவைச் சரிபார்ப்பது கடினம்.

அத்தோடு மூர்த்தியால் மேற்கொண்டு எந்தவிதத் தொல்லையும் இருக்கக்கூடாது.

யோசித்துவிட்டு மூர்த்தியோடு தொடர்பு கொண்டாள் சுமுகி.

அவனுக்கு வேண்டிய நகைகள் கையில் இருந்ததால் அவளால் அதிகாரமாகப் பேச முடிந்தது.

நட்சத்திர ஹோட்டல் சாப்பாடு, இனி முடியாத காரியம். இப்போது பக்கத்து பார்க்கில் சந்திக்கலாம். அடுத்த சந்திப்பான கடைசிச் சந்திப்பை அப்போது திட்டமிடலாம்.

எத்தனை பத்திரிகைகளில் அவன் கதை வெளி வந்தாலும், அதனால் வரக்கூடிய பணம் இந்த நகைகளின் மதிப்புக்கு ஏணி வைத்தாலும் எட்டுமா?



பெட்டிப் பாம்பாய், சுமுகி சொன்ன இடத்தில் வந்து காத்திருந்தான் மூர்த்தி.

சுமுகி கேட்டபடி கடிதம் எழுதித் தர முதலில் மறுத்தவன், தன் காரணங்களை அவள் விளக்கவும், அதற்கும் சம்மதித்தான்.

இந்த நகைகள் கிடைத்துவிட்டால், இன்னொரு முயற்சி அவன் ஏன் செய்யப் போகிறான்? இந்தப் பணத்தைக் கொண்டு பெரிய அளவில் வயல் வரப்பு என்றோ, கடை கண்ணி வைத்தோ, ஜாம் ஜாம் என்று வாழலாமே.

அவள் சொன்ன நடுத்தர ஹோட்டலின் குடும்ப அறை யோசனையே அவனுக்கும் பிடித்துப் போயிற்று. அவளைப் போலவே அவனுக்கும் ஆபத்து வராதில்லையா?

கடைசியாக சுமுகியைச் சந்தேகத்துடன் பார்த்து, "அதில் கள்ளத்தனம் ஏதும் இராதில்லையா? அப்படி ஏதாவது செய்தாய் என்றால், ஆள் வைத்து உன் புருஷனைக் கொன்று விடுவேன்" என்று மிரட்டினான்.

கொலைகாரப் பாவிதானே? செய்தாலும் செய்வான்.

முகம் வெளுத்த போதும் சமாளித்து, "இவ்வளவு செய்கிற உனக்கு கொலை செய்வது சுண்டைக்காய் சமாச்சாரம் என்று எனக்குத் தெரியாதா? நீ நினைக்கிற மாதிரியான எந்த சாகசமும் நான் செய்வதாக இல்லை. இந்த நகைகளை வாங்கிக் கொண்டு எங்களை நிம்மதியாக இருக்கவிட்டுவிட்டு, நீ கண் காணாமல் போய்த் தொலைந்தாய் என்றால் எனக்கு அதுவே போதும்" என்று சுமுகி வெறுப்புடன் கூறவும், அவனுக்குத் திருப்தியாகி விட்டது.

அடுத்த சில நாட்கள் நித்யவாசனுக்கு வெளி வேலைகள் அதிகம் இருந்ததால், வழக்கமான நேரங்களில் வீடு வர முடியாது என்று தெரிவித்தான்.

நித்யன் எந்தப் பக்கம் போகிறான் என்று கேட்டு அவன் வட சென்னைப் பகுதிக்குப் போவதாகச் சொல்லவும், அப்பாடி என்று பெரு மூச்செறிந்தாள் அவன் மனைவி.

ஆனால், "அந்த நகைகளை 'லாக்கரில்' வைத்து விட்டாயா?" என்று கேட்டு ஒரு தரம் அவளுக்கு வியர்க்க வைத்தான் அவன்.

"அது..." என்று அவள் இழுக்கும்போதே, "அவை இனி உன்னுடையவை. என்ன வேண்டுமானாலும் செய்து கொள்" என்று அவளை அமைதியும் அடைய வைத்தான்.

அவனே, நகைகளை அவளுடையவை என்று விட்டானே. அப்புறம் என்ன?

ஆனால், என்ன வேண்டுமானாலும் செய்து கொள் என்று ஏன் சொன்னான்? அந்த நகைகள் மேல், அவனுக்கு உள்ள வெறுப்பினாலா? அல்லது மாற்றி அமைப்பதானால் செய்து கொள் என்றிருப்பானோ?

இப்போது அவள் செய்யப்போவது தெரிந்தால் என்ன சொல்லுவானோ? ஆனால் அதையெல்லாம் நினைத்து, இப்போது மனதைக் குழப்பிக் கொள்ளக்கூடாது.

இந்தத் தொல்லையிலிருந்து சீக்கிரமே விடுபட எண்ணியவள், மறுநாளே மூர்த்தியைச் சந்திக்க ஏற்பாடு செய்தாள்.

அவனுக்கும் ஆசைதானே? உடனே ஓடி வந்தான்.

திட்டமிட்டபடி, நகைகளைக் காரில் இருக்கைக்கு அடியில் மறைத்து வைத்துப் பூட்டிவிட்டு, ஹோட்டலுக்குள் ஏற்கனவே முன் பதிவு செய்திருந்த குடும்ப அறைக்குச் சென்றாள்.

அவளைப்பார்த்துவிட்டு, ஏற்கனவே வந்து காபி அருந்தும் பாவனையில் வெளியே காத்திருந்த மூர்த்தியும் உள்ளே சென்றான்.



சும்மாவேனும் கொஞ்சம் உணவு கொண்டு வரச் சொல்லி, கொண்டு வந்ததும், உண்டு முடித்தபின் கூப்பிடுவதாகச் சொல்லி பரிமாறுகிறவனை அனுப்பினர்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அவளது கைப்பையையும் பரிசோதித்துவிட்டு அதன் பிறகு மூர்த்தி தன் கைப் பெட்டியைத் திறந்து போட்டோ ஆல்பத்தையும் நெகட்டிவையும் எடுத்துக் கொடுத்தான்.

முழு திருமண ஆல்பம். ஆனால், சிக்கனமாகத்தான் நடந்திருக்கிறது. இரண்டு ரோல், எழுபத்தியிரண்டு படங்கள். பல படங்களில் ஹோமப் புகையில் மணமக்கள் இருவரின் முகங்களுமே சரியாகத் தெரியவில்லை. ஆனால் மூர்த்தி சொன்னதுபோல அய்யர் அவருடைய உதவியாள். உறவினரில் படத்துக்கு முகத்தை நீட்டியவர்கள் என்று பலர் படங்களில் இருந்தனர். இவர்கள் எல்லோருமே தேவைப்பட்டால் சாட்சி சொல்லக்கூடும். ஆக, மூர்த்தியின் கூற்றுக்கு நிரூபணம் இருந்தது. மெய்யாகவே அவன் பாமினியுடைய கணவன் தான்.

எட்டு ஆண்டுகளுக்கு முந்தி நடந்த திருமணம் என்பதை ஆல்பத்தில் இருந்த தேதி காட்டியது.

நித்யவாசனைச் சந்திக்கு முன், அந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இருவரும் என்னென்ன கூத்தடித்தார்களோ, மூர்த்தி சிறைக்கே சென்றிருக்கிறானே.

யோசித்தபடியே பார்த்தபோது, நெகட்டிவும் ஒத்துப் போனது.

அடுத்து அவள் கூறியவாறு தானே கையால் எழுதிக் கொண்டு வந்திருந்த கடிதத்தைக் காட்டினான் மூர்த்தி.

அதுவும் திருப்தியாகிவிட, வெளியே போய் காரில் இருந்த நகைப் பெட்டிகளைச் சாதாரணத் துணிப்பையுள் வைத்து சுமுகி எடுத்து வந்தாள்.

நகைகளை மூர்த்தி பரிசோதிக்க, அவன் தந்த ஆல்பம் நெகட்டிவ் கடிதம் மூன்றையும் மீண்டும் ஒரு தரம் சரிபார்த்து, தன் பைக்குள் சுமுகி எடுத்து வைத்தாள்.

அப்பா எவ்வளவு நிம்மதி. இனி, அவளுடைய நித்தியை யாரும் அவமானப்படுத்த முடியாது.

நகைகளைத் தன் பெட்டிக்குள் வைத்து மூடிய மூர்த்திக்கும் சந்தோஷமே. ஒரு நிமிஷத்தில் பல லட்சங்களுக்கு அதிபதியாகிவிட்டானே.

சர்வருக்கு 'டிப்சா'க ஒரு தொகையை வைத்துவிட்டு இருவரும் வெளியே வந்தனர்.

"ஓகே, சுமுகி பிறகு பார்ப்போம்" என்று மூர்த்தி விடைபெற, சுமுகி அவனைகையெடுத்துக் கும்பிட்டாள். "பார்க்க வேண்டாம். உன்னை இனி ஒரு போதும் சந்திக்க நேராமல் அந்தக் கடவுள் என்னைக் காக்கட்டும்" என்றபடி கார்க் கதவைத் திறந்தாள்.

இதுவரை எல்லாமே சுமுகி திட்டமிட்டபடியே நடந்தது. ஆனால் அதன் பின் அத்தனையும் மாறிப் போயிற்று.

"பின் கதவையும் திறந்துவிடு சுமுகி" என்ற கட்டளையைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு அவள் திரும்பிப் பார்த்தால் அங்கே நித்யவாசன் நின்றான்.




அங்கே நின்றது, அவளுடைய கணவன் நித்ய வாசனேதான்.



வட சென்னையில் வேலையிருப்பதாகச் சொன்னவன் இங்கே எங்கே வந்தான்?

திகைப்புடன் நோக்கியவளின் பார்வையில் இன்னும் சிலதும் பட்டன.

நித்யவாசனின் ஒரு கை அவனது பான்ட் பைக்குள் இருந்தது. அடுத்த கை மூர்த்தியை இறுகப் பற்றியிருந்தது. மூர்த்தியின் காதோரம் வாயை வைத்து "கவனி. என் பான்ட் பைக்குள், 'சைலன்சர்' பொருத்தப்பட்ட துப்பாக்கி உன் உயிரைக் குறி வைத்து இருக்கிறது. நான் சொல்வதற்கு மாறாக நீ என்ன செய்தாலும் சத்தமில்லாமல் அது வெடித்து விடும். சிறு சத்தம் செய்தாலும் அடுத்த ஒலி எழுப்ப, நீ இருக்க மாட்டாய். புரிகிறதா?" என்று சொல்லிக் கொண்டு இருந்தான் அவன்.

ஏதோ புரிந்துவிட, அவசரமாகப் பின் கதவைத் திறந்து விட்டாள் சுமுகி.

"நாங்கள் ஏறியதும், காரைக் கிளப்பி ஓட்டு" என்று அவளைப் பாராமலே மீண்டும் அவளுக்குக் கட்டளையிட்டு விட்டு மெல்ல நிதானமாகக் காரில் ஏறும்படி மூர்த்தியிடம் சொல்லி, அதுபோல அவன் ஏறியதும் பின்னோடு தானும் ஏறி மூர்த்தியின் அருகிலேயே உட்கார்ந்து கொண்டான்.

கார் மெதுவாகச் சாலைக்குச் சென்றதும், "நம் கம்பெனி விருந்தினர் இல்லத்துக்கு ஓட்டு. அங்கேதான் இப்போது யாரும் இருக்க மாட்டார்கள்" என்று கணவன் கூறியபடி, சுமுகி காரை ஓட்ட மூர்த்தி நடுங்கினான்.

"அங்கே போய் என்னை அடித்து கொலை பண்ணப் போகிறீர்களா?" என்று பற்கள் தந்தியடிக்கப் பதறினான்.

"அதை அங்கே போய் நீ நடந்து கொள்ளும் முறையில் தீர்மானிக்கிறேன்" என்றான் நித்யவாசன், அலட்சியமாக.

கதவைத் திறந்துவிட்ட காவலாளை, வெளி வாயிலில் நிற்குமாறு பணித்துவிட்டு மற்ற இருவரையும் அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்று கதவைத் தாளிட்டான்.

குளியல் அறையில் இருந்த டவல்களைக் கொண்டு மூர்த்தியின் கைகளை நாற்காலியோடு சேர்த்து சுமுகி கட்டிய பிறகே துப்பாக்கியிலிருந்து நித்யவாசன் கையை எடுக்க, மூர்த்தியும் சற்று இலகுவாக மூச்சு விடத் தொடங்கினான்.

எப்படியும் உடனே சுட்டுவிட மாட்டானே.

மூச்சு வந்ததும், "பாவி, இப்படி ஏமாற்றி விட்டாயே. உள்ளே தருவது போலத் தந்து வெளியே புருஷனை விட்டுப் பிடுங்கி விட்டாயே, பாதகி" என்றான் ஆத்திரத்துடன்.

"ச்சூ. உண்மை தெரியாமல் உளறாதே." என்றான் நித்யவாசன். "நான் வருவேன் என்று சுமுகிக்குத் தெரியாது. அவள் வைர நகைகளைக் கேட்டதும் சந்தேகப்பட்டு நான்தான் அவளைத் தொடர்ந்து கொண்டிருந்தேன்."

நித்யவாசனுக்குப் பயந்து மூர்த்தி வாயை மூடிக் கொள்ள, அவனது பெட்டி சுமுகியின் கைப்பை இரண்டையும் ஒருதரம் பார்த்துவிட்டு, "பெட்டியுள் என்ன இருக்கும் என்று விசாரிக்கத் தேவை இல்லை. அந்த வைர நகைகள்தானே?" என்று கேட்டான்.

"ஆமாம்." என்றான் மூர்த்தி, அழு குரலில். "எல்லாம் போயிற்று."

"இதற்குப் பதிலாக மூர்த்தி கொடுத்தது?" என்று கேட்டவன் உதட்டைக் கடித்துக் கொண்டு சுமுகி அசையாது நிற்கவும், "ஒரு காலத்தில் நீ என்ன செய்திருந்தாலும் உன்னை நான் விட்டு விடுவேனா, சுகி? எதற்காக எனக்கு மறைத்து இந்த பண்டமாற்று?" என்று சிறு வருத்தத்துடன் கூறினான்.



விழி மலர சுமுகி நோக்க இருக்கும் நிலை மறந்து மூர்த்தி சிரித்தான். "ஒரு காலத்தில் இவள் செய்ததா? இந்த உத்தமி ரத்தினம் தப்பு வேறு செய்யுமா?" என்றான் ஏளனமும் எரிச்சலுமாக.

"பின்னே?" என்று அவனது கைப்பையின் பக்கம் ஓர் எட்டு எடுத்து வைத்தவன் நின்று, "என்ன விஷயம் சுகி?" என்று அவளிடமே வினவினான்.

"சொல்லு தாயே, சொல்லு. இனி என்ன? உன் காட்டிலே மழை. அந்தக் கால நளாயினி, அருந்ததி கூட உனக்கு இணையாக மாட்டார்கள். புருஷன் புகழாரம் சூட்டுவான். உச்சிகுளிர்ந்து ஜலதோஷம் பிடித்து நிமோனியா வந்து செத்துப் போ" என்று மூர்த்தி குமுற, தன் பையைத் திறந்து உள்ளிருந்தவற்றை எடுத்து சிறு கவலையுடன் கணவனிடம் கொடுத்தாள் சுமுகி.

திருமண ஆல்பத்தைப் பார்த்து நித்யவாசனுக்குப் பேரதிர்ச்சிதான். ஆனால் சுமுகி கவலைப்பட்டது போல, உடைந்து போய்விடாமல் விரைவிலேயே சுதாரித்துக் கொண்டு அவன் கேள்வி கேட்கத் தொடங்கியது, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"இந்த ஆல்பம் நெகட்டிவ்வுக்காக இந்த நகைகளைக் கொடுக்க வேண்டுமா, சுமுகி? கூட இந்தக் கடிதம் வேறு. இதில் வேறு என்னவோ இருப்பது போலத் தெரிகிறதே. என்ன அது?" என்று விசாரித்தான் அவன்.

மூர்த்தியின் கண்களில் மீண்டும் பயம் தோன்றிற்று.

சுமுகியிடம் எக்காளமாகப் பேசியது எல்லாம் நினைவு வந்தது. அதையெல்லாம் அவள் கணவனிடம் சொன்னால் அவன் கதி என்ன ஆகும்?

நித்யவாசன் ஒரு கையால் அழுத்திப் பிடித்ததே அவனுக்கு இன்னமும் வலித்தது. அவன் முழு வலிமையுடன்

அடித்தால் தாங்க முடியுமா? ஒருவேளை ஆத்திரத்தில் கொன்றே விட்டால்?

அவசரமாக சுமுகியை முந்திக் கொண்டு, "நான்... நானே சொல்லுகிறேன். ஆனால் என்னை அடித்துவிட மாட்டீர்களே? கொ...கொன்றுவிட மாட்டீர்களே? என்று பதறினான்.

"அடித்துக் கொல்லுகிற அளவு தப்பு செய்திருக்கிறாய் என்று தெரிகிறது. இந்தப் பயம் முன்னே இருந்திருக் கலாமில்லையா? சொல்லு. என்ன நடந்தது?"

விஷயம் அறிந்ததும், "ஓஹோ, இப்போது கடிதமும் புரிகிறது. திருமணம் ஆன உடனேயே இருவருக்கும் ஒத்துப் போகாததால், ஊர்ப் பொதுவில் வைத்து 'அறுத்துக் கட்டி' விட்டதாகவும் அதிலிருந்து சத்யபாமா உன் மனைவி அல்ல என்றும் எழுதிக் கொடுத்திருக்கிறாய். அதாவது சுமுகி அப்படி உன்னை எழுத வைத்திருக்கிறாள். மிச்சம் மீதியாய் வேறு ஏதாவது படங்களை வைத்துக் கொண்டு நீ மீண்டும் மிரட்ட முடியாதபடியான பாதுகாப்பு. என் மனைவி கெட்டிக்காரி. தெரியுமா?" என்றான் நித்யன் கர்வமாக.

"ஆனால் உங்களிடம் ஏமாந்து போனேனே. வட சென்னைக்குப் போவதாகச் சொல்லிவிட்டு எனக்குத் தெரியாமல் என் பின்னே வந்து நகைகளைக் காப்பாற்றி யிருக்கிறீர்களே" என்று சுமுகி தன் பங்குக்குப் பெருமைப்பட, கணவன் மனைவி இதுவரையும் வெறுப்புடன் பார்த்தான் மூர்த்தி.

சுமுகி தருவதாகச் சொன்ன ஐந்து லட்சத்தையே வாங்கிப் போயிருக்கலாம். ஒரு மளிகைக் கடை வைத்துப் பிழைக்கவும் செய்திருக்கலாம். இப்போது எதுவும் இல்லாது போயிற்று. பெருமூச்சு விட்டான் அவன்.

யோசனையோடு மூர்த்தியைப் பார்த்தான் நித்யன்.



ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு சுமுகியை உட்காரச் சொல்லிவிட்டுத் தானும் ஒன்றில் அமர்ந்தான்.

"இன்றைய மர்மம் தெளிவாகி விட்டது. ஆனால் மூன்று ஆண்டுகளுக்கு முன் நடந்தது? திட்டம் போட்டு உன் மனைவியை என் வீட்டில் நுழைய வைத்தாய். அதுவரை தெரிகிறது. அப்புறம் நகைகளை எடுத்துக் கொண்டு இருவருமாக ஓட வேண்டியதுதானே? அவளையே கத்தியைக் காட்டி மிரட்டுவானேன்? அப்படிச் சாகடிப்பானேன்?" என்று விவரம் கேட்டான்.

"கத்தியைக் காட்டி, நான் மிரட்டினேனா? இது என்ன கதை?" என்று திகைத்தான் மூர்த்தி.

"அப்படித்தான் இறக்குமுன் பாமினி சொன்னாள்?" என்று உணர்ச்சியற்ற குரலில் சொன்னான் நித்யவாசன். சுருக்கமாக விவரத்தையும் சொன்னான்.

கோபத்தில் முகம் செங்குரங்காய்ச் சிவக்க, மூர்த்தி திட்டிக் கொட்டித் தீர்த்தான்.

"அந்தக் கழுதை, திருட்டு நாய், நகைகளைத் தான் மட்டுமே அடித்துக் கொண்டு போகப் பார்த்தாள் சார். நகைகளைக் கொண்டு போய்க் கொடுத்து சேட் தருவதாகச் சொன்ன பாதிவிலை முப்பது லட்சத்தையும் அவள் ஒருத்தியே எடுத்துக் கொண்டு ஓடிவிட நினைத்தாள். திட்டம் போட்ட என்னையே ஏமாற்றிவிட்டு ஓட முயன்ற நய வஞ்சகி. காரில் இருபது லிட்டர் பெட்ரோல் போட்டபோது அந்தப் பக்கம் நான் பைக்குக்குப் பெட்ரோல் போட்டுக் கொண்டிருந்தது, அவளுக்குத் தெரியாது. உடம்பு சரியில்லை. வீட்டில் படுத்த படுக்கையாகக் கிடக்கிறேன், சந்திக்க முடியாது என்று ஈனசுரத்தில் பேச முடியாமல் பேசியவள், தானே காரை ஓட்டி வந்து பெட்ரோல் டாங்க்கை நிரப்பினாள் என்றால்? என்னவோ சூது என்று அவளைப்பின் தொடர்ந்தேன். பாமா என்னைப் பார்த்து

விட்டாள். வேகமாக ஓட்டித் தப்பிக்கப் பார்த்தாள். நான் விடுவதாக இல்லை என்று தெரிந்ததும், விபத்தை உண்டு பண்ணி விட்டாள். அந்த களேபரத்தில் நான் அவளை நெருங்க முடியாது அல்லவா? விவரம் கேட்கத்தான் விரட்டினேனே தவிர, நகை காரில் இருந்தது அதுவரை, எனக்குத் தெரியாது. சார் நீங்கள் இப்போது துப்பாக்கியைக் காட்டி என்னை மிரட்டினீர்களே இது நிஜம். கத்தியைக் காட்டி நான் மிரட்டினேன் என்றது பொய், சார் முழுப் பொய். நான் உங்கள் வீட்டுக்கும் வரவில்லை. காரிலும் ஏறவே இல்லை. சத்தியம் சார்."

"ஆனால் மரத்தில் மோதாமல் பாமினி வீட்டிற்கே போயிருக்கலாமே. வீட்டுக்குள் நீங்கள் எளிதாகச் செல்ல முடியாதல்லவா?" என்று கேட்டாள் சுமுகி.

"சாரிடம் நான் அவளைக்காட்டிக் கொடுத்துவிடுவேன் என்று அவள் அஞ்சியிருப்பாள். இதே போட்டோ அவளையும் மாட்டி வைத்து விடுமே."

"அத்தோடு வேலையாட்கள் அத்தனை பேரையும் ஒவ்வொரு சாக்கில் வெளியேற்றியிருந்தாள். வீட்டுக்குப் போனாலும் தனியே மாட்டிக் கொள்ளக்கூடும் என்று பயந்திருப்பாள். இப்படிச் செய்தால்..." என்று நித்யவாசன் சட்டெனா எழுந்தான்.

மூர்த்தியின் அருகே சென்று அவனது கட்டுகளைப் பரிசோதித்து மேலும் இறுகக் கட்டினான். "மூர்த்தி, இப்போது நீங்கள் எனக்குப் பெரிய நன்மை செய்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. அதுபற்றிக் கொஞ்சம் விசாரித்துவிட்டு வருகிறேன். அதுவரை பொறுமையாக இப்படியே இருங்கள். நான் நினைப்பது சரியாக இருந்தால் உங்களுக்கு நல்ல பரிசு கூடக் கிடைக்கலாம்" என்றான்.

சுமுகியின் கையைப் பற்றி முத்தமிட்டு, "சீக்கிரமே வந்து விடுவேன் சுகிம்மா. அதுவரை பார்த்துக் கொள். மிஸ்டர் மூர்த்தி ஏதாவது தகராறு செய்தால், காவலாளைக் கூப்பிடு. உடனே வருவான்" என்று விட்டுப் போனான்.



கார் கிளம்பிச் சென்ற ஓசை தேய்ந்து மறைந்தது.

"சார் குடுமியை அப்படியே கையில் பிடித்துத் தந்திருக்கிறேன். அதற்கு நன்றியாகக் கொஞ்சம் கட்டவிழ்த்து விடக் கூடாதா? ஓசைப்படாமல் ஓடி விடுவேனே" என்றான் மூர்த்தி கெஞ்சுதலாக.

தரையில் கிடந்த பெட்டியைப் பார்த்துச் சிரிப்பு வந்தது அவளுக்கு. ஓசைபடாமல் சும்மாவா ஓடுவான்? இந்தப் பெட்டியையும் தூக்கிக் கொண்டல்லவா ஓடுவான்.

"பயப்படாதீர்கள், மூர்த்தி. அவர் உங்களுக்குப் பரிசு கொடுப்பதாகத்தானே சொல்லியிருக்கிறார்? அவர் வரும்வரை அமைதியாகப் பொறுத்திருங்கள்" என்று முறுவலித்தாள்.

'ஊ...ம்' என்று நீளமாகப் பெருமூச்சு விட்டான் அவன்.

அரைமணி நேரத்துக்குள்ளாக நித்யவாசன் திரும்பி வந்து விட்டான். "நான் நினைத்ததுதான் நடந்திருக்கிறது சுகி" என்றபடி.

மூர்த்தியை நோக்கி, "நீங்கள் சொன்னதும் சரிதான், மூர்த்தி. வேறு ஆள் இருந்த தடயமே இல்லை என்று அந்த விபத்தை ஆராய்ந்த கமிஷனர் சொன்னார். ஒன்று அவன் கெட்டிக்காரன். அல்லது பாமினி சொல்வது பொய் என்றார். மரணத் தறுவாயில் பாமினி பொய் சொல்ல வழியில்லை என்பதால் வில்லன்தான் கெட்டிகாரன் என்று நினைத்தேன். இப்போது வேறு தோன்றுகிறது. அதை உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் போனேன்" என்றான்.

அவன் சென்றது, அடிப்பட்ட பாமினிக்கு வைத்தியம் செய்த மருத்துவரிடம்.

அவரைப் பார்த்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால் நினைவு இருக்குமோ, என்னவோ என்று சிறு தயக்கத்துடன்தான் நித்யவாசன் அவரிடம் சென்றது.

ஆனால் பெயரைச் சொல்லி அனுப்பியதும் உடனே வரச்சொல்லி, "பெரிய தரும காரியங்கள் எல்லாம் முன்னின்று நடத்துகிறீர்கள். உங்களைத் தெரியாதா?" என்று பிரியமாகப் பேசினார் டாக்டர்.

மூன்று ஆண்டுகளுக்கு முந்திய விபத்து பற்றிக் கேட்டதற்கும், மறைக்காமல் சொன்னார், "அப்போதே எனக்குச் சொல்ல எண்ணம்தான் மிஸ்டர் நித்யவாசன். செத்துப் போனவளை பற்றிச் சொல்லுவானேன் என்று விட்டு விட்டேன். என்னவோ மறுமணம் அது இதென்று, தியாகி மாதிரி அங்கே உங்களிடம் பேசிவிட்டு, 'லேசாகத்தானே மோதினேன். எனக்கு எப்படி இவ்வளவு வலிக்கலாம்' என்று உள்ளே எங்களிடம் ஆத்திரப்பட்டாள். என்ன மாதிரிப் பேச்சு. மரணத்தைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவே இல்லை. தப்பு என்ன என்றால் ஸ்டியரிங் வீல் நெஞ்சில் மோதாமல் தவிர்த்திருக்க வேண்டும். அதைக் கவனிக்கவில்லை போல. அதுதான் உயிரைக் குடித்துவிட்டது. நீங்களும், மனைவியிடம் உயிரை வைத்திருப்பதாகத் தோன்றியது. கண்ணுக்கு மறைந்தது காலப் போக்கில் கருத்திலிருந்தும் மறைந்து விடும். இருக்கும் நல்ல எண்ணத்தைக் கெடுப்பானேன் என்று சும்மா இருந்து விட்டேன்" என்றார் அந்த நல்ல மனிதர்.

நமக்காக உயிரை விட்டவள் என்று நினைத்து நினைத்து மருகிய மூன்று ஆண்டுகள் நினைவு வந்தபோதும், அதை மறைத்து, "நன்றி டாக்டர்" என்று சொல்லி விட்டு வந்தான் நித்யவாசன்.

"அதிரடியாக எதுவும் செய்ய முயற்சிக்க வேண்டாம். மூர்த்தி" என்று அவனது கட்டை அவிழ்த்துவிட்டான்.

கையோடு வாங்கி வந்திருந்த சிறு பிளாஸ்டிக் குளிர்பான பாட்டில்களில் ஒன்றை அவனிடமும்,இன்னொன்றைத் திறந்து சுமுகியிடமும் கொடுத்தான்.



தானும் ஒன்றிலிருந்து குடித்தபடி, "தெரியாமல்தான் என்றாலும் ஒரு தப்பு நிகழ. நான் இடம் கொடுத்து விட்டேன். மிஸ்டர் மூர்த்தி அதற்குப் பரிகாரம் செய்ய விருப்பம். அத்தோடு நீங்கள் குறுக்கிட்டிருக்காவிட்டால் கடைசி வரை உறுத்தலுடனேயே வாழ்ந்திருப்பேன். நீங்கள் கெட்ட எண்ணத்துடன் வந்தாலும், எங்களுக்கு நல்லதே நடந்திருக்கிறது. அதனால் சுமுகி உங்களுக்கு எவ்வளவு தருவதாகச் சொன்னாள்" என்று வினவினான்.

மூர்த்தியின்விழிகள் தெறித்து விடும் போலப் பிதுங்கின. "சா... ர் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். சார்?" என்று திகைத்துத் தடுமாறினான்.

லேசாக முறுவலித்து, "நாளைக்கு அலுவலகத்துக்கு வந்து பணத்தை வாங்கிப் போங்கள்; இதை முதலாக வைத்து இனியேனும் நல்லபடியாகச் சம்பாதியுங்கள்" என்றுரைத்து மூர்த்தியின் ,பெட்டியைத் திறந்து நகைகளை வெளியே எடுத்துவிட்டு, பெட்டியை உடையவனிடம் கொடுத்தான். நித்யவாசன்.

"இனி நீங்கள் போகலாம்" என்று அவனை அனுப்பி வைத்தான்.

அன்றைக்கும் நித்யவாசன், பாமினியைப் பற்றித்தான் பேசினான். ஆனால் வேறு விதமாக தன் பிழையை எண்ணி மனம் வருந்திப் பேசினான்.

"கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்து மதம்' வரிசையில் 'துன்பங்களில் இருந்துவிடுதலை' என்று ஒரு புத்தகம் உண்டு. அதில், வரப்போகும் துணையைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை இளைஞர்கள் பெற்றோரிடம் விட வேண்டும் என்று எழுதியிருக்கிறார். இளைஞர்களின் கண்ணில் கவர்ச்சி மட்டும்தான் படுமாம். பெற்றவர்கள் மற்றதையும் குணம், குடும்பப் பாங்கு போன்றவற்றையும் ஆராய்வார்களாம். முன்பு

படித்தபோது எனக்கு அலட்சியமாக இருந்தது. நான் என்ன முட்டாளா, என்று நினைத்தேன். தொழிலில் ஜெயித்த திமிர். ஆனால் அம்மாவுக்குப் பாமினியைப் பிடிக்கவில்லை, சுகி. அதைக் கூட, மகனிடம் உரிமை போய் விடும் என்று அம்மா பயப்படுவதாக அசட்டுத்தனமாக நினைத்தேன். என்ன மடத்தனம், பார்.

“அப்போதும், அவசரம் வேண்டாம். சில மாதங்கள் பொறுத்திரு என்றுதான் அம்மா சொன்னார்கள். வெறும் மோகம் என்றால் அதற்குள் தீர்ந்துவிடும் என்று கணித்திருக்கிறார்கள். ஆனால் பாமினி அவசரப்பட்டாள். ஏன் என்று இப்போதுதானே புரிகிறது.”

“திட்டமிட்டு வந்தவள் அதை நிறைவேற்ற முயல்வது இயல்புதானே?” என்று சாதாரணமாகப் பேசி அவனது வருத்தத்தைக் குறைக்க முயன்றாள் சுமுகி.

ஆனால் அவன் சுய ஆராய்ச்சியில் இருந்தான்.

“கண்ணிருந்தும் பார்க்கத் தெரியாதவனாக, முழு முட்டாளாக இருந்திருக்கிறேன், சுகிம்மா. சின்னச் சின்ன குறிப்புகள் அவளைக் காட்டிக் கொடுத்திருக்க வேண்டும். அவ்வப்போது மாறுகிற அவளது குணம். கோள் சொல்லுவது. உழைக்கப் பிடிக்காது. கூச்சம் என்கிற போர்வையில் ஒளிந்து கொண்டது... சே! நான் நினைத்துப் பார்க்கவே இல்லையே.”

“சரிதான் போங்கள். அப்படிச் சின்னச் சின்னதை எல்லாம் பார்க்கத் தொடங்கினால், வாழ்க்கை நரகமாகி விடும், நித்தி” என்றாள் சுமுகி. “முதலில் பாமினியைப் பற்றி நன்றாக விசாரிக்காதது தப்புதான். ஆனால், அப்புறம் பக்கத்தில் வைத்துக் கொண்டு இது தப்பு, அது குறை என்று தேடினால் எல்லாமே தப்பாகத்தான் தோன்றும். ‘உட்கார்ந்தால் திமிர், நின்றால் வேஷம்’ என்பார்களே. அது மாதிரி. அத்தோடு அதெல்லாம் முடிந்த கதை. அதைப் பற்றி இனி நினைப்பதே தப்பு.”



“உண்மைதான். ஆனால் தப்பு அது மட்டுமல்ல. நாலைந்து முறை நீ மூர்த்தியோடு பேசியதையே என்னால் தாங்க முடியவில்லை. நானானால் பாமினி புராணமே பாடிக் கொண்டு உன்னையும் விலக்கி வைத்து. இந்தத் தப்புகளுக்காக நீ என்னை மன்னிப்பாயா, சுமுகி?”

“ம்ம்ம்...” என்று யோசிப்பது போலப் பாவனை செய்துவிட்டு. “அந்தத் தப்புகளை மன்னிக்கலாம், ஆனால் ‘சுகி’யை விட்டு, ‘சுமுகி’ என்று கூப்பிட்டால் அதை நான் ஒரு போதும் மன்னிக்கவே மாட்டேன்ப்பா” என்று முறுவலித்தாள் அவள்.

“இந்தச் சிரிப்புதான். அன்று மாலையோடு வந்ததைப் பார்த்துக் கண்ணால் சிரித்தாயே. நினைத்து நினைத்து எனக்கு எப்படிச் சிரிப்பு வந்தது தெரியுமா? சுகி, நான் முதலிலேயே உன்னிடம் சாய்ந்து விட்டேன் என்றுநினைக்கிறேன். மற்றபடி, நீ வேலைக்கு வராதது மனம் உறுத்தி உன்னைப் பார்க்க நேரிலேயே வந்தேன் பார்.”

“ம்கூம்? அத்தை அனுப்பி வந்ததாக அன்றைக்குச் சொன்னீர்கள்?” என்று தலை சரித்துப் புன்னகையோடு, அவனைப் பார்த்தாள் மனைவி.

“பின்னே, நானே வந்தேன் என்று எப்படிச் சொல்வது? அம்மாவும் ஒரு தரம் சொன்னார்கள்தான். ஆனால் ஆளை அனுப்பி வைக்க என்னால் முடியாதா என்ன? அதை விட்டு நேரிலேயே வந்தேன் பார். பிறகும் உனக்கு வேறு வேலை போட்டுத் தராமல் மணக்கக் கேட்பானேன்? அந்தப் பழியையும் அம்மா தலையிலேயே போட்டு விட்டேன். ஆனால் அத்தனை காலம் தள்ளி விட்டது போல அம்மாவின் திருமண வற்புறுத்தலை, என்னால் தொடர்ந்து தள்ளிவிட முடியாதா என்ன? சும்மா அம்மா ஒரு சாக்கு. நன்றாக யோசித்துப் பார்த்த பிறகுதான் இது எனக்கே விளங்கியது. பிறகும் பார். மருத்துவ

மனையில் நீ பிரகாச முகத்துடன் நின்றபோது எனக்குத் தெரியாமல் என்ன சந்தோஷம் என்றுதான் தோன்றியது. அதை அறிந்தே ஆக வேண்டும் போல வேகம். உன் உள்ளத்தை அறிந்து கொள்ளும் ஆவல்தானே காரணம்?"

"அப்போதே அப்படியா? நம்ப முடியவில்லையே. அவ்வளவு நாள் கழித்தும், தரம் இறங்கி விடாதே அப்படி இப்படி என்று 'வசனம்' பேசினீர்களே."

அவனிடம் பதில் இருந்தது. "அன்று... அன்று ஒரு கழிவிரக்கம் சுகிம்மா அன்று அந்த மாத மல்லிகை மாலைக்குப் பூக்கடையிலிருந்து பில் வந்தது. எட்டாயிரம் ரூபாய்க்கு மாலையா, என்ன கதை என்று ஆத்திரப்பட்டு விட்டேன். கணக்கர் சொன்ன பிறகுதான் அது பாமினி படத்துக்கான மாலை பில் என்பது நினைவு வந்தது. பல நாட்களாக அவளை நினைக்கவே மறந்து போயிருந்ததால், பில் எதற்கு என்று புரியவில்லை. என்னடா நமக்காக சொத்தைக் காப்பதற்காக உயிரை விட்டவளை... அப்போது அப்படித் தானே நினைத்தது. அவளை அன்றாடம் நினைக்கக் கூட மறந்து விட்டோமே, என்று என் மீதே கோபம். வருத்தம். அதில் பிறந்ததுதான் அந்த வசனம். விசனம்."

அவன் சொல்லி முடித்த தினுசில், இருவருக்குமே சிரிப்பு வந்தது.

திடுமென நித்யவாசன் மௌனமானான்.

சுமுகி வியப்பாய் நோக்கவும், அவள் கையை மிருதுவாகப் பற்றி "இரண்டாவது என்பதால் உனக்கு வெறுப்பாக இருக்கிறதா, சுகி?" என்று மெல்லக் கேட்டான்.

சுமுகிக்கு இப்போதும் ஆச்சரியம்தான்.

எதையும் உறுதியோடும், தன்னம்பிக்கையோடும் எதிர்கொள்ளும் நித்யவாசனிடம் இப்படி ஒரு தடுமாற்றமா?



பற்றியிருந்த கரத்தைக் கன்னத்தோடு வைத்து அழுத்திய படி, "இன்று மாலை விருந்தினர் இல்லத்தில் 'ஒரு காலத்தில் நீ என்ன செய்திருந்தாலும், உன்னை விட்டு விடுவேனா?' என்று சொன்னவர், இப்படிக் கேட்கலாமா? உங்களுக்கு ஒரு நீதி! எனக்கு இன்னொன்றா? ம்?" என்று, அவனைப் போலவே மென் குரலில் கேட்டாள் அவள்.

திருப்தி அடைய மறுத்து, "பின்னே நான் நெருங்கிய போதெல்லாம் விலகிப் போனாயே ஏன்? என்று அவள் முகத்தையே பார்த்தபடி கேட்டான் அவன்.

"பின் என்னவாம்?" என்று தலையைச் சிலுப்பினாள் அவள். "என்னை அவளாகக் காண்கிறேன் என்கிறீர்களே. அதை எப்படி ஏற்பதாம்?" என்று குற்றத்தை அவன் மீது தள்ளினாள் சுமுகி.

"இல்லை, சுகி" என்றான் அவன்.

"பின்னே? அன்று நீங்களே சொன்னீர்களே?"

"அது... எப்படி, எனக்கு நானே வாதாடி, மனச்சாட்சியை ஒத்துக் கொள்ள வைத்திருந்தேன். பாமினி மீது, உயிர்க் காதல் என்பது மனதில் முடிவு கட்டி வைத்திருந்தது. இப்போது உன்னிடமும் ஆசை என்றால் அதை எப்படி ஒப்புவது? அதனால் மனைவி என்று அவள் இடத்துக்கு நீ வந்து விட்டால் அவளாக உன்னை எண்ணி ஆசைப்படுவதாக உன் மேலுள்ள ஆசையை எனக்கு நானே நியாயப்படுத்திக் கொண்டேன்" என்றான் அசடு வழிய.

கலகலவென்று சிரித்து, "ஆக, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும், முடிச்சைப் போட்டே விட்டீர்கள்." என்றுரைத்து மேலும் சிரித்தாள் சுமுகி.

உள்ளூர ஊற்றாய்ப் பெருகிய குதூகலம், அவளைப் பொங்கிப் பொங்கிச் சிரிக்க வைத்தது.

கூடச் சேர்த்து நகைத்து விட்டு அவன் மேலும் விவரித்தான். "அடுத்த தடவை சுகி, அது எனக்கே சரியாகப்படவில்லை. அணைத்தபோது என்னை மறந்து விட்டேன்தான். ஆனால் மூர்த்தியோடு உன்னைப் பார்த்த ஆத்திரம் எனக்குள் இருந்தது." என்றவனை இடைமறித்து, "பாமினி பற்றிய உண்மை எனக்குள்" என்றாள் சுமுகி.

அவள் முகத்தை ஏந்தி, "இப்போது?" என்று ரகசியமாகக் கேட்டான் நித்யவாசன்.

அவன் மனைவியின் கன்னச் சிவப்பு, அவன் நாடிய பதிலைச் சொல்லாமல் சொல்ல, அவன் உல்லாசமாக நகைத்தான்.

